PUBLIC LIBRARY
JAFFNA

தொகுப்பு-1



# விழுதுகள்

JPL
C2619

பொது சன நூலகம்
மாநகராட்சி மன்று
20-12-1992
9022-8
யாழ்ப்பாணம்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

KOHA JPL

தமிழ்த்தாய் புத்தகசாலை
191, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்

PUBLIC LIBRARY
JAFFNA.

# விழுதுகள்

வெளியீடு :- தமிழீழ மாவீரர் பணிமனை
முதற்பதிப்பு :- நவம்பர் 1992
அச்சுப்பதிப்பு:- தாசன் அச்சகம், யாழ்ப்பாணம்
அட்டைப்படம்:- தயா
பக்கங்கள் :- 194
அன்பளிப்பு :- ரூபா 50/-

923.20512/2

## எமது வெளியீடுகள்

1. திருவில் தீ
2. சுதந்திரத்தைத் தேடி - 1
3. விழுதுகள் - 1
4. ஒரு போராளியின் குருதிச் சுவடுகள்

KOHA JPL

# முன்னுரை

வீரச்சாவடைந்த போராளிகளைப் பற்றிய பதிவுகளைக் கொண்ட இக்குறிப்புகள், ஈழநாதம் பத்திரிகையில் ''விழுதுகள்'' என்னும் பகுதியில் வெளிவந்தவை.

இவற்றை எழுதியவர்கள் அனைவருமே போராளிகள். ஒரு போராளியால்தான் சக போராளியின் உள்ளுணர்வுகளைப் புரிந்து கொள்ளமுடியும். அதிலும் அவனுடன் கூட வாழ்ந்தவர்கள் அவனைப் பற்றி எழுதும் போது அந்த ஆக்கம் உயிர் பெற்று விடுகிறது.

எமது தேசிய விடுதலைப் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருக்கும் இக்காலகட்டத்திலேயே இப்பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அனைவருமே களத்திற்குச் செல்லத்தயாரானவர்கள்- களத்தில் நிற்பவர்கள். இந்திய இராணுவம் எமது மண்ணில் கால் பதித்திருந்த வேளை பல வரலாற்று நிகழ்வுகள் வெளி வர முடியாமல் போயிற்று. அதனுடன் சம்பந்தப்பட்ட அனைவருமே வீரச்சாவெய்தி விட்டனர்.

இந்த ''விழுதுகள்'' பகுதியை ஆரம்பிக்க வேண்டும்; மாவீரர்களைப் பற்றிய வரலாறுகளைப் பதிய வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த ஈழநாதம் நிர்வாகப் பொறுப்பாளர் மேஜர் அழகனைப் பற்றிக் கூட இப் பகுதியில் வெளியிட நேர்ந்துள்ளது. அதே போல் கப்டன் அஜித்தா, கப்டன் அக்கினோ ஆகியோரைப் பற்றிய குறிப்புக்களை எழுதிய மேஜர் பாரதியைப் பற்றியும் இதில் எழுத நேரிட்டுள்ளது. எனவே முடிந்தவரை மிகவிரைவாகவே இந்த வரலாற்றுப் பதிவுகளைச் செய்ய நாம் அனைவரும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

இதில் வெளியாகி உள்ளவை அனைத்தும் முழுமையானவையல்ல; ஆனால் எதிர்காலத்தில் மாவீரர்களின் வரலாற்றை விரிவாக எழுத முனைபவர்களுக்கு இவை ஆதாரமாக அமையக்கூடியவை என்பது மட்டும் திண்ணம்.

தமிழீழ மாவீரர் பணிமனை.

நவம்பர், 1992:

## உள்ளே...


| | | | |
|---|---|---|---|
| 1. | மேஜர் அழகன்........... | வசந்தன் ... | 1 — 7 |
| 2. | கப்டன் பிரான்சிஸ்..... | கரும்பறவை ... | 8 — 14 |
| 3. | கப்டன் அஜித்தா........ | மேஜர் பாரதி ... | 15 — 21 |
| 4. | மேஜர் தாடிபாலா...... | வசந்தன் ......... | 22 — 28 |
| 5. | கப்டன் சாரா ......... | ஜெயந்தன்... ... | 29 — 32 |
| 6. | கப்டன் ஆஷா .......... | கரும்பறவை..... | 33 — 37 |
| 7. | மேஜர் ஜேம்ஸ்........... | கஸ்ரோ........... | 38 — 44 |
| 8. | லெப். ராதா............... | கபில்............... | 45 — 49 |
| 9. | கப்டன் அக்கினோ... | மேஜர் பாரதி .. | 50 — 56 |
| 10. | மேஜர் லம்பா..... ... | மலரவன்......... | 57 — 64 |
| 11. | லெப். லக்ஸ்மன் ..... | கரும்பறவை... | 65 — 71 |
| 12. | மேஜர் பாரதி .... ...... | புதியவள்......... | 72 — 76 |
| 13. | மேஜர் வீமன்.. .. ...... | இலக்கியன் ..... | 77 — 81 |
| 14. | கப்டன் வீரமணி ....... | தென்னவன் .. | 82 — 88 |
| 15. | மேஜர் தாரணி .......... | துளசி .......... | 89 — 95 |
| 16. | லெப். மணிமாறன்...... | தூயவன் ........ | 96 — 102 |
| 17. | மேஜர் ஜோன்சன்...... | கரும்பறவை... | 103 — 107 |
| 18. | கீதா........................ | சோபனா...... | 108 — 112 |
| 19. | லெப். இளஞ்செழியன். | கஸ்ரோ......... | 113 — 116 |
| 20. | மேஜர் அன்ரனி ...... | கரும்பறவை... | 117 — 124 |
| 21. | ஜஸ்மின்.. .......... ..... | தமிழன்........... | 125 — 129 |
| 22. | லெப்·கேணல் நவம். ..... | கரும்பறவை... | 130 — 134 |
| 23. | கப்டன் பரஞ்சோதி... | கபில்.......... ... | 135 — 140 |
| 24. | கப்டன் பாண்டியன்... | கஸ்ரோ........ | 141 — 148 |
| 26. | மேஜர் வேணு .......... | கரும்பறவை... | 149 — 154 |
| 26. | கப்டன் தேனுஜா ....... | புதியவள்......... | 155 — 161 |
| 27. | கப்டன் எல்லாளன்... | அமுதசாகரன். | 162 — 167 |
| 28. | மேஜர் டயஸ் .......... | கரும்பறவை... | 168 — 174 |
| 29. | லெப். சோமேஸ்..... . | செந்தாளன்... .. | 175 — 181 |
| 30. | மேஜர் கார்வண்ணன்... | தமிழ்ச்செல்வன். | 182 — 189 |
| 31. | சின்ன நஸீர்...... ...... | கரும்பறவை...... | 190 — 194 |



KOHA JPL

# மேஜர் அழகன்

PUBLIC LIBRARY JAFFNA.

90228

| | |
|---|---|
| பெற்றோர்: | துரைச்சாமி செல்வராசா<br>ஆதிபுவனேஸ்வரி செல்வராசா |
| இயற்பெயர்: | இளங்கோ |
| முகவரி: | கல்வயல், சாவகச்சேரி. |
| தாயின் மடியில்: | 13-01-1966 |
| கல்வி: | யாழ். இந்துக்கல்லூரி<br>க. பொ. த. (உயர்தரம்) வர்த்தகப் பிரிவு |
| உடன் பிறப்பினர்: | மலர்விழி<br>கயல்விழி<br>வேல்விழி<br>அமரர் இளங்குமரன் |
| போராளியாய்: | 10-03-1985 |
| ஈழநாதம் தினசரியின் நிர்வாகியாய்: | 19-02-1990 |
| மாவீரனாக தாயக மண்ணில்: | 29-06-1992 |

- தண்ணீரூற்று பகுதியில் 1986-04-30 இல் தமிழீழ விடுதலை இயக்கத்தினருக்கும், புலிகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்ட போது ஒரு சுற்றிவளைப்பில் சிக்கிக் கொண்ட மேஜர் அழகன் வெகு சாமர்த்தியமாக எந்தக் காயமுமின்றித் தப்பிக்கொண்டார்.

- 1988 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பதின்நான்காம் திகதியன்று களிக்காடு பகுதியில் இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட பாரிய முற்றுகையின்போது தீரமுடன் போராடியவர்.

- வவுனியா மாவட்டம் கெந்தக்காரன் குளம் பகுதியில் அதே ஆண்டு அக்டோபர் மாதம் பத்தாம் திகதியன்று தேச விரோத சக்திகளோடு சேர்ந்து இந்திய இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போதும் உயிர் தப்பியவர்.

- ஈழநாதம் பணிமனைக்கு முன்னால் இடம்பெற்ற விமானக்குண்டுவீச்சிலும், ஆனையிறவு இராணுவமுகாம் மீது நடத்தப்பட்ட ஆ. க. வெ. இராணுவ நடவடிக்கையின் போது இரு தடவைகள் இவர் நின்ற இடத்திற்கு சமீபமாக நிகழ்ந்த விமானக்குண்டு வீச்சுகளிலும் உயிர் தப்பியவர்.

★ ★ ★

ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனிதப் பிறவியல்ல. அவன் ஓர் இலட்சியவாதி. ஓர் உயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன். தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்பவன். மற்றவர்களின் விடிவுக்காக விமோசனத்திற்காக வாழ்பவன்.

—தலைவர் வே. பிரபாகரன்

'அழகன் வீரச்சாவடைந்து விட்டான்' இதயத்தை ஊடுருவி அசைத்து ஆட்டிப் பார்க்கும் செய்தி.

அவன் சிரித்த முகத்துடன் அலையும் வீதிகள் வெறிச்சோடிப்போய்க் கிடந்தன.

'உண்மையாகவா' அவ்வீதிகளின் வழியே அவனைப்பார்த்ததும் அழகன் மாமா என்று மகிழ்ச்சியுடன் கையசைக்கும் சின்னஞ்சிறுசுகள் ஏக்கத்துடன் நின்றனர்.

ஈழநாதத்தின் வாசல்... அவர்கள் அனைவரும் அழுதபடி... அவர்களால் இவனின் இழப்பை எப்படித் தாங்க முடியும்..? முடியாது. அழட்டும் நன்றாக அழட்டும்; இதயத்தின் ஈரம் கசியும் மட்டும் அழட்டும்.

போராளிகளின் உடல்களை பக்குவப்படுத்தும் இடம்.

அழகன் கட்டிலில் படுத்துக் கிடந்தான். வழமை மாதிரியே கைகளை அகலப்போட்டபடி சாதுவான சிரிப்புடன்... அவன் சாவைச் சந்தித்து விட்டானா? யார் சொன்னது? அவனது வயிற்றில் இருந்த சிறிய காயத்தால் இரத்தம் கூட வடியாத நிலையில் அவன் சாவை அணைத்து விட்டானா.

''அழகன் டே ...அழகன்'' தோழனொருவன் அவனது கன்னத்தில் தட்டிவிட்டு அழுதான். காற்றில் கலந்த சோகம் உலகத்தின் அசைவுகளை அப்படியே நிறுத்தி இருந்தது.

இவனது இழப்பை, வீதிகளில் நின்று கையசைக்கும் அந்தச் சின்னஞ் சிறுசுகளும் இவனை அன்புடன் நேசித்த இந்த தேசத்தின் மக்களும்,

சிறிய விபத்தொன்றில் இவனது தம்பியை முன்னமே இழந்துவிட்ட இவனது தாயும் தந்தையும், தங்கள் சகோதரனில் உயிரையே வைத்திருக்கும் சகோதரிகளும் எப்படித் தாங்கிக் கொள்ளப் போகிறார்கள்.

அசைவிட, இவனுக்காகவே காத்திருக்கும் இவனின் அவள்... இவனின் இழப்பை எப்படித் ...

அவள் மட்டுமா? எந்த வேலை என்றாலும் அழகனைத் தேடும் இவனது தோழர்கள்...

யாருக்கு யார் ஆறுதல் சொல்வது.

**அழகன்**

முல்லை மண்ணின் குழந்தைகளில் அவனும் ஒருவன். அந்த மண்ணின் உயிரில் கலந்து அங்கு வாழும் மக்களின் இதயங்களில் குடிசை கட்டி வாழ்ந்தவன்.

தண்ணீரூற்றுப் பகுதிக்கு அரசியல் வேலை செய்வதற்கு வரும் பொழுது அழகன் சின்னப் போராளி. இவனுக்கு அழகன் என்ற பொருத்தமான பெயரை யார் வைத்தார்கள் இந்தக் கேள்வியை அந்தக் கிராமத்தில் யார் தான் கேட்கவில்லை.

''இந்தக் தேசப் விடுதலை பெற வேண்டும்' என்ற அந்தக் கிராமங்களில் இந்தக் குயில் குரலெடுத்துப் பாடத் தொடங்கியது. ஒரு வருடம் கடந்த பொழுது அழகன் அந்தக் கிராமத்தின் செல்லக் குழந்தையாக மாறிவிட்டான். அவனுக்கு பின்னால் 'சுதந்திரம் எங்கள் உயிர் மூச்சு' என்று கொண்டே அப்பகுதி மக்கள் அணி வகுத்து நின்றனர்.

அந்த இனிய நாட்கள் தான் எப்படிப்பட்டதென்று பாருங்களேன்! ஒருமிதிவண்டியில் மடித்துக் கட்டாத சாரத்துடன் நிற்கும் அழகனைப் பார்த்து ''அழகன் மாமா போட்டு வாறாய்,' என்று கொண்டே பாடசாலை செல்லும் சிறுவர் கூட்டம் காலையில் கடக்கும். சிறிது நேரம் சென்றபின் ''தம்பி மத்தியானம் சாப்பாட்டுக்கு வாடா'' என்று இவனது கன்னத்தை தடவிவிட்டு செல்லும் அம்மாமார்: மாலையில் ''தம்பி தலைவர் என்ன சொல்லுறார்'' என்றபடியே அரசியல் கதைக்கும் அப்புமார், நேரம் என்று பாராமல் இவனுடன் இவன் சொல்வதைச் செய்து கொண்டு திரிந்த இளைஞர்கள் என்று அழகன் யாரோடுதான் கலக்கவில்லை .....

இராணுவ நடமாட்டம் அதிகமான நெருக்கடி மிகுந்த அந்த நாட்களில் அந்தக் கிராமங்களில் அழகன் விடுதலைப் பயிரை வளர்க்க முயன்றான். அந்நேரம்தான் அவர்களுக்குள் அன்பு முளைவிட்டது.

அந்த நாட்களில் யாழ்ப்பாணத்தை கவிந்திருந்த போர் மேகங்களின் விளைவாக நாவற்குழி இராணுவ முகாம் காவல் நிலைகளுக்கு அழகன் மாற்றப்பட்டான். காவல் நிலைகளின்

ஒரு தொகுதிக்கு பொறுப்பாக இருந்த மேஜர் தாடிபாலாவின் சூழுவில் அவனும் ஒருவனாக இருந்தான்.

அங்கும் பாலாவினதும் மற்றைய தோழர்களினதும் அன்புக்கும் அவன் விரைவிலேயே ஆளாகிப் போனான். பாலாவிற்கு அழகன் எப்போதும் அருகில் இருக்க வேண்டும் என்ற உணர்வு இதயத்தில் ஊறிடபோய் விட்டது.

அந்தப் போராளிகள் சிங்களப் படைகள் எந்த முனையால் முன்னேற முயன்றாலும் அங்கு நின்றனர். ஆக்கிரமிப்பு வாதிகளின் முயற்சிகளை முறியடித்து இந்த மண்ணைக் காத்தனர். அப்போதெல்லாம் அழகன் ஓர் எறிகணை செலுத்தியை வைத்திருந்து சண்டையிட்டான்.

இந்திய-இலங்கை ஒப்பந்தமும் அதைத் தொடர்ந்து ஓர் போர் நிறுத்த காலமும் வந்தபொழுது அழகனை மாத்தையா அண்ணை தன்னுடன் அழைத்துச் சென்றிருந்தார். இந்தியர்களுடனான போர் தொடங்கும் வரைக்கும் பல்வேறுபட்ட அரசியல் வேலைகளை அழகன் செய்து கொண்டிருந்தான்.

இந்தியர்களுடனான போர் தமிழீழமெங்கும் எழுந்த பொழுது பல்வேறு பகுதிகளிலும் நின்று அழகனும் போராடினான். அன்னிய ஆக்கிரமிப்பு வாதிகளின் அராஜகத்திற்கு இந்தத் தேசம் அடிபணிந்து போகாது என இந்த மண் நிமிர்ந்து நின்று போராடியது. தென்மராட்சிப் பகுதியில் நின்று செயற்பட்ட அழகன் அதன் பின்பு வன்னிக்கு வரவழைக்கப்பட்டான்.

வன்னியில் மேஜர் அழகன் தாடி பாலாவின் அணியில் ஒருவனாக நின்று போராட்டகளத்தில் செயற்பட்டான். அக்காலங்களில் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிதாக தொடங்கப்பட்ட பயிற்சி முகாம் ஒன்றின் பயிற்சி ஆசிரியாக அழகன் நியமிக்கப்பட்டான். இந்தியர்கள் இம்மண் மீது ஓர் போரினைத் தொடுத்த பின்பு தமிழீழ மண்ணில் நடாத்தப்பட்ட புலிகளின் முதலாவது பயிற்சி முகாம் அதாகத்தான் இருந்தது.

அதன் பின்பாக வன்னிக்காடொன்றில் இயங்கிய அரசியல் தலைமையகத்திற்கு அழகன் மாற்றப்பட்டான். அந்த முகாமின் வெளித்தொடர்புகளை கவனிக்கும் பொறுப்பு அவனுடையதாக இருந்தது. அந்நேரங்களில் அக்காட்டு முகாம்களிலிருந்து வெளியிடப்பட்ட 'உணர்வு' ''சுதந்திரப் பறவைகள்'' ஆகிய

சஞ்சிகைகள் வெளிவரத் தேவையான கல்லச்சுத்தாள், மை போன்றவற்றைக் கொள்வனவு செய்து கொடுக்கும்பொறுப்பு அழகனிடமிருந்தது.

அகன் தொடராகத்தான் இந்தியர்கள் வெளியேறத் தொடங்கியதும் ஈழநாதம் பத்திரிகையை நடத்தவேண்டிய பொறுப்பு அழகனிடம் ஒப்படைக்கப்பட்டது. உண்மையில் சொல்வதாக இருந்தால் என்ன? ஈழநாதம் முதலாவது இதழ் வெளிவந்தபொழுது குடா நாட்டின் பல இடங்களில் இந்தியர்கள் இருந்துகொண்டுதான் இருந்தார்கள்.

வன்னி மக்களால் அன்போடு 'எங்கட அழகன்' என்று அழைக்கப்பட்ட அவன் இப்பொது ஈழநாதம் அழகனாக மாறி இருந்தான். பத்திரிகை உலகத்தில் புதியவனாய் புகுந்த அழகன் அதில் மிக விரைவாகவே தேர்ச்சி பெற்றான்.

இரண்டு வருடங்கள் கடந்த பொழுது பத்திரிகை உலகில் சகல நுணுக்கங்களும் தெரிந்ததோர் சிறந்த நிர்வாகியாக அவன் மாறியிருந்தான். ஒரு சில வசதி வாய்ப்புக்களுடன் தொடங்கிய ஈழநாதம் இன்று பெரியதொரு நிறுவனமாக மாறி நிற்கின்றது.

இப்பொழுதெல்லாம் அழகன் சிறியவனல்ல ...... தேர்ச்சி, நிறைந்த நிர்வாகி. மிக எளிமையாக பெட்டிக்கடைகளிலும், பெரும் முதலாளிமார்களுக்கு முன்னாலும் இருந்து கதைப்பான். வியாபார உலகத்தின் அசைவுகளை அவன் கண்கள் நன்றாகவே அறியும்.

ஆனால் மறுகணம் போராளிகளுடன் போராளியாகவும் நிற்பான். ஆனைபிறவில் நடக்கும் சமரில் காயமடையும் போராளிகளை குண்டுவீச்சு விமானங்களிற்கு இடையால் வைத்தியசாலைக்கு கொண்டுவந்து சேர்க்கும் சாரதியாக மாறிப்போவான்.

'ஈழநாதம் அதன் வளர்ச்சி' இதுவே அவனது பேச்சும் மூச்சுமாகப் போனது. எந்த நெருக்கடிகள் வந்தாலும் ஈழநாதம் வெளிவரவேண்டும். இது அவனது இதயத்தின் ஆவல், குடாநாடு எங்கும் குண்டுகள் விழுந்து வெடித்துக் கொண்டிருந்தாலும் இயந்திரத்திற்கு அருகில் இவன் விழித்துக்கொண்டிருப்பான்.

ஈழநாதம் பணியாளர்களுக்கு அவன் ஓர் அண்ணன்' அத்துடன் நிர்வாகப் பொறுப்பாளன். அவர்கள் ஓர் இனிய

குடும்பம். விடுதலை உணர்வை விதைப்பது அவர்களின் கடமையாக இருந்தது.

அன்றும் அப்படித்தான் நடந்தது புகைப்படம் எடுக்கும் தோழனொருவனுடன் போர் முனைக்குச் செய்திகளை சேகரிக்கச்சென்ற அழகனுக்கு அருகாக வீழ்ந்த குண்டொன்றின் சிதறல் அழகனின் வயிற்றில் தைத்தது. அது சிறிய காயம் என்றுதான் அவனும் அவனது தோழர்களும் நினைத்தார்கள் ஆனால் ..... உடலின் உள்ளே அவனது உயிரை இவ்வளவு வேகமாகக் குடிக்கும் ஆழமான காயம் இருந்ததை யாரும் அறியவில்லை.

அழகன் சாவைச் சந்தித்து விட்டானாம். யார் இந்தச் செய்தியை நம்புவார்கள்.

அழகனைச் சுமந்து கொண்டு அந்த வீதிகளில் வேகமாக ஓடும் அந்தச் சிவப்பு நிறவண்டி இன்றும் அவனைச் சுமந்து கொண்டு துயரத்தோடு மிக மெதுவாக......

இரவுகளில் அழகன் படுத்துறங்கும் ஈழநாதத்தின் முன் மண்டபம், அதில் இன்றும் அழகன் படுத்திருக்கிறான். அவன் சிரித்த முகத்தைப் பார்த்து மகிழ்பவர்களெல்லாம் இன்று கண்ணீரோடு... –

அழகா! உன் கண்களை அகலவிரித்து ஒருதரம் பார்! உன்னைச் சுற்றி நின்று அழுபவர்கள் யார்!

அம்மா ...... அப்பா உன் உறவுகள் மட்டுமா... உன் காதலியும் தோழர்களும் ஏன் இந்தத்தேசமும் உனக்காக கண்ணீர் வடிக்கிறது.

(03-07-1992)

–)(–



# கப்டன்
# பிரான்சிஸ்

| | |
|---|---|
| பெற்றோர்: | இராசையா<br>சந்தனம் (அமரர்). |
| இயற்பெயர்: | சடாட்சரபவன். |
| முகவரி: | மகாவித்தியாலய வீதி, கோட்டைக் கல்லாறு, மட்டக்களப்பு. |
| தாயின்மடியில்: | 11-11-1969. |
| கல்வி: ஆரம்பக்கல்வி: | மட்டக்களப்பு-கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயம். |
| உயர்தரம்: | மட்டக்களப்பு — கோட்டைமுனை வித்தியாலயம். அம்பாறை—கட்டுப் பத்த தொழில்நுட்பக் கல்லூரி (பொறியியல் பிரிவு.) |
| உடன் பிறப்பினர்: | சரவணபவன் (மாவீரர்) |
| போராளியாய்: | 1983 |
| மாவீரனாய் | 31-10-1988 |

*குறிப்பிடக்கூடிய தாக்குதல்கள்:*

★ 10-06-84 இல் மட்டக்களப்பு சிறையுடைப்பின் மூலம் திருமதி நிர்மலாவை மீட்ட சம்பவம்.

★ 22-09-84 இல் களுவாஞ்சிக்குடி காவல் நிலையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்.

★ 02-09-85 இல் ஏறாவூர் காவல் நிலையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்.

★ 01-12-85 இல் அம்பாறை — தம்பட்டையில் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்.

*விசேட தகைமைகள்:*

★ சிறந்த பேச்சாளர், நீச்சல் வீரர்.

★ மட்டக்களப்பு—அம்பாறை பிராந்திய அரசியல் நிர்வாகப் பொறுப்பாளராக விளங்கியவர்.

**தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதன் முதல் ஆகுதியாகிய மாவீரர்**

## பொன்னுத்துரை சிவகுமாரன் (உரும்பிராய்)

***(05-06-1974 அன்று கோப்பாயில் சிறிலங்காப்படையினரின் முற்றுகையின் போது சயனைட் உட்கொண்டு)***

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் முதல் மாவீரர்**

## லெப். சங்கர் / சுரேஸ் (செல்வச்சந்திரன் சத்திய நாதன் – கம்பர்மலை, வல்வெட்டித்துறை.)

*நல்லூரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின்போது காயமடைந்து, தமிழகத்தில் சிகிச்சை பெற்று வரும்போது 27-11-1982 இல் வீரச்சாவு*

அன்பின் பிரான்சிஸ்,

எத்தனை வருடங்கள் ஓடிவிட்டன. ஆனாலும் உன் நினைவு மட்டும் எம்மை விட்டு ஓட மறுப்பது ஏன்? நீ உண்மையாக வாழ்ந்தாய்; மட்டக்களப்புமண்ணின் விடுதலைப் பண் பாடப் படும்போது உனது பெயர் இணைக்கப்படாமலிருக்க மாட்டாது. அந்தப் பண்ணின் ஆரம்ப வரிகளில் நிச்சயம் உனது பெயர் இருக்கும். அந்த நாட்களை நினைத்துப் பார்க்கின்றேன். நாங்கள் சைக்கிளில் திரிந்தது. ஆற்றில் தோணியில் பயணமாகியது" அந்தப்போர்க்களங்கள்... எல்லாமே இன்று போலிருக்கின்றன

நீ மட்டும் அருகிலில்லை.

நீயும் நானும் டேவிட்டும் யாழ்ப்பாணத்திலிருந்து மட்ட களப்புக்கு சைக்கிளில் எமது பிரயாணத்தை தொடங்கிய அந்த நாட்களை நினைத்துக் கொள்கிறேன். போகும்போது நீ என்னவெல்லாம் சொல்லிக் கொண்டு வந்தாய். உனது ஆசை கள் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றக் கூடியளவுக்கு அப் போது எம்மிடம் ஆயுதங்கள் இருக்கவில்லை. இரண்டே இரண்டு கைத்துப்பாக்கிகளுடனேயே எமது பயணத்தை ஆரம்பித்திருந் தோம். போகும் போதே வழியில் பரந்தனில் சிவதாஸன் என்ற துரோகிக்கும், வவுனியாவில் புளொட் இயக்கத்தினரை காட்டிக் கொடுத்த தர்மே என்ற சிங்களவனுக்கும் மரண தண்டனை வழங்கி விட்டுச் சென்றோம்.

காட்டுப் பாதைகளூடாக மதவாச்சி வரை மிதிவண்டியில் சென்றோம். அங்கிருந்து பேருந்திலும் புகையிரதத்திலும் சென்று மட்டக்களப்பு மண்ணை மிதித்தோம். அப்போது நீ என்ன சொன்னாய்—''அப்பாடா... மட்டக்களப்புக்கு ஆயுதம் வந்திட் டுது; இனித்தான் ரைகேசிட விளையாட்டு துடங்கப் போகுது'' இந்த வார்த்தைகளை நினைத்துக் கொள்கிறேன். இன்று போராட்டம் அடைந்துள்ள வளர்ச்சியைப் பார்க்கும் போது இரண்டு சுழல் துப்பாக்கிகளின் சக்தி மிக அற்பமானதே. ஆனால் அவைதான் அங்கிருந்து ட்றக்டர் கணக்காக ஆயுதங் களை கைப்பற்றுவதற்கு வித்தாக அமைந்தன. ''யாழ்ப்பாணம் கோட்டை விடுவிக்கப்பட்டதற்கு மட்டக்களப்பு ஆயுதங்களின் பங்கும் ஒரு காரணமாக இருந்தது'' என்று கொக்கட்டிச் சோலையில் நியூட்டன் பேசும்போது நான் அந்த இரு சுழல் துப் பாக்கிகளையும்தான் நினைத்துக் கொண்டேன்.

நாங்கள் மட்டக்களப்பு சிறையிலிருந்து நிர்மலாவை மீட்டு வந்த அந்தக் காட்சியை நினைத்துக் கொள்கிறேன். அது உனது இழப்பின் கொடுமையை எனக்கு புரியவைக்கிறது எப்படி இயங்கினாய் நீ-ஒரு பம்பரம்போல. சிறைச்சாலைக்கு வெளியில் நின்ற சிங்களக் காவலனொருவனை நாம் மடக்கி உள்ளே போக முயற்சித்தோம், சிறைக்காவலர்கள் வேடத்தில் நாம் சென்றிருந்தாலும் கதவைத் திறந்த ஆரம்பத்திலேயே உள்ளே யிருந்தவர்களுக்கு நிலைமை புரிந்து விட்டது. எல்லோருமாக கதவை இழுத்து மூட முயற்சித்தனர், உனது கை நடுவில் அகப்பட்டு விட்டது. நீ கத்தினாய். எப்படித்தான் அசுரபலம் வந்ததோ? உள்ளே சென்று விட்டோம். நாம்போன வேகத்தில் பொலிசாருடன் தொலைபேசியில்தொடர்பு கொள்ள முயற்சித்த காவலனை தடுக்கப் பாய்ந்தாய் நீ. அவன் உயரமானவன்; நீயோ குள்ளம். அங்கிருந்த கதிரையின் மேலேறி அவனது தலையில் 45.சுழல் துப்பாக்கியினால் நீ அடித்தாய். அவன் சுருண்டு வீழ்ந்தான். இதற்குள் ஒரு காவலன் நிர்மலாவின் அறைத்திறப்பை எடுத்துக் கொண்டு ஓடி மறைந்து விட்டான். நாங்கள் கதவை உடைத்தோம். உடைத்ததின் பின்னர் தான் கதவின்கனம் குறித்து ஆச்சரியப்பட்டோம். அந்தப் பணி வெற்றிகரமாக நிறைவேற நீயும் சந்திரனண்ணாவும்தான் காரணம். சந்திரனண்ணா வெளித்தொடர்புகளை கவனித்துக் கொண்டார், ஏற்கனவே நீ அந்தச் சிறையில் இருந்தவன் என்றவகையில் உனக்கு அந்தச் சிறைச்சாலை அமைப்பு, நடைமுறைகள் பற்றித் தெரிந்திருந்தது. அதனால் எமது வேலை சுலபமாகியது. பிரான்சிஸ்! உன்னை நினைக்கும் போது தண்டவாளப்பாதையால் நாம் நடந்து கொண்டு வரும் போது நீ சொன்னபகிடிதான் முதலில் நினைவுக்கு வரும். மட்டக்களப்பிலிருந்து நிர்மலாவை புகையிரதம்,பேருந்து வழியாக மன்னாரை நோக்கி கூட்டிக் கொண்டு வந்தோம். மதவாச்சி வீதியில் நாங்கள் சென்ற பேருந்தை விலத்திக் கொண்டு சிறிலங்கா இராணுவத்தினர் சென்றனர். அவர்கள் நேரியகுளம் சந்தியில் திடீர்ச் சோதனை செய்வது வழக்கம். ஆகையால் நாம் அதற்கு முன்னரே இறங்கி விட்டோம். அங்கிருந்து மடுறோட்டுவரை தண்டவாளப் பாதையால் ஒரே நடைதான்.

நீண்ட.நேரநடை! அனைவருக்கும் தாகம்; அந்த நடு இரவில் தண்ணீர் எங்கே கிடைக்கும் என்பது தெரியவில்லை. ஒருவருடைய வேதனையை மற்றவருக்கு காட்டாமல் நடந்து கொண்டிருந்தோம். அப்போது நீ சொன்னாய் "காக்கா! தமிழீழம் கிடைச்ச உடன் தண்டவாளக் கரையெல்லாம் நாங்க கிணறு

தோண்டி வைப்பம். ஏனெண்டா அப்ப முஸ்லீம்கள் தங்களுக்கு ஒருநாடு வேணும் எண்டு நம்மளோட சண்டை பிடிப்பானுகள். அந்தநேரம் எருக்கலம்பிட்டி முஸ்லீம் காத்தான்குடிக்கு போக வேண்டியிருக்கும்; அவனும் இப்ப நாம போறமாதிரித்தான் தண்டவாளக் கரையால நடக்க வேண்டியிருக்கும். அப்ப அவன் தண்ணிவிடாயால அவதிப்படக் கூடாதல்லா'' என்றாய். இதைக் கேட்டு நானும், நிர்மலாக்காவும் கூடவந்த சகோதரியும் சிரித்தோம். இடையில் ஏதோ ஒரு பாழ்ங் கிணறு தென்பட்டது. நீ ஒரு மெழுகுப் பையில் நிர்மலா அக்காவின் ஒரு சேலையைக்கட்டி தண்ணீர் அள்ளித்தந்தாய். மெழுகுப்பை தண்ணீர் கோலுவதற்கு வசதியாக ஒரு கல்லைக் கட்டித் தொங்கவிட்டிருந்தாய். அந்தநேரம் அந்தத்தண்ணீர் தேவாமிர்தமாக இருந்தது. அடுத்தநாள் அனைவருக்குமே வயிற்றோட்டம். அது குடித்தது பாழ்ங்கிணறுத் தண்ணீர்தான் என்பதை உறுதிப்படுத்தியது.

அன்று முஸ்லீம்கள் பற்றி நீ வேடிக்கையாகச் சொன்னாய். ஆனால் வரலாறு மிக மோசமான படிப்பினைகளை எமக்குத் தந்துள்ளது. அதைநான் மட்டக்களப்பு மண்ணுக்கு மீண்டும் சென்றபோது தான் தெரிந்து கொண்டேன். முஸ்லீம்கள் பற்றி வேடிக்கையாக இப்படிச் சொன்னாலும் முஸ்லீம்கள் மீது நடவடிக்கை எடுக்கும் போது பலமுறை சிந்தித்து எடுக்க வேண்டும் என்றாய். அப்படித்தான் நடந்து கொண்டோம். ஆனால் எமது பெருந்தன்மைகள் பலவீனங்களாக உணரப்பட்டுவிட்டன. என்னையும் உன்னையும் எமது நண்பர்களையும் உபசரித்த குடும்பத்தவர்களை அகதிமுகாமில் காணும் அவலத்தை ஏற்படுத்திவிட்டது.

இரண்டு எஸ்.எம்.ஜிக்கள், நாலு றிப்பிட்டர்கள், இரு சுழல் துப்பாக்கிகள், ஒரு வேட்டைத் துப்பாக்கி- இவைதான் நாம் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தை தாக்கச்செல்லும் போது கொண்டு சென்ற ஆயுதங்கள். அதிலும் ஒரு றிப்பிட்டர் இயங்கவில்லை. தாக்குதலுக்கு முன் எந்தப்பொலீஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்துவது என்று திட்டமிடும் போது நீ களுவாஞ்சிக்குடி மீது தாக்குதல் நடத்துவோம் என்றாய். புளொட் இயக்கத்தைச் சேர்ந்த பார்த்தனின் மறைவுக்கு காரணமாக இருந்தவர்கள் அவர்கள். ஆகவே அவர்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களின் திமிரை அடக்கவேண்டும் என்றாய். நாம் தாக்குதல் நடத்தினோம். மட்டக்களப்பின் செல்வமான பரமதேவாவையும், ரவியையும் இழந்து ஓரேயொரு றைபிளை

மட்டுமே கைப்பற்றினோம். அத்தாக்குதலில் சயனட் கட் கொண்ட நிலையில் ''அம்மாட்ட சொல்லுங்கோ உங்கட மகன் சண்டையில தான் செத்தானெண்டு'' என்று பரமதேவா சொன்னது உன்னையும், என்னையும், ஏன் அந்தத்தாக்குதலில் பங்கு பற்றிய அனைவரையுமே பாதித்திருந்தது.

அதற்குபின் வரலாறு வேகமாக ஓடியது. ஏறாவூர் பொலிஸ் நிலையத்தை தாக்கி வெற்றி கொண்டோம். இதன் பின் நீயும் நானும் இணைந்து தாக்குதலில் ஈடுபட சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. நான் யாழ்ப்பாணம் வந்து விட்டேன். நீ மட்டக்களப்பில் செய்யும் சாதனைகளைப்பற்றி எல்லோரும் சொன்னார்கள். தம்பட்டையில் நடு வீதியில் நின்று M-16 உடன் தாக்குதல் நடாத்தினாயாம். இப்படியெல்லாம் ஒவ்வொரு இடத்திலும் உனது சாதனைகளைப் பற்றி எல்லோரும் எனக்கு வந்து சொல்லுவார்கள். மட்டக்களப்பு நகரத்தினுள் உனக்காக நடந்த முற்றுகைதான் எத்தனை?

இந்திய இராணுவம் வந்த பின்னர் உனது பெயர் மட்டக்களப்புக்கு வெளியிலும் பிரபலமாகியது. அன்னையர் முன்னணியை ஸ்தாபித்ததும், உண்ணாவிரத நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்தியதும் அஞ்சாத மக்கள் கூட்டம் புலிகளின் பின்னால் இருக்கிறது என்பதை உலகிற்கு புலப்படுத்தியது. என்ன செய்வது என்று புரியாமல் திண்டாடும் நிலையை இந்தியப்படையினருக்கு ஏற்படுத்தினாய். உண்ணாவிரதத்தை குழப்பமுயன்று தோற்றுப் போனது இந்தியப் படை. ''பாரதப்போர் 18 நாட்கள்; பாரதம் தொடுத்த போர் எத்தனை நாட்கள்?'' என்ற கேள்வியை மட்டக்களப்பு நகர் முழுக்க ஒட்டினாய். மட்டக்களப்புக்குள் புலிகள் நின்று கொண்டிருக்கிறார்கள் என்பதை அடிக்கடி உணர்த்திக் கொண்டிருந்த போராளி நீ தான் என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். மேஜர் ஜெயராம்—அவனை எனக்கும் தெரியும். இந்திய இராணுவத்திடம் நான் கைதியாக இருந்த போது அவனது திமிர் பேச்சுக்களைக் கேட்க நேர்ந்தது. உலகத்திலேயே தலை சிறந்த அறிவாளி தானே என்ற எண்ணம் அவனுக்கு. இந்தியப்படை உன்னைத் தேடிச் சல்லடை போட்டு முகாம் திரும்பியவுடன் அவர்களுடன் நீ தொலைபேசியில் பேசுவாயாம். ''என்ன பிரான்சிஸ்! உங்கட ஆக்களெல்லாம் பக்கத்திலதான் இருக்கிறாங்க; நாங்க எப்ப சந்திக்கிறது?'' என்று கேட்ட போது ''அது கஷ்டம். நம்மட கழுத்தில சயனைட் இருக்குதே'' என்று பதிலளித்தாயாம். ''ஏன் உங்க வாழ்க்கையை பழுதாக்குறீங்க?'' என்று கேட்டதற்கு ''நானா நீங்களா'' என்று எதிர்க் கேள்வி போட்டாயாம்.

மேஜர் ஜெயராமுக்கு சொன்னதை நீ செய்து காட்டினாய். உனது சொந்த ஊரவனே உன்னைக் காட்டிக் கொடுத்தான். உன்னை சுற்றி வளைத்த இந்தியப் படையினரிடமிருந்து நீ தப்ப முடியவில்லை. ஏற்கெனவே நடந்த முற்றுகையில் தப்பி ஓடும் போது ஒரு கண்ணாடி உனது காலை வெட்டியிருந்தது. அதன் காயம் உனது வேகத்தை மட்டுப்படுத்தியது. அப்போதுங்கூட நீ அவர்களின் ஆயுதத்தைப் பறித்துக் கொண்டுதான் ஓடினாய்' ஒரேயொரு வெடிதான் உனக்கு-அதுவும் காலில். நீ சயனைட்டை உட்கொண்டாய். ''நம்மட கழுத்தில் சயனைட் இருக்குதே'. என்ற உனது வரிகள் உலகமெங்கும் எதிரொலித்தன.

B. B. C. யின் அன்றைய தமிழ்ச் செய்தியிலும், செய்தி ஆய்வுரைக் கண்ணோட்டத்திலும் உன்னைப் பற்றிய குறிப்புக் களே கூடியளவு நேரத்தைப் பிடித்தன. உனது பணியின் முக்கி யத்துவத்தை அன்றுதான் உலகம் அறிந்து கொண்டது. ''பிரான் சீஸின் மரணம் கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அரசியலில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும்.'' என்று B. B. C. குறிப்பிடுமளவுக்கு உனது வரலாறு அமைந் திருந்தது.

பிரான்சிஸ்! இன்று வரலாறு மாறிவிட்டது. வவுனியாவில் எந்த புளொட்காரரை காட்டிக் கொடுத்தற்காக தர்மே என்ற சிங்களவனைச் சுட்டோமோ அதே வவுனியாவில் அதே புளொட் இயக்கம் இன்று முழு தமிழ் இனத்தையுமே காட்டிக் கொடுக் கிறது. பல தர்மேக்கள், சிறிசேனாக்களின் எடுபிடிகளாகி விட் டனர் அவர்கள். பார்த்தனைச் சுட்டதற்காக களுவாஞ்சிக்குடி காவல் நிலையம் மீது தாக்குதல் நடத்துவோம் என்றாய். அன்று நாம் களுவாஞ்சிக்குடியை கைப்பற்றாவிட்டாலும் இளைய தலைமுறையினர் கைப்பற்றிக் காட்டி விட்டனர். இன்று அதே களுவாஞ்சிக்குடிப் பகுதியில் சிறிலங்கா பொலிசாருடன் இணைந்து புளொட் சிறிலங்காவின் சட்டத்தையும் ஒழுங்கை யும் நிலைநாட்டப் போகிறதாம். ஆனாலும் நாம் அன்று செய் தது சரியேதான். இனியும் செய்யப்போவது சரியைத்தான்.

(26-06-1992)



# கப்டன் அஜித்தா

பெற்றோர்: சுப்பர் கந்தையா
நாகம்மா கந்தையா

இயற்பெயர்: சுகுணராணி

முகவரி: ''வரதன் இல்லம்'', அரசடி வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

தாயின் மடியில்: 22-06-1968

கல்வி: சாவகச்சேரி இந்துக்கல்லூரி
க. பொ. த. (உயர்தரம்)

உடன்பிறப்பினர்; சுகிர்தராணி,
பாஸ்கரன்,
கிருபாகரன் (*மரணதண்டனைக்குள்ளானவர்*)
சுதாகரன்
வரதகரன்

போராளியாய்: 1985

மாவீரராக தாயக மண்ணில்:
22-12-1990

*குறிப்பிடக்கூடிய தாக்குதல்கள்:*

யாழ். பல்கலைக்கழகத்தில் தரையிறக்கப்பட்ட இந்திய இராணுவத்தினர் மீதான தாக்குதல் (12-10-1987) ஆனைக்கோட்டை, தாவடி, வன்னிப்பகுதிகளில் இந்திய இராணுவத்தினருடனான மோதல்கள்.

கோட்டைமுகாம், பலாலி முகாம் இராணுவத்தினருடனான மோதல்கள்.

*விசேடதிறமைகள்:*

ஓடுதலில், உடற்பயிற்சி செய்வதில், தையல் வேலைகளில் வல்லவர்.

* * *

---

**தமிழீழ விடுதலைப் புலிகளில் முதன் முதல் வீரச்சாவெய்திய பெண் மாவீரர்**

## 2ம் லெப். மாலதி (சகாயசீலி பேதுரு)

ஆட்காட்டிவெளி, மன்னார்.

*10-10-1987 அன்று கோப்பாயில் இந்தியப்படையினருடனான மோதலில்*

**முதலாவது பெண்தளபதி (மாவீரர்)**

## மேஜர் சோதியா (அமலஉற்பவ வசந்தி)

தபால் கந்தோர்வீதி, நெல்லியடி.

மூளைக்காய்ச்சல் நோயினால் — 11-01-1990

**உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த பெண் தற்கொடையாளி**

## பூபதி கணபதிப்பிள்ளை

கருவேப்பங்கேணி, மட்டக்களப்பு. 19-04-1988

**தென் தமிழீழத்தில் வீரச்சாவெய்திய முதல் பெண் மாவீரர்**

## லெப். அனித்தா (தம்பிராசா சித்திரதேவி)

ஆரையம்பதி, மட்டக்களப்பு. 28-11-1988

களுவாஞ்சிக்குடியில் இந்தியப் படையினரும் தேசவிரோதிகளும் கைது செய்ய முற்படுகையில் சயனைட் உட்கொண்டு.

அடர்ந்த காடு. பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றனர் புதிய போராளிகள். பயிற்சிக்காக வழங்கப்படும் துப்பாக்கிகளை வைத்துவிட்டு அசட்டையாக ஒரு நிமிடம் நின்று விட்டால் திரும்பிப் பார்க்க துப்பாக்கி இருக்காது. அநேகமாக எல்லோருக்கும் தெரியும் ''அஜித்தாக்கா தான் எடுத்திருப்பா'' என்பார்கள். ''இன்று இந்த துப்பாக்கியில் இருக்கும் கவனயீனம் தான் நாளை எமது போராளிகள் உயிரைக் கொடுத்தெடுத்த துப்பாக்கிகளிலும் இருக்கும். அவர்களினரை உயிர்கள் தான் இந்தத் துப்பாக்கிகள். ஆனபடியால் அவற்றை எங்களுடைய உயிரைவிட மேலாக நினைக்கவேண்டும். கவனமாக அவற்றை நேசித்தபடி வைத்திருக்க வேண்டும்'' என்று கூறி திரும்பவும் தருவா.

இந்தக் காலத்திலே தான் எங்களுடைய பாசறை அமைந்திருக்கும் பகுதி ஒரு சிறு அழகான குடியேற்றமாக அற்புதமான பூங்காவாக மாறிக் கொண்டிருக்கிறது. ஒரு பாதையைச் சுற்றி எமது வாசஸ்தலங்களாக சாக்குக் கொட்டில்கள். அத்தனை கொட்டில்களுக்கும் இடையில் ஒன்று வித்தியாசமாக பளிச்சென்று ஒழுங்காக அமைக்கப்பட்டிருக்கும்; பொருள்கள் ஒழுங்காக துப்பரவாக அடுக்கப்பட்டிருக்கும். அந்தக் குழுவுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் வேலைகள் யாவும் நேர்த்தியாக செய்து முடிக்கப்பட்டிருக்கும்; அல்லது சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருக்கும் பார்த்த உடனேயே பட்டென்று சொல்லி விடலாம் - அது அஜித்தாவின் குழு என்று.

அந்த அளவிற்கு வேலைகளைச் சிறப்பாகச் செய்து முடிக்க வேண்டுமென்றும், எந்தளவு கெதியாக வேலைகளைச் செய்கிறோமோ அந்தளவுக்கு இயக்கத்தின் வளர்ச்சி, போராட்ட வளர்ச்சி விரைவு பெறும் என்பதும், தரப்படுகின்ற வேலைகளை மகிழ்வுடன் ஏற்றுச்செய்ய வேண்டும் என்பதும் அஜித்தாக்காவினுடைய விரிவுரைகளாயிருக்கும். விரிவுரைகளுக்கு மட்டுமல்ல அஜித்தா அந்த விரிவுரைகளுக்கு விளக்கக் குறியீடாகவும் இருந்தவள்.

அஜித்தா இந்தப் போராட்டத்திற்கு காலடி எடுத்து வைத்த காலகட்டம் வித்தியாசமானது. பெண்கள் தாமும் தமது குடும்பமும் வீட்டுவேலைகளும்தான் உலகம் என்று எண்ணியிருந்த சமூக அமைப்புக்குள் இருந்து அந்தத் தளைகளை உடைத்து வெளியேற வேண்டிய காலம். யாழ் மாவட்டத்தில் இருந்து நேரடியாக ஆயுதப்பயிற்சிக்கு பெண்கள் அனுப்பப்படவில்லை. ஆனா

லும் இந்த சமூகத்தின் மாறுபட்ட பார்வைகளுக்கு மத்தியில் இந்தத் தேசத்திற்காக ஏதோ ஒரு வகையில் தன்னுடைய செயற்பாடுகள் அமையவேண்டும் என்பதனால் விடுதலைபபுலிகள் மாணவர் இயக்கத்தினூடு தனது வேலைகளைச் செய்தாள்.

தொடர்ந்து கால ஓட்டத்தில் பெண்களுக்கான பயிற்சி முகாம் ஆரம்பிக்கப்பட்ட போது அதில் அஜித்தாவும் ஒருத்தி. இயக்கத்தல் ஏற்கனவே ஒரு அண்ணா - மூடக்கொள்கையில் ஊறிப்போன சமுதாய அமைப்பு. அத்தகைய சூழலில் இருந்து அஜித்தா இயககத்திற்கு வந்தமை அவள் விடுதலையை எந்த அளவிற்கு நேசித்தாள் என்பதனைப் புலப்படுத்தும்.

ஒழுங்கான பயிற்சி - அப்போது எந்த வேளையிலும் ஓட்டத்தில் அஜித்தா தான் முதல். பயிற்சியை முடித்து இந்த மண்ணில் இருந்து எதிரியை வீழ்த்தும் துப்பாக்கிகளில் தனது துப்பாக்கியும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று வந்தவளுக்கு ஆதிக்கம் அடிபணிய வைக்கும் ஒப்பந்தத்தைத் திணித்தது கண்டு குமுறினாள். எரிமலைகளுக்கு முன்னால் இந்த ஒப்பந்தம் எத்தனை நாளைக்கு நின்றுபிடிக்கும்? - சில மாதங்களின் பின்னால் "எமது அனுமதியின்றி இந்த மண்ணில் எந்த அந்நியனும் நுழைய முடியாது. அப்படி நுழைய முடியுமென்றால் அது எமது பிணங்களுக்கு மேலால்தான்" என்று எமது பொறுப்பாளர் கூறி "இதற்கு நீங்கள் தயார் என்றால் எம்முடன் வாருங்கள்" என்ற போது அஜித்தா சொல்லாமல் கொள்ளாமலே வாகனத்தில் ஏறிவிட்டாள்.

சண்டை ஆரம்பித்து விட்டது. யாழ் மருத்துவபீடத்தில் இறக்கப்பட்ட இந்திய இராணுவம் அனைத்தும் சடலங்களாக சமைந்து போயின. இதில் பெண்போராளிக்குழுக்கள் பெரும் பங்கினை வகித்தன. அங்கே சடசடத்த துப்பாக்கிகளில் அஜித்தக்காவின் துப்பாக்கியும் ஒன்று. வீழ்த்தப்பட்ட எதிரிகளின் எண்ணிக்கையில் அவளுக்கும் பங்குண்டு. பலத்த எதிர்ப்புக்களுக்கும் இழப்புக்களுக்கும் மத்தியில் எமது மக்களின் உடல்களை ஏறி மிதத்தபடி அங்குலம் அங்குலமாக முன்னேறியது இந்திய இராணுவம். புற்றீசல் போல் புறப்பட்டவர்களை புலிப்படை பொசுக்கியது. ஆனைக்கோட்டை, தாவடி, தெல்லிப்பளை என இராணுவத்தை அஜித்தா எதிர்கொண்டாள். தெல்லிப்பளையில் இவளுக்கு மோசமான வயிற்றுவளைவு; எழுந்து நடக்கவே முடியாது. திரும்பும் இடமெங்கும் ஆக்கிரமிப்பாளர்களின் துப்பாக்கிகள் குறிபார்த்தபடி. ஆனால் அவளின் உள்ளம் சோர்வடையவில்லை. விடுதலைக்கு மட்டும்தான் அங்கே இடம் கிடைத்தது.

அஜித்தாவைப் பொறுத்த வரையில் வித்தியாசமான-கஷ்டங்கள் நிறைந்த - ஆனால் மகிழ்ச்சியான ஒரு புதுவாழ்வை எதிர் கொண்டாள். அதுதான் அந்தக் காட்டு வாழ்க்கை. அங்கே எங்களுக்கு எல்லாமே நாங்கள்தான். எமது தேவைகள் எல்லாவற்றையும் நாமேதான் பூர்த்தி செய்ய வேண்டும். உடுப்புத் தைப்பதில் இருந்து வெடிபொருள்கள், கண்ணிகள் உற்பத்தி செய்வது வரைக்கும் அஜித்தாவின் கை படிந்திருக்கும். அங்கிருந்த அனைத்துப் பெண் போராளிகளும் அணிந்திருந்தது அஜித்தா தைத்த உடுப்புத்தான். இரவு, பகல் என்று எந்த வித்தியாசமும் அவளுக்கில்லை. அவ்வளவுக்கு வேலை. இல்லை அந்தளவிற்கு அவளின் கடமைஉணர்வு அவளை ஆட்கொண்டிருந்தது. அண்ணாவும் அவளுக்குப் பக்கத்தில் - முகாம் பொறுப்பில் இருந்து பல முக்கிய பொறுப்புக்கள் அவளுக்கு.

அவள் அதிகமாகக் கூறுவாள் "அறியாமல் கூட நான் தவறு செய்யக்கூடாது. அப்படி தவறு விட்டால் நான் தண்டனை பெறும் போது அது அண்ணாவுக்கு அவமானம்" என்று. எந்தப் பிள்ளையையும் அன்பாகத்தான் அணைப்பாள். ஆனால் கூடவே கண்டிப்பும். தவறுகளுக்கான தண்டனைகளை வழங்கிவிட்டு பின் கூப்பிட்டு ஆறுதலாக அந்தத் தவறுகள் இனிமேல் விடக்கூடாது என்றும் அதற்காகத்தான் தண்டனையைத் தந்தேன் என்னும் மிக நீண்ட விரிவுரை - ஆம்! அவள் மகளிர்படைப் பிரிவைப் பொறுத்தவரையில் பேராசிரியர்தான்

அன்று எல்லாம் வழமையாகத்தான். ஆனால் அஜித்தா மட்டும் விம்முகின்றாள் ஆற்றமுடியாத அழுகை. எவராலுமே கட்டுப்படுத்த முடியவில்லை. எல்லோருமே அப்படி அப்படியே உறைந்து போனார்கள். முகாமிலுள்ள அத்தனை பேரும் ஒன்று கூடிய ஒரு கருத்துப் பரிமாற்றத்தின் பின் மெல்ல எல்லோரும் அதிர்ந்தவர்களாய்... அஜித்தாவின் அண்ணாவுக்கு இயக்கக் கட்டுப்பாட்டு விதிகளை மீறியமைக்காய் ..... அதிஉயர் தண்டனை! எந்த அண்ணனுக்காகத் தான் அறியாத தவறு ஒன்றுக்காகக்கூட தண்டனை பெறக்கூடாது என்று இருந்தாளோ அந்த அண்ணன் தெரிந்து விட்டகுற்றத்திற்காக தண்டனை! அவள் அழுததெல்லாம் அண்ணன் இயக்கத்தின் நம்பிக்கைக்குத் துரோகம் செய்து விட்டான் என்ற ஆத்திரத்தாலும் அவமானத்தினாலும்தான். அந்தத் தண்டனையைத் தான் வழங்கப் போவதாகக் கேட்கிறாள். ஆனால் இயக்கம் மறுத்து விட்டது. அவளின் விசுவாசத்துக்கு முன்னால் நாங்கள் விக்கித்துப் போனோம்.

அதற்குப் பின்னால் இருந்த துரோகத்தனத்தினால் உள்ளுக்குள் வெதவாகப் பாதிக்கப்பட்டாலும் எதுவுமே நடக்காதது போல் அமைதியாகிவிட்டாள். தொடர்ந்து தனது குழுவும் தன் வேலைகளுமாக முன்னையைவிட இன்னும் தாய்மையைப் பேணுபவளாக......

எமது மகளிர் படைப்பிரிவு புதிய போராளிகளை உள்வாங்கி விரிவடைகின்றபோது ஒரு படையணி நாட்டிற்கு வர அதற்குள் அஜித்தாவும் ஒரு குழுத்தலைவியாக வந்தாள்.

மூன்று வருடங்களுக்குப் பின்னால் பெற்றோரை இவள் சந்தித்தபோது இந்த நிகழ்வினை அவள் எப்படிச் சொன்னாள் என்பதெல்லாம் எமக்குத் தெரியாது. ஆனால் ஒன்றுமட்டும் புரிகிறது. தாய்ப்பாசத்திற்கு முன்னால் அண்ணனின் நிலையினை தங்கை சொல்லும் போது அவன் உள்ளம் பலவிதமான உணர்வுகளைத் சந்தித்திருக்கும் என்பதுதான்.

நாட்டிற்கு வந்த கொஞ்சக் காலத்துக்குள்ளேயே வரலாற்று எதிரியுடன் மீண்டும் யுத்தத்தை நடாத்தினோம். பலம் வாய்ந்த எதிரியையும் பலம் வாய்ந்த கோட்டை மதில்களைச் சுற்றியும் முற்றுகை யுத்தம் நடாத்தியதில் ஒரு அணிக்கு அஜித்தாவின் தலைமை பொறுப்பேற்கின்றது.

அப்போதெல்லாம் ''அவ்ரோ''வும் பொம்பர் விமானங்களும் குண்டுகளை வீச இன்னொரு விமானம் உணவுகளைப் போடும். இவற்றுக்கு மத்தியில் வீரசிங்கம் மண்டபத்தில் 5வது மாடியில் அஜித்தா எல். எம். ஜி. உடன் நிற்பாள் கோட்டைக்குள்ளே சில பார்சல்கள் விழ அதை எடுக்க ஓடி வரும் இராணுவத்தினர் அந்தஇடத்திலேயே விறைத்து விடுவார்கள். கோட்டை முகாமைத்தாக்கி அழிக்கும் முயற்சி ஒன்றிலும் அவள் தலைமை ஏற்று குழுவுடன் சென்றாள். முற்றுகைப் போருக்கு முகம் கொடுக்க முடியாத ராணுவம் பின்பக்கத்தால் ஓடியது. கோட்டையில் இன்று புலிக்கொடி பறக்கின்றது.

ஓய்விற்கு அவளுக்கு அவகாசம் இல்லை. பலாலிராணுவம் வெளியேறிய போது குப்பிளான், கட்டுவன் பகுதிகளில் அவள் துப்பாக்கி முழங்குகிறது. கட்டுவனில் எதிரியை மறித்து நிலைகளை அமைத்துகாவல் கடமையைத் தொடர்ந்தாள்.

25அல்லது50யார் தூரத்தில் இருக்கும் இராணுவ நிலைகளை அறியவேண்டும். அவர்களின் நடமாட்டங்களை அறியவேண்டும். முகாம் பலப்படுத்தும் அல்லது விஸ்தரிக்கும் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். இந்த வேலைகளின் போது அவள் முன்னால் சென்ற பின்பே பிள்ளைகள் பின்னால் செல்லவேண்

டும். எமது நிலைகளுக்கு முன்னால் சென்று - அவர்களின் நிலைகளுக்கு கிட்டநின்று அவள் துப்பாக்கி சத்தமிடும். எந்தப் போராளியும் அவளுக்குத் தெரியாமல் முன்னால் போகமுடியாது. அவளுக்குத் தெரிவித்து அவள் நிற்கையில் தான் முன்னால் போதல் வேண்டும். இது அவளின் இறுக்கமான கட்டளை.

அஜித்தா என்றால் அனைவருக்கும் அன்பு நிறைந்த பயம். அவளின் நடத்தையில் அன்பும் கண்டிப்பும் நிறைந்திருக்கும். ''நாங்கள் ஒரு விடுதலை அமைப்பு. அதிலும் மிக மோசமான சமூக அழுத்தங்களில் இருந்து புறப்பட்டவர்கள். அடுத்த பரம்பரை எம்மைப் பார்த்து எமக்குப் பின்னால் வரவேண்டும். ஆனபடியால் நாங்கள் ஒழுக்க சீலர்களாக, பண்பாடுள்ளவர்களாக, வீரமுள்ளவர்களாக மொத்தத்தில் தனித்துவமுள்ளவர்களாக வளரவேண்டும்'' என்பன அவள் உதடுகள் அடிக்கடி உச்சரிக்கும் வசனங்கள்.

22-12-90 அன்று கட்டுவன் பகுதியில் இருந்து இவளது பக்கமாக இராணுவம் முன்னேறுகிறது. ஒரு குழுவுடன் நின்ற இவளுக்கு தகவல் வருகிறது. மறுபக்கமாக எதிரி வெளியேறுகின்றான் என்று. ஓடிவந்து கட்டளைகளைப் பிறப்பித்து நிலை எடுத்து ஒவ்வொருவராக குறிபார்த்துச் சுடுகிறாள். ''இந்தா ஒருத்தன் ......ம் அடுத்தவன் ....'' எண்ணி எண்ணி அவதானமாகத்தான் ... ''எந்த நிலையிலும் பதற்றப்படாது பரபரப்படையாது நிலைமையை விளங்கிரவைகள் வீண்போகாது அடிக்கவேண்டும்'' என்றவளின் துப்பாக்கி நிதானத்தை விட்டு மெல்லச் சரிகிறது. வீரத்தின் சாட்சியாய் நெஞ்சிலே குண்டினை ஏந்தியபடி குருதி கொப்பளிக்க அவள் சாய்கிறாள். ஆம்! எங்கோ இருந்து ஒரு கொடியவனின் குண்டு அவள் உடலில். அந்தச் சண்டையில் பெண் போராளிகள் பல ஆயுதங்களை எடுத்தார்கள் - அவள் அடிக்கடி சொல்வாள். சண்டையில் நாங்கள் ஆயுதங்கள் எடுக்கவேண்டும். அப்பிடிநல்லா அடிபட வேணும் என்று. அப்படியே சண்டைபிடித்தார்கள். ஆனால் அந்த உணர்வினை ஊட்டியவள் அங்கே இல்லை. ஒரு உன்னதமான போராளியை எமது இயக்கம் இழந்தது. ஒரு பேராசிரியரை மகளிர் படைப் பிரிவு இழந்தது. ஆனால் அவள் வளர்த்த பிள்ளைகள் அவளின் உணர்வைச் சுமந்து இன்று பல களங்களில்...

(09-10-1991)

('விரிவுரைகளின் விளக்க குறியீடு அஜித்தா' என்ற தலைப்பில் வெளியாகியது)



# மேஜர் தாடி பாலா

பெற்றோர்: சண்முகம்
செல்வரத்தினம்

இயற்பெயர்: இராசரத்தினம்

முகவரி: அனந்தர்புளியங்குளம்,
நெடுங்கேணி

தாயின் மடியில்: 28-08-1962

கல்வி: வவுனியா-சின்னப்பூவரசங் குளம்
மகா வித்தியாலயம்
நெல்லியடி மத்திய மகா
வித்தியாலயம்
11ம்வகுப்பு

உடன் பிறப்பினர்: சிவராசா
தனபாலசிங்கம்
சந்திரபாலசிங்கம்
குணபாலசிங்கம்
சதாநாயகி
புஸ்பநாயகி

PUBLIC LIBRARY
JAFFNA.

| | |
|---|---|
| *போராளியாய்:* | 1983 |
| *மாவீரனாக தாயகமண்ணில்:* | 10-10-1988 |
| *குறிப்பிடக் கூடிய தாக்குதல்கள்:* | ★ கொக்கிளாய் இராணுவ முகாம் மீதான தாக்குதல்(13-02-1985)<br>★ கிளிநொச்சி-இராமநாதபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினரை தொடர்ச்சியாக நான்கு நாட்கள் முற்றுகைக்குள்ளாக்கிய தாக்குதல் (29-01-1986 முதல் 01-02-1986 வரை)<br>★ கோப்பாயில் இந்தியஇராணுவத் தினருடனானமோதல்(10-10-1987 முதல்)<br>★ முல்லைத்தீவு, 3ம்கட்டை, முள்ளிய வளைப் பகுதியில் இந்திய இரா ணுவத்தினர்மீதான தாக்குதல்கள்.<br>★ களிக்காடு, மூறிப்புப் பகுதியில் இந் தியஇராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகைகளை முறியடித்தமை.<br>★ ஒதியமலையில் இந்தியப்படையினர் மீதான தாக்குதல். |
| *விசேட தகமைகள்:* | 1985-இல் கிளிநொச்சி-இராமநாத புரத்தில் இருந்த பயிற்சி முகாமில் புதிய போராளிகளுக்கு பயிற்சி வழங்கினார்.<br>★ 1987இல் நாவற்குழி சிறிலங்கா இராணுவ முகாமைச்சூழவிருந்த எமது காவலரண்களின் ஒரு தொகு திக்கு பொறுப்பாகவிருந்தார்.<br>★ 1988-இல் முல்லைத்தீவு மாவட்டத் தளபதியாகவிருந்தார். |

வழித்த சில நாட்களிலேயே மிகவேகமாக வளர்ந்து, அவனது முகத்தின் அரைவாசியை அழகாக மூடிவிடும் தாடி, அவனின் பெயருடனும் ஒட்டிக் கொண்டது.

உண்மைதான் - தாடிபாலா என்றால்தான் மேஜர் பாலாவை அவன் நேசித்த எல்லாக் கிராமங்களுக்குமே தெரியும். அவனை நேசித்த எல்லா இதயங்களுக்குமே புரியும். வன்னியில் பாலாவின் பெயர் தெரியாத எல்லைப்புறக் கிராமங்கள் குறைவாகவே இருக்கும். அப்பகுதிகளில் - அந்த நிலத்தைக் காப்பதற்காக அவன் எதிரிகளை பல தடவைகள் சந்தித்திருக்கிறான்.

ஆட்களற்ற வெறிச்சோடிப் போய் நிற்கும் எங்கள் எல்லைக் கிராமங்களைக் கேளுங்கள்...... தாடிபாலாவின் வரலாற்றை அவை விரிவாகவே சொல்லும்.

தமிழீழ எல்லைக் கோட்டுக்கு சற்று உள்ளே காட்டுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் அனந்தர் புளியங்குளம் என்னும் கிராமத்தைச் சேர்ந்தவன் பாலா.

அவன் அந்தக் கிராமத்தின் கடுமையான உழைப்பாளிகள் குடும்பம் ஒன்றின் கடைசி மகன். வயது போன காலத்திலும், கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கும் அப்பா, கட்டுப்பாடுகளை கடுமையாகவே விதிக்கும் அண்ணன்மார், பாசத்தைக் கொட்டிக் கொண்டு அம்மாவும், சகோதரிகளும் என்று அன்புப் பிணைப்பிற்குள் வாழ்ந்து வந்த பாலாவை இந்த மண்ணின் மாற்றங்கள் ஒரு போராளியாக மாற்றியது.

வன்னியில் ஒரு இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட புலிகளின் மூத்த உறுப்பினர்களைக் கொண்ட அணி ஒன்று அனந்தர் புளியங்குளத்தில் சில காலம் தங்கியது. போராளிகளின் வாசம் அந்தக் கிராமத்தில் விடுதலை உணர்வுகளை விதைத்தது.

விடுதலைப் போராட்டம் தமிழ் மண்ணில் வீறு கொண்டிராத அந்தக் காலத்திலேயே பாலாவின் மனதிலும் இந்த மண்ணின் விடிவிற்காகப் போராடும்போராளியாக மாறவேண்டும் என்ற எண்ணம் கருக்கொண்டது. இந்த மண்ணில் இராணுவ அட்டூழியங்கள் அதிகரிக்கத் தொடங்கிய போது பாலா தனது சகோதரன் முறையான குலம் என்பவருடன் சேர்ந்து புலிகளுடன் தன்னை இணைத்துக் கொண்டான்.

புலிகளின் மூன்றாவது பயிற்சி முகாம்.

பொன்னம்மான் - புலேந்தி அம்மான் என்ற உன்னதமான இரு தளபதிகளின் வழி நடாத்தலில் புதிய போராளிகள் உருவானவர்கள். அந்தப் பயிற்சி முகாமின் சிறந்த வீரர்களில் பாலாவும் ஒருவன்- ஒரு கிராமத்து விவசாய இளைஞனுக்குரிய உறுதியான உடல் கடுமையான பயிற்சிகளுக்கு இலகுவாக இடம் விட்டது. பாலா எல்லாப் பயிற்சிகளையும் திறமையாகச் செய்தான். அந்தப் பயிற்சிமுகாமில் நின்ற பழைய - புதிய போராளிகள் அனைவரிலும் மரதன் ஓட்டத்தில் பாலாவே முதலாவதாக வருவான்.

பயிற்சி முடிந்தபின் 1984 இன் பிற்பகுதியில் பாலா வன்னியில் களத்தில் இறங்கினான். எதிரிக்கு எதிராக பல போர் முனைகளில் பாலாவும் ஒருவனாகக் கலந்து கொண்டான்.

எங்கள் விடுதலைப் போராட்டம் உறுதியாக வளரத் தொடங்கிய போது எதிரியோ அதை அடக்குவதற்காக அல்லது அழிப்பதற்காக தன்னால் இயன்ற அனைத்தையும் செய்யத் தொடங்கினான்.

அதில் ஒரு அங்கமாக - மணலாறு பகுதிகளில் குடியேற்றங்களை நிறுவி தமிழீழ தேசத்தின் நிலவழித் தொடர்பினை அறுக்க சிங்கள அரசு முயன்றது. அந்த நேரந்தான் டொலர், கென் பண்ணைகளில் குடியமர்த்தப்பட்ட கைதிகள், காடையர் குடியேற்றத்தையும், மீனவ குடியிருப்பு என்று அமைக்கப்பட்ட கொக்கிளாய், நாயாறு சிங்கள குடியேற்றங்களையும் புலிகள் விரட்டி அடித்தனர். தொடர்ந்து கொக்கிளாயில் இராணுவ முகாம் ஒன்றை அமைத்து குடியேற்றத்தை நிறுவ முயன்ற போது அந்த இராணுவ முகாம் மீதும் புலிகள் ஒரு கடுமையான தாக்குதலை நடாத்தினார்கள் - இதனால் ஒரு பெரும் குடியேற்றத் திட்டம் முளையிலேயே அழிக்கப்பட்டது. இந்த இராணுவ நடவடிக்கைகளில் எல்லாம் பாலாவும் ஒரு வீரனாகக் கலந்து கொண்டான்.

கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதலின் போது ஒரு நிலையில் எறிகணை ஒன்று விழுந்து வெடித்ததால், பாலாவிற்கு அருகில் நின்ற மாமா, தனபால் என்ற இரு போராளிகள் வீரமரணமடைந்தனர். ஆனால் அவர்களுக்கு நடுவே நின்ற பாலா அதிசயிக்கத்தக்கவாறு காயம் எதுவும் இல்லாமலே தப்பி விட்டான். இத்தாக்குதலின் பின்பு காயமடைந்த

போராளிகளைப் பாதுகாப்பாகக் கொண்டு செல்வதில் பாலா கடுமையாக உழைத்தான்.

இதன் பின்பு கிளிநொச்சியில் ஒரு பயிற்சி முகாமின் பயிற்சியாளராக பாலா கடமையாற்றினான். அந்தப் பயிற்சி முகாமிலிருந்து தேசத்தின் தேவைக்காக புதிய போராளிகள் உருவாகி வெளிவந்தார்கள். பாலாவிடம் எல்லோராலும் விரும்பப்படும் சில குணாம்சங்கள் இயல்பாகவே இருந்தன.

எதிலும் விட்டுக் கொடுத்துச் செல்லும் தன்மை - தனக்குத் தெரியாதவற்றை தெரிந்தது போல் நடிக்காமல் எனக்கு விளங்கவில்லை அல்லது தெரியாது என்று கேட்டுத் தெரிந்து கொள்ளும் வஞ்சகமில்லாத இயல்பு - இழப்புகள் தவிர்க்க முடியாது என்பதைத் தெரிந்து கொண்டும் எந்தப் போராளிக்கும் எதுவுமே நடந்து விடக்கூடாது என்று தவிக்கும் மன இயல்பு- என சில குணாம்சங்கள் தாடியில் படிந்து போய் இருந்தன.

அவனது இந்த இயல்புகளே அவனில் எல்லாப் போராளிகளும் அளவு கடந்த அன்பைச் செலுத்தக் காரணமாயிற்று.

வன்னியில் சிங்கள் படைகளுக்கெதிரான பல போர்க்களங்களில் தாடி பாலா பங்கு பற்றிக் கொண்டிருந்தான். அந்த நேரங்களில் மணலாற்றில் தொடர்ந்து புதிய முறைகளில் சிங்களக் குடியேற்றங்கள் நடக்கத்தொடங்கின. அதற்காக மேஜர் பாலாவின் தலைமையில் நெடுங்கேணியில் நின்று செயற்படுவதற்காய் புலிகளின் ஓர் சிறிய படையணி அனுப்பப்பட்டது. அவர்களின் வேலை எல்லைக் கிராமங்களில் குடியேற்றச் சிங்களவர்களை அகற்றுவதாகவே இருந்தது.

அந்நேரம் அப்பகுதிகளில் இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையே ஒரு ஒளிவு மறைவு விளையாட்டு நடந்து கொண்டே இருந்தது. அவர்கள் தேடும் போது புலிகள் மறைந்து விடுவார்கள். ஆனால் அவர்கள் எதிர்பாராத பொழுது திடீரென தோன்றி எதிரிகளில் சிலரை புலிகளின் துப்பாக்கிகள் விழுங்கும். அங்கு குடியேற நினைத்த சிங்களக் காடையர்களுக்கு புலிகள் காலனாக இருந்தார்கள். ஆனால் எங்கள் தமிழ்க் கிராமங்களுக்கோ இவர்கள் காவலர்களாக இருந்தார்கள்.

இப்படித்தான் குடியேற்றங்களுக்கு எதிரானதொரு போர் அங்கு தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தது.

வடமராட்சியில் ஓர் பாரிய இராணுவ நடவடிக்கையை சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட பொழுது நாவற்குழி இராணுவமுகாமைச்சுற்றி அமைக்கப்பட்ட காவல நிலைகளுக்கு பொறுப்பாக பாலா நியமிக்கப்பட்டான். அக்காலத்தில் இராணுவம் வெளியேற நினைக்கும் போது எல்லாம அவர்களை எதிர்த்து அசைய விடாது தடுத்து நிறுத்துவதில் பாலாவும் அவனது அணியினரும் முயன்று வெற்றி கண்டார்கள் இலங்கை இந்திய ஒப்பந்தமும் சிறிதுகால அமைதியும் இந்த மண்ணில் தோன்றிய போது பாலா மீண்டும் வன்னிக்கு வந்தான். அங்கு மேஜர் பசிலனுடன் இணைந்து நின்றான். பயிற்சி முகாம் காலம் தொட்டே அவர்கள் இருவருக்கும் இடையே மிகவும் நெருக்க மான நட்பு இருந்தது. அவர்களுக்கிடையேயான அன்பும் பாச மும் எல்லாரையுமே வியக்கவைக்கும்.

இந்தியப்படைகளுடன ன போரர் தொடங்கிய போது கோப்பாயிலும் முல்லைத்தீவிலும் பசிலனுடன் இணைந்து பல தாக்குல்களில் பாலா பங்கு பற்றினான். 8-11-87 அன்று ஒரு சண்டையின். பொழுது பாலாவின் கண்களுக்கு முன்பாகவே பசிலன்.......

...... பசிலனின் இழப்பினால் இந்தப் படையணி சோகத் தில் கலங்கியது. அவனது இழப்பை ஏற்றுக்கொள்ள முடியாமல் எல்லோரும் தவித்தனர். ஆனால் பாலா தனது துயரத்தை வெளிக்காட்டாது உறுதியாக இருந்தான். இரவுகளில் ஆட்களில் லாத காவல் வேளைகளில் மட்டும் அவன் அடக்க முடியாமல் அழுவான்.

பசிலனின் இழப்பு பாலாவை சோர்வடையச் செய்யவில் லை. அவனது உணர்வுகளை மேலும் உறுதி பெறச்செய்தது, தொடர்ந்து இந்தியப்படைகளுக்கு எதிரான பலதாக்குதல்களில். பாலா பங்கு பற்றினான்.

27-11 87 அன்று நடந்த ஒரு பெரும் சண்டையில் விழுந்த இந்தியச்சிப்பாய் ஒருவனின் S. L. R. துப்பாக்கியை எடுத்து வரும் பொழுது பாலாவின் நெஞ்சில் பலமான காயம் ஒன்று ஏற்பட்டது. எங்கள் கண்ணுக்கு முன்பாக மருத்துவ வசதி இன்றி அவன் சாவுடன் போராடினான். அவனது இறுதிக்கணத்தை எதிர்பார்த்தபடி நாம் இருந்த பொழுது பாலா எதிர்பாராத வழியில் காப்பாற்றப்பட்டான். அத்தாக்குதலின் பொழுது லெப், அலன் வீரமரணமடைந்தான்,

1988 பங்குனி மாதம் பாலா முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். தொடர்ந்து இந்தியப் படைகளுக்கு எதிரான சண்டைகள் நடந்து கொண்டே இருந்தன. இடையில் ஒரு நாள் தலைவரை சந்திக்க என்று சென்ற பாலா M.16 எரிகுழல் துப்பாக்கியுடன் வந்தான். தலைவர் தனக்கு தந்ததாக சொன்னான். அதன் பின் அவன் அதனைப் பிரியவே இல்லை.

10-10-1988 அன்று நித்தமும் நடந்தே திரியும் பாலா அன்று மட்டும் உழவு இயந்திரத்தில் ஏறிவரும் போதும்-

தேசவிரோதிகளும் இந்தியர்களும் அவர்களை சுற்றி நின்று துப்பாக்கிகளை இயக்கும் போதும் -

அவனும்அவனுடன் மேலும் பதினொரு போராளிகளும் விழும் பொழுதும்-அந்த M.16 துப்பாக்கி அவனுடனேயே பிரியாமல் இருந்தது.

(23-10-1991)

---

**தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் முதன் முதல் சயனைட் உட்கொண்ட மாவீரர்**

செல்வம் ( **அன்னலிங்கம் பகீரதன் -**

5ம் வட்டாரம், மண்டைதீவு )

26-05-1984 அன்று பொலிகண்டியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைதாகிச் செல்கையில்

**முதன் முதல் ஒரே சயனைட்டைப் பகிர்ந்துண்ட மாவீரர்கள்**

லெப்·உமாராம் ( முத்துக்குமார் சந்திரகுமார்-

கல்லடி, மட்டக்களப்பு)

சுந்தர் ( நல்லதம்பி சுந்தரலிங்கம்—

காரைதீவு, அம்பாறை )

12-03-1986 அன்று கல்முனையில் சிறீலங்கா அதிரடிப்படையினர் கைது செய்கையில்



# கப்டன்

# சாரா

| | |
|---|---|
| *பெற்றோர்:* | இமானுவேல்<br>மேரிமாக்கிரட் |
| *இயற்பெயர்:* | ஜோண்சன் |
| *முகவரி:* | 31, உவர்மலை, திருகோணமலை. |
| *தாயின் மடியில்:* | 15-03-1973 |
| *கல்வி;* | உவர்மலை தமிழ் மகா<br>வித்தியாலயம், 10ம்-வகுப்பு |
| *உடன்பிறந்தோர்:* | எடிசன்சாள்ஸ்<br>றொபின்சன்றோபேட்<br>செஸ்டர்யூட்<br>அன்ரன்சுசீலா |
| *போராளியாய்:* | 13-04-1989 |
| *மாவீரனாக<br>தாயகமண்ணில்:* | 03-08-1991 |
| *குறிப்பிடக்கூடிய<br>தாக்குதல்கள்:* | தோப்பூரில் சிறிலங்காப் படையினர்<br>மீதான தாக்குதல், கொட்டடி<br>அணைக்கட்டில் சிறிலங்காப் படை<br>யினர் மீதான தாக்குதல். |
| *விசேட திறமைகள்:* | தொலைத்தொடர்புக்கருவிகளை<br>இயக்கத்தெரிந்தவர்,<br>நீச்சலில் வல்லவர்,<br>சிறந்த சாரதி. |

திருமலை நகரின் முழு இயற்கையின் தோற்றத்தையும் மிக எளிமையாகச் சிரமமின்றி இரசிப்பதற்குத் தேவையான ஓர் இடம்தான் அந்த உவர் மலைப் பிரதேசம். காரணம் இப் பிரதேசமானது சமமின்றி ஓர் உயர்வும் தாழ்வுமாக அமைந்த ஒரு மலைச்சாரல் பிரதேசமாகும். இவ்விடத்தின் மையப்பகுதி யில் நின்று பார்த்தால் திருமலை நகரின் இயற்கையின் சீற் றமே தன்னால் வெளிவரும்.

திருகோணமலையிலேயே மிகவும் சிறப்பு வாய்ந்த திருக் கோணேஸ்வரம், அதைச் சூழவுள்ள பரந்த கடல், அக்கட லோடு அமைந்த சிறப்பு வாய்ந்த இயற்கைத் துறைமுகம், அத்துறைமுகத்தோடு அணைக்கப்பட்டிருக்கும் பல வர்ண நிறப் படகுகள், கடலின் பரப்பில் ஆங்காங்கே நிற்கும் பாரியகப்பல் கள், கடலின் மத்தியில் தன கென ஒரு பெரிய இடம் பிடித்து நிற்கும் மாவாலை, மாலையானதும் மீன் பிடிப்பதற்காகச் செல்லும் எண்ணற்ற சிறுவள்ளங்கள். இரவானதும் மாவாலை, கடற்பரப்பையே பிடித்து நிற்கும் கப்பல்கள், வள்ளங்களில் வெளிச்சத்திற்காகக் கொளுத்தப்படும் சிறு விளக்குகள், இவை அனைத்திலும் இருந்து வரும் வர்ணவர்ண மின்னொளிகள், இவையெல்லாவற்றையுமே பார்த்து இரசித்துக்கொண்டிருக்கும் போது தன்னையே மறந்து நேரம்போவதே தெரியாது.

இப்படிப்பட்ட இயற்கையின் தோற்றத்தையே எடுத்தவு டன் எடைபோட்டுவிட முடியாத ஓர் இடத்தில் எளிமையான ஒரு குடும்பத்தில் பிறந்தவன்தான் சாரா. குடும்பத்தில் இளை யவனான இவனை இவனது வீட்டார் செல்லமாக ராஜா என அழைப்பார்கள்.

எந்நேரமும் சிரித்த முகத்துடனும், துடியாட்டமாகவும் இருக்கும் இவன் தி/ உவர்மலை மகாவித்தியாலயத்தில் தனது ஆரம்ப படிப்பைத் தொடங்கி ஜீ. சி. ஈ சா/தரம்வரை அந்த பாடசாலையிலேயே தனது படிப்பைத் தொடர்ந்து வந்தான். இவனது துடியாட்டங்களையும், குழப்படிகளையும் கூறப் பல சம்பவங்கள் உண்டு.

தனது வீட்டுக்குத் தெரியாமல் பாடசாலை நண்பர் களையும் அழைத்துக்கொண்டு கடலுக்குக் குளிக்கச் செல்வான் கடலில்குளித்துக் கொண்டிருக்கும் போது நீச்சல் தெரியாத மற்றைய நண்பர்களை ஆழமான இடத்திற்கு இழுத்துச் சென்று அவர்களுக்கு பயமூட்டி அவர்களைக் கத்த வைப்பான்.

மற்றைய நண்பர்கள் குளித்துவிட்டுக் கரையை அண்மித்தா லும் இவன் மட்டும் இலகுவில் கரைக்கு வரமாட்டான். கடலின்

மத்தியில் இருக்கும் பாறையின் மேல் ஏறிப் பாய்வதும், குதிப்பதும், பல மைல் தூரம் நீந்துவதுமாகவே இருப்பான்.

படிப்பிலும் மிகவும் கெட்டிக்காரனான இவன், நீச்சல், உதைபந்தாட்டம், ஓட்டம் போன்றவற்றிலும் மிகவும் திறமைசாலி. பாடசாலையில் விளையாட்டுப் போட்டி நாட்களில் தான் பங்கு பற்றும் விளையாட்டுக்களில் எல்லாம் பல பரிசில்களைப் பெற்றவன்.

இவனது குடும்பத்தில் உள்ள எல்லோரும் இசைக்கருவிகள் அனைத்தையும் இயக்குவதிலும், பாடுவதிலும் வல்லமை பெற்றவர்கள். இவனது தந்தையின் தலைமையில் நடக்கும் நிகழ்ச்சிகளோ பல எனலாம். இவன் தனது தந்தையார் பாடும் ஈழத்துப் பாடல்களை மிகவும் விரும்பிக்கேட்பான்.

1989-ம் ஆண்டு இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கப்டன் சாரா ஆற்றிய பணிகள் பல. தனது பயிற்சிப் பாசறையின் போது அனைத்துப் போராளிகளினதும் நெஞ்சைக் கவர்ந்தவன் சாரா.

இதற்கிடையில் 1990- ஆண்டு நடுப்பகுதியில் தோட்பூர் என்னுமிடத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதல் ஒன்றின்போது சாராவும் பங்குகொண்டான். அச்சண்டையில் மிகவும் திறமையான முறையில் சண்டை புரிந்து இராணுவத்தினரிடமிருந்து ரி.56-2 ரகத் துப்பாக்கி ஒன்றைக் கைப்பற்றினான் சாரா. இவனது திறமைக்குப் பொறுப்பாளர்கள் உட்பட அனைத்துப் போராளிகளினாலும் இவன் பல பாராட்டுக்களைப் பெற்றான். சாரா அன்று கைப்பற்றிய அதே துப்பாக்கியே அவனுக்குப் பொறுப்பாளரினால் சொந்தமாக வழங்கப்பட்டது. இச்சண்டையில் இவனது திறமையைக் கண்டுதான் இவனுக்கு 15 பேர் வழங்கப்பட்டு அக்குழுவிற்குத் தலைவனாகவும் நியமிக்கப்பட்டான். அன்று தான் கைப்பற்றிய ஆயுதத்தை அவனது உயிர் பிரியும் மட்டும் மற்றைய போராளிகளினது கை மாறாதபடி தன்னுடனேயே வைத்திருந்தான் சாரா.

இவன் தனது பயிற்சியை முடித்த காலம் தொடக்கம் இயக்கத்தின் தேவைகளில் மிக முக்கிய தேவையாகிய தொலைத்தொடர்பு சாதனத்தை (கதைக்கும்) இயக்கும் வேலையில் ஈடுபட்டான். தனக்கு என பொறுப்பாளரினால் வழங்கப்படும் வேலையை மிக நேர்த்தியாகவும் செம்மையாகவும் செய்து வருவான்.

திருமலையின் நகரப்பகுதியிலிருந்து இயக்கத்தின் தொடர்பை ஏற்படுத்தி இயக்கத்திற்குச் செல்வது என்பது மிகவும் கடினமான காரியம் ஆயினும் இவன் பலவழிகளிலும் முயற்சி செய்து சலிக்காது எப்படியோ ஓர் வழியில் தொடர்பை ஏற்படுத்தி தன்னையும் இயக்கத்தில் இணைத்துக் கொண்டவன் சாரா.

இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தினரின் காலத்தில் உண வுப் பொருள்களைப் பெறுவதற்காகப் பல மைல் தூரம் நடந்து தான் உணவுப் பொருள்களைப் பெற்று வரவேண்டும். அப்படி யான வேளையிலும் கூட ''ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப் பிருக்காது'' என்ற வாசகத்தைப் போல தான் தூக்கிய பொருள் களுடன் பாட்டும் கூத்துடனும் தான் முகாம் வந்து சேருவான்.

1989-ம் ஆண்டு கடைசிப் பகுதியில் மூதூர் பிராந்தியத்திற் குச் சென்ற இவன் அங்கும் தொலைத் தொடர்பு இயக்குனரா கவே இருந்தான். இச்சாதனத்தைப் பற்றிய தொழில் நுட்பத் தில் மிகவும் திறமையானவன் சாரா.

1991-ம் ஆண்டு ஆனையிறவு இராணுவ முகாம் முற்றுகை யின் போது ஆனையிறவு இராணுவத்தினருக்கு உதவியாகக் கட்டைக்காடு, புல்லாவெளி போன்ற இடங்களால் முன்னேறிய இராணுவத்தினருடன் பலநாள் சண்டை மூண்டது. இச்சண்டை யில் இவன் ஒரு குழுவிற்குத் தலைவனாக இருந்தான். இப் பாலைவனப் போரின் போது இவன் தனது அணியை மிகவும் செம்மையாக வழிநடத்தி மிக முனைப்புடனும் சண்டையில் ஈடுபட்டு வந்தான்.

1991-08-03 அன்று பாரிய கவச வாகனங்கள் சகிதமும், ஆகா யப்படையினரின் உதவியுடனும் ஆனையிறவை நோக்கி முன்னே றிய பலபேர் கொண்ட இராணுவ அணியுடன் ஏற்பட்ட மோத லின் போது வீறுடன் சண்டை செய்து கொண்டிருந்த சாரா வின் உடலை எதிரியின் துப்பாக்கியிலிருந்து வெளிவந்த ரவை கள் சல்லடை போட்டது. இவனுடன் நின்ற மற்றைய போரா ளிகள் இவனைக் காப்பாற்றுவதற்காகக் கடைசிவரை முயன்றும் போராடியும் முடியவில்லை. இறுதியில் சாரா எம்மை விட்டுப் பிரிந்தான். சூரியனும் சந்திரனும் சுற்றிச் சுற்றி வருவது, ஒரு சாதாரண நிகழ்வே. ஆனால் எமது போராளிகள் பெறும் ஒவ் வொரு வெற்றியும் சாதனையும் தமிழீழ மலர்விற்கான ஒவ் வொரு ஏறுபடியாக அமைகின்றன. இந்த ஏறுபடியாக அமைப வர்கள் மறைந்த எம்மாவீரர்களே. இவர்களே எமது தமிழீழத் தாய் நாட்டின் அசைக்க முடியாத தூண்கள் ஆகின்றனர்.

(03-04-1992)



# கப்டன் ஆஷா

| | |
|---|---|
| பெற்றோர்: | சுந்தரம் நடராசா<br>சின்னம்மா நடராசா |
| இயற்பெயர்: | பத்மாவதி(கலா) |
| முகவரி: | ஜெயவர்த்தனாவீதி, நாயன்மார்கட்டு<br>யாழ்ப்பாணம் |
| தோற்றம்: | 06. 04. 1968 |
| கல்வி: | யாழ்/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி<br>வித்தியாசாலை<br>8ம் வகுப்பு |
| உடன் பிறப்பினர்: | செல்வரத்தினம்<br>பூமணி<br>பாக்கியநாதன்<br>ராஜேந்திரன் |
| போராளியாய் | 10. 11. 1985 |
| மாவீரராக<br>தாயகமண்ணில்: | 22. 12. 1990 |

குறிப்பிடக்கூடிய தாக்குதல்கள்:

★ 1987ம் ஆண்டுக்காலப் பகுதியில் கோட்டைக்காவலரண் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினருடனான மோதல்கள்

★ ஆனைக்கோட்டை, தாவடிப்பகுதிகளில் இந்திய இராணுவத்தினருடனான மோதல்கள்.

★ திருநெல்வேலியில் இந்திய இராணுவத்தினரின் முற்றுகையின் போது ஏற்பட்ட மோதல்.

★ முசல்குத்தியில் தேசத்துரோகிகளுடனான மோதல்

★ கொக்காவில் சிறீலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு (13-07-1990)

★ யாழ் கோட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதல்கள்.

விசேட திறமை: பாரம்சுமப்பதில், நடிப்பதில் வல்லவர்.

---

**தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதற் கரும்புலி**

**கரும்புலி கப்டன் மில்லர் (வல்லிபுரம் வசந்தன்-**

**துன்னாலை தெற்கு, பருத்தித்துறை)**

*05-07-1987 அன்று நெல்லி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைந்திருந்த சிறி லங்கா இராணுவ முகாம் தகர்ப்பின் போது.*

தமிழீழ விடுதலைப் போராட்டம் மக்களை பெரிய மாற்றத்துக்குள்ளாக்கியுள்ளது. இருபது வருடத்துக்கு முன்னால் இப்படியான நிலைமைகளில் நாம் வாழ்வோம், நாம் இப்படி நடந்து கொள்வோம் என்று எவரும் கற்பனை கூடச் செய்திருக்க மாட்டார்கள்.

ஆஷாவின் குடும்பத்தவரும் இதற்கு நல்ல உதாரணம். 22. 12. 91 அன்று மாலை ஆஷாவின் தந்தை நடராசாவிடம் சில போராளிகள் வந்தனர். ''ஐயா, கட்டுவனில நடந்த சண்டையில ஆஷாக்காவுக்கு சின்னக்காயம்... ''கூறிவிட்டு அவரது முகத்தை நோக்கினர். ஒரு நிமிடம் விறைத்தமாதிரி நின்ற அவர் கரகரத்த குரலில் கேட்டார்''சரிதம்பி... பொடியைக் (Body) கொண்டு வருவீங்கள்தானே? .. தகவல் சொல்ல வந்த போராளிகளும் தனிப்பட்ட முறையில் அவரது குணவியல்புளைப் தெரிந்த அயலவர்களும் வியப்பிலாழ்ந்தனர்.

ஆஷாவின் மறைவை உடனடியாக எப்படிச் சொல்வது? படிப்படியாகத் தெரிந்து கொள்ளட்டும் எண்றெண்ணிய போராளிகள் இந்த நிலைமையை உடனேயே தாங்கிக்கொள்ளக் கூடியவராக இவர் இருப்பார் என எதிர்பார்க்கவில்லை. கத்துவார்கள், குளறுவார்கள் என்றெல்லாம் தயங்கித் தயங்கி இவ்வாறு கூறப்போக அவர் நிலைமையைப் புரிந்து கொண்டு உரையாடலைத் தொடர்ந்தது போராட்டம் எந்தளவுக்கு மக்களைத் தயார் நிலையில் வைத்துள்ளது என்பதை அவர்களுக்கு உணர்த்தியது. தனது மற்றெல்லாப் பிள்ளைகளையும் விட ஆஷாவில் எவ்வளவு பிரியம் வைத்திருந்தார் என்பதை அறிந்த அயலவர்கள் இதை எப்படி இவர் தாங்கிக் கொள்ளப் போகின்றார் என்றே கவலைப்பட்டனர். ஆனால் அவரது போக்கு அவரைப் பற்றிய மதிப்பீட்டை மாற்றிவிட்டது.

1985 ஆம் ஆண்டு-அப் போது பத்மாவதிக்கு 18 வயதாகிவிட்டது. பெரிய யுவதி அவள். ஆனால் நடராசர் அதையெல்லாம் சிந்திப்பதில்லை. அவரைப் பொறுத்தவரை என்றும் அவள் குழந்தை என்ற நினைப்புத்தான். ஆஷா இயக்கத்திற்கு செல்வதற்கு முன் கடைசியாகச் சாப்பிட்ட சாப்பாடு கூட தகப்பனின் மடியில் இருந்துதான். மகளை மடியில் வைத்து சாப்பாடு ஊட்டிய பின்னர் தான் தான் சாப்பிடும் பழக்கமுடையவர் அவர்... குழந்தையின் நினைப்பில்தான் மடியில் வைத்திருக்கும் போதெல்லாம் அவள் தேசத்தின் விடுதலை

பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கின்றாள் என்பது அவருக்குத் தெரியாது. அவரைப் பொறுத்தவரை அவள் குழந்தை. அப்படியான மனநிலையில் உள்ளவரா இன்று இப்படி...இது காலத்தின் தேவை. இப்படி வாழ வரலாறு எம்மை நிர்ப்பந்திக்கிறது. எமது போராட்டத்தில் நிகழும் ஒவ்வொரு நிகழ்வும் தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடும் இனங்களுக்கு அரிச்சுவடியாகின்றது.

ஆஷா-இவள் 1985 ஆம் ஆண்டு மன்னாரில் இயக்கத்திற்கு பெண்களை எடுக்கின்றார்களாம் என்று கேள்விப்பட்டு யாழ்ப்பாணத்திலிருந்து சிறு பெண்கள் குழுவுடன் மன்னாருக்குச் சென்றவள். அவளுக்கு தெரியும் தன்னை தன் தந்தை எவ்வளவு நேசிக்கின்றாரென்று. ஆனால் அதை விட இவள் தாய் நாட்டை நேசித்தாள். அதனால்தான் யாழ்ப்பாணத்தில் இப்போதைக்கு இயக்கத்தில் சேர வாய்ப்பில்லை அதற்கு முன் மன்னாருக்குச் சென்று அங்கிருந்து இயக்கத்திற்கு செல்லவேண்டும் எனக்கருதினாள் இவள். விடுதலைப் புலிகளின் முதலாவது பயிற்சி முகாமில் பயிற்சி பெற்ற இவள், மிகுந்த தன்னம்பிக்கையுடையவள் குறிப்பிட்ட விடயத்தை சாதிப்பேன் என நினைத்துச் சாதிக்க வல்லவள்.

இந்திய இராணுவம் நடமாடிய போது இவள் எதிர்பாராத விதமாக ஒருநாள் பிடிபட்டாள். இவளது புத்திக்கூர்மைக்கு இந்திய இராணுவத்திற்கு ''சுத்துவது'' பெரியவேலையாகத் தெரியவில்லை. அத்துடன் தன்னோடு பிடிபட்டவர்களையும் விடுவிக்கக்கூடிய மாதிரி கதைகள் புனைந்து அவர்களையும் விடுவித்தாள்.

இவள் கண்ட போர்க்களங்கள் ஏராளம். இவளது துப்பாக்கி இந்திய, சிங்கள சிப்பாய்களில் அனேகருக்கு முடிவுரை எழுதியது. கொக்காவில் உட்பட பல போர்க்களங்கள் இவளது குருதியை விடுதலையின் பேரால் வாங்கிக்கொண்டன.

கோட்டை இராணுவமுகாம் முற்றுகையிடப்பட்ட சமயத்தில் மாறிமாறிக்குண்டுகளாகப் பொழிந்து கொண்டிருக்கும் சிறிலங்கா அரசபடை விமானங்கள். அப்போது கோட்டைப்பகுதியை நோக்கி முட்டினாலே ஏற்பு ஏற்படக் கூடிய சைக்கிளில் அவளிடம் செல்வார் தந்தை. ''கொப்பர் ஹொண்டாவில் வந்து உன்னைத் தேடுறார்'' என்று தகப்பன் வந்த செய்தியை தெரிவிப்பார்கள் தோழிகள். ''ஒருநேரம் வீட்டுக்கு வந்து சாப்பிட்டு

விட்டுப்போ'' என்று கெஞ்சும் தந்தையிடம் ''கோட்டையை பிடிச் சாப்பிறகு தான் வீட்டை வருவன்'' எனஉறுதியோடு இவள் கூறிய நாட்கள் பல. இயக்கத்திற்கு செல்லும்வரை தன்னுடைய மடியில் இருந்து சாப்பிட்ட மகள் காதைக் கிழிக்கும் விமானங்களின் இரைச்சலின் மத்தியில் - நாளாந்தம் கோட்டைப்பகுதியில் வீரமரணம் என்ற செய்திகள் பத்திரிகைகள் வெளிவருகையில், விமானக்குண்டு வீச்சின் சிதைவுகளுக்கு மத்தியில் காவலரணில் நிற்கும் கோலத்தைப் பார்க்கையில் அவருக்கு போராட்டம் சரியானது. நீதியின் பக்கம் எனது மகள் நிற்கிறாள் என்ற உணர்வே ஏற்பட்டது. அக்காட்சிகள் போராட்டம் பற்றியபல உண்மைகளை அவருக்கு தெரியப்படுத்தியது. அவரது ஆசை ஒரு நேரச்சாப்பாடு தனது கையால் ஊட்டவேண்டும் என்பது தான், ஆனால் கோட்டை முகாமை போராளிகள் கைப்பற்றும் வரை இவள் வீட்டுக்குச் செல்லவில்லை.

கோட்டை கைப்பற்றப் பட்டதும் வீட்டுக்குச் சென்ற இவள் தன்னுடன் நெருங்கிப் பழகியோர் வீட்டுக்குச் சென்றாள். ''அம்மா சோறு தீத்துங்கோ-டேய் அண்ணாபடம் எடு என்னை''., என்று ஒரு வீட்டில் உரிமையோடு அட்டகாசம் செய்தாள் போகும் போது இனி ''பலாலி அடிச்சாப்பிறகு தான் வருவன்'. என்று கூறிவிட்டுச் சென்றாள். ஆனால் வீட்டிற்கு வந்தது மாவீரர் கப்டன் ஆஷாவாக.

இறுதிச்சடங்குகள் முடிந்ததும் நடராசர் சிலரிடம் கூறிக் கொண்டிருந்தார் ''பலாலி அடிச்சுப்போட்டுத்தான் .... வருவன் எண்டு சொல்லிப் போட்டுப் போனாள். அத முடிக்காமல் போட்டாள் அதுதான்......''

இந்தமண் மாறிக்கொண்டிருக்கிறது தான்.!

(07-06-1991)



# மேஜர் ஜேம்ஸ்

| | |
|---|---|
| பெற்றோர்: | உருத்திராபதி<br>பூரணரத்தினம் |
| இயற்பெயர்: | சிறீதர் |
| முகவரி: | நெடியகாடு,<br>வல்வெட்டித்துறை |
| தோற்றம்: | 06-09-1962 |
| கல்வி: | ஆரம்பக்கல்வி-யாழ்/வல்வை றோமன் கத்தோலிக்க பாடசாலை<br>க. பொ.த(உயர்தரம்)பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி |
| உடன்பிறப்பினர்: | குகலட்சுமி<br>ரூபலட்சுமி<br>சுதாகர் (மாவீரர்)<br>உதயலட்சுமி (மாவீரர்)<br>சேகர்<br>யசோதர்<br>கஜலட்சுமி |
| போராளியாய்: | 06-06-1985 |
| மாவீரனாக தாயகமண்ணில்: | 09-08-1990 |

குறிப்பிடக் கூடிய

தாக்குதல்கள்: ★ 1987இல் வடமராட்சி ஒப்பரேசன் லிபரேசன் நடவடிக்கையின் போது ஏற்பட்ட மோதல்கள்

★ கோண்டாவிலில் 2 பவல் முற்றாகச் சேதமாக்கிய தாக்குதல்.

விசேட தகமைகள்: ★ வடமராட்சிப் பொறுப்பாளராக விளங்கியவர்.

★ தீவகப் பொறுப்பாளராக விளங்கியவர்.

எமது இனத்தின் சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக தமது இன்னுயிரை ஈந்துள்ள இந்த மகத்தான தற்கொடையாளர்கள் (தியாகிகள்) காலம் காலமாக எமது இதயக் கோயிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்.

–தலைவர் வே. பிரபாகரன்

இலக்கில்லாமலும், கண் மூடித்தனமாகவும் ஷெல்களும், ஆட்லறிகளும் வீழ்ந்து வெடித்தன. எங்கு பார்த்தாலும் ஷெல் சத்தங்களும் மக்களது அவல ஓலங்களும் காதைப் பிளந்தன. கவசவாகனங்களும், டாங்கிகளும் தமது இஷ்டத்திற்கு இந்த மண்ணில் அகலக்கால் வைத்தன. வயல்களென்றோ, வீடுகளென்றோ தோட்டங்களென்றோ பாராது (அவை சிறிப்பாய்ந்தன. காக்கியுடுப்பில் வரண்ட முகங்கள் - துப்பாக்கிச் சனியன்களை ஏந்திய வண்ணம் பல ஆயிரம் இந்திய இராணுவத்தினர். தமது காலடித்தடங்களைப் பதித்தனர். இது......இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் யாழ் நகரை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயற்சித்த நேரம்.

கவசவாகனங்கள், டாங்கிகளின் வரிசை ஒன்று கோப்பாயூடாக கோண்டாவிலை நோக்கி தனது பாரிய சக்கரங்களை இந்த மண்ணில் பதித்த வண்ணம் விரைந்து வந்தன. பயங்கரமாக உறுமிய வண்ணம் வந்த டாங்கிகள் அங்கு நின்ற விடுதலைப்புலிகளுக்கு இராட்சதன் போன்ற தோற்றத்தைக் கொடுத்ததில் ஆச்சரியமேதுமில்லை. இந்தியப் படைகளை எதிர்நோக்க யாழ் நகரில் பல்வேறு இடங்களில் விடுதலைப் புலிகள் நிலை கொண்ட நேரம் அது. கோண்டாவில் சந்திக்கு அண்மையிலும் சில விடுதலைப் புலிகள் தாங்கள் முதன் முதலாக பார்க்கும் அந்த இராட்சதனை எதிர்கொள்ளத் தயாராகின்றனர்.

கோண்டாவில் சந்திக்கு அண்மையில் இருந்த ஒரு வீட்டிலிருந்து முன்னே விரைந்து வரும் டாங்கிகளை எதிர் கொள்ளத் தயாராகின்றான் விடுதலைப் புலிவீரனொருவன். அவன் தோளில் குறிபார்த்த வண்ணம் பசூக்காவை வைத்திருந்தான். அவன் பின்னால் எதற்கும் தயாராக பசூக்காவிற்குரிய லோடர். ''மச்சான் எங்கடை பக்கம் தான் வர்றாங்கள்'' என்றபடியே பசூக்காவிற்கு டிகரை தட்டினான். பசூக்கா முழங்குகின்றது. அதிலிருந்து புறப்பட்ட ஷெல் டாங்கியின் முன்புறம் பட்டு வெடிக்கின்றது. அத்தோ...... ஆனாலும் அந்த டாங்கி உறுமிய வண்ணம் இவர்கள் இருந்த வீட்டை நோக்கிப் பாய்ந்து வருகின்றது.

''பட்டு வெடித்தும் இப்படிச் சனியன்வருகுதே பக்கத்து வளவிற்குப் போவம்'' என்று கூறிய பசூக்கா வீரன் தனது லோடரை அழைத்துக் கொண்டு ஓடினான். அவ்விருவிடுதலைப் புலிகளும் அருகிலுள்ள கமுகம் தோட்டத்திற் பாய்ந்து சென்று நிலை யெடுக்கின்றார்கள். விடுதலைப் புலிகள் இருந்த வீட்டை இடித்து துவம்சம் செய்த வண்ணம் அந்த டாங்கி வெளிப்படு

PUBLIC LIBRARY
JAFFNA.

கின்ற டாங்கியிலிருந்து ஷெல்களும், 50 கலிபர் ரவைகளையும் சரமாரியாக பொழிகின்றான். மீண்டும் பசூக்கா முழங்குகின்றது. இம்முறை முன்னாலிருந்த கமுகமரம் ஒன்று அதனை வாங்கி சரிகின்றது. வரிசை, வரிசையாய் கவசவாகனங்களும், டாங்கிகளும் வந்து கொண்டிருக்கின்றன. துப்பாக்கிச் சனியன்களுடன் இந்தியக் காலாட்படையினர் சுற்றிவளைக்கும் ஆபத்துள்ள அந்த இக்கட்டான நேரம்......

விடுதலைப்புலிவீரர்கள் மனந்தவராமல் அடுத்த ஷெல்லை லோட்பண்ணுகின்றார்கள். முன்னால் வந்த டாங்கி இவர்களுக்கு முதுகைக்காட்டிய வண்ணம் றோட்டிற்கு ஏறுகின்றது. இந்த முறை அந்த வீரனது குறிதவறவில்லை. ''மச்சான் அடிச்சுப்போட்டன்'' என்று சந்தோசத்துடன் கத்தினான் அந்த வீரன். பசூக்கா முழங்கியவுடன் அந்த டாங்கி ஒரு முறை தள்ளாடியது. பின்பு குபீரென அதன் பின்புறத்தில் நெருப்பு பற்றி எரிகின்றது. அடுத்ததாக வந்த டாங்கி இதனை முந்த முயற்சிக்கும் வேளையில் முதலாவது டாங்கி பயங்கரமாக வெடித்துச் சிதறியது. இந்த வெடிப்பில் இரண்டாவது டாங்கியும் அதிர்ந்தது. பின்பு அதுவும் வெடித்துச் சிதறியது.

ரஷ்யத் தயாரிப்பான இரண்டு T.72 டாங்கிகளே இவ்வாறு எமது மண்ணில் பரிதாபகரமாக அழிந்தன. ''பார் ஓடுறாங்கள் - பசூக்காவுடன் எழுந்தவாறே அந்த வீரன் தனது நண்பனுக்கு கூறுகின்றான். டாங்கிகள் வெடித்ததைத் தொடர்ந்து இந்தியப்படைகள் பின்வாங்கின. பசூக்கா வீரனது தலையில் காயம்பட்டு குருதி ஓடுகின்றது. அந்த நிலையிலும் அவன் முகத்தில் ஒரு சிரிப்பு. தமிழீழ போராட்ட வரலாற்றில் இரண்டு டாங்கிகளை ஒரே தாக்குதலில் வீழ்த்திய அந்த வீரன் வேறு யாருமல்ல-அவன்தான் மாவீரன் மேஜர் ஜேம்ஸ்.

வீரம் விளைந்த வல்வை நகர் பெற்றெடுத்த அருந்தவப் புதல்வன் ஜேம்ஸ். இவன் 06-09-1962ம் ஆண்டு உருத்திராபதி தம்பதிகளின் ஐந்தாவது புதல்வனாகப் பிறந்தான். சிறுவயதிலேயே பொதுவேலைகளிலும் விளையாட்டுத்துறைகளிலும் ஆர்வம் காட்டினான். ஹாட்லிக்கல்லூரியில் க. பொ. த உயர்தரத்தை முடித்த ஜேம்ஸ் 1983 ஆம் ஆண்டு இயக்கத்தின் பகுதிநேர உறுப்பினராகினான். அடிக்கடி சிங்களப்படைகளின் தாக்குதல்களிற்கு உள்ளாகும் வல்வை நகரில் பிறந்த ஜேம்ஸ் மண்

ணின் விடுதலையையுரு, மக்களின் விடுதலையையும் நன்குணர்ந்தான்.

1985 ஆம் ஆண்டு முழு நேரப் போராளியாகின்றான். இயக்கத்தில் ஆரம்ப காலப் பணியாக அரசியல் வேலைத்திட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டான். வல்வெட்டித்துறை தொண்டமனாறு, பொலிகண்டி, உடுப்பிட்டி ஆகிய பகுதிகளில் இவனது அரசியல் வேலைத்திட்டங்கள் அமைந்தன. எங்கெங்கு சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் இருக்கின்றார்களோ அங்கு இவன் பிரசன்னமாய் அவர்களில் ஒருவனாய் இரண்டறக் கலந்து கொள்வான். இந்தக் காலகட்டத்தில் விடுதலையில் ஆர்வமாகவிருந்த இளைஞர்கள் பலரை இயக்கத்தில் சேர்த்தான். தொண்டமனாறு முகாம் தொண்டமனாற்றை ஏனையபகுதிகளுடன் இணைக்கும் பாதைகளுக்கு அச்சுறுத்தலாக இருந்ததை அவதானித்த ஜேம்ஸ் தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்திறகு பின்புறமாக இடைக்காட்டை இணைக்கும் பாதையொன்றைப்போடுவித்தான்.

10 ஆம் முகாமில் இராணுவப் பயிற்சியை முடித்த ஜேம்ஸ் புலிகளின் இராணுவச் செயலகத்தில் கடமையாற்றினான். இந்திய ஆக்கிரமிபபு இராணுவம் தமிழீழ மண்ணில் தனது அராட்சதககாலகளை அகலப பரபபியபடி வந்தபோது சந்தோசம் மாஸ்டர் தலைமையில் போரிடுகின்றான். கோண்டாவிலில் நடைபெற்ற இவ்வாறான ஒரு சண்டையின் போது தலையில் காயமுற்று சிகிச்சைக்காக காட்டிற்குப் போகின்றான்.

காட்டிற்குள் இவன் களஞ்சியங்களுக்குப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகின்றான். எந்த வேலையையும் நேர்த்தியாக செய்யும் பாங்கும்; அதே நேரத்தில் அவ்வேலையைக் குறும்புத்தனமாகச் செய்து பின்பு அதனைச் சமாளிக்கும் வண்ணமும் எல்லோரையும் கவர்ந்தது. இவனுடைய குறும்புத்தனத்திற்கு காட்டிற்குள் நடந்த சம்பவம் ஒன்று நல்ல எடுத்துக் காட்டாகும்.

காட்டினில் தலைவர் ஒரு முறை அருமையான இனிப்புப் பலகாரம் செய்திருந்தார். போராளிகள் எல்லோரையும் வரிசையாக வரச் சொல்லிவிட்டு தலைவர் தனது கைபடவே எல்லோருக்கும் அதனை வழங்கினார். அத்துடன் அதன் சுவையையும் ஒவ்வொருத்தராய்க் கேட்டார். அது அளவாகச் செய்யப்பட்டதனால் ஒவ்வொருத்தருக்கும் ஒரு சிறிய பங்கே கிடைத்தது. ஜேம்ஸுக்கு இனிப்பு என்றால் உயிர். ஜேம்ஸின் முறை வந்தது. தலைவர் கொடுத்த பலகாரத்தை வாய்க்குள் போட்டுக் கொண்டான் ''எப்படியிருக்கு?'' என தலைவர் கேட்டார்.

உதட்டின் மேல் விரலை வைத்து சற்று ஆழமாகச் சிந்தித்து விட்டு ''சரியாகத் தெரியேல்ல அண்ணா, இன்னுமொரு துண்டு தாங்கோ சொல்றேன்'' என்றான். தலைவர் சிரித்தவாறே இன்னுமொரு துண்டைக் கொடுத்துவிட்டு'எப்படியிருக்கு'? என்று கேட்டார். மீண்டும் உதட்டின் மேல் விரலை வைத்துச் சிந்தித்து விட்டு ''இன்னுமொரு துண்டு சாப்பிட்டால்தான் சரியாகச் சொல்லலாம்'' என்றான். ''எல்லோருக்கும் கொடுத்து மிச்சமிருந்தால் உனக்குத்தான்'' என்று தலைவர் கூறுகின்றார் அதன் படியே மிகுதியாக இருந்தது ஜேம்ஸின் குறும்புத்தனத்திற்குக் கிடைத்தது.

காட்டிற்குள் இந்திய இராணுவத்துடன் நடைபெற்ற முதலாவது மோதல் உட்பட பல சண்டைகளில் கலந்து கொண்டு தனது வீரத்தை ஜேம்ஸ் வெளிப்படுத்தினான். காட்டினில் தலைவரது நேரடியான கவனிப்பில், வளர்ப்பில் ஜேம்ஸ் முழுமையான போராளியாகின்றான். தலைவரது பாசறையில் இவன் கற்றுக் கொண்டது ஏராளம். பின்னாளில் பொறுப்பு வாய்ந்த தளபதியாக இருக்கும்போது அடிக்கடி காட்டில் நடந்தவற்றை நினைவு கூரத் தவறவில்லை.

1988 ஆம் ஆண்டு தமிழீழத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வடமராட்சிப் பகுதியின் தளபதியாக நியமிக்கப்படுகின்றான். குறுகிய காலத்திற்குள் ஜேம்ஸ் தனது செயற்பாடுகளால் மக்களது அன்பையும், ஆதரவையும் பெற்று விடுகின்றான்.

இந்திய இராணுவத்தின் நெருக்கடியான நேரத்தில் கூட காயப்பட்ட போராளிகளை பராமரிப்பதற்கும், காட்டிற்குத் தேவையான பொருள்களை அனுப்புவதற்கும் வடமராட்சியை ஒரு தளமாக பயன்படுத்துகின்றான்.

இதே நேரத்தில் இந்திய இராணுவத்தின்மீது பல்வேறு இடங்களில் தாக்குதல்களை மேற்கொண்டு ஆயுதங்கள் பலவற்றை கைப்பற்றினான். எந்த தாக்குதலாயினும் R P. G. அடித்து தாக்குதல்களை ஆரம்பிப்பது தான் இவன் வழக்கம். பருத்தித்துறை v m றோட்டில் உள்ள காவலரண் மீதான தாக்குதலில் கையில் காயப்படுகின்றான் மேஜர் ஜேம்ஸ்.

1989 இல் வல்வை நகரின் மீது வெறியாட்டம் ஆடிய இந்தியப் படைமீது திட்டமிட்ட தாக்குதலை மேற்கொண்டு

இராணுவத்தினர் பலரை வீழ்த்தி ஆயுதங்களைக் கைப்பற்றுகின்றான்.

இந்தியப்படை வெளியேற்றத்தைத் தொடர்ந்து தீவகப்பகுதி பொறுப்பாளராக மேஜர் ஜேம்ஸ் நியமிக்கப்பட்டான். இச் சந்தர்ப்பத்தில் தான் இவனுடன் ஒன்றாகப்பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. தீவகப் பகுதி மக்களின் சமூக பொருளாதார பிரச்சினைகளை துல்லியமாக உணர்ந்தான். அதற்கேற்பவே அரசியல் வேலைத்திட்டங்களை வகுக்க வேண்டும் என வலியுறுத்தினான். இயக்க நடவடிக்கைகளின் தீவுப்பகுதியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினான். இவனது அணுகுமுறைகளாலும், நடவடிக்கைகளாலும் தீவுப்பகுதி மக்களின் பேரன்புக்கு பாத்திரமானான்.

இதன் பின்பு விடுதலைப்புலிகளின் இராணுவச் செயலகத்திற்கு பொறுப்பேற்கின்றான். மீண்டும் சிறிலங்கா இனவாத அரசுடனான மோதல் வெடித்த சிறிது காலத்தின் பின்பு வலிகாமம் பகுதி பொறுப்பாளராக நியமிக்கப்படுகின்றான். போர் உக்கிரமாக வெடித்தநேரம் இராணுவ முகாம் ஒன்றின் மீதான தாக்குதலிற்கு ஜேம்ஸ் திட்டமிடுகிறான். இதற்கிடையில் 09-08-1990 அன்று பலாலி முகாம் காவலரணை பார்வையிட்டு அங்குள்ள போராளிகளுடன் உரையாடிவிட்டு திரும்புகின்றான். வரும்போது அச்சுவேலியில் குண்டு வீச்சு விமானமொன்றின் தாக்குதலுக்கு இலக்காகி வீரச்சாவடைகின்றான்.

மேஜர் ஜேம்ஸ் - இவனது குடும்பம் கூட விடுதலை வேட்கை கொண்ட குடும்பம் என்றுதான் கூறவேண்டும். 1987 ஆம் ஆண்டு கைதடியில் எதிர்பாராத விதத்தில் வீரச்சாவடைந்த கப்டன் வாசு இவனது சகோதரனாவான். இவர் விடுதலைப்புலிகளின் ராணுவ தொழில் நுட்பப்பிரிவுக்கு பொறுப்பாக இருந்தவர். 1990 நவம்பரில் கட்டுவனில் நடைபெற்ற மோதலில் வீரச்சாவடைந்த கப்டன் சுந்தரி ஜேம்சின் சகோதரியாவார், இவர் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் உப செயலாளராகக் கடமையாற்றியவர்.

''டோன் வொறி'' (don't worry)- என்ன பிரச்சினை வந்தாலும் சற்று சிந்தித்துவிட்டு புன் சிரிப்புடன் ஜேம்ஸ் கூறும் வார்த்தை சிக்கலான நிலைமை என்னவந்தாலும் அதனை துணிவுடன் எதிர்நோக்கும் தன்மை அவனுக்குரியது. இதுவே அவன் தனது நண்பர்களுக்கு விட்டுச்சென்றது.

(15-11-1991)



# லெப். ராதா

| | |
|---|---|
| பெற்றோர்: | சுப்பிரமணியம் சட்டநாதபிள்ளை<br>புவனேஸ்வரி சட்டநாதபிள்ளை |
| இயற்பெயர்: | கேதீஸ்வரன் |
| முகவரி: | 5 ஆம் வட்டாரம், திரியாய்,<br>திருகோணமலை. |
| கல்வி: | திரியாய் மகா வித்தியாலயம்<br>க. பொ. த. (உ/த) |
| தோற்றம்: | 24-10-1971 |
| உடன்பிறப்பினர்: | லீலாவதி |
| போராளியாய்: | 22-07-1989 |
| மாவீரனாக<br>தாயக மண்ணில் | 26-02-1992 |
| குறிப்பிடக்கூடிய<br>தாக்குதல்கள்: | ★ முல்லைத்தீவில் சிறீலங்கா படையினருடனான மோதல்<br>★ வவுனியா சமயபுரத்தில் சிறீலங்கா படையினருடனான மோதல் |
| விசேட திறமை: | நீச்சலில் வல்லவர். |

அவன் ஒரு வித்தியாசமானவன். தனது வாழ்நாளில் மட்டுமல்ல, மரணத்தின் பின்னும் தான் வித்தியாசமானவன் என்பதனை உணர்த்தி விட்டான். அவனது வாழ்நாள் அதிலும் போராட்ட வாழ்நாள் மிகவும் குறுகியதாக இருந்தாலும் வரலாற்று ஏடுகளில் அவனுக்கென்றொரு அத்தியாயம் எழுதப் பட்டு விட்டது.

எந்நேரமும் கள்ளமற்ற சிரித்தமுகம்; என்றும் துன்ப துயரங்களுக்கு ஆட்படாத மன உறுதி. ஒவ்வொரு கணநேரமும் சுறுசுறுப்பான செயற்பாடு. அவன் தான் ராதா, அவன் கால்கள் தவழ்ந்து திரிந்த பூமி இன்று எமது கண்ணுக்கெட்டாத தூரத்தில் இருக்கிறது. சிறிலங்கா அரசின் கோரப்பிடியில் சிக்குண்டு தவிக்கும் திருகோணமலையின் எல்லைக் கிராமங்களில் ஒன்று தான் திரியாய் எனும் அழகிய சிறு ஊர். அதுதான் ராதா பிறந்து, தவழ்ந்து, வாழ்ந்து வளர்ந்தமண். மிகவும் வறுமையான குடும்பத்தில் பெற்றோரையும் ஒரேயொரு பெண் சகோதரியையும் பொறுப்பேற்க வேண்டிய நிலையில் ராதா இருந்தான். ஆம் அவன் வீட்டுக்கு ஒரேயொரு ஆண்மகன் ஆனால் அந்நாட்களில் குடும்பப் பொறுப்பை ஏற்கக்கூடிய வயதை அடையாத அவன் அவ்வூர் பள்ளியில் கல்வி கற்று வந்தான்.

ஆனால் ராதாவின் வயதிற்கும், அவனது மன வளர்ச்சிக்கும் செயற்பாட்டிற்கும் எவ்வித சம்பந்தமும் இருக்கவில்லை. அந்தச் சிறிய கிராமத்தில் எந்த ஒரு பொது வேலையானாலும் எந்த ஒரு பொதுநிகழ்வானாலும் அங்கே ராதாவைக் காணலாம். அவை ஒவ்வொன்றிலும் ராதாவின் முக்கிய பங்களிப்பு இருக்கும். கல்வி கற்கும் காலங்களிலேயே, அவனது சிந்தனைகள் பொது வேலைகளில் நாட்டம் கொள்ளத் தொடங்கி விட்டன. அவன் வீட்டில் இருக்கும் நேரம் மிகவும் குறைவு அவனது பெற்றோரைப் பொறுத்தவரை அது குற்றமாகவும் இருந்திருக்கலாம். ஆனால் எந்நேரமும் சுறுசுறுப்பாக இருக்கும் அவனுக்கு இந்தச் செயற்பாடுகள் தேவையாக இருந்தன.

மெல்ல மெல்ல அவனது விடுதலைப் போராட்ட உணர்வு துளிர்விட்டு வளர ஆரம்பித்தது. ஈழமண்ணில் இந்திய இராணுவத்தினர் அராஜகம் புரிந்து வந்த காலப்பகுதி அது. இந்திய இராணுவத்தினர் மீது முற்றுமுழுதான வெறுப்பும் எதிர்ப்புணர்வும் கொண்டிருந்த இவனும் இவனது பாடசாலை நண்பர்களும் தமது எதிர்ப்புணர்வைக் காட்டிக் கொண்ட

விதம் சற்று வித்தியாசமானது. இவர்கள் கல்வி கற்று வந்த பாடசாலையில் நடந்த ஓர் பொது நிகழ்ச்சியில் பாவிப்பதற்கென ஓர் புதிய பெரிய நைலோன் நிலவிரிப்பு அங்கிருந்த இந்திய இராவத்தினரால் வழங்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சி முடிவுற்றதும் இவனதும் நண்பர்களும் சேர்ந்து அந்த நில விரிப்பைப் பல்வேறு இடங்களில் கிழித்துச் சேதப்படுத்திய பின்னர் கொண்டு சென்று கொடுத்த பொழுது இந்திய இராணுவத்தினரால் எச்சரித்து அனுப்பப்பட்டனர். அந்தச் சிறு வயதில் அவனுக்கு இருந்த இந்த உணர்வுகள்தான் பின்னர் அவனது போராட்ட வாழ்க்கைக்கு வித்திட்டது எனலாம்.

இந்திய இராணுவம் எமது மண்ணை விட்டு வெளியேறிய காலப்பகுதியில் இவன விடுதலைப் போராட்டத்தின் மீது முழுமையாக ஈர்க்கப்பட்டிருந்தான். அக்கிராமத்தில் இயங்கிய விடுதலைப் புலிகளின் நெருங்கிய ஆதரவாளனாகவும் உதவியாளனாகவும் செயற்படத் தொடங்கினான். அவ்வூர்ப்பாடசாலையில் விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பினை ஏற்படுத்துவதற்குத் தானே முன்னின்று செயற்பட்டான்.

ஆனால் சிறிய காலத்தில் அவன் தன்னை முழுமையாகவே விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு முடிவு செய்து விட்டான். தனது தாயாரைக் காப்பாற்ற வேண்டிய தனது பொறுப்பைப்பற்றி அவன் சிந்திக்கவில்லை. ஏனெனில், தனது தாயாரைப்போன்று எத்தனையோ தாய்மார் இருப்பதை அவன் நன்குணர்வான். தாய்த்திருநாட்டின் விடுதலையைத் தவிர வேறெதுவும் அவனுக்குப் பெரியதாகத் தெரியவில்லை. அவன் தனது முடிவைச் செயற்படுத்தும் நோக்குடன் அப்பகுதிப் போராளிகளிடம் தனது முடிவைத் தெரிவித்தான். ஆனால் அவனது குடும்ப நிலையை நன்கு உணர்ந்த அவர்கள் ராதாவை இயக்கத்தில் இணைய அனுமதிக்கவில்லை. அவன் எவ்வளவோ முயற்சி செய்தான். ஆனால் எதுவும் பயனளிக்கவில்லை. ஆனாலும் ராதா உறுதியாக இருந்தான். அவன் முடிவுகளை மாற்றிப் பழக்கம் இல்லாதவன். தனது ஊரில் இருக்கும் வரை இயக்கத்தில் இணைய முடியாது என்பதனைத் தெளிவாக உணர்ந்தான். விளைவு தனது நண்பன் ஒருவனுடன் ஊரை விட்டு வெளியேறினான். முல்லைத் தீவு வந்து சேர்ந்த ராதாவும் அவனது நண்பனும் அங்கு தம்மை இயக்கத்தில் இணைத்துக்கொண்டனர். ஆம் ராதா மிகுந்த சிரமப்பட்ட பின்னரே தனது போராட்ட வாழ்க்கையை ஆரம்பித்தான்.

முல்லைத்தீவில் தனது பயிற்சியை முடித்துக் கொண்ட ராதா முல்லை மாவட்டத்தளபதி காந்தனின் குழுவுடன் சேர்க்

கப்பட்டான். பயிற்சியின்போது இவனது திறமையை அவதானித்த மேஜர் காந்தன் தனது முகாமில் நடாத்தப்பட்ட பயிற்சிப் பிரிவிற்கு ராதாவைப் பயிற்சியாளனாக நியமித்தார். அந்தப் பிரிவிற்குப் பயிற்சி கொடுத்து முடித்த ராதா பின்னர் முல்லைத்தீவு இராணுவ முகாம் பகுதியில் இடம்பெற்ற பாரிய தாக்குதலில் பங்கு பற்றிக் கையில் காயமடைந்து யாழ் வந்தடைந்தான். கையில் ஏற்பட்ட காயத்தினால் அவனது கை ஒரு பக்கம் வளைந்து விட்டது. சில மாதங்கள் யாழ்ப்பாணத்தில் நின்று தனது காயத்தை மாற்றிய ராதா பின்னர் வவுனியாப்பகுதிக்கு மாற்றப்பட்டான்.

மன்னார் - வவுனியா எல்லைப்பகுதியிலேயே இவன் இறுதி வரை செயற்பட்டான். இப்பகுதிகளில் இவன் குறுகிய காலமே செயற்பட்ட போதிலும் அப்பகுதி மக்கள் மத்தியிலும், போராளிகள் மத்தியிலும் மிகவும் பிரபல்யம் அடைந்தான். போராளிகள் அனைவராலும் மிகவும் அன்பாக நேசிக்கப்பட்டான். இவற்றுக்கெல்லாம் காரணம் அவனது சுறுசுறுப்பான செயற்பாடுகளும் திறமையும்தான். அப்பகுதிகளில் நடந்த பல தாக்குதல்களிலும் இவன் பங்கேற்றான்.

எல்லாவற்றையும் விட முக்கியமானது என்னவென்றால் ராதாவின் பெயர் அப்பகுதி இராணுவத்தினர் மத்தியில் பரவலாக அடிபடத்தொடங்கியது ஆகும். ராதாவின் திறமையைக் கேள்விப்பட்ட இராணுவத்தினர் அவனை உயிரோடு பிடிப்பதற்குத் திட்டமிட்டுப்பல முயற்சிகள் செய்தனர். இதனை அறிந்த சகபோராளிகள் ராதாவிடம் இதைப்பற்றிக் கூறியபோது தனது இயற்கையான சிரிப்புடன் அதனைக் கேட்டுக்கொண்டான். இவ்வாறு தனது சக போராளிகளுடன் உரையாடிக் கொண்டிருந்த பொழுது ஒருநாள் ராதா கூறினான்: ''நான் இராணுவத்தால் சுடப்பட்டு எனது உடல் இராணுவத்தால் எடுக்கப்பட்டாலும் சரி- அதற்கு முன் நான் இராணுவத்தின் ஒரு உடலையேனும் கைப்பற்றுவேன்'' என்று உறுதியாகக் கூறினான்.

தனது சபதத்தை நிறைவேற்ற ராதா முழுமுயற்சி எடுத்தான். அவனது எண்ணம் நிறைவேறும் நாளும் வந்தடுத்தது. 22-01-92 இல் வவுனியா சமயபுரம் பகுதியில் நடமாடிய இராணுவத்தினர் பற்றித் தனது தனியான முயற்சியின் மூலம் வேவு பார்த்து வவுனியா மாவட்டத் தாக்குதல் குழுவுடன் இணைந்து பதுங்கித்தாக்கி வெற்றி பெற்றதுடன் அத்தாக்குதலில் 06இரா

னுவத்தினரின் உடல்களும் பல ஆயுதங்களும் கைப்பற்றப்படுவதற் குக் காரணமாக இருந்தான். இதனால் வன்னித் தளபதியினால் ராதாவிற்கு ரி81 ரகத்துப்பாக்கி ஒன்று வழங்கப்பட்டு கௌரவிக் கப்பட்டான்.

இவ்வாறு பல வீரமிகு செயற்பாடுகளால் ராதா புகழடைந்து வந்த வேளையில்தான் அந்தச் துயரச் சம்பவம் நடந்தது. எதிரிக்கு மட்டுமல்ல காலதேவனுக்கும் அவனின் வீரமிகு செயற்பாடு பிடிக்கவில்லைப் போலும். அவனும் இவனின் உயிரைப் பறிக்கத் திட்டம் தீட்டியிருந்தான். ஆனால் அதனை அறிந்து கொள்ளும் ஆற்றல் மட்டும் எமக்கு இருந்திருந்தால்... ...அந்தக் கொடிய நாளில் ... இராணுவத்தினர் தமது தாக்குதல் முயற்சியில் தோல்வியடைந்து பின்வாங்கிச் சென்ற வேளையில் அப்பகுதிக்குச் சென்ற ராதா இராணுவத்தின் தாக்குதலுக்கு இலக்காகிக் காயமடைந்த பின்னர் சயனைட் அருந்தி வீரச்சாவு எய்தினான். மரணித்த பின்னரும் சரித்திரம் படைத்த மாவீரர் வரிசையில் ராதாவும் ஒருவன். ஒரு போராளி தனது எதிரியினாலும் மதிக்கப்பட்டவனாக இருந்தால் அதைவிட அவனுக்குப் புகழாரம் தேவையில்லை. ஆம், ராதாவின் உடலைக் கைப்பற்றிய இராணுவத்தினர் அவனின் உடலுக்கு எந்த சேதத்தையும் விளைவிக்காது அவன் அருகில் கிடந்த ஓர் அட்டையிப் ''போராளி'' என்று எழுதியமையோடு அவன் அணிந்திருந்த தகட்டினையும் அவனருகேயே விட்டுச்சென்றனர் ஆனாலுல் அவன் மரணிக்க முன்னர் தனது சபதத்தை நிறைவேற்றி விட்டான். ராதா இன்று எம்மத்தியில் இல்லை. ஆனால் அவனின் சிரிப்பு, சொற்கள் சுறுசுறுப்பு எங்கள் மத்தியில் தவழ்ந்து கொண்டே இருக்கின்றன. அவன் எம்மத்தியில் இல்லை எனும் உணர்வு எமக்கு ஏற்பட இன்னும் பல காலமாகலாம்.

ஆம். அவன் வித்தியாசமானவன்.

வாழ்ந்தபோது மட்டுமல்ல மரணத்தின் போதும் அவன் வித்தியாசமானவன்!

27-03-1992

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்



# கப்டன் அக்கினோ

| | |
|---|---|
| பெற்றோர்:- | ஆறுமுகம் இராசரத்தினம்<br>பரமேஸ்வரி இராசரத்தினம் |
| இயற்பெயர்: | கலைவாணி |
| முகவரி: | "கலாபவனம்" கைதடி-நுணாவில்<br>சாவகச்சேரி. |
| தோற்றம்:- | 26-07-1968 |
| கல்வி:- | கைதடி நுணாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.<br>சாவகச்சேரி டிறிபேர்க்கல்லூரி.<br>யாழ். வேம்படி மகளிர் கல்லூரி.<br>க. பொ. த. (உயர்தரம்) (கணிதம்) |
| உடன்பிறப்பினர்: | வாசுகி<br>தேன்மொழி (போராளி) |
| போராளியாய்:- | 26-04-1990 |
| மாவீரராக தாயகமண்ணில்: | 08-09-1991 |
| குறிப்பிடக்கூடிய தாக்குதல்கள் | பலாலி, யாழ் கோட்டை, பூவரசங் குளம் ஆகிய இடங்களில் சிறிலங்கா படையினருடனான மோதல்கள். |

போராட்டம்......

இந்தச் சொல்லுக்குள்தான் எத்தனை விதமான உணர்ச்சி அலைகள் அடங்கி இருக்கின்றன.

குடும்பம் என்ற சிறிய பரப்புக்குள் சில மனிதர்கள், சில உணர்வுகள் என்று வாழ்ந்த நாம் விடுதலை இயக்கம்' என்ற விரிந்த பரப்புக்குள் வந்ததால், எத்தனை விதமான உள்ளங் களை, சந்தோஷங்களை, பிரிவுத்துயரங்களை வாழ்வின் உண் மைகளைக் கண்டு கொண்டிருக்கிறோம்.

எமது போராட்ட வாழ்வில் உன்னதமான உள்ளங்க ளோடு பழகும்போது சந்தோஷப்படும் நாங்கள், பிரிவு என்று வருகின்றபோது அதிகமாகத் தாக்கப்படுவதென்னவோ உண்மை தான். கப்டன் அக்கினோவின் உள்ளம்கூட அந்த உன்னத மான உள்ளங்களில் ஒன்றுதான்.

மிகவும் வசதியான குடும்பம். வாழ்வில் பொருளாதாரக் கஷ்டங்களையோ, துன்பங்களையோ கண்டிராத செல்வந்த மான குடும்பச் சூழலின் கடைசிப்பிள்ளைதான் அக்கினோ.

"நாங்கள் செல்லமாக வளர்ந்தனாங்கள், போராட்டக் கஷ்டங்களை எங்களால் தாங்க ஏலாது."

என்று சொல்கின்றவர்களுக்கு அக்கினோ வாழ்ந்து காட் டியிருக்கின்றாள். விடுதலை உணர்வுக்கு முன்னால் வேறெந்தப் புற உலக உணர்வுகளும் தாக்குப் பிடிக்க முடியாது என நிரு பித்திருக்கின்றாள். ஏனென்றால்? ....

அக்கினோவும் ஒரு செல்லப்பிள்ளைதான். பாடசாலை நாட்களில் அக்கினோவைக் கண்டவர்கள் பழகியவர்கள் அக்கி னோவைப் பற்றிக்கூறும் தகவல்கள்.

'இவள் எப்படி இந்த வாழ்வை ஏற்றுக் கொண்டாள்? என ஆச்சரியப்படவைக்கும்.

அக்கினோவின் எடுப்பான தோற்றம் அவளைப்பற்றிய பார்வையில் ஒரு தவறான கணிப்பைக் கொடுத்திருக்கலாம். ஏன்? நாம் கூட,

'இவள் எப்படி எல்லாப் போராளிகளோடு ஏற்றத்தாழ் வின்றிப் பழகப் போகிறாள்?' என நினைத்ததுண்டு. ஆனால்

பழகிய போது புரிந்தது. அவள் இதயத்தில் ஏற்றத் தாழ்வுகளுக்கு இடமில்லை என்பது.

அக்கினோவின் அப்பா தமிழீழத்தின் நேதாஜி-மாமனிதர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் காலத்தில் எங்கள் தலைவனின் கைக்கு இறுக்கமாக வலுவூட்டியவர்.

உண்மைதான். இப்படி ஒரு தந்தைக்குப் பிறந்த குழந்தைகள் எப்படி எங்கள் மண்ணை நேசிக்காமல் இருக்க முடியும்? அக்கினோவின் அப்பா மட்டுமல்ல அவனது அக்காகூட எங்கள் அமைப்பில்தான் இருக்கின்றாள்.

தமிழீழம் தனது தலைசிறந்த பெண் போராளிகளில் ஒருத்தியை இழந்து விட்டது. நாங்கள் ஓர் உயர்ந்த, உன்னதமான தோழியை இழந்து விட்டோம். அந்தத் தோழியின் வீடோ அமைதியைப் பெற்றெடுத்து விட்டது. அந்த வீட்டின் படிகள் அநேகமான நாட்களில் சிங்கள, இந்திய சப்பாத்துக் கால்களையும். துப்பாக்கிக் கால்களையுமே சந்தித்திருக்கின்றன.

அப்பாவின் தலைமறைவு வாழ்க்கைக் காலத்திலும், அப்பாவின் நிரந்தர மறைவின் பின்னான வாழ்க்கைக் காலத்திலும் அந்தத் துன்ப நிகழ்வுகளின் தாக்கம் அம்மாவை அதிகம் தாக்காது இருப்பதற்காக தனது கலகலப்பையே தாயின் கவசமாக்கினான் அக்கினோ.

இன்று எல்லாத் துயரங்களையுமே அம்மா தனியாகச் சுமந்து கொண்டிருக்கிறாள்.

அக்கினோ எம்மோடு இருந்த போது ஒருநாள்.

'அப்பாவின்ரை படத்துக்கு இடது பக்கம் என்ரை படமும் வலதுபக்கம் அக்காவின்ரை படமும் வைக்கஇடம் விடுங்கோ அம்மா' என்று தாயிடம் சொன்னதாகச் சொன்னான்.

எங்களுடைய ஒவ்வொரு போராளியும் ஒன்றை ஆழமாக உணர்ந்திருக்கின்றார்கள்.

என்றோ ஒருநாள்... அது இன்றோ நாளையோ அல்லது இன்னும் சில காலங்களின் பின்னோ இந்த மண்ணிற்கான மரணத்தை நாம் சந்திப்போம் என்ற உண்மைதான் அது. அதனால்தானோ என்னவோ, சண்டைக்குப் போக வேண்டும் என்று எல்லோரும் சண்டை பிடித்துக் கொள்கிறார்கள்.

அப்படித்தான் அக்கினோவும்.

சண்டை என்றதும் அவள் சந்தோஷப்படுகின்ற கணங்களைத்தான் பார்த்திருக்கின்றோம்.

விடுதலைப்புலிகள் எல்லோருமே கூறுகின்ற, 'நல்லா அடிபட வேணும். நிறைய ஆயுதங்கள் எடுக்க வேணும். அதுக்குப் பிறகுதான் சாகவேணும்'' என்பதைத்தான் அக்கினோவும் சொல்லிக் கொண்டிருப்பாள்.

கட்டுவன் சந்தி இராணுவ மினிமுகாம் முன்னால் இவள் காவல் நின்ற காலம்... இவள்தான் குழுவின் இரண்டாவது பொறுப்பாளர். பலாலி இராணுவத்தினர் அடிக்கடி வெளியேற முற்படும் முக்கியபாதைகளில் கட்டுவன் சந்தியும் ஒன்று. இந்த மினிமுகாமுக்கு முன்னால் காவல் நிற்கும் எங்கள் குழுவில் அடிக்கடி உறுப்பினர்களை மாற்ற வேண்டி வரும். ஏனென்றால் அடிக்கடி தாக்குதல் நடக்கும்போதோ அல்லது வெளியேறும் போதோ எம்மில் பல போராளிகள் வீழ்ந்திருப்பார்கள். அல்லது காயப்பட்டிருப்பார்கள்.

அக்கினோ வருவதற்கு ஐந்து நாட்கள் முதல்தான் கட்டுவன் நிலையிலிருந்து வெளியேற முற்பட்ட இராணுவத்தினருடன் மோதியதில் சுந்தரியுடன் எட்டுப் போராளிகள் வீரமரணமடைந்தனர். அக்கினோ சென்ற நான்கு நாட்களுக்குள் திரும்பவும் அந்த இடத்தில் இராணுவம் வெளியேறியது. கப்டன் சுந்தரி வீரச்சாவடைந்த தாக்குதலில் ஏற்பட்ட எமது தரப்பு இழப்பு அவர்களை உற்சாகப்படுத்தி இருந்தது போலும். ஆனால் அன்றைய சண்டை முடிவோ வேறுமாதிரி இருந்தது. அன்று எதிரிகளை பின்வாங்கச் செய்ததில் அக்கினோவின் துப்பாக்கிக்கு அதிக பங்குண்டு.

அக்கினோவிற்குக் கணிசமான ஆங்கில அறிவுண்டு. அத்தோடு எந்தத் துறையிலும் விடயங்களைக் கிரகிக்கும் ஆற்றல் உண்டு. தான் பெற்றிருக்கும் அறிவினை சகபோராளிகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற துடிப்பு அவளுக்கு நிறையவே இருந்தது. அதனால்தான் பயிற்சி முகாமில்கூட கடும் பயிற்சிகளுக்கு நடுவேயும் அவள் இரவில் அவர்களுக்காக ஒரு மணிநேரம் ஒதுக்கி இருந்தாள்.

வவுனியாவில் இராணுவம் வெளியே வந்த காலத்தில் காட்டின் ஒரு பக்கத்தில் இவளின் குழுவும் நின்றது. திசைகாட்டியை (கொம்பாஸ்) எவ்வாறு படிக்க வேண்டும். என்று

எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டும். எந்த நேரமும் வந்து விழுந்து வெடித்துக்கொண்டிருக்கும் ஷெல்களுக்கு நடுவே ஒரு இடத்தைக் குறிவைத்துக் திசைகாட்டி மூலம் அந்த இடத்துக்குப் போய்வந்து, பின்னர் தனது குழுவினருக்கும் அவ்வாறே காட்டிக் கொடுத்து, போய் வரப்பழக்கினாள்.

காட்டிலே போர் நடக்கும் போது காடு மாற நேரிட்டால் அதுவே போராளிகளின் இழப்புக்கு மிகப் பெரிய காரணமாகி விடும். போராளிகளின் இழப்பு ஒரு புறமும், இராணுவ முன்னேற்றம் மறுபுறமுமாகப் பாதகமான தாக்கங்களுக்குத் தான் காரணமாயிருக்கக்கூடாது என்பதில் அவள் உறுதியாக இருந்தாள்.

வவுனியாவிலிருந்து வந்தவுடன் ஆனையிறவுச் சண்டை ஆரம்பித்து விட்டது. வெட்டவெளிகளில் இராணுவத்தினரை இறக்கவிடாது காவல் செய்யும் பகுதியில் அவள் கடமையிலீடு பட்டிருந்தாள்.

அடுத்தடுத்துச் சண்டைகள் ஓய்வெடுக்க எமது போராளிகளுக்கு நேரமில்லை குண்டுச் சத்தங்களுக்கும், குருதி வெள்ளத்துக்கும் நடுவே எங்கே நாங்கள் ஓய்வைத் தேடுவது? எப்படி ஓய்வெடுப்பது? முப்படைத் தாக்குதலுக்கும் முகம் கொடுத்தபடி முன்னேற வேண்டியவர்களாயிற்றே நாங்கள். களைப்பும், அலுப்பும் இருக்கத்தான் செய்யும். ஆனால் அவையே எம்மைக் கட்டுப்படுத்திவிட முடியுமா? நித்திரை என்பது எம்மை விட்டு நிரந்தரமாகவே வெளியேறி விட்டால் என்ன என்று எண்ணுபவர்கள்தான் நாங்கள். கண்ணுக்குள் நித்திரை சுழன்று கொண்டிருக்கும். அரைக் கண்ணில் ஆடி ஆடித்தான் நடந்தாலும் கண் மூடிவிட முடியுமா? கண்மூடக்கண்மூட எப் தேசம் காணாமல் போய் விடுமல்லவா? அதனால்தான் ....

ஓய்வு இல்லாத தேசத்தின் எந்த எல்லையில் சண்டை நடந்தாலும் அங்கு எட்டி நடந்து கொண்டிருக்கிறோம்.

ஆனையிறவுச்சண்டையின் வேகம் குறைய மணலாற்றில் சண்டை ஆரம்பித்து விட்டது. அக்கினோவின் குழுவும் மணலாற்றுக்கு விரைகிறது. மணலாறு எங்கள் தேசத்தின் மையப்புள்ளி. மணலாற்றுக்காடுதான் எங்கள் தாய்வீடு. பிராந்துகளிலிருந்து செட்டைக்குள்ளாய் எமை வளர்த்த தாய்க்கோழி பிராந்திய வல்லரசு ஒன்றை எமது பிரதேசத்திலிருந்து பின்வாங்கச் செய்யுமளவுக்கு அவர்களுக்கு இழப்பை ஏற்படுத்திய இடம். அந்தலம் அந்தலமாக

அந்நிய இராணுவம் கால் பதித்துத் தேடியபோதும் தமிழினத்தின் தலைவரைத் தக்க வைத்துக்காத்த பெருமை மணலாறுக்கு மட்டும்தான் உண்டு. குண்டுகளைத் தாங்கித்தாங்கியே மணலாற்றுக் காடு வலிமை பெற்று விட்டது. உரிமைப்போர் அல்லவா.

உக்கிரமான சண்டைதான். காடு பற்றி எரிகின்றது எங்கும் ஒரே புகைமண்டலம்தான் மணலாறு மண் அதிர்ந்து கொண்டே இருக்கின்றது. முதல் நாள் சண்டையின் போது அக்கினோ நின்ற பக்கமாக இராணுவம் முன்னேறியது. அங்குல நிலம் கூட எதிரியை அசைய விடாத சண்டை. அக்கினோவின் குழுவில் இரண்டு போராளிகள் வீழ்ந்து விட்டார்கள். ஒரு உடல் கைப்பற்றக்கூடியதாக இருந்தது. ஆனால் அடுத்தது எங்களுக்கும் அவர்களுக்கும் இடையில் ..அவர்களுக்கு மிக நெருக்கமாக.

வீழ்ந்த போராளிகளின் உடல்களை மீட்பதற்காகவே புதிய போராளிகள் விழுகின்ற வரலாறு தானே எம் வரலாறு போர் நிலைமை உடனுக்குடன் பொறுப்பாளருக்கு அறிவிக்கப் பட வேண்டும். அக்கினோ அறிவிக்கின்றாள்.

''பொடி'' எடுப்பது கஷ்டம்தான் அக்கா. ஆனால் எப்படியும் நான் எடுப்பேன்.''

தலை நிமிர்த்த முடியாதளவுக்குத் தரையோடு தரையாக வரும் துப்பாக்கிச் சூடுகளுக்கு அடியில் ஊர்ந்துமுன்னேறினாள். எப்படியோ உடலைஎடுத்து விடுக்கிறாள். அந்த இடத்தில் அனைவருக்கும் ஒரு உறுதி பிறக்கிறது. கடைசிவரைக்கும் எந்த உடலும் எம்மால் கைவிடப்படக்கூடாது என்பதில் எல்லோரும் முனைப்பாக இருந்தோம்.

ஒத்துழைக்க மறுத்த காட்டுச் சூழலாலும், நித்திரையோ குளிப்போ இல்லாத கடமையின் இறுக்கத்தாலும், அநேகமான போராளிகளுக்கு காய்ச்சல் வந்து விடுகிறது. அக்கினோவுக்கும் காய்ச்சல் தான்.

காய்ச்சலுடன்தான் மணலாற்றுப்பகுதியில் மகளிர் பிரிவிற்கான மருந்து உணவு ரவை விநியோகங்களைப் பொறுப்பெடுத்துச் செய்து கொண்டிருந்தாள்.

இராணுவத்தினர் ஒரு பக்கமாக முன்னேற முயற்சிக்க, அக்கினோ அந்த இடத்துக்கு விரைந்து, போராளிகளுக்கு நிலைமையை விளக்கிக்கொண்டிருக்கும்போது, அவளது அடுத்த குழு நின்ற பக்கமாக விமானம் பதிந்து எழுந்தது. நிலைமையை நேரில் பார்ப்பதற்காக அக்கினோ அந்த இடத்துக்கு ஓடினாள்.

இன்னுமொரு தடவை அந்த விமானம் பதிந்து எழுந்தது

அக்கினோவின் தசைத்துணுக்குகளும், குருதித்துளிகளும். மணலாற்று மரங்களில் தெறித்தன. அக்கினோ போன்ற நூற்றுக்கணக்கானோரின் இறுதிக் கணங்களை அறிந்து கொண்ட அந்த மணலாற்றுக்காடு இன்று மீட்கப்பட்டு விட்டது. இந்தியப் போரின் பின் இது இரண்டாவது சண்டை. முன்னையை விட இப்போது உறுதியாய் நிற்கும் மணலாற்றுக் காடு இனி வரும் காலங்களில் இன்னும் உறுதியாய் எழுந்து நிற்கும். ஏனென்றால் அதற்குத் தெரியும் தன்னுள் உறங்கும் எங்கள் நண்பர்களைப் பற்றி.

(12-06-1992)

## முதற்கடற் கரும்புலிகள்

**மேஜர் காந்தரூபன்**

**(யோகராசா கோணேஸ்வரன்)**

குச்சம் ஒழுங்கை, ரேவடி, வல்வை.

**கப்டன் கொலின்ஸ்** (பர்ணாந்து சில்வஸ்ரர்)

நறுவிலிக்குளம், மன்னார்.

**கப்டன் வினோத்** (வேலுப்பிள்ளை திலகராசா)

திலகராசா வீதி, காட்டு வள்வு, வல்வை.

10-07-90- வல்வைக் கடலில் சிறிலங்கா கடற்படைக் கப்பல் மீதான தாக்குதலின் போது



# மேஜர் லம்பா

| | |
|---|---|
| பெற்றோர்:- | இராசரத்தினம்<br>ரதிதேவி |
| இயற்பெயர்: | ஆனந்தராசா |
| முகவரி: | கொக்குவில் மேற்கு<br>(பிறப்பிடம் வேலணை) |
| கல்வி: | கொழும்பு டி. எஸ். சேனநாயக்கா மகாவித்தியாலயம்.<br>வேலணை சேர் துரைசாமி மகா வித்தியாலயம்.<br>10 ஆம் வகுப்பு. |
| தோற்றம்: | 19-04-1969 |
| உடன்பிறப்பினர்: | பத்மராஜா<br>சரஸ்வதி |
| போராளியாய்: | 20-06-1990 |
| மாவீரனாக தாயக மண்ணில்: | 30-06-1992 |
| குறிப்பிடக்கூடிய தாக்குதல்கள்: | ★ யாழ். கோட்டையில் சிறீலங்கா இராணுவத்தினருடனான மோதல்கள்<br>★ மாங்குளத்தில் சிறீலங்கா இராணுவத்தினருடனான மோதல்.<br>★ சிலாவத்துறை சிறீலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதல்<br>★ காரைநகரில் சிறீலங்கா இராணுவத்துடனான மோதல்.<br>★ ஆனையிறவில் சிறீலங்காப்படையினருடனான மோதல்கள். |
| விசேடதிறமை:- | உதைபந்தாட்டத்தில் வல்லவர். |

PUBLIC LIBRARY JAFFNA.

அங்குமிங்குமாக சிதறிக்கிடந்த விடுதிக் கட்டடங்கள் பரிதாபமாகச் சரிந்து நிற்க முன்புற இடப்பக்கமாகச் சரிந்து வீழ்ந்து கிடந்த பெரிய நீர்த்தொட்டி கரிய யானையைப் போல பயமுறுத்திக் கொண்டிருந்தது. எல்லாவற்றிற்கும் முன்பாக பரந்த வெண்மையான மணல் வெளி கோடைகாலமாதலால் உலர்ந்து போய், ஆயினும் ஈரப்பற்றாகப் பரந்து கிடந்தது. அதன் விளிம்பில் எதிரிகளின் பாரிய ஆனையிறவு தடைமுகாம் இறுமாந்து நின்றது.

விடுதி கட்டட ஓரமாகப் பாரிய காப்பரண் ஒன்றை அமைத்து முடித்துவிட வேண்டும் எனும் ஆவல் ஆட்கொண்டிருக்க, உடற்பலம் ஏனோ துரோகம் செய்தது. என்னைச் சுற்றி நின்ற போராளிகள் அனைவரும் மயங்கி விடும் நிலையில் நின்றிருந்தார்கள்.

''தண்டவாளம் தூக்கினது நாரிய நிமித்தேலாமல் கிடக்கண்ணய்''

''இனி சிலிப்பர் கட்டை தூக்கியாறது எண்டால் அரை வாசியில் மயங்கித்தான் விழுவன்'' அவனது காலில் சிலிப்பர். கட்டை ஆணி கிழித்து குருதி தாராளமாகப் பாய்ந்தது.

''பார்த்துக் கொண்டிராமல் என்னத்தையாவது வைச்சுக் கட்டடாப்பா'' மிகவும் பலவீனமான நிலையில் நான் கூறினேன். இவ்வளவிற்கும் பகல் உணவு உண்ணவில்லை. உணவு என்னவோ நல்லாத்தான் வந்தது. அதை வைத்து விட்டுக் கைகழுவ ஓடினோமோ, மறுகணம் எதிரியின் ஷெல் உணவுப்பார்சல்களைத் தின்று விட்டது. ''இனி எங்க சாப்பாடு எடுக்கிறது. வேலையை முடிப்பம்'' மும்முரமாக ஈடுபட்டாலும் இரவு 10-00 மணியளவில் மயங்கும் நிலையை அடைந்து விட்டோம்.

''ஒராள் போய் லம்பாவையும் கராட்டி வாத்தியையும் அவங்கட வேலை முடிஞ்சா வேறையாக்களையும் கூட்டி வாடாப்பா'' சிலிப்பர் கட்டையில் குந்தியிருந்தபடி கூறினேன்.

''என்ன மச்சான் லியோ, வேலை முடியுதே?'' லம்பா தமிழைக் கஷ்டப்படுத்திக் கேட்டான்.

''லம்பா, எங்கட வேலை இன்னும் முடியேல்லையடா எக்கச்சக்கமாய் உயர்த்தோணும். விடியவும் போகுது. விடிஞ்சா

தலைகாட்டேலாது பேந்தெப்ப செய்கிறது உங்கட பொயின்ற் கொஞ்சம் மறைவுதானே. பகலிலேயும் அடிக்கலாம். கொஞ்சப் பேரைத் தாவன்ரா'' நான் பலவீனமாகக் கூறுவதை அவன் உணர்ந்திருக்க வேண்டும். ''மாஸ்டர் ஓடிப்போய் மூன்று பேரை அனுப்பி விடுங்கோ. நான் நிண்டு முடிச்சிட்டு வாறன்'' லம்பா கூற ''தம்பிக்கு இப்பதான் விளங்குது கஷ்டம், நாங்களில் லாட்டி'' வாத்தி என்னை நக்கலடித்துப் புறப்பட்டது. வேறு வேளையென்றால் வாத்தியை அமுக்கி வைத்து லம்பாவும் நானும் மண் தீத்தியிருப்போம். இப்போது அசையக்கூட முடிய வில்லை.

''மச்சான் வியோ பார்த்துக் கொண்டிருந்தா சரிவராது. வா தொடங்குவம்'' தோளில் சாக்கை நான்காக மடித்து வைத் தபடி லம்பா அழைக்க நான் சாக்குடன் விரைந்தேன். துண்ட வாளங்களையும் சிலிப்பர் கட்டைகளையும் இடுப்பு எலும்பு முறிய முறியச் சுமந்து வந்து குவிக்க ஏனைய போராளிகளும் சுறுசுறுப்பானார்கள்.

''லம்பா நீ மேல ஏறாதை நான் ஏறுறன். நீ கீழே நிண்டு தா'' நான் கூற நீ கீழ நில் "நான் ஏறுறன் என அவன் கூற. ஆளையாள் இழுத்துக் கொண்டோம். மேலே ஏறினால் எதிரியின் காவலரண்களின் துப்பாக்கி முனையில்தான் நிற்க வேண்டும். வெளியான பிரதேசத்தில் அசைவைக் காட்டினால், மண்டை யோடு சிதறிவிடும். இருவரும் ஏற, என்னை தள்ளி விழுத்தி னான். குவித்த மண்ணில் 'பொத்' என விழுந்து அவனைத் திட் டினேன்.

''மச்சான் நாளண்டைக்கு சண்டை தெரியுந்தானே. இண் டைக்கு வேலை முடிக்காட்டி எல்லாம் பிசகும்'' லம்பா கூறிய படியே மேலே அரணை உறுதியாக்கத் தொடங்கினான்.

டட்! டட்! டுட்! டுட்! தோட்டாக்கள் காற்றைக் கிழித்துச் செல்லக் கொஞ்சமும் பதற்றப்படாமல் சிரித்தான். 'இறங்கடாகீழே' என திட்டினேன். 'டேய்! நான்செத்தாலோ! காயப்பட்டாலோ! பறவாயில்லை. பொயின்ரை அடிச்சு முடிஞ் சாத்தான் இஞ்சாலைப் பக்கம் கிளியர் பண்ணலாம். உதை யெல்லாம் பாக்கேலாது தூக்கடா மண்மூட்டையை' எத்தனை உறுதியான வாசகங்கள். வாழ வேண்டிய வயதில், தன்னைப் பற்றிக் கவலை கொள்ளாது, இந்த மண்ணை மீட்டெடுக்க வேண்டும் என்பதில் உயிரைக்கூடப் பந்தயம் கட்டும் புனித மான போராளியிவன். அஞ்சாத நெஞ்சம் உறுதியும், வீரமும்

இவனது உடன் பிறப்புக்கள். இவனின் தியாகத்தை எழுத்தில் வடிப்பது சாத்தியமற்றது.

ஆனையிறவுச் சமர் மூண்டு மூன்றாம் நாள், காலை கரும் புகைகளை ஒருவாறு ஒதுக்கிக் கொண்டு தலைகாட்ட முனைந் தது. முகாமை அடுத்து அடுத்து அதிர வைக்கும் பயங்கர பசி லன்கள். பதிலுக்கு எதிரி ரவை மழையைப் பொழிய, இனிமை யான காற்று கதிகலங்கிக் கொண்டிருந்தது. எல்லையற்ற மணற் பரப்பு மெதுவாக இருட்போர்வையை கழற்ற ஆரம்பித்தது.

லியோ! லியோ!!'' லம்பா பதற்றமாக அழைக்க, என்ன வென்று வினவினேன்: ''கராட்டி மாஸ்டர் சரியடாப்பா'' பெரும் பிரயத்தனத்தோடு கூறினான். ''என்ன! கராட்டி மா... என்னால் தாங்க முடியவில் லை. விரைவாக மரங்களி டையே மறைந்து எதிரியின் செல் ரவை மழையை ஊடறுத்து ஓடினேன்.

''சண்டையெண்டால் இப்படித்தான் மச்சான் தவிர்க்கே லாது. இண்டைக்கு மாஸ்டர் நாளைக்கு நீயோ! நானோ! கூடச் சாகலாம், இப்படி எத்தனை பெடியளடா! வா. கொண்டே குடுத்திட்டு வருவம்'' கூறியபடி செல்ல இருவரும் மாஸ்டரின் உடலோடு மருத்துவ நிலையை நோக்கி நடந்தோம்

லம்பாவைப் பொறுத்தவரை மாஸ்ரர் அன்னியோன்னி யப் போராளி. சாதாரண பிரிவைக் கூட அவன் தாங்குவ தில்லை. ஆனால் இன்று எதிரியின் எதிரே எப்படித்தான் மன தைத் திடப்படுத்திக் கொள்கிறான். உறுதியான ஆன்மாக் களை உடல் ஆள்வதில்லை. மாறாக ஆன்மா உடலையும் புலன் களையும் ஆளும் என்பது எவ்வளவு உண்மை.

மென்மையான உள்ளம் படைத்த போராளி யுத்தகாலத் தில் தன்னை எந்தளவில் உறுதியாக்கிப் போரிடுகின்றான். கண நேரத் தயக்கம் கூடப் பெரும் பின்னடைவை ஏற்படுத்திவிடும். சண்டையில் முழுமூச்சாக இருக்க வேண்டும்'' இது லம்பா சக இளைய போராளிகளுக்கு இடுப்பில் கைகளைத் தாங்கிய படி கூறும் வாசகங்கள்.

ஆனால் அன்று மாலை முகாம் திரும்பிய லம்பா எனது கைகளைப் பிடித்துக் கொண்டு மனமுடைந்துபோய் குழந்தை யாய் குமுறிக் குமுறி அழுதான். ''மச்சான் எங்கட மாஸ்

டரை இனி எங்கையடா காணுறது.'' அவனை மாதிரியாற்றா வருவான்? சீ இந்தக் கையில் தான்ரா தலையைச் சாய்த்துக் கண்ணை மூடினவன்'' வெகுநேரமாக அழுத அவனை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. 'தோழமைக்கு உரிமை கொடு. கடமை நேரத்தில் தவிர்த்துக்கொள்'' எனும் வாசகம் எத்தனை தீர்க்க தரிசமானது. ஒவ்வொரு வாசகங்களும் உன்னதமான போராளிகளை உருவாக்குவது உண்மைதான் களத்தில் எப்படித்தான் சோகத்தை மறைத்தான். இப்போது குழந்தையைப் போலல்லவா குமுறிக்குமுறி அழுகின்றான்.

சமர் ஆரம்பித்து ஆறாவது தினம் இளம்பிறை வெகு நேரத்தின் முன்பதாகவே அமிழ்ந்து விட்டது. மெல்லிய தென்றல் கண்களைத் தழுவித் தூங்கடா எனத் துன்புறுத்தியது. மைபோன்ற இருள் எங்குமே பரந்து பயமுறுத்த விண்மீன்கள் கண்களைச் சிமிட்டிச் சிமிட்டிச் சிரித்தன. பலநாட்கள் தூக்கத்தைத் தொலைத்துவிட்ட நானும் லம்பாவும் புதிய அரண் ஒன்றைப் பார்வையிட விரைந்தோம். சளுக்! புதுக்! புதிய நகரும் பதுங்கு குழிக்குள் முழந்தாள் வரை புதைந்து கொள்ள இழுத்துக் கொண்டு சென்றோம்.

''பொயின்ற பாச்கிறதை விட்டிட்டு உங்க என்ன செய்கிறாய். நான் திட்டியபடி அருகே சென்றேன் சிறுவன் ஒருவன் சண்டைக்குப் போகப் போறேன் என அடம் பிடித்துக்கொண்டு வந்து வேலை செய்தபடி நின்றான்.

மண்வெட்டியைத் தூக்கி வெட்ட முடியாத அவன் இரும்புத்தாச்சி ஒன்றை இருகைகளாலும் பிடித்து ஊறிக் கொண்டிருக்கும் சகதியை அள்ளி அள்ளி வெளியே கொட்டினான். உயரம் போதாமையால் இரு மண்மூடைகள் போட்டு ஏறி நின்று கொட்டினான். வெற்றுமேனி குளிரில் விறைத்துக் கிடந்தது. ''எங்கையப்பு சேட்டு? லம்பா கேட்க, ''சேத்துக்க விழுந்து தண்ண காணேல்லை'' பரிதாபமாகக் கூறினான். ''இந்தா சேட்டு போட்டுக்கொண்டு நில்லு'' விறுக்கெனக் கழற்றி கொடுக்க அவன் அணிந்து கொள்ள எனக்குச் சிரிப்பு வந்தது. சேட் முழங்கால் வரை மூடிநின்றது. ஆரிட்டைச் சொல்லி போட்டு வேலைக்கு வந்தனீ'' லம்பா வினாவ அவன் விசித்தான்.

ஒரு இளம் போராளியின் உணர்வு லம்பாவை வெகுவாகப் பாதித்தது மௌனமாக முன்நடந்தான் ஒரு வளைவு கடக்க

'டும்' பாரிய சத்தமும், புகையும் எழ அதைநோக்கி ஓடினோம். அந்த இடம் அச்சிறுவன் நின்று வேலை செய்த இடம். முகாமிலிருந்து சுமார் 75 Mதூரம் மட்டுமே இருக்கும்.

கரும்புகை மெல்லக் கலைய நெற்றி சிதறிய வண்ணம் அவனைச் சுமந்து வந்தான் லம்பா ''என்ன காயமேடா'' ''இல்லைத்தலை சிதறிட்டுது வீரமரணமடைந்து விட்டான்'' 'உணர்ச்சிகளின் இருப்பிடத்திலின்று பிறந்த வார்த்தைகள் அவை ''இந்தக்குழந்தையின்ர வீரத்திலை எங்களுக்குத் துளியுமில்லையடா'' முன்னால் விரைந்து நடந்தான்.

இழப்புகள் ஏற்படும் போதெல்லாம் மேலும் உறுதியும் பற்றும் வளர்த்துக் கொள்பவன் லம்பா. ஐந்தரையடி உயரமும் சிவந்த நிறமும், குறைத்து வெட்டிய தலைமுடியுமாகக் கால்களை அகட்டிச் சவட்டியபடி ஒற்றைக்கையை வீசி நடப்பது அவனது தனித்துவம். ஓய்வு காலங்களில் காலை 8.00 மணிக்கு ஒருவாளி நீருடன்தான் விழிப்பான். ஈரப்பாயைவிட்டு எழும்ப மனமில்லாது, கையை ஊன்றிய படி ''ஒரு ஜாதி ஊத்தையாளப்பா'' எனத் திட்டுவான்.

வேலணை மண்ணில் பிறந்து தவழ்ந்த லம்பா, கொழும்பில் நெடுங்காலமாக இருந்தமையால் சிங்களம் அத்துப்படியாகும். தமிழ் கூடக் கலப்பாகவே இருக்கும். இவை லம்பாவின் தனித்துவங்கள். எமது அணியில் உதைபந்தாட்டம் லம்பாவிற்கே ஒதுக்கப்பட்டதெனக் கூறலாம். கொழும்பு நகரின் உல்லாச வாழ்வை ஒதுக்கிவிட்டுத் தாய் மண்ணின் துயர்துடைக்கக் களம் புகுந்த போராளியிவன். ஆனால் தாய் மண்ணிலிருந்து எத்தனையெத்தனைபேர் இன்னமும் சொகுசுதேடி அன்னிய தேசங்களில் தஞ்சமடையும் வேளை, இவனைப் போன்ற இளைஞர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இவன் எதிரிகளை எதிர்த்த வரலாறுகளை வடிக்கப் பக்கங்கள் போதாது. வீரசாகசங்களைக் கணக்கிட்டுச் சொல்வது எளிதன்று.

தமிழ் மக்களின் சிம்மசொப்பனமாய் இன்று மௌனத்தில் மூழ்கிக்கிடக்கும் கருங்கோட்டையும் அதனருகே கடற்காற்றும் மௌனமாக உறங்குகையில் இவனை நினைத்து நிற்கும் அந்த உயர்ந்த மரங்கள், பெரிய கால்வாய்கள், எல்லாம் இவனது சிரிப்பில் சிலிர்த்தவை. இன்று மெல்லிய நீரோட்டம் விசும்ப,

உயர்ந்த மரத்திலிருந்து குயில்கள், இலையுதிர்காலத்திலும் இவனுக்காய் கூ! கூ! என முகாரி பாடும்.

மாங்குளத்தின் அடர்ந்த காட்டின் அமைதியும், பரந்த வயல்களில் நெல் மணிகள் மெதுவாகச் சலசலப்பதும் இவனை நினைத்துத்தான். காட்டுமரங்கள் நினைவுச்சிதறலை கிறீச்சிடலில் நினைத்து பாடும். பரந்த குளங்களில் குளிர்ந்த தென்றல் நினைவுகளை வருடி விடும்.

கொக்கரிக்கும் சிலாவத்துறைக் கடல்கள் இவனது சீற்றத்தை மறப்பதில்லை. மன்னார் வெளிகளின் புழுதிக்காற்று ஊ! ஊ! என எழுச்சியாக இவனை மெச்சி நிற்கும். பசுக்கள் இவனை எண்ணி ம்பா! ம்பா; எனக் கதறியழுது கண்ணீர் பெருக்கும், துயரம் நெஞ்சை அடைக்க விம்மியழும் காட்டு மிருகங்கள்.

காரை நகரின் சுடுகாட்டு அமைதி இவனை எண்ணி மௌனமாக அழுது வடிக்க, அருகான கடற்கரைகளில் சோகத்தால் நெற்றியை மோதி உடைக்கும்.

ஆனையிறவில் உன் பாதச் சுவடுகள் பக்குவமாக அழியாதிருக்க தென்றல் சீற்றமாக வீசுவதில்லை. பாதச் சுவடுகளை முத்தமிட்டு உன்பின்னே தொடரும் சின்னஞ்சிறிய ஆமைகள். கட்டைக்காட்டின் ஈச்சம்பற்றைகள் உனது குருதியை சிவப்புச் சிவப்பு முத்தாகத் தேக்கிக் குலைகுலையாகச் சிந்திநிற்கும், வீதியோர உயர்ந்த விருட்சங்கள் ஸ்! ஸ்! எனக் கிளைகளை அசைத்து உனை நினைந்து பெருமூச்செறியும். வயற் பரப்புகளில் ஆட்காட்டிக் குருவிகள் இரவு பகலாக அடிக்கொரு தடவை கீ! கீ! எனச் சோகமான குரலில், நரம்புகளில் குருதி தெறிப்பதைப் போல் கூவிட்டுக் கூவிட்டு அழுது, அலைந்து நிற்கும்.

''எங்கே எனது மைந்தன்'' பெரிய விடிவெள்ளி பரந்த மணற்பரப்பை உலுக்கி, அடிக்கொரு தடவை விழியை வெட்டி அழ, ''ஐயோ! என் மைந்தா!'' கட்டைக்காட்டு கடல் ஐ!ஓ! ஐ! ஓ! என மணலில் மோதி உள்ளத்தைச் சிதறடிக்கும். நெற்றியை உடைக்கும் உன்பசுமையான நினைவுகளை ஈழத்து இயற்கை என்றுமே மறக்காது.

சென்ற ஆண்டு வெற்றிலைக்கேணி, டல்லாவெளி பரந்த வெளிகளில் வரலாறு காணாத யுத்த அரங்கு திறக்கப்பட்டதோ! அதேபோல் தமிழீழத்தைத் துண்டாக்கும் பகீரதப்பிரயத்

தனத்தை ஆக்கிரமிப்பாளன் இந்த ஆண்டும், பெரும் பதற்றத்தின் மத்தியில் ஆனித்திங்கள் 28 ஆம் நாள் காலை இன்னுமோர் யுத்த அரங்கைத் திறந்தான்.

புயலுக்கு முந்திய அமைதியாக உறங்கிக் கிடந்த மணல் வெளிகள் புலி வீரர்களின் செங்குருதியால் மீண்டும் சிவக்கத் தொடங்கின. எம்புனித மண்ணை ஆக்கிரமிப்பாளனின் அழுக்குப் பாதங்களும், வாகன அரக்கன்களின் இரும்புச் சங்கிலிகளும் விண்ணை அதிரும் ஷெல்குண்டுகளும் ஆக்கிரமிக்கத் தொடங்கின.

வெட்டவெளிகளில் புல்லர்களை எதிர்த்துப் புலி வீரர்கள் பாயத் தொடங்கினார்கள். சிங்களப் படைகள் திணறத் தொடங்கி ஆகாயப்போர் அரங்கைப் புலிகளுக்கெதிராகத் திறந்து விட்டது.

30 ஆம் திகதி அந்திவானில் அஸ்தமிக்கும் சூரியன் குருதியில் குளித்து மேற்கே சாயும் வேளை, குண்டு அதிர்வுகளால் மணற்பரப்பே தடுமாறிக் கொண்டிருக்க, காற்று அதிர்வைத் தாங்காது எங்கோ தொலைந்துவிட, இனிமையான போராளி அவன் தான் லம்பா. துப்பாக்கி கனலும் தீயை விழிகளில் சுமந்து பொருது கொண்டிருந்தான்.

பூமியை நசிக்கும் செயின்டாங்கிகளைத் துணிவாக நின்று தாக்கிக் கொண்டிருந்த வேளை, கட்டளைகளைச் சகபோராளிகளுக்குப் பிறப்பித்துக் கொண்டிருந்த இனிமையான குரல் தேய்ந்து போய், எதிரியை வீழ்த்திய உறுதியான கரங்கள் தாழ்ந்துபோக வீரஞ்செறிந்த வேங்கை எங்கோ தொலைந்து போனான்.

இனிமையான நண்பனை இழந்துவிட்ட சோகத்தில் எல்லோருமே சோர்ந்துபோக அந்திக்கடலில் குருதிவெள்ளத்தில் புதைந்து போனான் கதிரவன். கடற்காற்று ஊ! ஊ! என அழ ஆரம்பித்தது. ''லம்பாண்ணை சரியாம்'' ''லம்பாண்ணை சரியாம்'' சுற்றிலும் இளம் போராளிகள் பரபரப்பாகக் கதைக்க என்னுள் அடக்க முடியாத சோகம் அப்பிக்கொண்டது.

17-7-1992

26196.

# லெப். லக்ஸ்மன்



பெற்றோர்: தியாகராசா
பூபதி

இயற்பெயர்: வரதராஜன்

முகவரி: ஆரையம்பதி - 01, மட்டக்களப்பு.

தோற்றம்: 07-10-1969

கல்வி: மட்டு/ஆரையம்பதி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை
மட்டு / புனித மைக்கல் கல்லூரி.
10-ம் வகுப்பு

உடன் பிறந்தோர்: திரவியநாதன்
புஷ்பராணி
லோகராணி
அமிர்தராணி
ஜினேந்திரன்
கனகராசா

போராளியாய்: 1984

மாவீரனாக
தாயகமண்ணில்: 03-09-1991

குறிப்பிடக்கூடிய தாக்குதல்கள்:

★ கும்புறு மூலை முகாம் விசேட அதிரடிப்படையின் மீதான தாக்குதல். (ஏறாவூர் காவல் நிலையத்தாக்குதலுக்கு அனுசரணையாக)

★ மட்டக்களப்பு — கரவெட்டியில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் மீதான தாக்குதல் (5-4-1986)

★ கொக்கட்டிச் சோலையை முற்றுகையிட வந்த சிறீலங்காப் படையினர் மீதான தாக்குதல்.

★ வவுண தீவில் சிறீலங்கா விமானப் படையினரின் அவ்ரோ விமானம் மீதான தாக்குதல் (1986)

★ மாங்கேணி இராணுவமுகாம் மீதான தாக்குதல் (05-07-1987)

★ காத்தான்குடியில் இந்தியப்படையினரின் ரோந்துஅணி மீதான தாக்குதல் (03-02-1988)

★ மட்டு புகையிரத நிலைய வீதியில் இந்தியப்படையினர் மீதான தாக்குதல் (1988).

★ மட்டக்களப்பு காவல்நிலைய தாக்குதல். (11-06-1990)

★ மயிலம்பா வெளியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதல்

★ மண்முனையில் சிறிலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதல்.

★ தமிழீழத்துக்கு வெளியே நிகழ்ந்த சில தாக்குதல்கள்.

## லக்ஸ்மன்,

படுவான்கரை மண்ணில் மரணம் உன்னை அணைத்துக் கொண்டது என்ற செய்தி எமக்குக் கிடைத்தது. உயிரற்ற உடலிலிருந்து உனது தலையை வெட்டிக் கொண்டு சென்றார்களாம் என்பதைக் கேள்வியுற்றதும் விக்ரரின் நினைவுதான் வந்தது. விக்ரரைப் போலவே நீயும் எதிரிகளுக்குச் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்திருக்கின்றாய் என்பதை உணர முடிந்தது.

மரணத்தால் உனது உடலை மட்டுமே எம்மிடமிருந்து பிரிக்க முடிந்தது. உன் உணர்வுகள் உன்னோடு பழகிய அந்த நாட்கள் இவையெல்லாம் படுவான் கரை வயல்களைப் போலவே என்றும் பசுமையானவை. அவற்றை எம்மிடமிருந்து எப்படிப் பிரிக்க முடியும்? அரைக் காற்சட்டை அணிந்த சிறுவனாக ''என்னை எப்ப றெயினிங்குக்கு அனுப்புவீங்க?'' என்று காசி அண்ணாவின் சகோதரர் சந்திரன் அண்ணையை நீ நச்சரித்துக் கொண்டிருந்த நாட்களிலிருந்து எதிரிகளைக் கிலி கொள்ள வைக்கும் வீரனாக - மட்டக்களப்பு வாழ் மக்களின் நேசனாக நீ விளங்கிய ஏழுவருட காலத்தையும் நினைத்துக் கொள்கிறேன். சொட்டுச் சொட்டாக விழுந்த கண்ணீருடன் இம்மடலை உனக்கு வரைகிறேன். நான் நம்புகிறேன் - ஒவ்வொரு போராளியின் உள்ளுணர்வுகளுடன் ஒன்றிணைந்து இதனை நீ வாசிப்பாயென்று.

## லக்ஸ்பிறே!

அப்படித்தான் உனக்கு நாங்கள் பெயர் வைத்தோம். அவ்வளவு சின்னப் பையன் நீ! காலப் போக்கில் லக்ஸ்பிறே என்ற பெயர் மறைய லக்ஸ்மனாக நீ பிரபல்யமானாய். 1984ம் ஆண்டின் இறுதிப்பகுதி - அப்போதுதான் நீ எங்களுக்கு அறிமுகமானாய், எஸ். ரி. எவ், பொலிஸ் வருகிறார்களா என்று பார்த்துச் சொல்லும் பணிதான் ஆரம்பத்தில் உனக்கு வழங்கப்பட்டது. உனது தோற்றம் எவரையும் சந்தேகப்பட வைக்காது என்பதால் இப்பணியில் உன்னை நாம் ஈடுபடுத்தினோம். இது தவிர்ந்த ஏனைய நேரங்களில் சந்திரண்ணையுடன் அட்டை போல் ஒட்டிக் கொள்வாய், ''என்னை றெயினிங் காம்புக்கு அனுப்புங்கோ'' என்று நீ அவரிடம் விடாப்பிடியாக நிற்கும் போது ''உனக்கு வயசு வரட்டும் பொறு'' என்று நாங்கள் கூறுவோம். அப்போது உனது முகம் போகும் போக்கு! அது ஒரு தனிஅழகு

தான். அக்காட்சியை நினைக்கும் போது ''தாயை நேசிக்க மீசை முளைக்கத் தேவையில்லை'' என்ற கவிதை வரிகள் தான் நினைவுக்கு வருகின்றன.

எப்படியோ பாடசாலைச் சீருடையுடனேயே உன்னை பயிற்சி முகாமுக்கு அனுப்ப வேண்டியதாயிற்று. பயிற்சி முகாமில் நீயும் சபேசனும் தான் சிறியவர்கள். இருவருமே ஒரேமாதிரியான குணாம்சத்தைக் கொண்டவர்கள். அமைதி, விசுவாசம் ஒழுக்கம் இவற்றுக்கு நீங்கள் உதாரணமாக திகழ்ந்தீர்கள். பின்னாளில் உங்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்ட போது ஓடிக் கொண்டிருந்த நீ களைத்து விழுவாய். அந்தக் கடுமையான பயிற்சியின் போதும் ''கஷ்டமெண்டால் வீட்டுக்குப் போகலாம்'' என்று கூறும் போது நீ மறுப்பாய். அடுத்த நாள் இன்னும் சிறப்பாகச் செய்ய முயற்சிப்பாய். உன் உடல் நிலை இதற்கு இடந்தராது. ஆனால் உன் உறுதி குலைந்ததை மட்டும் நான் காணவில்லை.

பயிற்சி முடிந்ததும் ஏறாவூர் பொலீஸ் நிலையத்தின் மீது தாக்குதல் மேற்கொண்ட போது அதை முறியடிக்க வரும் படையினரை தடுத்து நிறுத்தும் குழுவில் நீ இடம் பெற்றிருந்தாய். அதுவே உனது முதல்களம், தொடர்ந்து குமரப்பாவுடன் படுவான்கரை மண்ணில் நீ செய்த சாதனைகள், பட்டியலிட முடியாதவை. அத்தாக்குதல்கள் உன்னை ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக இனங்காட்டின. பாலையடி வெட்டையிலிருந்து மண்முனைத்துறை வரை கண்ணி வெடிகள் வெடிக்கும் போதும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் அந்நியப் படைகளின் சடலங்கள் ஏற்றப்படும் போதும் உனது பெயரையும் மக்கள் குசுகுசுத்துக்கொண்டனர். பின்னர் மட்டக்களப்பு நகருக்குள் உனது வேட்டொலிகள் கேட்டன. எங்கிருந்தோ வந்தவர்கள் ஊர்காவற்படை என்ற பெயரில் நகரில் காலடி எடுத்து வைத்த போது ஒரு நாள் தன்னந்தனியாக அவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டாய். இவர்களில் இருவர் பலியாக ஏனையோர் தலைதெறிக்க ஓடினர். அதன் பிறகு சிங்கள ஊர்காவல்படை பொலிஸ் நிலையத்திலிருந்து வெளிவர ஆசைப்படவில்லை. அதைப் போலவே தமிழ் மக்களை வதைத்து வந்த முஸ்லிம் ஊர்காவற்படையினரின் எண்ணிக்கையை உனது துப்பாக்கி குறைத்தது. உனது தாக்குதலின் வேகம்-பலியானோர் தொகை என்பன எஞ்சியோரை சவுதி அரேபியாவிற்கும் ஓடவைத்தது.

இந்தியப்படைகளுடனான போர் தொடங்கியது உனது திறமை மேலும் வெளிப்பட்டது. அன்றொரு நாள் நீ மண் அளைந்து. போழையடித்து விளையாடிய, உன்னால் நேசிக்கப்பட்ட அந்தப் பரமநயினர் கோயில் முன்றலில் இந்தியப்படைகளின் காலடி படுகிறது. உனது துப்பாக்கி வேட்டுகள் அவர்களைத் தடுத்து நிறுத்தின. பலியான சிப்பாயின் உடலை விட்டு அவர்கள் சிதறியோடினர். நீ அவர்களின் துப்பாக்கியுடன் தப்பிச் சென்றாய். இன்னொரு நாள் காத்தான் குடியில் வரிசையாக வந்து கொண்டிருந்த இந்தியப்படையினர் செல்லும் வரை காத்திருந்து கடைசியாக வந்த இந்திய ஜவான் மீது நீயும் சபேசனும் தாக்குதல் தொடுத்தீர்கள். உங்கள் துப்பாக்கி இயங்க மறுத்தது. அவனுடன் மல்லுக் கட்டினீர்கள், அவன் உன் கையைத் கடித்தான், நீங்கள் அவனது துப்பாக்கியாலேயே அவனது வாழ்வை முடித்தீர்கள். கைப்பற்றப்பட்ட துப்பாக்கியுடன் திரும்பி வந்தீர்கள், இப்படியே பல தாக்குதல்கள்.

சிலகாலம் செல்ல இந்தியப்படையினரின் முற்றுகையின் போது நீ சயனைட் உட்கொண்டதாகவும் உன்னைச் சித்திரைவதைகள் செய்து உண்மைகளைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் உன்னைக் காப்பாற்ற இந்தியப்படையினர் பெரும் முயற்சிகளை மேற்கொண்டதாகவும் அறிந்தேன். அத்துடன் இந்தியப் படையினருடன் வந்த தேசத்துரோகியொருவனிடம் உன்னைச் சுட்டுவிடுமாறு நீ வேண்டிக்கொண்டதாகவும் அறிந்தேன். இயக்கத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற உனது விசுவாசம் எனக்குத் தெரிந்தது தானே. உனக்கு ஞாபகமிருக்கிறதா? நீ சிறுவனாக இருந்த போது ஒரு நாள் சந்திரண்ணாவுடன் கிரான் குளத்திலிருந்து சைக்கிளில் ஆரையம்பதிக்கு வந்து கொண்டிருந்தோம். அப்போது உனக்கு குப்பி வழங்கப்படவில்லை. ஐந்தாம் கட்டைச் சந்தி- கல்முனை, மட்டக்களப்பு வீதிவழியாக செல்லும் படையினரின் சகல வாகனங்களும் இந்தச் சந்தியில் தரித்து நின்று சிறிது நேரம் பயணிகளைச் சோதனையிடுவது வழக்கம். அன்று நாங்கள் இந்தச் சந்தியை நெருங்கினோம். எதைக் காணக்கூடாது என நினைத்தோமோ அதைக்கண்டோம், எங்களை நெருங்கிய அந்த ஜீப் தனது வேகத்தைக் குறைத்தது. அக்காட்சியை நான் நன்றாகப் பார்த்தேன். குதிக்க முயன்ற சிப்பாய்களை தடுத்து நிறுத்திய அந்த அதிகாரி ஜீப்பைச் செலுத்துமாறு சாரதியிடம் சைகை காட்டியதை. எமது அன்றைய மனநிலையை உனக்கு உணர்த்தத் தேவையில்லை, இருவரும் ஒரே மனநிலையில் தானே இருந்திருப்போம்? ஜீப்

கொஞ்சம் கொஞ்சமாக எமது கண்ணிலிருந்து மறைந்தது. நிம் மதிப் பெருமூச்சுடன் நான் 'எங்கள் எல்லோரிட்டையும் குப்பி யிருக்கு, நாங்கள் கடிச்சிருப்பம், லக்ஸ்பிறே! நீ என்னடா செய் திருப்பாய்'' என்று கேட்டேன். அதற்கு நீ ''சந்திரண்ணையோட வாயைக் கடிச்சிருப்பன்'' என்று சொன்னாய். அந்தச் சில கண நேரங்களில் நீ அந்த முடிவு தான் எடுத்திருந்தாய். அதனால் தான் உன்னால் இப்படித் சொல்ல முடிந்தது. உனது பதிலைக் கேட்ட சந்திரண்ணை ''நல்ல வேளை தான் - லக்ஸ்பிறேட உயிரும் தப்பிச்சுது, நம்மட வாயும் தப்பிச்சுது'' என்றார். தொடர்ந்து எமது சிரிப்பொலியால் அந்தப் பகுதிப் பற்றைகளே குலுங்கின. என்ன இனிமையான நாட்களடா அவை!

பிடிபடும் வரை ஆரையம்பதி மக்கள் உன்னை எப்படிக் காப் பாற்றி வந்திருக்கிறார்கள் என்பதை அறிந்த போது ஏதோ ஒருவகை உணர்வு ஏற்பட்டது. இயல்பாகவே இராணுவ முற்று கையில் இருந்து போராளிகளைக் காப்பாற்ற தமது முழுச்சக்தி யையும் பயன்படுத்தும் ஆரையம்பதி மக்கள் உனக்காக நடுவீட் டுக்குள்ளேயே சுரங்கம் அமைத்து உன்னைக் காப்பாற்றி வந் திருக்கிறார்கள். மிக நெருக்கடியான காலத்தில் மூன்று மாதங் கள் இந்தச் சுரங்கத்தினுள்ளேயே நீ கழித்திருக்கின்றாய் என் பதை அறிந்த போது இவ்வளவு கஷ்டப்பட்டு உன்னை மக்கள் காப்பாற்றி வரும்போது அந்தத் தகவலை எதிரியிடம் வழங்கி யவனை............

சித்திரவதைகள், சிறைவாழ்வு உன்னை புடம் போட்டன. எப்படியோ நீ விடுதலையானாய். தற்காலிகமாக இடைநிறுத் தப்பட்ட உனது சாதனைப் பட்டியல் நீண்டது.

உன்னை எத்தனை தடவைதான் மரணம் ஏற்றுக் கொள்ள மறுத்திருக்கிறது. மட்டக்களப்பு நகரில் ஒரு துரோ கிக்கு தண்டனை வழங்கச் சென்ற போது அவனது காவலர்கள் பின்னால் வந்து அடித்தனர். நீ மயங்கினாய். உனது கை உடைந்தது. சம்பவத்தை அறிந்த இந்தியப்படை அந்த இடத் தைச் சுற்றிவளைத்துக் கொண்டிருக்கும் போதே உனது நண்பர் கள் இருவர் வந்து எதிரிகளைத் தாக்கி அந்தத் தீவிலிருந்து உன்னை ஆற்றின் வழியாக தோணி மூலம் கொண்டு வந்தனர் (எப்படியோ அந்துரோகி உனது கையினாலேயே மாண்டான்) இன்னொரு தடவை துரோகிகளின் ரவை ஒன்று உன் காலைத் துளைத்தது. ஆனால் இப்போது மட்டும் மரணம் உன்னை முத் தமிட ஏன் சம்மதித்தாய். சிறையிலிருந்து மீண்டதும் தாழங்கு

டாவில் சிறிலங்காப் படையினரின் கவசவாகனம் ஒன்றைத் தகர்த்தாய். மண்முனைத்துறையில் தேசத்துரோகிகளையும் சிறிலங்காப் படையினரையும் ஒழித்துக் கட்டினாய். பல பொலிஸ் நிலையத் தாக்குதல்களில் பங்கேற்றாய். தமிழீழத்திலும் தமிழீழத்துக்கு வெளியிலும் நீ செய்த சாதனைகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. அந்தச் சம்பவங்களின் தொகுப்பு தமிழீழம் மலர்ந்த பின் மட்டுமே வெளிக்கொணரக் கூடியவை.

இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது பாடவிதானமாக அமையக்கூடிய உன் வாழ்வின் சில பக்கங்கள் மட்டுமே.

லக்ஸ்மன்! நீயும் நாங்களும் திரிந்த மண்ணை மீண்டும் மிதிக்கும் போது எங்களுக்கும் கவசமாயிருந்த கன்னாப் பற்றைகளும் எங்களைத் தாங்கிச் சென்ற தோணிகளும் நாங்கள் பிரிந்திருந்த காலத்தில் நீ செய்த சாதனைகளை - உன்னை நேசித்த மக்களைப் பற்றி எனக்கு கதைகதையாகக் கூறக் காத்திருக்கின்றன. அப்போது மீண்டும் எமது நினைவுகளை உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வோம். அதுவரை தற்காலிகமாக விடைபெறுகிறேன்.

அன்புடன்
உனது
மு. அறிவன்

02-10-1991

---

# தென் தமிழீழத்தின் முதற் கரும்புலி

## கப்டன் ஜெயந்தன் (சம்புக்குட்டி பத்மநாதன்)

மாரியம்மன் கோவிலடி, சோதிபுரம், ஏறாவூர்) — 04-05-1991

பருத்தித்துறைக்கடலில் சிறீலங்கா கடற்படைக்கப்பல் மீதான தாக்குதலில்.



# மேஜர் பாரதி

| | |
|---|---|
| பெற்றோர்: | விஸ்வலிங்கம்<br>அன்னம்மா |
| இயற்பெயர்: | சத்தியபாமா |
| முகவரி: | கல்லுவம், கரணவாய் மேற்கு. |
| தோற்றம்: | 20-12-1965 |
| கல்வி: | ஆரம்பக்கல்வி: ஈ வினையில்<br>உயர்கல்வி: உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.<br>யாழ். பல்கலைக்கழகம் (2ம் ஆண்டு) |
| போராளியாய்: | 1987 |
| மாவீரராக தாயகமண்ணில்: | 07-06-1992 |
| விசேடதிறமை: | கவிதை, எழுத்து ஆற்றல் மிக்கவர். |

வடமராட்சியில் உள்ள கல்லுவத்தின் செம்பாட்டு மண்ணில் இருந்து புதிய புறம் பாடப்புறப்பட்ட வீரவேங்கை இவள்.

அந்நிய ஆதிக்கம் எம்மண்ணிலே விளைத்த கோரப்பதிவு களைக் கண்டு கொதித்தெழுந்து....

தாயக விடுதலைக்காய் தம்முயிர் ஈந்த மாவீரர் வரிசையிலே இன்று இவளின் பெயரும் ....
பாரதி!

இவள் குடும்பத்தில் ஒரேபிள்ளை - செல்லப்பிள்ளை. தங்கள் உயிரினும் மேலாக பெற்றோரால் நேசிக்கப்பட்டவள்; போஷிக்கப்பட்டவள்.

வறுமையின் கோரப்பிடி இவளது குடும்பத்தை பாதித்தாலும் அது அவர்களது இதயத்தைப் பாதிக்கவில்லை.

எந்த விடயத்திலும் ஆற்றலும், அறிவும் பெறத்தக்க வகையிலே பெற்றோரால் வளர்க்கப்பட்டாள்.

பாரதி தன் தாயை மிகவும் நேசித்தாள். அதனால் தான் அவள் தன் தாய் நாட்டையும் மிகவும் நேசித்தாள்.

பெண்களை பூவையாக எண்ணி நகையாடிய காலத்திலே...

புலியாகி களமாடி இன்று காவியமாய் தமிழீழ வரலாற்றிலே நிறைந்து நிற்கிறாள்.

1986 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தனது பல்கலைக்கழகப் படிப்பை நிறுத்தி புலிகளின் போராட்டப்பாதையில் பாரதி தன்னை இணைத்துக்கொண்டாள்.

1987 ஆம் ஆண்டு மகளிர்படையணியின் 2-வது பயிற்சி முகாமுக்காக பெண் போராளிகள் தெரிவு செய்யப்பட்ட போது தானும் அதில் பயிற்சி பெற முடியவில்லையே என்று பாரதி மிகவும் மனவேதனைப் பட்டாள். எல்லோரும் பயிற்சிக்குப் போனால் தளத்திலே நின்று வேலைகளைக் கவனிப்பதற்கும் ஆட்கள் தேவை. நீங்கள் தான் அப்பொறுப்பை ஏற்றுச் செய்ய வேண்டும் என்று லெப்.கேணல் திலீபன் கூறியதற்கிணங்க பாரதி தனது மனதை சமாதானப்படுத்திக் கொண்டாள். மகளிர்

அமைப்பின் பொறுப்பாளராக இருந்து பெண்களை போராட்டத்துடன் இணைப்பதிலும், பெண்களது சமூக, பொருளாதார வாழ்வை மேம்படுத்தும் வேலைகளிலும் பாரதி ஈடுபட்டாள்.

1987 ஆகஸ்ட் 10 ஆம் திகதி இந்திய-தமிழீழ விடுதலைப் போரைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கம் சகல நிலைகளிலும் வளர்ச்சியைப் பெற்றுக் கொள்கிறது. வல்லரசொன்றுடன் மோதுகின்ற விடுதலைப் புலிகளின் தீரத்தையும் உலகம் கண்டு வியந்து நிற்கிறது.

குண்டு துளைக்காத நிலமென அங்குல நிலத்தையேனும் கண்டுகொள்ள முடியாத மணலாற்றுக் காட்டிலே புலிகளின் புதிய படையணிகள் வெகுவிரைவாக பயிற்சியைப் பெறுகின்றன. இக் காலகட்டத்தில் நடைபெற்ற மகளிர் பிரிவின் 4ஆவது பயிற்சி முகாமில்தான் பாரதி பயிற்சியைப் பெற்றுக்கொண்டாள்.

இவள் பயிற்சிக்குச் சென்ற அந்தநாளை நினைத்துப் பார்க்கிறேன்... இந்திய இராணுவம் இம்மண்ணிலே நிலைகொண்டிருந்த நேரம் அது. உண்பதற்கு தவிர வாயைத் திறக்கவே அஞ்சிய நேரம் அது. இந்நேரத்தில்தான் பாரதியை சந்திக்கிறேன்.

'பயிற்சிக்குப் போவோமா' என்று கேட்கிறேன். எனது கையை அன்புடன் பற்றியவள்:

''அக்கா இந்த முறையும் என்னை ஏமாற்றமாட்டியள் தானே கட்டாயம் அனுப்புவீர்கள் தானே'' என்று கேட்கிறாள். அதேநேரம் எனது கைகளில் இரண்டு சொட்டுக் கண்ணீர் விழுகிறது.

ஆச்சரியத்துடன் பாரதியின் முகத்தை நிமிர்ந்து பார்க்கிறேன்.

''அக்கா நான் நல்ல தெளிவோடும் உறுதியோடும் இருக்கிறேன்'

இது பாரதியின் பதில். எனக்கு இன்னும் விடை பிடிபடவில்லை. இவள் ஏன் அழுகிறாள்?

இப்பொழுது அவளது நாட்குறிப்பைப் பார்க்கும் பொழுது தான் அவள் அடிமனதின் ஆழத்தில் புதைந்திருந்த சோகம் தெரிகிறது.

வயிற்றுப்பாட்டிற்கே வழியின்றி வாடும் ஓர் எலும்புக் கூடு அவளின் தாய். தன் செல்லமகள் திரும்பிவருவாள் என்று எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்ற அந்த ஏக்கம் கண் முன்னே நிழலாடுகிறது.

அவளின் இறுதிக் கிரியைகளின் போது அழ மறந்து போய் ஒவ்வொரு போராளிகளதும் முகத்திலே தன் அருமை மகளை அடையாளங் காணத்துடிக்கின்ற அந்த தாயின் முன்னே பேசுவதற்கு வார்த்தைகளற்றுப் போகிறோம்.

பாரதி, வானதி, கஸ்தூரி இவர்கள் மூன்றுபேரும் ஒரே பயிற்சி முகாமிலே பயிற்சி பெற்றவர்கள், நெருங்கிய தோழிகள்.

இவர்கள் கையிலே இருந்த துப்பாக்கிகளுக்கு இருந்த வேகம் இவர்கள் கரங்களிலே இருந்த பேனாவுக்கும் இருந்தது.

ஒருபுறம் ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராகப் போர் தொடுத்தது இவர்களது துப்பாக்கி. இன்னொரு புறத்திலே சகல ஒடுக்கு முறை சக்திகளுக்கும் எதிராக மக்களை விழிப்படையச் செய்வதில் இவர்களது பேனா பெரும் பங்காற்றியது.

இந்திய இராணுவத்தை இம்மண்ணில் இருந்து விரட்டி யடித்த துப்பாக்கி வேட்டொலிகளில் எல்லாப் போராளிகளை யும் போல பாரதியின் துப்பாக்கியோடு சேர்த்து, அவளது பேனாவுக்கும் கணிசமான பங்கு இருந்தது.

1990ஆம் ஆண்டில் விடுதலைப்புலிகள் மாணவர் இயக் கத்தின் பொறுப்பாளராக இருந்த காலத்தில் பாரதி ஆற்றிய பணிகள் குறிப்பிடக் கூடியவை.

தமிழீழ மாணவ சமுதாயம் சரியான செல்நெறி ஒன்றுக் கூடாக வளர்த்துச் செல்லப்பட வேண்டும் என்பதில் பாரதி மிகுந்த அக்கறை கொண்டிருந்தாள்.

இந்நேரத்தில்தான் மீண்டும் சிறிலங்கா தமிழீழ விடுத லைப் போர் ஆரம்பமாகியது. இப்போரிலே மாணவர்களை முழுமையாக பங்களிக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை

மேற்கொண்ட பாரதி தானும் சண்டைபிடிக்க வேண்டும் என்று எம்முடன் சண்டையிட்டுக் கொண்டு களம் சென்றாள்.

இராணுவக் காவலரண்களை அவதானிப்பதற்காக சென்று கொண்டிருந்தவேளையில் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காலில் காயமடைந்து கொள்கிறாள்.

மீண்டும் பெண்களின் சமூக மேம்பாட்டுக்கான வேலைத் திட்டங்களை வகுத்துச் செயற்பட்ட பாரதி மகளிர் முன்னணியின் துணைப் பொறுப்பாளராகவும் செயற்பட்டாள்.

பாரதியுடன் பழகுவது என்பது ஓர் வித்தியாசமான அனுபவம்.


இவள் இயற்கையை நேசிப்பவள். இயற்கையை ரசிப்பவள். இந்த இயற்கையிலே எந்த மாற்றத்தையும் ஏற்படுத்துவதையும் காணச்சகிக்காதவள்.

மாவீரர் நினைவில்லங்களில் கூட மண பறித்திட்டு வணக்கம் செலுத்துவதை இவளால் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. வேண்டுமானால் ஒவ்வொரு கல்லறைகளுக்கு அருகிலும் ஒரு நந்தவனத்தை உருவாக்குங்கள் அவை பூத்துச் சொரிந்து எம் வீரர்களை ஆராதிக்கட்டும் என்று கட்டளை இடுவாள். இவ்வாறான மிகவும் இளகிய மனதைக் கொண்ட இவளால் எம் தாயக மண் அங்குலம் அங்குலமாகப் பறிக்கப்படுவதை சகித்துக் கொண்டிருக்க முடியுமா? விடியலைப் பிரசவிக்க வித்தான மாவீரர் வரிசையிலே எங்கள் பாரதியும்.
பாரதி!

நீ விட்டுச் சென்ற ஆயுதத்தை ஏந்திக்கொண்டு ஆயிரமாயிரமாய் விடுதலைப் பாதையிலே வீரர்கள் அணிவகுக்கிறார்கள். நீ பத்திரப் படுத்தி வைத்திருந்த உனது பேனா... அதை என் கைகளில் எடுத்துள்ளேன். இனி ஆயிரமாயிரமாய் இம்மண்ணுக்காய் தம் இன்னுயிரை அர்ப்பணித்த தோழர்களின் வரலாற்றை அது பதிவு செய்யும்.

19-06-1992

# மேஜர் வீமன்



பெற்றோர்: உமையவேள் சோலை
புஸ்பம் சோலை

இயற்பெயர்: விக்னேஸ்வரன்

முகவரி: சகாயமேடை, அடம்பன்

தோற்றம்: 11-10-1966

கல்வி: அடம்பன் மகா வித்தியாலயம்.
7ம் வகுப்பு

உடன் பிறப்பினர்: நகுலேஸ்வரன்
புவனேஸ்வரன்
ஜெகதீஸ்வரன்
ராஜேஸ்வரன்
கௌரீஸ்வரி

போராளியாய்: 02-06-1985

மாவீரனாக
தாயக மண்ணில்: 16-07-1991

குறிப்பிடக்கூடிய
தாக்குதல்: முந்திரிகைக்குளத்தில் சிறீலங்கா இரா
ணுவ மினிமுகாம் தகர்ப்பு 1-11-1990

தென் ஆசியாவின் வரலாற்றுப் போக்கை மாற்றியதில் மணலாற்று மண்ணுக்கு தனியிடம் உண்டு. இந்தியப் படையுடன் இங்கு நடந்த போர்கள் பாரம்பரிய யுத்த முறைகளையெல்லாம் கேள்விக்குரியதாக்கிற்று. இந்திய இராணுவத்தில் சிறப்பு மிக்கதாகக் கருதப்பட்ட படைப்பிரிவுகளெல்லாம் தமது பெருமையை இழந்தன. இங்கு நடந்த வியப்பூட்டும் அனுபவங்களை இந்திய இராணுவத் தளபதிகள் நூல் வடிவில் வெளியிடுகின்றனர். மற்றும் பல வரலாற்று ஆய்வாளர்கள் இதனை ஆய்வுசெய்து கொண்டிருக்கின்றனர். ''அமைதிப் படையில் கடமையாற்றி உயிரிழந்த இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும்'' என்று இந்திய அரசு உத்தரவிடும் அளவுக்கு இந்தியப்படையின் இழப்பு இருந்தது.

இத்தகைய பெருமை மிக்கபோரில் கலந்து கொண்ட ஒரு அணியை வழிநடத்தியவன்தான் வீமன். இவன் மன்னார் மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவன். அங்கேயே பயிற்சியும் பெற்றவன். சொல்லப்படும் விடயத்தை இலகுவாகப் புரிந்து கொள்பவன். யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட குரும்பசிட்டி மினி முகாம் தாக்குதல் உட்பட பல தாக்குதல்களில் கலந்து கொண்டவன். யாழ்ப்பாணத்தில் இந்தியப் படையினருடனான போர்களில் பங்கு பற்றிய பின் மணலாற்றில் இவனது பணிதொடர்ந்தது.

1988 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் நாள் மணலாற்றில் இந்தியப் படைப்பிரிவினருடனான போர் ஆரம்பித்தது. காலை 5. 15 க்கு ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சண்டையில் பிற்பகல் 4-00 மணிவரை இந்தச் சண்டையில் கலந்து கொண்ட எவருமே அந்த இடத்தை விட்டு விலகவேயில்லை. வேறொரு முகாமில் இருந்த வீமன் சண்டை தொடங்கிய பத்து நிமிடத்துக்குள் ஜி. 3 துப்பாக்கியுடன் அங்கு நின்றான். அவனைப் பொறுத்தவரை சண்டை செய்வதற்கு இது நல்ல சந்தர்ப்பம். அதனால் அவன் மகிழ்ச்சியுடன் கத்திக் கத்திச் சண்டைபோட்டான். அன்றிலிருந்து இந்தியப்படை இந்த மண்ணைவிட்டுப் போகும்வரை அவனது இந்தச் சுபாவம் மாறவில்லை.

அந்த இடைக்காலத்தில் மணலாற்று மண்ணில் நடந்த அனுபவங்கள் மறக்க முடியாதவை. ஒரு காலத்தில் உப்புக்குக்

கூடத் தட்டுப்பாடிருந்தது. காயப்படுவோருக்கு வைத்தியம் செய்வதற்குரிய சூழ்நிலை இல்லை. ஒவ்வொரு போராளியும் தனது நெருங்கிய நண்பர்களை இழந்திருந்தனர். ஆனாலும் எந்த ஒரு இக்கட்டான சூழ்நிலையாலும் இவனது கலகலப்பான போக்கை மாற்றமுடியவில்லை.

எந்த நேரமும் இந்தியப் படை வரலாம் என்பதால் உணவைச் சேமிப்பதில் வெகு அவதானமாக இருக்க வேண்டியிருந்தது. அவற்றை உருமறைப்புச் செய்வதில் மரங்கள் கூட பெரும் பங்கு வகித்தன. (இந்தியாவின் சுதந்திரதினத்தையொட்டி இந்திய வானொலியில் ஒலிபரப்பப்பட்ட சுவியரங்கொன்றில் வன்னிக்காட்டு மரங்கள் கூடகாட்டிக் கொடுக்காது என்று குறிப்பிடுமளவுக்கு எமது மண் உயர்ந்து நின்றது). ஒரு நாள் இவன் மரத்தில் சிறாம்பிகட்டி உணவைச் சேமிக்கும் போது கையை விட்டு விட்டு நிற்கிறேன் பார் என்று தனது நண்பனிடம் கூறிய போது மரத்திலிருந்து தவறி வீழ்ந்தான். அதனால் படுக்கையிலேயே கிடக்க வேண்டிய நிலை. முற்றுகையென்றால் இவனையும் படுக்கையுடன் கொண்டுபோக வேண்டும். அந்த நிலையிலும் இவனது கலகலப்பு மாறவில்லை. அது தான் அவனது தனித்துவம்.

குணமடைந்து மீண்டும் களத்திற்கு திரும்பினான். இளைய தலைமுறைப் போராளிகளை வழிநடத்தினான். திட்டமிட்டு செயலாற்றுவதில் இவனுக்கு எவ்வளவு திறமை இருந்ததோ அதேயளவுக்கு ஒரு போராளியின் மனநிலை அறிந்து செயற்படும் ஆற்றலும் இருந்தது. போராளிகளின் இன்ப துன்பத்தில் பங்கு கொள்வான். மீண்டும் அவர்களைத் தட்டிக் கொடுத்து புதுத் தெம்புடன் போராட வைப்பான். பொதுவாக இவனது முகாம் எப்போதும் மகிழ்ச்சியுடன் காணப்படும். இந்திய ஜவான்களெல்லாம் மரணபயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கையில் இவனது முகாமில் அடிக்கடி கலை நிகழ்ச்சிகள் நடக்கும். சனி, ஞாயிறு தினங்களில் விளையாட்டுக்கள் நடைபெறும். அந்த முகாமில் ஒரு மரை, ஒருகரடி என்பவற்றுடன் ஒரு கருங்குரங்கையும் வளர்த்தான். அது ஒரு அபூர்வ ஆற்றல் மிக்கது. இவனைப் போலவே அது எல்லோரும் எப்போதும் சந்தோஷமாகவும் ஒற்றுமையாகவும் இருக்க வேண்டுமென்று விரும்பியது. யாருக்காவது ஒருவர் அடித்தால் அடிப்பவரை அது கையைப் பிடித்துத் தடுக்கும். இருவரும் ஒற்றுமையாக இருப்பதைக் கண்டாலே அதற்குத் திருப்தியேற்படும். புதிதாக அந்த முகாமுக்கு வருபவர்கள் இதனைப்பார்த்து வியப்பார்கள்.

PUBLIC LIBRARY JAFFNA.

காட்டிற்குள் சென்ற புதிதில் திசையறிகருவி மூலம் காட்டை இனங்காண்பதில் வல்லவர்களாக இருந்தவர்களில் இவனும் ஒருவன். மரணத்தின் வாசலைச் சந்தித்தது போன்ற மிகப் பயங்கரமான முற்றுகைக்குள் எதிரிப்படையை மிகக்கிட்டிய தூரத்தில் இனங்கண்ட சம்பவங்களெல்லாம் ஏராளம். அப்போதெல்லாம் திசையறிகருவியின் துணையுடன் போராளிகளை பத்திரமான இடங்களுக்குக் கொண்டு சென்றிருக்கிறான்.

சிறிலங்காப் படையினருடனான போர் மீண்டும் ஆரம்பித்த பின் இவன் மாங்குளம் முகாம் மீதான முற்றுகை காரைநகர் சிறிலங்காப் படையினருடனான மோதல், முந்திரிகைக் குளத்தில் சிறிலங்காப் படையினரின் மினிமுகாம் மீதான தாக்குதல் போன்ற பல தாக்குதல்களில் பங்கேற்றான். அக் காலங்களில் இவனுடன் தாக்குலல்களில் கலந்து கொண்டோர் அதனை ஒரு இனிய நினைவுகளாகவே குறிப்பிடுகின்றனர். ஒவ்வொரு சம்பவத்திலும் இவன் நடந்து கொண்ட விதம் தாங்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்காக இவன் என்னென்ன விதத்தில் செயற்பட்டான் என்றெல்லாம் கதை கதையாகக் கூறுகின்றனர். நீந்தத்தெரியாதோரை கயிற்றில் கட்டி நீந்தவிட்டது தமக்கு நண்டுசுட்டுக் கொடுத்தது .. இளநீர் பறித்துக் கொடுத்தது பொதுவாக போர்ச் சூழலில் இருக்கும் உணர்வே இருக்கவில்லை. அவர்களுக்கு அக்காலங்களில் ஒரு விடுமுறையைக் கழிக்கும் உணர்வே இருந்ததகக் குறிப்பிடுகின்றனர். போர்க் களத்தில் எதிரியை காட்டிவிட்டு சுட்டு வீழ்த்தியதை நினைத்து வியக்கின்றனர்.

இவ்வளவு ஆற்றல் மிக்க போராளியை 15. 7. 91 இல் தொடங்கிய மணலாற்றுப் போரில் இழந்வோம். இப்போருக்கு முன்னதாக இராணுவத்தினரின் உளவுப்பிரிவொன்றுடன் மோதல் நிகழ்ந்தது. எனவே நடைபெறவிருக்கும் முற்றுகையை முறியடிக்க திட்டங்கள் தீட்டினான் இவன். ''எங்கட காட்டுக்கை வந்திட்டுப் போறதெண்டா சேட்டையா? நல்ல அடி குடுத்துக் கலைக்க வேணும்'' என்று கூறிவிட்டு போராளிகளை தயார் படுத்தினான். மிகக் கடுமையான மோதல் நிகழ்ந்தது. தொடர்ச்சியான இந்த முற்றுகையில் ஒரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு செல்லும் வழியில் மறைந்திருந்த படையினர் தாக்கினர். அந்தப் போரின் போதே வீமன் இந்த மண்ணைப் பிரிந்தான். உயிர் பிரியும் வரை அந்த மோதலுக்குத் தலைமை தாங்கினான் இவனுடன் இன்னும் 12 போராளிகள் அச்சம்பவத்தில் வீரச் சாவடைத்தனர். இவனால் வழிநடத்தப்பட்ட போராளிகள் அந்தப் பாரிய முற்றுகையை முறியடித்தனர்.

இவனது உடல் இறுதி ஊர்வலத்துக்கு வந்தபோது மில்லரின் நினைவு தினக் கூட்டத்தில் இவன் ஆற்றிய உரையே மக்களுக்கு நினைவுக்கு வந்தது. எங்கள் தாயக பூமியில் சிங்களக் குடியேற்றத்தை முறியடிக்க அணிதிரள வேண்டுமென்று உணர்வு பூர்வமாக ஆற்றிய உரை அது. போராளிகள் இவனது கல கலப்பு- திட்டமிடும் ஆற்றல் போன்றவற்றை நினைத்து புத்துணர்வு பெறுகின்றனர். அவர்களுக்கு இவன் கடைசியாகச் சொன்னது இன்று சொன்னது போல் இருக்கின்றது.

',எங்கடை காட்டுக்கை வந்திட்டுப் போறதெண்டா சேட்டையா ...... நல்ல அடி குடுத்துக் கலைக்க வேணும்''

-ஆம் இந்தக் காடுகள், கடல்கள், வயல்கள் எல்லாமே எங்களுடையவை. இதை இழக்கச் சம்மதிக்கமாட்டார்கள் அவர்கள்.

14-08-1992

# திலீபனின் இறுதிச் செய்தி!

நான் மரணத்தை மகிழ்ச்சியுடனும் பூரணதிருப்தியுடனும் தான் தழுவிக்கொள்கிறேன். என் தலைவனின் தலைமையில் அனைத்து மக்களும் கிளர்ந்தெழுவார்கள் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். இந்த மாபெரும் மக்கள் புரட்சி என்றோ ஒருநாள் எம் இலட்சியத்தை நிறைவேற்றியே தீரும். எம்மக்கள் மீது கொண்ட அசையாத நம்பிக்கையின் பேரில், அவர்கள் மீது கொண்ட தாழாத பாசத்தின் பேரில் அவர்களின் விடிவிற்காக நான் 651-வது விடுதலைப் புலியாக என் தோழர்களை நோக்கி மெதுவாகப் போய்க்கொண்டிருக்கிறேன்.

இ. திலீபன்

[உண்ணாவிரதமிருக்கும் போது திலீபன் தனது கைப்பட எழுதிய கடிதத்திலிருந்து]



# கப்டன் வீரமணி

பெற்றோர்: கணேசபிள்ளை
சாந்தகுமாரி

இயற்பெயர்: சந்திரசேகரம்

முகவரி: 30/10, கண்ணகிபுரம், திருமலை.

தோற்றம்: 05-04-1970

கல்வி: திருமலை இந்துக்கல்லூரி
க. பொ. த. உயர்தரம்

உடன்பிறந்தோர்: கலைச்செல்வன்
கமலமலர்
நாகலோஜினி
ஜோதிமலர்
திவாகரன்

போராளியாய்: 1989

மாவீரனாக
தாயக மண்ணில்: 28-06-1992

குறிப்பிடத்தக்க
தாக்குதல்கள்:
- ★ கும்புறுப்பிட்டியில் இந்திய இராணுவத்துடனான மோதல் (13-12-1989)
- ★ மூதூர் கட்டைபறிச்சான் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினருடனான மோதல் (13-06-1990 இலிருந்து 21-06-1990 வரை)
- ★ மூதூர்-பட்டியடியில் சிறீலங்கா இராணுவத்தினருடனான மோதல். (21-12-1991)

விசேடதிறமைகள்: கராட்டியிலும், நீச்சலிலும் வல்லவர்.

வீரமணி - இவன் குழந்தைத்தனம் இளமைத்துடிப்பு, முதுமையின் அனுபவம் இவை அனைத்தும் ஒருங்கே கொண்டவன்.

வீரமணி, உன்னை நான் குழந்தையாக, நல்ல நண்பனாக, ஆலோசகனாக, ஏன் ஆசானாகக்கூடக் கண்டிருக்கிறேன். உனது சாவு, சாவின் இறுதிக்கணங்கள் அவை கூட என் உள்ளத்தை உறுதியாக்குகின்றன.

ஒரு மாதத்துக்கு முன்பு கட்டைக் காட்டுச் சமருக்கு உன்னை அனுப்பும் போது நிரந்தரமாகவே உன்னை அனுப்புகிறேன் என்பதை உணரமுடியவில்லை. கலகலப்பான நீ சண்டையில் காட்டும் மூர்க்கத்தனத்தை நான் அறிந்தவன் தான். அந்நேரங்களில் உன்னோடு உடனிருந்தவர்கள் அதனைப் பெருமையோடு சொல்வதை நானும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

வீரமணி குறுகிய காலத்தில் பல நல்ல இதயங்களை எமக்காக, எம் விடுதலைக்காக நீ வென்றெடுத்துள்ளாய். அவர்கள் இன்றும் இல்லை என்றுமே எம்மோடு அணிவகுத்து வரத்தான் போகிறார்கள். எம்மைவிட்டு உனது உடல் தானே மறைந்திருக்கின்றது. மற்றும்படி உனது ஒவ்வொரு அசைவும், நீ மேற்கொண்டிருந்த ஒவ்வொரு திட்டமும் உனது நினைவும் எம்மை உன் பின்னே தொடர வழி ஏற்படுத்தி உள்ளது.

கப்டன் வீரமணி சாவிலும் உனக்கொரு வாழ்வு. நீ உன்னை ஒருவருமே மறக்கக்கூடாது என நினைத்து வாழ்ந்து காட்டி விட்டுச் சென்றுள்ளாய்.

உன்னை, உனது நினைவலைகளை எப்படி எம்மால் மறக்க முடியும். நித்தமும் எம்மைச் சிரிக்கச் செய்து விட்டு இன்று அழவைத்து விட்டுச் சென்றிருக்கும் குழந்தைத்தனம் நிறைந்த உனது முகத்தை எப்படி எம்மால் மறக்க முடியும்?

நாங்கள் மட்டுமல்ல உன்னில் உயிரையே வைத்திருக்கும், உன்னாலே புதுவாழ்வை நோக்கி பயணம் புறப்பட்டிருக்கும் மூதூரின் அந்த ஆதிக்குடிகளும் இப்படித்தான் எம்மை மாதிரித்தான் உனது இழப்பை ஏற்றுக்கொள்ள முடியாமல் தவிக்கிறார்கள்.

PUBLIC LIBRA
JAFFNA.

1989 பங்குனித்திங்களில் ஒருநாள் கும்புறுப்பிட்டிப் பகுதியிலிருந்து இளைஞர்களில் சிலர் புலிகளுடன் இணைந்து கொள்ள வந்தார்கள். அதில் வீரமணியும் ஒருவனாக இருந்தான். சிறிய உருவம் முகத்தில் தவழும் குறும்புத்தனம், சிரிக்கும் பொழுது சிறிதாக மாறும் அகன்ற விழிகள் இதுதான் வீரமணி. முதற் பார்வையிலேயே அவன் யாருடைய மனதிலும் பதிந்து போய் விடுவான்.

பயிற்சி முடிந்ததும் மருத்துவப் பிரிவில் சேர்க்கப்பட்டு ஓர் மருத்துவவியலாளனாக பயிற்றப்பட்டான் வீரமணி.

அந்த நேரத்து காட்டுவாழ்க்கை மிகவும் கடினமானது. அது உணவின்றி, மருத்துவ வசதிகளற்று நாம் தவித்த நேரம். இன்று நினைத்தால் வியப்பாகவும், மனித சக்திக்கு அப்பாற் பட்டதாகவும் தோன்றும் அன்றைய நிலையை எப்படி நாங்கள் வென்று வந்தோம்?

உண்மைதான், அது ஓர் உறுதி நிறைந்த ஆச்சரியமான விடயமும் தான். இந்தியர்கள் கிராமங்களிலும் காடுகளிலும் பரவி நின்றார்கள். எப்படியோ அடிக்கடி மோதல்கள் நடந்தன. போராளிகள் காயமடைந்தார்கள்.

அந்நேரங்களிலெல்லாம், இவர்கள் தான்-வீரமணியும் அவன் தோழர்களும் தான் மிகப்பெரிய வைத்தியர்கள். வெளிச்சமிராது சத்திர சிகிச்சை நிலையமோ ஏனைய வசதிகளோ இராது.

காட்டுத்தடிகளின்கட்டில், கைவிளக்கின் ஒளி ஆனாலும் காயமடைந்தவர்கள் காப்பாற்றப்பட்டார்கள். இப்படித்தான் இந்தியர்கள் இந்த மண்ணைவிட்டு மறையும்வரை அவர்கள் போராடினார்கள்; காயமடைந்தார்கள்; காப்பாற்றப்பட்டார்கள்

சண்டைகளிலும் வீரமணி மிகுந்த நிதானத்தையும் துணிச் சலையும் காட்டினான். 1989 புரட்டாதியில் கும்புறுப்பிட்டி கிராமத்தை அண்மித்துள்ள கொத்திக்குள காட்டிலிருந்த எமது முகாம் இந்தியர்களாலும் தேசவுரோதிகளாலும் சுற்றிவளைக் கப்பட்டது.

தொடர்ந்து ஐந்து நாட்கள் வெவ்வேறு முனைகளில் வெவ் வேறு இடங்களில் சண்டைகள் நடந்தன. பெரும்படை தொடர்ந்து ஐந்து நாள் சமர். அந்தச்சண்டையில் தன்னுடைய

எஸ். எல். ஆர். ரக துப்பாக்கியால் நாற்பத்தெட்டு ரவைகளை குறிபார்த்துச் சுட்டிருந்தான் வீரமணி. அது தான் அந்தக் காட்டிற்குள் இந்தியர்கள் இறங்கிய இறுதித்தடவை. அதன் பின்பு அவர்கள் அதனை நினைக்கவே இல்லை.

அதன் பின்பாக வீரமணி அரசியல் வேலை செய்வதற்காக மூதூர் கோட்டத்திற்கு மாற்றப்பட்டான். மூதூரில் வீரமணி நின்று செயல்பட்ட நாட்கள் மிகவும் குறுகியது. இந்தியர்கள் வெளியேறிக் கொண்டிருந்த அந்த நாட்கள் மக்களின் மகிழ்ச்சிக் கொந்தளிப்பில் மிக விரைவாகவே கடந்து போயின.

இந்தியர்கள் வெளியேறிய பின்பு திருகோணமலையின் நகர்ப்புறத்திற்கு அரசியல் வேலைகளை மேற்கொள்வதற்கென வீரமணி நியமிக்கப்பட்டான். பகலும் இரவும் அந்த நகரத்து குடியிருப்புக்களுக்குள்ளும், சந்துகளிற்குள்ளும் அந்த உற்சாகம் நிறைந்த இளைஞன் ஓய்வொழிச்சலில்லாமல் வேலைகளில் மூழ்கிப்போனான்.

1990 ஆம் ஆண்டு அன்னை பூபதியின் நினைவு நாட்கள் திருக்கோணமலை மாவட்டமெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்த மண்ணின் வாழ்விற்காகவும் அதன் தலைநிமிர்வுக்காகவும் தன்னையே தந்த அந்த அற்புத அன்னைக்கு மக்கள் மரியாதை செய்தார்கள். திருகோணமலை நகரத்தின் அன்னையின் நினைவுநாள் நிகழ்ச்சிகளுக்கு வீரமணியே தலைமைவகித்தான். இச்சிறப்புகளுக்கு பின்வந்த நாட்களில் வீரமணி என்ற அந்தக் குறும்புக்காரனை தெரியாதவர்கள் எவருமே இல்லை எனலாம்.

மீண்டும், சிங்களப்படைகள் எம் தாயகத்தின் மீதான போரினைத் தொடங்கிய போது எழுந்த சண்டைகளில் வீரமணியும் கலந்து நின்று சண்டையிட்டான். திருக்கோணமலை மூன்றாம் சட்டைச்சந்தியில் தொடர்ந்து பத்து நாட்கள் நிகழ்ந்த பெரும் சண்டையில் வீரமணியும் கலந்து கொண்டான்.

அதன் பின்பாக சில காலங்கள் வெவ்வேறு இடங்களில் நின்று செயற்பட்ட வீரமணி அவன் எங்கு நின்று செயற்பட விரும்பினானோ அந்த இடத்திற்கு அதுதான் மூதூர்ப்பகுதிக்கு அனுப்பப்பட்டான்.

ஆனால், அவன் முன்பு பார்த்த மூதூர் இப்போது அங்கு இருக்கவில்லை. சிங்கள இராணுவத்தினரதும், முஸ்லீம் ஊர்

காவல்படையினரதும், கரங்களில் சிக்கி தமிழ்க் கிராமங்கள் சிதைக்கப்பட்டிருந்தன. அந்த மக்களின் வாழ்வு இயக்கத்தின் ஆன்மா படுகொலை செய்யப்பட்டிருந்தது. வளமான நிலப்பகுதிகளிலிருந்து விரட்டப்பட்ட மக்கள் கடற்கரைக் கிராமங்களிலும், காட்டுக்கரைகளிலும் தஞ்சம்புகுந்தனர்.

பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களின் உயிர்வாழ்விற்காக பல்வேறு வேலைத்திட்டங்களை வீரமணி வகுத்தான். அதேநேரம் அந்தக்கடற்கரை கிராமங்களில் பரம்பரை பரம்பரையாக வாழும் ஆதிக்குடிகள் அவனுக்கு அடுத்த பிரச்சினையாக இருந்தது.

கல்வி வாசனையற்று வாழ்வில் முன்னேற்றம் என்பதை அறியாத ஒரு நீர்ச்சுழி போன்ற வறுமையில் உழன்று கொண்டிருந்த அந்த மக்களின் வாழ்க்கை வீரமணிக்கு விளங்கவில்லை. அவர்களுக்கு சொந்தமாக நிலமிருந்தது. அருகிலேயே கடலிருந்தது. ஆனால் அவர்களோ காட்டுக்குள் அலைந்தார்கள். தேன் வெட்டுவதிலும் வேட்டையாடுவதிலும் பொழுதைக் கழித்தனர்.

நாளைய வாழ்வுக்கு அதுவும் ஒருவேளை உணவுக்கு, உப்பேரிகளில் இறாலையும் நண்டையும் கைகளால் பிடித்து விற்று அவர்கள் வாழ்ந்தார்கள். ஆனால், மறுநாளைய செலவுக்கு ஏன் அடுத்த வேளை உணவுக்கு அவர்கள் மீண்டும் உப்பேரிகளில் தவழ்ந்தார்கள்.

உண்மைதான். அவர்களின் வாழ்க்கை முறை வீரமணிக்கு விளங்கவே இல்லை. ஆனால் அவனுக்கு அவர்கள் இந்தத் தேசத்து மக்கள் என்பதும் அவர்களின் வாழ்வுதான் இந்தத் தேசத்தின் வாழ்வு என்பதும் நன்றாகவே தெரிந்தது.

அந்த மக்களின் சமூக வாழ்வின் மையத்தில் அவன் அலசி ஆராய்ந்தான். இறுதியில் அவர்களின் வாழ்வோட்டத்தோடு அவனும் கலந்துபோனான்.

வீரமணி, மூதூரின் அந்த வறிய மக்களின் வாழ்வு இயக்கத்தில் பெரும் மாறுதல்களை செய்தான். கல்வி உழைப்பு, வாழ்வின் முன்னேற்றம் என்றால் என்ன என்பதைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு அந்த ஆதிக்குடிகள் தொடங்கினார்கள்.

வீரமணியோ கிராம மக்களுடன் கண்டிப்பாக இருந்தான். அவர்களின் சோம்பேறித்தனம் தொடர்வதற்த அங்கு இடமிருக்கவில்லை. அந்த வருடம் காலபோக செய்கைக்காலத்தில் சோளம் விதைகளையும், நிலக்கடலைகளையும் மரவள்ளித் தடிகளையும், வாழைக்குட்டிகளையும் அவனே வாங்கிக் கொடுத்தான். அவை பயிரிடப்படுகின்றனவா? பராமரிக்கப்படுகின்றனவா..? என்பதை மட்டும்அவன் பார்த்துக் கொண்டான்.

மக்கள் வாழும் இடங்களில் அது எதுவாக இருந்தாலும் அங்கு பாடசாலைகள்தோன்றின. பகலில் பாடசாலையில் படிப்பு, பொழுது சாய்ந்தால் வீடுகளில் படிப்பு. இது அங்கு கட்டாயமாகப் போய் விட்டது.

''வீரமணி மாமாவருவான், நீ படிக்கயில்லை என்டு சொல்லிக் கொடுப்பன். அதற்கிடையில் போய்ப் படி'' வீடெங்கும் கேட்கும் இந்த வார்த்தைகள் வீரமணியின் காதுகளிலும் விழும். அவன் தனக்குள் சிரித்துக் கொள்வான்.

காலப்போக்கில் அந்த மக்கள் தங்கள் தாயகத்தின் விடிவு அவசியமானது என்பதை உணர்ந்து கொண்டார்கள். போராட்டத்தையும் போராளிகளையும் நேசிக்கக் கற்றுக் கொண்டார்கள். இந்த மண்ணின் விடுதலைக்கான போராட்ட நடவடிக்கைகளில் அவர்கள் பங்குபற்றத் தொடங்கினார்கள்.

1991 மாவீரர் நாள் நிகழ்ச்சி அங்கு உணர் பூர்வமாகக் கொண்டாடப்பட்டது. மிகவும் கடினமான இராணுவ நெருக்கடிக்குள்ளும் மக்கள் குடியிருந்த அனைத்து இடங்களிலும் அவர்கள் மாவீரர்களை நினைவு கொண்டார்கள்.

அங்கு ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு பாடசாலையிலும் மாவீரர் வாரத்தையும் மாவீரர் நாளையும் கொண்டாடுவதற்கு வீரமணி ஏற்பாடுகளைச் செய்தான்.

அந்தநாள் தான் இந்த மண்ணின் விடிவிற்காக தம்மையே ஈகம் செய்த மாவீரர்களை நினைவு கொண்ட அந்தநாள் தான் வீரமணி திருக்கோணமலை மண்ணில் நின்ற இறுதிநாள். மறுநாள், மூதூரிலிருந்து அவனை யாழ்ப்பாணம் வழியனுப்பி வைக்கும் போது இனித் திருகோணமலைக்கு வீரமணி வர மாட்டான் என்பதை யாராலுமே உணரமுடியவில்லை.

கட்டைக்காட்டிலிருந்து ஆனையிறவை நோக்கி முன்னேற முயன்று கொண்டிருந்த படைகளுடன் கடுமையான மோதலில் புலிகள் ஈடுபட்டிருந்தார்கள். அந்தப் போர்முனையில் வீரமணியும் நின்று சண்டையிட்டுக் கொண்டிருந்தான்.

கடுமையான சண்டை ஒவ்வொரு நாளும் நடந்தது. வீரமணி குறிபார்த்துச் சுடுவதில் வல்லவன். அன்றும் அப்படித்தான், அந்த வேலையைத்தான் அவன் செய்து கொண்டிருந்தான்.

அவனின் உடலில் ஒரு ரவை தைக்கும் வரைக்கும் அவன் குறிபார்த்துச் சுட்டுக் கொண்டே இருந்தான்.

இன்று மூதூரின் அந்த ஆதிக்குடிகளின் குடியிருப்புகளுக்கு நடுவே இரவில் நடந்தால் சிறுவர்களின் ஆனா, ஆவன்னா சத்தமும், ஒன்று இரண்டு மூன்று சத்தங்களும் கேட்கின்றன. அவர்கள் விழிக்கத் தொடங்கி விட்டார்கள்.

இப்போதெல்லாம், அந்த கரையோர கிராமங்களில் வீரமணி கட்டிக் கொடுத்த கிணறுகள் நீரைக்கொடுக்கின்றன. பயிர்கள் பசியை விரட்டுகின்றன. காடுகளில் அலைவதும் உப்பேரிகளில் தவழ்வதும் குறைந்துகொண்டு வருகின்றது.

''இம்முறை எங்களுக்கு கூடுதலான உதவி செய்யுங்க வீரமணி அண்ணை'' என கேட்டிருந்த அந்த கிராமத்து மக்கள் வீரமணி வருவான் இந்தமுறையும் உதவி செய்வான், தங்களைத் தூக்கிவிடுவான் என்ற நினைவில் நம்பிக்கையோடு காத்திருக்கிறார்கள். விரமணி தங்களிடம் வரமாட்டான் என்பதை அந்த ஆதிக்குடிகள் நம்பவே மாட்டார்கள்.

31-07-1992

# மேஜர்
# தாரணி



| | |
|---|---|
| பெற்றோர்: | கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்<br>பூமணி சுப்பிரமணியம் |
| இயற்பெயர்: | மதிவதனி |
| முகவரி: | அத்தாய், பூநகரி |
| தோற்றம்: | 20-02-1968 |
| கல்வி: | பூநகரி-அத்தாய் தமிழ்க்கலவன் பாடசாலை. 10 ஆம் வகுப்பு |
| உடன்பிறந்தோர்: | மகேஸ்வரி<br>மங்களேஸ்வரி<br>மதியழகி<br>மதிரஜனி |
| போராளியாய்: | 22-01-1985 |
| மாவீரராக தாயக மண்ணில்: | 22-01-1991 |

குறிப்பிடக்கூடிய
தாக்குதல்கள்: ★ அடம்பனில் சிறீலங்கா இராணுவத்தினருடனான மோதல் (12-10-1986)

★ யாழ். தொலைத் தொடர்பு நிலைய சிறீலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதல் (03-06-1987)

★ யாழ் கோட்டை முகாம் மீதான தாக்குதல் (1990)

விசேட திறமைகள்: விளையாட்டு, கலைத்துறைகளில் வல்லவர். வெடி மருந்தினைக் கையாள்வதில் வல்லவர்.

---

உப்புக்கஞ்சி என்றாலும், தன் முயற்சியால் வந்தது மேலல்லவா? அதே போலத்தான் நாமே போராடி எங்கள் விடுதலையை வென்றெடுக்க வேண்டும். வீரத்தை விலைக்கு வாங்கவும் முடியாது. இரவல் பெறவும் முடியாது.

★ ★ ★

எங்கள் இளைஞரிடம்இலட்சியம்-தியாகம்-வீரம்-மனவுறுதி ஆகிய வல்லமைகள் இருக்கின்றன. இவற்றை எந்தப் பீரங்கியாலும் உடைத்துவிட முடியாது. ஆதலால் நாம் வெல்வோம்,

-தலைவர் வே. பிரபாகரன்

எங்கள் தாரணியை எல்லோரும் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். இவள் சின்ன வயதிலேயே பெரிய பொறுப்பினைச் சுமந்து நின்றாள். எமது தேசம் விடுதலை பெறவேண்டுமென்று துடித்தவள். கூடவே சகல நிலைகளிலும் பெண்கள் முன்னேற்ற மடைய வேண்டும். சகல அடக்கு முறைகளையும் தகர்த் தெறிந்து எமது தேசத்தின் வாழ்வில் அவர்களும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்பதற்காக அயராது உழைத்தவள்.

இவள் வீரச்சாவு அடைந்து ஒருவருடத்துக்கு மேற்சென்றும் அவளைத் தெரிந்தவர்களுக்கு, அவளை நேசித்தவர்களுக்கு அவ ளின்மறைவு இன்றுதான் இந்தநிமிடந்தான் நடந்தது போன்ற ஏக் கம்- அந்த உணர்வு அவர்களுக்கே சொந்தமாகிப்போன ஒன்று.

அவள் எங்களுடன் இல்லை என்ற அந்த உணர்வு ஒவ் வொரு நிமிடமும் நெஞ்சைத் தாக்க, தாரணி இந்த நேரம் இல்லாமல் போய்விட்டாளே... என்றும், அவள் இருந்தால் இப் படி, இப்படித்தான் இருந்திருப்பாள் என்றும், எங்களுக்குச் சந் தோஷம், கவலை வருகின்ற நேரங்களில் எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கத்தான் எங்களால் முடிகின்றது.

அவளது இழப்பை மறக்க நினைத்தும் மறக்க முடியாமல் அவளது நினைவுகளுடன் ஒன்றிப்போய் அவளது கனவைச் சுமந்து கொண்டு அவளது பிள்ளைகள் இன்றும், என்றும்......

விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் முதலாவது பயிற்சி முகாமிலே இவள் இணைந்து பயிற்சி பெற்றாள். பயிற்சி முகாமிலே மிகவும் அமைதியான சுபாவத்தைக் கொண்டிருந்த தாரணி, எந்தக் கடினமான பயிற்சியையோ அன்றி வேலை யையோ செய்து முடிக்கக் கூடிய அளவுக்கு மனவுறுதி படைத் தவளாகவும் இருந்தாள்.

இந்தியமண்ணில் பயிற்சியை முடித்துக் கொண்டு வந்த பின் மகளிர் படையணியினர் முதன் முதல் பங்கு கொண்ட மன்னார்- அடம்பன் நேரடி மோதலில் மிகவும் திறமையாகச் செயற்பட்டாள். இச்சண்டையின் போது இவளது கையில் சிறிய காயமேற்பட்டது.

இதேபோன்று, இந்திய இராணுவம் எம்மண்ணில் காலடி வைக்கும் வரை சிறீலங்கா இராணுவத்துடன் நடைபெற்ற பல

சண்டைகளிலே தாரணி பங்குகொண்டு தன் ஆற்றலை வெளிப் படுத்தினாள்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் உருக்குலைந்து, இந்திய இரா ணுவத்துக் கெதிரான தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்ட போது உலகின் வல்லரசுடன் மோதி என்ன செய்ய முடியும் என்று பலர் திகைத்து நின்றபோது மிகவும் மனோவலிமையுடன் நின்று போரிட்டவள்.

இந்திய இராணுவத்துடன் குடாநாட்டுக்குள் நடந்த பல மோதல்களிலும், வன்னி, மணலாறு போன்ற இடங்களில் நடந்த பல மோதல்களிலும் இவள் பங்கு கொண்டிருந்தாள்.

மணலாற்றுக் காட்டுக்குள் இருக்கும் எந்த மரங்களுடன் பேசிப்பார்த்தாலும், அவை ஒவ்வொன்றும் தாரணியைப் பற் றிக் கதைகதையாகக் கூறும். ஒவ்வொரு நாளும் காட்டுக்குள் அவள் நடந்த தூரம் மிக அதிகம். இந்திய இராணுவத்தால் சுற்றி முற்றுகையிடப்பட்ட அந்தக் காட்டுக்குள் எங்கோ ஒரு மூலையிலிருந்து தங்களுக்குத் தேவையான பொருட்களைக் கொண்டு வருவதற்கு இவளும் இவளது தோழர்களும் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல.

இந்த நேரத்தில்தான் பெண்கள் துணிந்து இயங்க வேண் டும், அவர்கள் சுயமாகச் செயற்பட வேண்டும் என்று அனைத்து நிகழ்வுகளிலும் பெண்கள் தனித்துச் செயற்பட விடப்பட்ட பொழுது மிகவும் ஆர்வத்துடனும் சுறுசுறுப்புடனும் செயற்பட் டாள்.

இவளுக்குக் கொடுக்கப்பட்ட வேலைகள் எவ்வளவு கடி னமாக இருந்த பொழுதிலும் கூட அதைச் சிரித்துக் கொண்டே செய்து முடிப்பாள். அவளுடன் இருந்தவர்களையும் அவ்வாறே செய்யப் பழக்கினாள்.

இக்காலகட்டத்தில் புதிய பயிற்சி முகாம் ஆரம்பிக்கப் பட்ட போது இவள்தான் கூடுதலாகப் பிள்ளைகளைக் கூட்டிச் சென்று பொருட்களை எடுத்து வருவாள். இப்படித்தான் ஒரு நாள் இவள் பிள்ளைகளுடன் பொருட்கள் எடுத்து வந்து கொண்டிருந்த போது பெரிய யானை ஒன்று வழிமறித்தபடி நின்றது. உடனே அவள் துப்பாக்கியால் சுட்டு யானையைக் கலைத்து விட்டாள். தாரணி இப்படித்தான் என்ன பிரச்சினை

என்றாலும் யோசித்துக்கொண்டு நிற்காமல் உடனேயே துணிந்து முடிவெடுத்து விடுவாள்.

காட்டுக்குள் இருந்தபோது மிகவும் திறமையாகக் கண்ணி வெடி வைக்கக்கூடிய தாரணி, எந்தக் கடினமான பயிற்சியையும் வேலையையும் செய்யக்கூடிய தாரணி, திறமையாகச் சண்டை பிடிக்கக் கூடிய தாரணி, இப்படித்தான் அவளை எல்லோருக்கும் தெரியும்.

மிகவும் அமைதியாக இருந்த தாரணி கலகலப்பானவளாக மாறியது இந்தக் காட்டுக்குள் தான். அவள் இருக்கும் இடத்தில் எந்த நேரமும் சிரிப்புச் சத்தம் கேட்கும். என்ன கவலையுடன் இருந்தாலும் அவர்களைத் தனது கதையால் சிரிக்க வைப்பாள். இதனால் தாரணியின் தோழிகள் எப்போதும் அவளைச் செல்லமாக 'மாமி' என்று கூப்பிட்டார்கள். அவளுடன் அந்தக் காட்டில் இருக்காதவர்களுக்குப் பெரிய ஆச்சரியம் 'தாரணியா இப்படிக் கதைக்கின்றாள், பகிடி விடுகிறாள்' என்று.

அவளுடன் நெருக்கமாகப் பழகாதவர்கள். அவள் தலையைச் சிலுப்பிக்கொண்டு கதைக்கும் விதத்தைப் பார்த்து 'சரியான முரடு' என்று சொல்வார்கள். அவள் கதைப்பதைப் பார்த்தால் முரடுமாதிரித்தான் இருக்கும். அந்த முரட்டுத்தனமான கதைக்குப் பின்னால் இருக்கும் அவளது ஈரமான இதயத்தை அவளுடன் நெருங்கிப் பழகியவர்களுக்கு மட்டுமே தெரியும்.

எந்த இடத்திலும் சரியானதைச் சரியென்று வாதிடும் துணிவு மிக்கவள். ஏதாவது வேலை என்றால் 'முடியும்' அல்லது 'முடியாது' என்று மட்டுமே சொல்லுவாள். 'செய்து பார்ப்போம்' என்று ஒருபோதும் சொன்னதே கிடையாது. அதனால்தான் அவளால் பல இடங்களில் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் உறுதியாக நிற்க முடிந்தது.

இந்திய இராணுவம் எமது மண்ணை விட்டுப்போன பின் மீண்டும் இலங்கை இராணுவத்துடனான சண்டை தொடங்கிய போது பல தாக்குதல்களிலும் பங்கு கொண்டாள்.

கோட்டை இராணுவமுகாம் எமது முற்றுகையில் இருந்த போதும், பின்னர் பலாலியைச் சுற்றியுள்ள மகளிர் படைபணியின் காவலரண்களுக்கும் இவள் பொறுப்பாக இருந்தாள்.

பலாலியைச் சுற்றியுள்ள ஒவ்வொரு குச்சொழுங்கைகளுக்கும் இவளைத் தெரியும். இவள் இங்கு இடையில் எழும்பாமல் தூங்கிய இரவுகள் விரல் விட்டு எண்ணலாம். இரவு எந்த நேரத்திலும் பிள்ளைகளின் நிலைகளுக்கு முன்னால் வெடிச்சத்தம் கேட்டால் இவள் அடுத்த நிமிடம் அந்த இடத்தில் நிற்பாள்.

நாங்கள் தனியாக நின்று அடிபட வேண்டும் என்ற கனவைச் சுமந்துகொண்டு பலாலி மண்ணைச் சுற்றிச் சுற்றித் திரிந்தவள். அந்த நினைவுடனேயே அந்த மண்ணிலேயே விதையாகிப் போனாள்.

தான் உயிருடன் இருக்கும் வரை பெண் போராளிகள் நிற்கும் பக்கத்தால் இராணுவம் வெளியேறினால், ஆண் போராளிகளை அந்த இடத்துக்கு வந்து அடிபட விடமாட்டாள். நாங்கள் தனியாகத்தான் நின்று அடிபட வேண்டும் என்று சொல்லிச் சொல்லியே பெண் போராளிகளை வளர்த்தவள். இன்று அவர்கள் தனித்து நின்று அடிபடும்போது அவர்களுடைய உணர்வுகளுடன் சேர்ந்து நிற்கிறாள்.

அந்தநாள் எமது நினைவுகளில் என்றுமே மறக்க முடியாமல் போய்விட்டது. 1991 ஜனவரி 23 ஆம் திகதி அதிகாலை 3.00 மணிக்குச் செய்தி வருகிறது. 'தாரணியக்காவுக்குக் காயம் வைத்தியசாலைக்கு அனுப்பியிருக்கிறோம்' என்று. 'தாரணி காய்ச்சல், தலையிடியென்றால் கூடத் தாங்கமாட்டாள். காயத்தை என்னெண்டு தாங்கப்போறாளோ?' இப்படித்தான் எங்களால் நினைக்க முடிந்தது. எங்களின் தாரணி எங்களை விட்டு இவ்வளவு வேகமாகப் போவாள் என்று யாருமே நினைக்கவில்லை.

வைத்தியசாலையில் ஒவ்வொரு பகுதியாகப்போய் 'தாரணியை எங்கை விட்டிருக்குது, தாரணியை எங்கை விட்டிருக்குது'' என்று கேட்டால் ஒருவருக்குமே தெரியவில்லை. அப்பொழுதுதான் மெல்ல மெல்ல உண்மை தெரியத் தொடங்கியது, எங்கள் தாரணிக்கு நாங்கள் விரும்பாத, நாங்கள் நினைக்காத ஒன்று நடந்து விட்டது என்று.

அவளைப் பற்றி நாங்கள் நிறைய நம்பிக்கைகளை வைத்திருந்தோம். எல்லாமே ஒரு கொஞ்ச நேரத்துக்குள் கனவாகப் போனதை யாராலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அவர் வீரச்சாவடைந்த செய்தி முதலில் அவளது பிள்ளைகளுக்குத் தெரியாது. 'தாரணியக்காவுக்குச் சின்னக்காயமாம். அவ எங்களை விட்டுட்டு அங்கை நிற்கமாட்டா. எப்பிடியும்ரெண்டு, மூண்டு நாளுக்குள்ள திரும்பி வந்து விடுவா' என்று தான் கூறிக்கொண்டு இருந்தார்கள். உங்கடை தாரணியக்கா உங்கடை இடத்துக்கு வரேலாத அளவு தூரத்துக்குப் போய்விட்டா' என்று பின்னேரம் தான் மெதுமெதுவாகச் சொல்லப்பட்டது. இப்பொழுதும் அவளது பிள்ளைகளது அழுகையொலி, மறக்க முடியாது காதுக்குள் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

அவர்களால் வளர்க்கப்பட்ட அவளது பிள்ளைகள் இன்றும் அவளது பெயரைச் சொல்லிக் கொண்டு ஒவ்வொரு சண்டைக்கும் போவதற்கு ஆயத்தப் படுத்தும்போதும், சண்டையின் போதும் ''எங்கட தாரணியக்கா இப்ப உயிரோட இருந்திருந்தால்'' இதற்குப்பிறகு அவர்கள் வாயால் எதுவும் சொல்வதில்லை. ஏனென்றால் அவர்கள் சொல்ல வருவது அவர்களது முகத்திலும் பெருமூச்சிலும் நிறைந்திருக்கும்.

''நாங்கள் தனிய நிண்டு அடிபட வேணும்'' என்ற இவளது கனவை எங்கள் செயல்களினூடாக நனவாக்கி வருகின்றோம்

*11-9-1992*

---

ஒரு விடுதலை வீரனின் சாவு ஒரு சாதாரண சாவல்ல! அந்தச்சாவு ஒரு சரித்திர நிகழ்வு; ஒரு உன்னதமான இலட்சியம் உயிர்பெறும் அற்புதமான நிகழ்வு.

★ ★ ★

இன்று எமது இளைஞர் செய்யும் தியாகங்கள் எங்கள் எதிர்கால மக்களுக்கு ஒளியூட்டும் வழிகாட்டும்.

★ ★ ★

எமது சாவிலே புதிய புலிகள் பிறந்து எமது தமிழீழத் தாயகத்தின் விடுதலை விளக்கை ஏற்றி வைப்பார்கள்.

—தலைவர் வே. பிரபாகரன்



# லெப். மணிமாறன்

பெற்றோர்: ஆத்மநாதசர்மா வைத்தியநாதசர்மா
சொர்ணாம்மாள் வைத்தியநாதசர்மா

இயற்பெயர்: ரமணானந்தசர்மா

முகவரி: ஆசாரியார் ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, யாழ்ப்பாணம்

தோற்றம்: 12-04.1972

கல்வி: பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி
தெல்லிப்பழை மகா ஜனாக்கல்லூரி.
யாழ் இந்துக்கல்லூரி
க. பொ. த. (உயர்தரம்)

உடன் பிறந்தோர்: கோமதி
ஆத்மானந்தசர்மா

போராளியாய்: 19-08-1991

மாவீரனாக தாயகமண்ணில்: 30-06-1992

குறிப்பிடத்தக்க தாக்குதல்: தெல்லிப்பழையில் சிறீலங்கா இராணு வத்தினருடனான மோதல்

விசேடதிறமை: R. P. G. யினால் குறிபார்த்து தாக்கு வதில் வல்லவர், மிருதங்கம் பயின்றவர்

மணிமாறன்; இன்று நீ எங்களுடன் இல்லை. இதை எப்படி நாம் ஜீரணிப்போம்? ஆயினும் ஜீரணிக்கின்றோம்.

ஆறடி உயரமும், உறுதிமிகு கட்டுடலும், சிவப்பா மஞ்சளா எனக்கூறமுடியாத உன்உடல் வர்ணமும், ஊடுருவி யாரையும் அளந்து விடும் உன் விழிகளும் சினிமா கதாநாயகன் போல் எம்மத்தியில் நீ உலாவந்த நினைவுகளும் எம் விழிகளில் நீரை வரவழைக்கின்றனவே! சர்மா என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பட்ட நீ இன்று எம்மிடையே இல்லை!

ஆம்! பல தளபதிகளையும், தன்னிகரில்லாத போராளிகளையும் ஈழவிடுதலைப் போருக்கு அர்ப்பணித்த யாழ் இந்து அன்னை தன்னில் பூத்த சர்மா என்ற இன்னொரு மலரை இந்த மண்ணிற்காக ஈந்து விட்டாள்.

இவன் க. பொ. த. (சாதாரண) பரீட்சை நடைபெறுவதற்குச் சில நாட்களுக்கு முன்னர் தேசவிரோதக் கும்பல்களால் கைது செய்யப்பட்டான். காரணம் லெப். ரிதாவின் இறுதிச் சடங்கில் சாரணியச் சீருடையில் கலந்து கொண்டது தான். பரீட்சை ஆரம்பமாகும் தினத்தன்று இவன் விடுதலை செய்யப்பட்டான். இவன் நிலை கண்டு இவன் எப்படிப்பரீட்சை எழுதப்போகிறான் என நாம் எண்ணினோம். முகம் வீங்கியிருக்க, சித்திரைவதையினால் காயங்கள் சிவந்திருக்க எவ்வித சலனமுமின்றி பரீட்சையை எழுதி முடித்து எம்மையெல்லாம் ஆச்சரியத்தில் ஆழ்த்தினான். ஒரு பாடத்தில் அதி விசேட சித்தியும் ஏனைய பாடங்களில் விசேட சித்தியும்பெற்று தனது உடல், உள உறுதியையும் திறமையையும் எமக்குப் புரியவைத்தான்.

இலங்கை அரசு சிங்கள மாணவர் மத்தியில் இனத்துவேசத்தை வளர்க்கும் முறையாகச் செயற்பட்டது. அதில் ஒரு முறையாக மாணவர்களுக்கென கொடுக்கப்பட்ட மதிய போசனத்திற்குரிய பணத்தை அன்பளிப்பு என்னும் போர்வையில் மீளப்பெற்று பாதுகாப்பு நிதியில் சேர்த்துக்கொண்டது. இதன் விளைவை உணர்ந்து தனது கல்லூரி மாணவர்களுக்கு நிலைமையை விளக்கிக் கூறினான். இதன் விளைவாக பல ஆயிரம் ரூபா மதிய போசனத்திற்குரிய பணத்தைச்சேகரித்து அகதிகளாகவும், அனாதைகளாகவும் அல்லற்படும் மாணவர்களுக்குப் பகிர்ந்தளிக்க வழி செய்தான். மாணவர்கள் நடாத்திய ஆர்ப்

பாட்டப் பேரணிகளுக்கெல்லாம் தனது கல்லூரி மாணவர்களை தானே அழைத்துச் செல்வான்.

பல தடவை போராளிகளுக்காக இரத்த தானம் செய்திருந்த இவன் தனது சகமாணவர்களுக்கு, இரத்த தானம் செய்ய வேண்டியதன் அவசியம் பற்றி விளக்கிக்கூறி ஏனையோரையும் அப்பணியில் ஈடுபட வைத்தான்.

வரலாற்றுச் சிறப்பு மிகுந்த ஆனையிறவுச் சமரின்போது களம் சென்று சேவை செய்யத்துடித்த இவனுக்கு வைத்திய சாலையில் காயப்பட்ட போராளிகளைப் பராமரிக்கும் பாரிய கடமை கிடைத்தது. அதற்காகக் கல்லூரி மாணவர்களை ஒரு ஒழுங்கு முறையில் ஒவ்வொரு நாளும் அனுப்பி வைத்தான். பல நாட்கள் இரவில் கண் விழித்து பரீட்சைக்குப் படிக்க வேண்டியதையும் மறந்து தனது கடமையைத் தொடர்ந்தான். அப்பொழுதுதான் தானும் ஒரு போராளியாக வேண்டும் எனத் தீர்மானித்துக் கொண்டான்.

இந்நாளில்தான் யாழ் நகரிலுள்ள சகல உயர்தர மாணவர்களுக்குமான ஒரு போர்க்காலக் கருத்தரங்கைத் தலைமையேற்று நடாத்தினான். விடுதலைப் புலிகள் இயக்கப்பிரமுகர்கள் பலரும், ஆயிரக்கணக்கான மாணவ மாணவியரும் கலந்து கொண்ட இக்கருத்தரங்கில் தலைமையுரை நிகழ்த்தும்போது 'சிந்தித்தது போதும் செயல்பட வாருங்கள்'' என அறை கூவல் விடுத்தான். எல்லோருக்கும் முன் மாதிரியாக இவன் சொல்வதைச் செயலில் காட்டுவான். அதனை நிரூபிக்கும் வகையில் தன் மாணவ நண்பர்கள் சிலருடன் வரிப்புலி சீருடை அணிய புலிப்படையில் தன்னை இணைத்துக்கொண்டான்.

அப்பொழுது இவன் பயிற்சிப் பாசறையில் புடம்போடப் பட்டுக் கொண்டிருந்தான். மிகவும் கடினமான பயிற்சிகளையெல்லாம் எது வித சலனமும் இல்லாமல் செய்து முடிப்பான். பாசறைத் தீ வளர்த்துப் பாடல்கள் படித்தும் ,,தாளலய'' நாடகங்கள் நடித்தும் சகபோராளிகளை மகிழ்விப்பான்.

இவ்வேளையில்தான் ஒரு நாள் எங்கள் எல்லோரது பிரத்தியேக விபரங்கள் எடுக்கப்பட்டது. அப்பொழுது விபரங்கள் எடுத்துக் கொண்டிருந்த போராளி இவனைப் பார்த்து ''காதல் உண்டா?'' எனக் கேட்க இவனும் ''ஆம்'' எனப்பதிலளித்தான்

அதைப் பற்றி விபரம் தரும்படி கேட்கப்பட்டபோது ''எத்தனை பேர் எண்டு விபரம் தாறது'' எண்டு இவன் கேட்க அந்தப் போராளி திகைப்படைந்து இவனைப் பார்த்தான். அந்தப் போராளியைப்பார்த்துச் சிரித்தபடியே ''தமிழீழ மக்கள் அனைவரையுமே நான் காதலிக்கிறேன்'' எனப்பதிலளித்தான்.

ஒரு நாள் பயிற்சி முடிந்து நாம் ஒய்வாக இருக்கும்போது கூறினான்; ''மச்சான் நீங்கள் யாரும் சாகிறதற்கு முன்னால் நான் சாகவேணும். ஏனெண்டால் நீங்கள் யாரும் இறந்தா அதை என்னால் தாங்கிக்கொண்டு இருக்கஏலாது'' ஆம்! இவனின் அந்த வசனங்கள் எமது இதயத்தைப் பிழிந்த வண்ணம் உள்ளது ஏனோ! காலம் இவன் விரும்பியபடியே இவனை அணைத்துக் கொண்டது.

நாம் இராணுவ அணிநடைக்கான பயிற்சி எடுத்துக்கொண்டிருந்தோம். அதற்கான 'பாண்ட்' வாத்தியங்கள் பழக வேண்டியிருந்தது. குறுகிய கால இடைவெளியில் 'எக்கோடியன்' இசைக் கருவியை இசைக்கப் பழகியிருந்தான். கடந்த ஆண்டு நடைபெற்ற மாவீரர் தின நிகழ்ச்சிகளில் ''புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்'' எனும் பாடலுடன் இராணுவ அணிநடைப் பிரிவு மாவீரர்களுக்குத் தனது இராணுவ மரியாதையைச் செலுத்தியது. இது தமிழர்களின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நிகழ்ச்சியாகும். ஏனெனில் தமிழில் கட்டளை ஏற்று அணிவகுத்து நின்ற இந்த இராணுவப் பிரிவு தற்கால, எதிர்கால தமிழீழ இராணுவ பலத்தையும், அதன் உறுதியையும் உலகிற்கு உணர்த்தியது. இந்த அணிநடை சிறப்பாக அமைவதற்கு மணிமாறன் பலருக்கு அணிநடை பழக்கினான் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்காலகட்டத்தில் இந்துக்கல்லூரியில் நடைபெறும் மாவீரர் தின நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுவிக்கப் பட்டிருந்தது. அதை ஏற்று நாம் அங்கு சென்றோம். இவன் மாணவ சீருடையில் நின்று உரையாற்றிய அதே அரங்கத்தில் மீண்டும் வரிப்புலி சீருடையில் நின்று உரையாற்றினான். சொன்னதை செயலில் காட்டியவன் அல்லவா மணிமாறன். தொடர்ந்து ஒரு வகுப்பறையில் எமக்குத் தேனீர் விருந்தளிக்கப் பட்டது. அவ்வகுப்பறையின் சுவரில் இவன் பெயரும் அதைத் தொடர்ந்து சில மாணவர்களின் பெயரும் காணப்பட்டன. ஆம்! இவர்கள் தம்மை இயக்கத்துடன் இணைத்துக்கொள்ளும் செய்தியை தெரியப்படுத்தும் கடிதங்களை பெற்றோர்களுக்கும்,

நண்பர்களுக்கும் இவ்வறையில் வைத்தே எழுதினார்கள். இவர்களின் பெயர்களைத்தான் அச்சுவர்கள் கூறின. இப்பொழுது அவை எமக்குப் புதிய அர்த்தமொன்றை புகட்டுகின்றன. அப்பெயர்ப்பட்டியல் நீளத்தான் போகின்றது. ஆம்! இது எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுதுதான் ''காஸ்ட்ரோ'' வீரமரணச் செய்தி வெளிவந்தது.

திடீரென்று செய்தி வருகின்றது! புல்லாவெளிப்பக்கமாக வெளியேற முயன்ற இராணுவத்துடன் சமர் மூண்டு விட்டதாக யாழ் மாவட்ட விசேட அதிரடிப்படைப்பிரிவில் இருந்த மணிமாறனின் படைப்பிரிவு ஒன்று களம் நோக்கி விரைகின்றது. அங்கு நின்ற பதினைந்து பேர் கொண்ட குழுவொன்றின் துணைத் தலைவனாக இருந்தான். அக்களத்தில் தான் இவனது திறமைகள் பூரணமாக வெளிவருகின்றது. இருபதிற்கு மேற்பட்ட இராணுவத்தினரைப் பலிகொண்ட அச்சண்டையில் பதினாறு இராணுவத்தினரின் உடல்களும், பல நவீனரக ஆயுதங்களும் எம்மால் கைப்பற்றப்பட்டிருந்தன. அவ்வேளை இவன் காட்டிய வீரமும் விவேகமும் எம்மைப்பிரமிக்க வைத்தன. அகோரக் குண்டுவீச்சு, எறிகணை வீச்சுகளின் மத்தியில் ஒரு கையில் இராணுவத்தினரின் உடலை இழுத்தபடியும், மறுகையில் தனது துப்பாக்கியை ஏந்திய படியும் நிலையெடுத்து, நிலையெடுத்து எமது அரண் நோக்கி ஓடிவந்த வேகமும், லாவகமும் கண்டு நாங்கள் வியந்தோம்.

இவ்வேளை இலங்கை இராணுவம் சீனாவிடம் இருந்து கொள்வனவு செய்த T-56, T-85 ரக நவீன டாங்கிகளைக் கொண்டு யாழ் மாவட்டம் மீது பாரிய தாக்குதல் ஒன்றைத் தொடங்கத்திட்டமிட்டது. இதற்காக அமைக்கப்பட்ட புலிகளின் விசேட டாங்கி எதிர்ப்புப்படையில் இவன் சேர்த்துக்கொள்ளப்பட்டான். அப்பொழுது பெருமைப்பட்டோமா அல்லது பொறாமைப்பட்டோமா எனக்கூறமுடியாத ஒரு உணர்விற்கு உட்பட்டிருந்தோம்.

அப்போது ஒரு சகபோராளி கூறினான்: ''ஹெவிவெப்பன்ஸ்காரங்கள்தான் முதலில் மண்டையைப் போடுவான்கள் நீ கவனம்'' என்று. அப்பொழுது இவனது முகத்தில் படர்ந்த புன்முறுவலை நினைக்கும் பொழுது உடலில் மின்சாரம் பாய்வது போன்ற உணர்வுதான் ஏற்படுகின்றது. அப்பொழுது இவன் கூறினான்: ''என்னால மச்சான் R.P.G. யையும் என்னையும் காப்பாத்த ஏலும்'' என்று.

விடுதலைப் புலிகளின் ,களத்தில் நின்று வேங்கைகள், ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு நிகழ்ச்சியின் போது தனது பெற்றோரைச் சந்தித்தான். அப்போது இவனது தாய் வீட்டிற்கு வரும்படி அழைத்தார். அதற்கு இவன் ''எல்லா அம்மாமாரும் இப்படியே கூப்பிட்டால் பின்னால ஆமிதான் வந்து நிற்பான்'' என்று கூறினான். அதற்கு இவன் அன்னை ''உன்னை இயக்கத்தை விட்டு வரச் சொல்லேல்லை! நீ வரமாட்டாய் எண்டும் தெரியும் எதுக்கும் ரண்டொரு நாள் வந்து நின்று விட்டுப்போ'' என்று கூறினார், இப்படிக் கதைத்துக் கொண்டிருக்கும் போது மாவீரர்களை மாவீரர் துயிலும் இல்லங்களில் அடக்கம் செய்வது பற்றிய பேச்சு எழுந்தது. அப்போது ''என்னம்மா யோசிக்கிறீர்கள்!? எரிக்கும் மரபில் வந்த எங்களை எப்பிடிப்புதைப்பது எண்டோ?'' அந்தப் பிரச்சினை உங்களுக்கு வராது. ஏனென்டால் நான் கரும்புலிகள் மாதிரித்தான் சாவன்'' - ஆம்! காலன் இவன் கூறியபடியே கவர்ந்து சென்று விட்டான்.

PUBLIC LIBRARY JAFFNA.

''ஒப்பரேசன் சண்டமாருதம்'' என்னும் இராணுவ நடவடிக்கை மூலம் தெல்லிப்பழைப் பக்கமாக இராணுவம் முன்னேறத் தொடங்கியது. வழமை போலவே பாரிய குண்டு வீச்சுக்களுடனும் எறிகணை வீச்சுக்களுடனும் முன்னேறும் இராணுவத்திற்கு T-85 ரக டாங்கி பெரும் துணையாக இருந்தது. இராணுவத்தின் முன்னேற்றம் முறியடிக்கப்பட வேண்டுமானால் அந்த டாங்கிகள் தகர்க்கப்பட வேண்டும் அல்லது செயலிழக்கப்பட வேண்டும். இவ்வேளை இவனுக்கு அந்த டாங்கியைத் தகர்க்கும்படி கட்டளை பிறப்பிக்கப்படுகின்றது.

இவன் தான் டாங்கி எதிர்ப்புப் பிரிவிற்குத் தலைமை தாங்கி வந்திருந்தான். அந்த டாங்கியைத் தாக்குவது அவ்வளவு இலகுவானதல்ல; தலையைத் தூக்கினால் தலை உனக்குச் சொந்தமல்ல என்ற நிலை. சுடுகுழல் இன்னும் திரும்பினால் அது இவன் பக்கம் குண்டுமாரி பொழியும் நிலை. ''கரணம் தப்பினால் மரணம்''என்ற சூழ்நிலை. உடனே வில்லில் இருந்து புறப்படும் அம்புபோல் இரையை நோக்கிப் பாயும் வேங்கை போல் எழுந்து ஓடிச்சென்று அந்த டாங்கியின் முன் நிலையெடுத்துத் தனது R. P. G இன் முதலாவது உந்துகணையைச் செலுத்தினான் - குறி இம்மியும் பிசகாமல் டாங்கியில் பட்டு வெடிக்கின்றது. ஆயினும் டாங்கி முற்றாகச் சேதம் அடையவில்லை. உடனே தனது நிலைகளை மாற்றிய வண்ணம் அடுத்

தடுத்து இரண்டு உந்து கணைகளையும் செலுத்தி அந்த டாங்கியை நிர்மூலமாக்கினான். அத்துடன் இராணுவத்தின் முன்னேற்றம் தடைப்படுகின்றது. இவன் வெற்றி வீரனாகவெளிவருகின்றான். அன்று தளபதிகள் தொடக்கம் சாதாரண போராளிகள் வரை இவனுடைய பெயர் அடிபடுகின்றது.

மீண்டும் கட்டைக்காடு, புல்லாவெளிப்பக்கமாக ''ஒப்பரேசன் பலவேகய 11'' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படுகின்றது. இராணுவத்தளக்கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த நடவடிக்கை முறியடிக்கப்பட வேண்டியதொன்று. மீண்டும் ''மணிமாறன்'' களத்தில் இறங்கினான். ஆனால் களத்தில் குண்டடிபட்டு விழுப்புண் ஏற்று களத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்படுகின்றான். இரத்தப்பெருக்கு நிறுத்தப்பட்டு ஓய்வெடுக்கும்படி கூறப்படுகின்றது. ஆனால் இவனோ ''எனக்கு ஓய்வு தமிழீழம் கிடைத்த பின்னர் தான்'' என்று கூறி விடாப்பிடியாக மீண்டும் களம் நோக்கி விரைகின்றான். ஆம்! நவீன டாங்கிகளைத்தகர்த்த இவன் 30-06-1992 அன்று ''ஈழ மண்ணிற்கு உரமானான்'' ''கட்டைக்காற்றில் வீசும் காற்றில் கரைந்தான்''

மாவீரர் பட்டியலில் இணைந்தான்.
என்நெஞ்சமதில் நிலைத்தான்.
நண்பனே!
உன் ஆயுதம்
எம் கரத்தில்!
உன் உறுதி
எம் மனதில்!
உன் உதிரம்
புதிய புலிகளில்!
உன் சுவடுகளில்
எம் பாதங்கள்!
இலக்குத் தெரிகின்றது
பயணம் தொடர்கிறது!

(24-7-1992)



# மேஜர் ஜோன்சன்

| | |
|---|---|
| தந்தை பெயர்: | இராசா |
| இயற்பெயர்: | இராசேஸ்வரன் |
| முகவரி: | பெரியகடை, திருகோணமலை |
| தோற்றம்: | 04 - 12 - 1960 |
| கல்வி: | 9 ஆம் வகுப்பு |
| போராளியாய்: | 06 - 10 - 1984 |
| மாவீரனாக தாயக மண்ணில்: | 13 - 02 - 1991 |
| குறிப்பிடக்கூடிய தாக்குதல்கள்: | ★ கொக்காவில் சிறீலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு (11 - 07 - 1990) |
| | ★ மாங்குளம் சிறீலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு (22 - 11 - 1990) |
| விசேட தகமைகள்: | வன்னிப்பிராந்திய நடமாடும் தாக்குதல் பிரிவின் பொறுப்பாளராக செயற்பட்டவர் (1991) |

இந்தியாவில் கைது செய்யப்பட்டு தமிழீழத்தின் வடகரை யில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளைப் பார்த்த இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் ''இந்த நிலையிலும் உங்களால் எப்படி சந்தோஷமாக இருக்க முடிகிறது?'' என்று கேட்டார். அதற்கு ஒரு போராளி ''அது தான் விடுதலைப் புலிகளின்ரை தனித்துவம். நாங்கள் சாகேக்கை யும் சிரித்துக்கொண்டுதான் சாவம்'' என்றான். திருமலை மாவட்டத்தைப்பிறப்பிடமாகக் கொண்ட ஜோன்சனின் இயல் பும் அதுதான். எந்தமாதிரியான சூழ்நிலை இருந்தாலும் இவனது அந்தக் கலகலப்பான சுபாவம் மட்டும் மாறுவதில்லை. இன்று இவனை நேசித்த முல்லைத்தீவு மக்களிடம் இவனது பெயரைக் குறிப்பிட்டால் அவர்களது கலகலப்பு ஓய்ந்துவிடும். கண்கள் குளமாகிவிடும். அந்தளவுக்கு இவன் முல்லைத்தீவுவாழ் மக்களு டன் இரண்டறக்கலந்தவன்.

தமிழீழ விடுதலைப் போராட்ட காலத்தில் நெருக்கடிகள் மிகுந்த காலகட்டம் இந்திய இராணுவம் எமது மண்ணில் கால் பதித்திருந்த காலமாகும். அக்காலகட்டத்தில் முல்லைத்தீவின் மக்களினதும், காடுகளினதும் சிறகுகளால்தான் பெரும்பாலான போராளிகள் காப்பாற்றப்பட்டனர். முல்லைத்தீவு மக்களை போராட்டத்தோடு இணைத்ததில் கணிசமான பங்கு ஜோன்ச னுக்கும் உண்டு. இராசா இராஜேஸ்வரன் என்ற இயற்பெய ரைக் கொண்ட இவன் முல்லைத்தீவு மாவட்டத்தினுள் காலடி வைத்ததும் தனது சுறுசுறுப்பான செயல்களாலும் கலகலப்பான சுபாவத்தாலும் எல்லாப் போராளிகளையும் கவர்ந்தான்.

சிறீலங்கா ஆக்கிரமிப்பாளர்களின் கொடுமைகளினால் தமது இருப்பிடங்களைவிட்டு இடம்பெயர்ந்து வந்த திருமலை மக்களின் நலன்களைக் கவனிக்கும் பொறுப்பு இவனிடம் கொடுக் கப்பட்டது. அந்தக்கடமைகளை சிறப்பாகவே செய்தான் ஜோன் சன்.

குடிசைகள் போடுவதற்கு கிடுகு வேண்டுமா, காட்டுக்குச் சென்று தடி வெட்ட வேண்டுமா, அந்தக் குழந்தைகளின் படிப் பிற்கான ஏற்பாடுகள் செய்யவேண்டுமா, அவர்களுக்கான வைத் திய வசதிகள் செய்யவேண்டுமா இப்படியாக அவர்களுக்குவேண் டிய அனைத்து ஏற்பாடுகளும் இவனே கவனிக்க வேண்டும். குறிப்பிட்ட வேலை இவன் நினைப்பது போல நடந்தால்தான் இவனுக்கும் திருப்தி, அதற்காக எந்தச் சிரமத்தையும் தாங்கிக்

கொள்ளத் தயாராக இருந்தான் இவன். இயக்கத்தின் மருத்துவப் பிரிவில் இவன் பயிற்சி பெற்றிருந்தமையால் சமகத்தில் குட்டி மருத்துவனாகவும் கடமையாற்ற வேண்டியிருந்தது.

மக்களோடு இவன் பழகும் தன்மையைக்கண்ட முல்லைத்தீவு மாவட்டப்பொறுப்பாளர் இவனை ஒரு பிரதேசப்பொறுப்பாளனாக நியமித்தார். செம்மலைப் பகுதியில் இவன் பிரதேசப் பொறுப்பாளனானான். மக்களை அரசியல் மயப்படுத்துவதிலும் அவர்களில் ஒருவனாக வாழ்ந்து அவர்களை வென்றெடுப்பதிலும் இவன் தனிமுத்திரை பதித்தான். இந்திய இராணுவத்தின் வருகையின் பின் ஐந்து கோரிக்கையை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் திலீபன் உண்ணாவிரதம் இருந்தபோது முல்லைத்தீவில் திருச்செல்வம் உண்ணாவிரதம் இருந்தான். இந்த உண்ணாவிரத நிகழ்வின் ஏற்பாடுகளை இவனே முன்னின்று கவனித்தான். அக்காலகட்டம் இவனது நிர்வகிக்கும் திறனை வெளிக்காட்டியது.

இந்திய வல்லரசு எம்மக்கள் மீது வலிந்து ஒரு போரைத் திணித்தபோது அச்சவாலை இன்முகத்துடன் ஏற்றுக்கொண்டான் இவன். அது இவனது வாழ்வில் மறக்கமுடியாத காலகட்டம். ஏனெனில் இவன் ஒரு மங்கையிடம் தன் மனதைப் பறிகொடுத்திருந்தான். இருவரும் தமது எதிர்கால வாழ்வுபற்றி ஆயிரம் மனக்கோட்டைகள் கட்டியிருந்தனர். ஆனால் அவர்களது கற்பனைகள் போராட்டத்தை விட்டு வெளியே இழுக்கவில்லை. போராட்டத்தை நேசிக்கும் தன்மைதான் இவர்களது அன்புக்கும் பாலமாயிற்று! இவனை இராசா இராசேஸ்வரனாகப் பார்க்காமல் ஜோன்சனாக நேசித்தமையால் போராட்டகளத்திற்கு செல்ல விடை கொடுத்தாள் அவள். இருவருக்கும் தெரியும் எந்தநேரமும் இவன் உயிரை ஏதாவதொரு ரவை பறிக்கலாமென்று. ஆனாலும் போராட்டம்பற்றி நம்பிக்கைகளை வளர்த்துக்கொண்டனர் இவர்கள்.

இந்தியப் போரின்பின் இருவரும் சந்திக்கும் வாய்ப்புகள் மிகக் குறைவாகவே இருந்தன. கோப்பாய் வெளிகளிலும் வன்னிக் காடுகளிலும் இந்திய இராணுவத்தினருடன் துப்பாக்கி மொழியில் பேசிக் கொண்டான் இவன். இந்தியப்படைகளிடம் இலட்சம் என்ற இலக்கம் இருந்தது. புலிகளின் நெஞ்சிலோ இலட்சியம் என்ற பதக்கம் இருந்தது. அது மக்கள் பலத்தைப் பெற்றுக் கொடுக்கவே இந்திய இராணுவம் இங்கு நிலைக்க முடியாமல் எம் மண்ணை விட்டு வெளியேறியது.

சில நாள் ஓய்வுக்குப் பின் மீண்டும் போர்தொடங்கியது. இந்திய இராணுவத்தினருடனான போரில் பயிற்சி முகாமில் இவன் ஆற்றிய பங்கு, களத்தில் இவன் காட்டிய தீரம் என்பன இவனை இப்போரில் ஓர் அணித்தலைவனாக மாற்றியிருந்தது. வன்னிப் பகுதியில் சிறீலங்கா இராணுவ முகாம்களின் தொகை குறைக்கப்பட்டமைக்கு இவனது துப்பாக்கியும் கணிசமான பங் காற்றியிருக்கிறது. கொக்காவில், மாங்குளம் என்பன இவ்வாறு இவனது பங்களிப்புக்கு சாட்சி கூறும் விடுதலைப் பிரதேசங்கள். மாங்குளம் முகாம் தகர்ப்பில் போர்க் கரும்புலியாகி வீரமரண மடைந்ததைத் தொடர்ந்து போர்க்கின் வன்னி நடமாடும் அதிரடிக்குழுவிற்கு இவன் தலைமை தாங்கினான்.

13-02-91 அன்று வன்னி நடமாடும் குழு தனது அடுத்த தலைவனை இழந்தது. முல்லைத்தீவு சிலாவத்தைப் பகுதியை நோக்கி வெளியேறிய சிறீலங்கா இராணுவத்தினரை திருப்பிய னுப்பும் பணியில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுக் கொண்டிருந்தான் ஜோன்சன். சண்டையில்கூட அவன் தனது வழமையான பாணியைக் கைவிடவில்லை. நீண்ட நேரச் சண்டையின் பின் அந்த ரவை இவனைச் சந்தித்தது. நாடிக்கு அண்மையில் துளை போட்ட அந்த ரவை இவனை எம்மிடமிருந்து பிரித்தது. எப் போதும் சிரித்தபடி காட்சியளிக்கும் இவனை இழந்த மண் அழு தது.

இவனைப் பற்றி இவனது ஆப்த நண்பன் ஒருவனிடம் விசாரித்தபோது ''மம ஜோன்சன் எண்டு தான் இவனைக் கூப் பிடுறனாங்கள்'' என்று சொன்னான். எந்தச் சம்பவத்துக்குப் பிறகு?'' என்று கேட்டதற்கு ''ஒருநாள் காட்டுக்குள்ள சிறீலங்கன் ஆமியோட சண்டை நடந்தது சண்டை நடக்கேக்கை காட்டுக் குள்ள இவன் வழி தவறீட்டான். சண்டை முடிஞ்சாப் பிறகு நாங்கள் இவனத்தேடினம். ஆளைக்காணேல்ல. இரவாப்போச் சுது. இவன் நிண்ட இடத்துக்குக்கிட்ட நாங்கள் போட்டம் தனக்குக்கிட்ட ஆக்கள் வாறதக் கண்டிட்டு இவன் ரைபிளை லோட் பண்ணினான். அந்தச் சத்தம் கேட்டு திடுக்கிட்டு நாங் கள் ''ஆரது'' எண்டுகேட்டம். அதுக்கு இவன் ''மம ஜோன் சன்'' எண்டு மறுமொழி சொன்னான். ஆளையாள் இனங்காண ஏலாத அந்தச் சூழ் நிலையில் கேட்டது சிறீலங்கன் ஆமியெண் டா தன்ரைபாஷையைக் கேட்டுச் சுடாது. நாங்களெண்டா தன்ரை பேரைக்கேட்டுச் சுடமாட்டம். முதலில் நிலமையைச் சமாளிப்பம். சிறீலங்கன் ஆமியெண்டா இடத்த விட்டு மாறுவம்

நாங்கள் தானெண்டா வெளியால போவம் எண்டு நினைச்சு அந்த நேரத்தில சமயோசிதமா நடந்து கொண்டான். அண்டையிலயிருந்து இவனை ''மம ஜோன்சன்'' எண்டுதான் கூப்பிடுறனாங்கள்'' என்று கூறி அவனது நினைவுகளில் ஆழ்ந்தான் அப்போராளி.

இவனது மரணச்சடங்கு கூட இவனது வீட்டில் நடைபெறவில்லை. ஏனெனில் அந்த மண் மீட்டெடுக்கப்படவில்லை. இவனது அன்புக்குப் பிரியமானவளின் இல்லத்திலே தான் இவனது புகழுடல் வைக்கப்பட்டிருந்தது. விழிநீரால் இவனது உடலை நனைத்த இவனது காதலிக்கு இந்த முடிவு என்றோ ஒரு நாள் ஏற்படும் என்று நன்றாகவே தெரியும். அவனோடு பழகிய நாட்களை நெஞ்சில் சுமந்து மீண்டும் இலட்சியத்திற்கான பங்களிப்பில் அவள்....

*(05-04-1991)*

★ ★ ★

---

தமிழீழத்தில் புலிகளை அழித்துவிடலாம்; ஆனால், புலிகள் படைத்த புரட்சியை, வீரவரலாற்றை இலட்சியத்தை, தியாகத்தை எந்த ஆற்றலாலும் அழித்துவிட முடியாது.

★ ★ ★

அடிமையாக வாழ்வதிலும் போராடி, விடுதலையுணர்வுடன், மானத்துடன் சாவதை விரும்புகிறேன்.

தலைவர் வே. பிரபாகரன்

# வீர வேங்கை
# கீதா



**பெற்றோர்:** குணரத்தினம் திருச்செல்வம்
ஆசைப்பிள்ளை திருச்செல்வம்

**இயற்பெயர்:** தர்சினி

**முகவரி:** அம்பனை, தெல்லிப்பழை.

**தோற்றம்:** 17-10-1975

**கல்வி:** யாழ்/ தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி

**உடன் பிறந்தோர்:** ஜெயராசா
விமலாதேவி (போராளி)

**போராளியாய்:** 15-08-1990

**மாவீரராக காயமண்ணில்:** 17-06-1991

**குறிப்பிடக்கூடிய தாக்குதல்:** காரைநகர் சிறீலங்கா இராணுவத்தின ருடனான மோதல்

1987ல் எமது மண்ணில் காலடி வைத்த இந்திய இராணுவத்தினர் புலிகளைச் சல்லடை போட்டுத் தேடலாயினர். மக்களுக்கும் புலிகளுக்கும் வேறுபாடு எதையும் காண முடியாத நிலையில் வயது வேறுபாடின்றி மக்களைக் கொன்று குவிக்கும் நோக்கில் வீடுவீடாகச் சோதனையில் ஈடுபட்டனர்.

தெல்லிப்பழையும் இந்திய இராணுவத்தின் முற்றுகைக்கு உள்ளானபோது மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர். ஆனால் பதின்மூன்று வயது நிரம்பிய தர்சினி தனது பெற்றோருடன் அப்பகுதியிலேயே இருந்தாள்.

விடுதலைப் போரிலே ஊறிய உள்ளங்கள் உயிர்த்துடிப்புடன் போராடிக் கொண்டு இருக்கும் எமது சொந்த மண்ணில் வாழ்வது என்றால் சுதந்திரமாக வாழ வேண்டும். இல்லையேல் சாக வேண்டும் என்ற சிந்தனையே அவர்களிடம் ஊறி இருந்திருக்க வேண்டும்.

இரு உடன்பிறப்புகளுடன் கடைசிப் பிள்ளையாகப் பிறந்த தர்சினி மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்டாள். கடுமையான போராட்ட சூழலில் வளர்ந்ததால் இவளது இயல்பு வித்தியாசமானதாக இருந்தது. அச்சமின்றி துணிவுடன் வாதாடும் திறனும் கல்வியிலும், கலைகளிலும் ,ஆர்வத்துடன் கற்கும் திறமையும் வீட்டிற்கு வருவோரை உபசரிக்கும் நற்பண்பும் உடையவளாக இருந்தாள்.

சுற்றிவளைப்பில் ஈடுபட்ட இந்திய இராணுவத்தினர் ஒருமுறை தர்சினியின் சகோதரனைக் கைது செய்து முகாமிற்குக் கொண்டு சென்றனர். சகோதரனைப் பார்க்கவென தாயுடன் தர்சினியும் முகாமிற்கு சென்றாள். அண்ணனின் உடலில் சித்திரவதையின் தடயங்களைக் கண்ட தர்சினி கண் கலங்கினாள். அண்ணனின் கண்களும் கூடத்தான். ''இவர்களை நான் துவக்கு எடுத்துச் சுடாமல் விடமாட்டேன் அண்ணா'' என்றாள் அவள் உறுதியோடு.

இன்னுமொரு தடவை, இவளது வீட்டில் வைத்து இவளுக்கு முன்பாகவே இவளது அண்ணனின் நண்பன் ஒருவரை இந்திய இராணுவம் சுட்டுக் கொன்றது. சகோதரபாசத்தோடு பழகி வந்த இந்த நண்பர் தர்சினியின் உள்ளத்தில் போராட்ட உணர்வுகளை தூண்டுவதில் பெரும் பங்காற்றியிருந்தவர். அத

னாலோ என்னவோ இந்தச் சம்பவமும் தர்சினியின் இதயத்தில் ஆழமாகப் பதிந்து போய்விட்டது.

போராட்டத்தில் நேரடியாக கலந்து கொள்ள வேண்டும் என்று அந்தப் பிஞ்சு உள்ளம் உறுதி பெறுவதற்கு இந்தச் சம்பவங்கள் வழிவகுத்தன.

இந்திய இராணுவம் வெளியேறியதைத் தொடர்ந்து பின்னர் சிறிலங்காப் படைகளின் அனர்த்தங்கள் ஆரம்பித்தன. குடிமனைகள் மீதும், பாடசாலைகள் மீதும், வைத்தியசாலைகள் மீதும் ஆலயங்கள் மீதும், குண்டுவீச்சுத் தாக்குதல்கள் நடந்தன.

இந்த வேளையில் குண்டு வீச்சுகளுக்கு மத்தியிலும் காங்கேசன்துறைப் பகுதியில் காவலில் ஈடுபட்டிருந்த போராளிகளுக்கு தினமும் உணவு தயாரித்துச் சென்று கொடுத்து விட்டு வரும் வழக்கத்தை கொண்டிருந்தாள். ஆனால் ஒருமுறை உணவுடன் சென்ற தர்சினி திரும்பி வீட்டிற்கு வரவில்லை. ஆனால் போராளிகள் இவளைத் திருப்பி அனுப்பி விட்டார்கள். எனினும் நாளுக்கு நாள் மக்களின் உயிர்களும் உடைமைகளும் சிறீலங்காப் படையினரின் குண்டுவீச்சுக்கு இலக்காகி அழிவதைக் கண்டு சகித்துக் கொள்ள அவளால் இயலவில்லை. யாழ்கோட்டைப் பகுதியில் மும்முரமாக சண்டை நடந்தபோது புலிகளின் வீரத்தை உணர்ந்து மெச்சினாள்.

1990-08-15 அன்று தர்சினி விடுதலையை நோக்கிய பாதையில் காலடியை எடுத்து வைத்தாள். வயதிலே சிறியவளாகிய தர்சினி விடுதலைப் பாதையில் இணையும் போது ''நாட்டு நிலைமையை யோசியுங்கள்'' என்ற தலைப்பில் எழுதிய கடிதத்தை இங்கு முழுமையாக தருகிறோம்.

அப்பா,

நான் இயக்கத்திற்கு போக ஆசை கொண்டுள்ளேன். இந்த ஆசையை நிறைவேற்ற உங்கள் ஒத்தாசை வேண்டும். இதைப் பற்றி நீங்கள் தப்பாக நினைக்க வேண்டாம். பேனா ஏந்திய கைகள் இன்று துப்பாக்கி ஏந்துகின்றன என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். ஆனால் நீங்கள் அன்று படிப்பை விட்டுவிட்டு ஆமி வேலையில் சேர்ந்தீர்கள், இப்போது உங்களுக்கு புரிகிறது முதலில் நாட்டு நிலைமையை யோசியுங்கள். இன்று சிங்களவர்கள் ஒரு சிறுவன் கூட தனது மதிய உணவு நிதியை தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஒதுக்குகிறான். நடக்கெடுக்க முடியாத கிழவர்

கள் கூட ஆயுதம் ஏந்திய வண்ணம் நிற்கின்றார்கள். அவர்கள் 58,77,83 என்றவாறாக நீளும் ஆண்டுகளில் எம்மை அழித்து எமது மண்ணை ஆட்சி புரிய முனைகின்றார்கள். எனவே எமது நாட்டைக் காக்க நாம் ஏன் போராடக் கூடாது? ''அண்ணன் காட்டிய வழியில் தம்பி செல்கிறான். அதுபோல அக்காள் காட்டிய வழியில் நானும் போகிறேன்'' வீணாகத் தேடி அலைய வேண்டாம். தமிழீழம் கிடைக்கும் வரை போராடியே தீருவோம்.

எத்தனை எத்தனை கொடுமைகள் இங்கே
இனியும் இருப்பது மடமை என்றே
இன்றே குதிப்போம் போர்க்களத்தில்
அடிமை வாழ்வு எத்தனை காலம்
விடிவு காணப் புறப்படுவோம்.
''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

தி. தர்சினி

தனது பாடசாலைக் கல்வியை இடையில் நிறுத்திவிட்டு சுதந்திரத் தமிழீழம் அமைப்பதற்கான புரட்சிகரக்கல்வியை தொடரப் போவதாக உணர்ந்தவளாய் - அக்காவின் வழியைப் பின்பற்றி விடியலுக்கான பாதையில் புறப்பட்டாள்.

பயிற்சி முகாமிற்கு சென்ற தர்சினி கீதாவாக புதுப்பெயர் பெற்றாள். பயிற்சிக் காலத்தில் தனக்கு வழங்கப்பட்ட பணிகளை மிகவும் சுறுசுறுப்புடன் செய்து முடிப்பாள். அமைதியான தோற்றமும், விழிகளில் வீரத்தின் உறுதியும், விடுதலையுணர்வும், நிதானமாக சிந்தித்து திட்டம் எடுக்கும் ஆற்றலும் கீதாவின் தனித்திறமைகள். விரைவாகவும் உற்சாகமாகவும் பயிற்சிகளில் ஈடுபடுவாள். பொறுப்பாளர்களின் கட்டளைகளை ஏற்று அதன்படியே நடப்பாள். எல்லாப் போராளிகளோடும் அன்பாகப் பழகுவாள்.

இவளோடு பயிற்சி பெற்ற தவச்செல்வி என்னும் போராளி கீதாவின் உயிர் நண்பியாக இருந்தாள். எந்தவொரு விடயத்திலும் ஒற்றுமையோடும், போட்டியுணர்வோடும் செயற்படுவார்கள். இருவருக்கும் இடையே பொறாமை என்பது கிடையாது. விளையாட்டுப் போட்டிகளின்போது இருவருக்கும் இடையே போட்டிகள் ஏற்படும். ஆனாலும் கீதா முதலிடங்களைத் தட்டிச் சென்று விடுவாள். கீதாவின் கலை ஆர்வமும், திறமைகளும் ஓய்வு நாட்களில் இடம் பெறும் நிகழ்ச்சிகளின்போது வெளிப்படுத்தப்படும்.

26196.c



பயிற்சிக்குப் பின்னர் பதினைந்து பேர்கொண்ட குழுவின் பொறுப்பாளராக இவள் தெரிவு செய்யப்பட்டாள். வயதில் சிறியவளாக இருந்த போதிலும் தனக்குரிய வேலைகளை பொறுப்புடன் ஏற்று பிள்ளைகளுக்கு எந்த நேரம் என்ன வேண்டுமோ அதனைக்கேட்டு நிறைவேற்றுவாள். அறிவுரைகள் கூறி நல்வழிப்படுத்துவாள்.

காரைநகரில் சிறீலங்காப்படைகளுக்கு எதிராக நடந்த மோதலில் கீதாவும் கலந்து கொண்டாள்.

பின்னர் விசேட பயிற்சிக்காக முகாமிற்கு சென்றபோது இவளது பெற்றோரும் சகோதரரும் இவளைப் பார்க்க விரும்பினர். ஆனாலும் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த போராளிகள் பலர் இருக்கும் போது, தான் மட்டும் தனியே தனது பெற்றோரைச் சந்திப்பதை அவள் விரும்பவில்லை. இயக்கத்தில் இருந்த இவளது சொந்த அக்காவைக்கூட இயக்கத்தோடு தன்னை இணைத்துக்கொண்ட பின்னர் ஒரு தடவையும் இவள் பார்த்ததில்லை.

மன்னாரில் நிலை கொண்டிருந்த சிறீலங்கா அரசபடையின் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் கீதா பங்கு கொண்டாள். 17-06-91 அன்று மன்னாரில் நடைபெற்றுக்கொண்டிருந்த தாக்குதலில் பங்கு கொள்ளும் மகளிர் படையினர் வாகனத்தில் விரைந்தனர். அக்குழுவில் இடம்பெற்றிருந்த கீதாவும் குழுவினரும் ''எதிரிகளின் பாசறையை தேடிப் போகிறோம்'' எனக் குதூகலமாகப் பாடிச் சென்றனர்.

வவுனியா பகுதியில் தீவிர சண்டை இடம்பெற்றுக் கொண்டிருந்த சமயம் கீதாவும் அவளது குழுவினரும் வந்த வாகனம் குருக்களூர் பகுதியில் பழுதடைந்து விட்டது. அவர்கள் வாகனத்தை விட்டிறங்கி கால் நடையாக சண்டை நடக்கும் இடத்தை நோக்கி விரைந்து கொண்டனர்.

இவர்கள் முன்னேறிப் பாதுகாப்பு நிலை எடுத்துப்பதுங்கியிருந்த பகுதியை நோக்கி இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் பறிந்து எழும்பின. அப்பகுதியெங்கும் புகை மண்டலமாகக் காட்சியளித்தது. கீதாவும் அவளது மூன்று தோழியர்களும் அதற்குப் பின்பு தமது நிலைகளிலிருந்து மீளவேயில்லை.

(10-07-1992)

# லெப். இளஞ் செழியன்



பெற்றோர்: யோகேஸ்வரன் (மு. வே. யோ. வாஞ்சிநாதன்)
தங்கராணி

இயற்பெயர்: அரவிந்தன்

முகவரி: மயிலியதனை, தொண்டமானாறு

தோற்றம்: 03-09-1973

கல்வி: யாழ் / கெருடாவில் தமிழ்க்கலவன் பாடசாலை
யாழ் / வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி.
9ஆம் வகுப்பு

போராளியாய்: 18-02-1989

மாவீரனாக தாயகமண்ணில்: 22-07-1991

குறிப்பிடத்தக்க தாக்குதல்கள்:

★ யாழ். கோட்டை சிறீலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதல் (1990)

★ சிலாவத்துறை சிறீலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதல் (19-03-1991)

"எனக்கு ஸ்டக் இல்லாத பிறண்தான் வேணும்'' என்றான் இளஞ்செழியன். அப்போதுதான் பலாலி முகாமின் இராணுவ காவலரண்களைப் பார்த்து வரைபடத்தில் குறிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தேன். இவ்வேலைக்காக இளஞ்செழியனும் இன்னும் சிலபோராளிகளும் என்னுடன் சேர்ந்து கடமையாற்றினார்கள். முகாமின் காவலரணைப் பார்க்கும்போது எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று விளங்கப்படுத்திவிட்டு ஒவ்வொருத்தருக்கும் என்ன ஆயுதம் வேணும் என்று கேட்ட பொழுதே இழஞ்செழியன் இவ்வாறு கூறினான். ''ஏன் ஸ்டக் இல்லாத பிறண் வேணும் என்று கேட்கின்றாய்'" எனத் திருப்பிக் கேட்டேன். ''கோட்டையில் நான் அனுபவப்பட்டனான்'' எனத் தொடர்ந்தான்.

கனரக ஆயுதங்கள் வைத்திருப்பதற்கும், அதனை பயன்படுத்துவதற்கும் இளஞ்செழியன் மிகுந்த ஆர்வம் கொண்டவனாக விளங்கினான். குறிப்பாக ''பிறண் எல். எம். ஜி'' வைத்திருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டான். அவனுடைய ஆசைகள் வித்தியாசமானவை. சண்டைக்குப்போக வேண்டும், எதிரிகளை வீழ்த்த வேண்டும், அவர்களது ஆயுதங்களை கைப்பற்ற வேண்டும் என்பனவாகும். சென்ற வருடம் ஊர்காவற்றுறை இராணுவத்தினர் மீதான திட்டமிட்ட பதுங்கித் தாக்குதலின் போது இவன் துப்பாக்கியுடன் ''கிட்பாக்'' ஒன்றையும் கத்தி ஒன்றையும் கூட எடுத்துச் சென்றிருந்தான். இந்த பாக் எதற்கு என்று கேட்டபோது ''ஆமியிட்டேயிருந்து குண்டுகளையும் ரவைகளையும் போடத்தான்'' என பட்டென பதிலளித்தான். ''அது சரி, கத்தி எதுக்கு?'' என்று கேட்டேன். ஒருகணம் திரும்பிப் பார்த்துவிட்டு ஆமியின்ர கோல்சரை கழட்டேலாட்டால் அறுத்தெடுக்கத்தான்' என்றான். அவன் குரலில் உறுதியிருந்தது; நம்பிக்கையிருந்தது. இத்தாக்குதலில் இராணுவத்திடமிருந்து இரு துப்பாக்கிகளும், தொலைத்தொடர்பு சாதனமொன்றும் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

03-09-1973 அன்று வல்லை நகரின் ஒருபகுதியான மயிலியதனையில் யோகேஸ்வரன் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தான். இவன் இயக்கத்திற்குச் சேர்ந்ததே தனிக்கதை. இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் எமது மண்ணில் புரிந்த அடாவடித்தனங்களை பொறுக்க முடியாமல் இவன் இயக்கத்தில் சேரவிழைந்தான். அப்போது வடமராட்சிப் பகுதி கடற்பகுதிப் பொறுப்பாளராக இருந்தவர் இவனை சேர்ப்பதற்கு தயங்கினார். ஏனென்றால் இவன் பெற்றோர்களுக்கு ஒரே ஒரு பிள்ளை, அத்துடன் இவனது

தகப்பனார் ஒரு போராளியாக இருந்தார். புகழ் பெற்ற கவிஞனும் மக்கள் முன்னணி மக்கியஸ்தருமான மு. வே. யோ. வாஞ்சிநாதனின் ஒரே புதல்வன் இவன். இதனாலேயே இவனது நண்பர்கள் இவனை 'வாஞ்சி', என்று அழைப்பார்கள். பயிற்சிக்கு போககாலம் கடந்து போவதால் பொறுமையிழந்த இளஞ்செழியன் முல்லைத்தீவு காட்டிற்குள் பயிற்சிக்கென புதிய போராளிகளை ஏற்றிச்சென்ற படகில் கடற்பகுதிப் பொறுப்பாளருக்கு தெரியமல் ஏறி விடுகின்றான். அப்போது இப்பொறுப்பாளர் வந்து அவனை இறக்க முற்பட்ட போது எப்படியும் நான் பயிற்சிக்கு போக வேண்டும் என அடம்பிடித்து போய் விடுகின்றான்.

சென்ற வருடம் கோட்டையில் சண்டை உக்கிரமாக நடைபெற்றபோது இவன் ஜி பி. எம் ஜி யுடன் அங்கு நின்றான். மண்டைதீவு வரையும் வந்த இராணுவத்தினர் கோட்டை முகாம் இராணுவத்திற்கு ஆயுத உதவி வழங்குவதற்காக பண்ணைக்கடல் வழியாக வந்தபோது சில நேரங்களில் இடுப்பளவும் சில நேரங்களில் மார்பளவும் உள்ள பண்ணைக்கடல் நீரில் இருந்து கொண்டு தாக்கிய விடுதலைப் புலி அணியில் இவனும் ஒருத்தனாக இருந்தான். ஆரம்பத்தில் GP. M. G லோடராக இருந்து பின் கண்ணராக மாறினான். இறுதியில் பிறண் கிடைக்கின்றது. கோட்டை இறுதிக் தாக்குதலின் போது இவனது இயந்திரத் துப்பாக்கி, ரவைமழை பொழிந்து எதிரியை ஓடவைத்தது. இத்தாக்குதலில் இவன் விரலில் காயப்படுகிறான்.

கோட்டை சண்டை முடிவடைந்ததும் விடுதலைப் புலிகளின் இராணுவத் திட்டமிடல் பிரிவில் கடமையாற்றினான். அந்த நேரத்தில் கூட இராணுவ காவலரண்களைப் போய்ப் பார்த்து அவற்றிக்கான மாதிரி செய்வதிலும் சிரத்தையுடன் ஈடுபட்டான். தச்சன்காட்டுச் சந்தி மினிமுகாம், சிலாவத்துறை இராணுவ முகாம், காரைநகர் கடற்படை முகாம், ஆனையிறவு இராணுவ தளம் ஆகிய முகாம்களின் தாக்குதலிற்கான தயாரிப்பு வேலைகளில் திட்டமிடல் பகுதியிலிருந்த தனது கடமையை சிறப்பாகச் செய்தான்.

யாழ் மாவட்ட படைப்பிரிவுக்கு கடமையாற்ற வந்த போது இளஞ்செழியனுக்கு ஏ. கே. எல். எம். ஜி ஒன்று கொடுக்கப்பட்டது. பெரிதும் மகிழ்ச்சியடைந்த இளஞ்செழியன் அதற்கு புதிய கோல்சர் ஒன்று தைத்து எப்போதும் அதனை அழகாகத் துடைத்து சுத்தம் செய்து கவனமாகப் பேணிப் பாதுகாத்து

வைத்தான். படுக்கும் போது அதனைக் கட்டிப்பிடித்துக் கொண்டே படுத்தான். எங்கு சென்றாலும் அதனைக் கொண்டு திரிந்தான்.

ஆனையிறவு யுத்தம் தொடங்கியதும் அதற்குப்போக வேண்டுமென்று துடித்தான்; அதன்படியே அந்த யுத்தத்தில் கலந்து கொண்டான். தனது ஏ. கே. எல். எம். ஜியினால் பல எதிரிகளை வீழ்த்தினான். ஜூலைத் திங்கள் 22 ஆம் திகதியன்று புல்லாவெளியில் அமைந்திருந்த இராணுவ காவலரண் மீதான தாக்குதலின் போது எதிரிக்கு மிக சமீபமாகச் சென்று இவன் தனது ஏ. கே. எல். எம். ஜியினை உயர்த்திய போது எதிரியின் துப்பாக்கி ரவைகள் இவன் உடலை துளைத்துச் சென்றன. அந்த வீரன், மாவீரனாக இந்த மண்ணின் விடிவிற்காக வீரச் சாவை எய்தினான். அப்போது கூட A. K. L. M. G. மீதான அவன் பிடி தளரவில்லை.

புரட்சிப்பாடல்களை இசைத்துக் கொண்டு துப்பாக்கி ஏந்தவரும் இன்னுமொரு போராளியிடம் தனது ஆயுதத்தை ஒப்படைக்கத்தான் இறுகப் பிடித்தானே......?

இவனது மரணம் இன்னொரு செய்தியையும் உலகிற்கு எடுத்துக் சொல்லியது. இந்தப் போராட்டத்தில் இரண்டு தலைமுறைகள் கலந்து கொண்டுள்ளன என்பதை - சீருடையணிந்த மகனின் சடலத்திற்கு சீருடையணிந்த தந்தை கொள்ளி வைத்ததை அப்படித்தான் வரலாறு சொல்லும்.

*(05-12-1991)*

★ ★ ★

---

**நண்பர்களைக் காப்பாற்ற இன்னுயிரை ஈந்த மாவீரர்**

## அன்பு (செ. தனபாலசிங்கம், முள்ளியான், வெற்றிலைக்கேணி)

*16. 04. 1985* அன்று யாழ்ப்பாணத்தில் தவறுதலாக கைக் குண்டு வெடித்த போது

# மேஜர் அன்ரனி



| | |
|---|---|
| பெற்றோர்: | வன்னியசிங்கம் கனகசூரியம்<br>சௌந்தரி கனகசூரியம் |
| இயற்பெயர்: | சிறீ |
| முகவரி: | அம்மன் கோவில் வீதி, கல்முனை |
| கல்வி: | கல்முனை ராமகிருஷ்ணமிசன்<br>9 ஆம் வகுப்பு |
| தோற்றம்: | 24-09-1964 |
| உடன் பிறப்பினர்: | விஜயா<br>ஜெயந்தி<br>விஜி<br>மோகன்<br>ராஜீ<br>தமயந்தி<br>முரளி<br>மற்றும் இரு சகோதரிகள் |
| போராளியாய்: | 24-09-1984 |

மாவீரனாக தாயக மண்ணில்: 19-10-1990

குறிப்பிடக்கூடிய தாக்குதல்கள்:

★ தங்கவேலாயுதபுரத்தில் சிறீலங்கா விசேட அதிரடிப்படையினர் மீதான தாக்குதல் (01-12-1985)

★ தங்கவேலாயுத புரத்தில் தேசவிரோதிகள் மீதான தாக்குதல் (1986)

★ லகுகலவில் சிறீலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதல் (19-07-1986)

★ காரைதீவில் சிறீலங்கா விசேட அதிரடிப்படையினர் மீதான தாக்குதல் 16-03-1987)

★ பொத்துவில் மினி முகாம் தாக்குதல் (20-06-1987)

★ கஞ்சிகுடிச்சாறுபகுதியில் சிறீலங்கா விசேட அதிரடிப்படையினரின் முற்றுகைக்கு எதிரான தாக்குதல் (26-06-1987)

★ காஞ்சிரங்குடாவில் இந்திய இராணுவத்தினர் மீதான தாக்குதல் (17-10-1987)

★ மொனராகலை வீதியில் சிறீலங்கா பொலீஸார் மீதான தாக்குதல் (1988)

★ சாகாமத்தில் இந்திய இராணுவத்தினர் மீதான தாக்குதல் (20-06-1989)

★ மல்வத்தையில் இந்திய இராணுவத்தினர் மீதான தாக்குதல் (22-08-1989)

★ திருக்கோயிலில் தேசவிரோதிகளின் முகாம் மீதான தாக்குதல் (05-11-1989)

★ உன்னிச்சையில் தேசவிரோதிகள் மீதான தாக்குதல் (1989)

★ தம்பாலையில் சிறிலங்கா இராணுவம் மீதான தாக்குதல் (24-06-1990)

★ யாழ். கோட்டை சிறிலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதல் (05-08-1990)

★ யாழ். கோட்டைப்பகுதியில் வை - 12 விமானம் மீதான தாக்குதல் (09-08-1990)

விசேட திறமை: சிங்களத்தில் சரளமாகப்பேசக்கூடியவர், உதைபந்தாட்டம், கிரிக்கெட்டில் வல்லவர்.

விசேட தகமை: அம்பாறை மாவட்டத் தளபதியாக விளங்கியவர்.

பௌத்த சிங்கள பேரினவாத அரசிற்கெதிராக முதன் முதல் ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள் என்ற வரலாற்றுப் பெருமையைப் பெற்றவர்கள் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த மக்களே. 1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ம் திகதியன்று தமிழினத்தை அழிக்க ஆயுதங்களுடன் துறை நீலாவணையை நோக்கி வந்த சிறீலங்காப் பொலிசாருக்கும் சிறிலங்கா குடியேற்றவாசிகளுக்கு எதிராக துப்பாக்கிகளினால் தாக்குதல் தொடுத்தார்கள் அவர்கள். இன்று போலவே அன்றும், தமிழ் மக்களின் துப்பாக்கிகளுக்குப் பயந்து ஓடினர் சிங்களப்படையினரும், குடியேற்றவாசிகளும். சிங்களக்குடியேற்றத்தின் அபாயத்தை முதன் முதலில் தமிழ் மக்கள் உணர்ந்து கொண்டது அம்பாறை மாவட்டத்தில் நடந்த நிகழ்வுகளால்தான். இன்று, இம்மாவட்டத்திலுள்ள முப்பத்தியாறு கிராமங்களிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். மிச்சசொச்சமாக ஆங்காங்கே எஞ்சியிருப்போரும் அகதிகள் நிலையில்தான் வாழ்ந்து வருகின்றனர்.

இப்படியான நிலைமையுள்ள அம்பாறையிலிருந்து அன்ரனி போராளியாக மாறியதில் வியப்பொன்றுமில்லை.

1956 ஆம் ஆண்டு துறை நீலாவணையில் சிங்களவர்களை எதிர்த்து ஆயுதமேந்திப் போராடியவர்களில் ஒருவரான கனகசூரியத்தின் மகன்தான் இவன். 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தைத்தொடர்ந்து சிங்களப்படைகளுக்கெதிராகப் போராட வேண்டுமென்று ஆயுதம் சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டவன் இவன். அதன் பின்னரே தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இவனுக்கு தொடர்பு ஏற்பட்டது.

நன்கு சவரம் செய்யப்பட்ட முகம். எப்போதும் நேர்த்தியான தோற்றம். ஹிந்தி சினிமா நடிகன்போல இருப்பான். இவை தான் அன்ரனியைப்பற்றி எந்தப் பொதுமக்களும் காட்டும் அடையாளம். இதேபோலவே வேகம், துணிகரம் இவற்றிற்கு அன்ரனியை உதாரணமாகச் சொல்வர் போராளிகள். இவனது துணிச்சலான நடவடிக்கைகள்தான் இவனை அம்பாறை மாவட்டத்தளபதியாக்கின.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த எந்தப் போராளியிடமும் அன்ரனியைப்பற்றிக் கேட்டால் முதலில் அவர்கள் தருவது கண்ணீர் - அவர்கள் ஒவ்வொருவரையும் அவனது மரணம் பாதித்துள்ளது. இன்று அந்தப் போராளிகளை வழிநடத்துவது

''தலைவரை நம்புங்கள். போராட்டத்தைக் காப்பாற்றுங்கள்'' என்ற அன்ரனியின் வாசகங்களே!

ஒரு தாயைப்போல எவ்வாறு தம்மை அன்ரனி நேசித்தான், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவன் எவ்வாறு நடந்து கொண்டான் என்பதைக் கூறும் போது அவர்கள் குரல் கரகரக்கும், கண்கள் தாரை தாரையாக நீர் பொழியும்.

ஒரு சமயம் பத்துநாட்களாக இந்தியப்படையினரின் முற்றுகைக்குள் சிக்கியிருந்தனர் அன்ரனி தலைமையிலான போராளிகள். காட்டிற்குள் முற்றுகை நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமயம் ஒரு போராளிக்குப் பாம்பு கடித்துவிட்டது. சண்டை செய்யவும் வேண்டும். பாம்புகடித்தவனை எங்காவது கொண்டு சென்று காப்பாற்றவும் வேண்டும். ஓடிப்போய்ச் சண்டை செய்வது, சண்டை ஓய்ந்ததும் ஓடிவந்து அவனுக்குப் பக்கத்தில் இருந்து அவனைக் காப்பாற்ற முயற்சிகள் மேற்கொள்வது - இப்படியே தொடர்ந்து போராட்டம். எட்டாம் நாள் அப்போராளி வீரச்சாவெய்தினான். ஒரு போராளி தன்கண்ணெதிரே சாகும் நிலை உருவானதை இவனால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அந்தச்சாவு அவனை வெகுவாகப் பாதித்திருந்தது.

இதைப் போலவேதான்அம்பாறை மாவட்டத்தில் பொதுமக்களின் சாவுகள் பற்றிக் கேள்விப்படும் போது அவன் படும் வேதனைகளைக் கதை கதையாகச் சொல்வர் அம்பாறை மாவட்டப் போராளிகள். அன்ரனியைப் பொறுத்தவரை போராளிகள் ஒவ்வொருவரது குடும்ப நிலைமையையும் அறிந்து வைத்திருப்பான். அவசியம் ஏற்படும் போது தேவையான உதவிகள் செய்வான். இவ்வளவும் அப்போராளிகளுக்குத் தெரியாமலே தான். பின்னர் இவ்விடயம் பற்றிக் கேள்விப்பட்டு தாங்கள் அன்ரனியிடம் கதைக்கப்போகும் போது ''மக்கள் வேறு, இயக்கம் வேறல்ல என்று பொன்னம்மான் ராதா அண்ணர் போல ஆக்களெல்லாம் எனக்குப் படிப்பிச்சிருக்கிறாங்க, அவங்க காட்டின வழியிலநான் நடக்கிறன். புதிசா நான் ஒண்டும் செய்யேல்ல'' என்று தன்னடக்கத்துடன் கூறி அங்கிருந்து நகர்ந்து கொள்வான். இவற்றையெல்லாம் இன்றுவிழிநீர்பனிக்க நினைவு கூருகின்றனர். அவர்கள். தமது குடும்பத்தில் ஒருவனாக அன்ரனியை அம்பாறை மாவட்ட மக்கள் ஏற்றுக்கொண்டிருப்பதற்கு இது போன்ற சம்பவங்கள்தான் காரணம்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ட்றக்டர் கணக்கில் ஆயுதங்களைக் கைப்பற்றும் அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்தவன் அன்ரனிதான்.

இந்திய அரசின் கைக்கூலிகளாக இருப்பதற்காக இந்திய இராணுவத்தினரால் உருவாக்கப்பட்ட தமிழ்த்தேசிய இராணுவத்தின் மீது அன்ரனி தலைமையில் தொடுக்கப்பட்ட தாக்குதலே ஒரே இரவில் இயக்கத்தின் ஆயுதபலத்தைக் கூட்டியது. அத்தாக்குதல் இலட்சியப்பற்றுள்ள புலிகளுடன் மோதுவது கனவிலும் நினைத்துப்பார்க்க முடியாததொன்று என்ற செய்தியை தமிழ்த்தேசிய இராணுவத்துக்கு உணர்த்தியது. அத்தாக்குதலின் விளைவாக அவர்களிடம் ஏற்பட்டிருந்த பீதி ஏனைய இடங்களில் எமது இழப்பைக் குறைத்திருந்தது.

பொத்துவில் தொடங்கி யாழ் - கோட்டை வரை அன்ரனியின் தாக்குதல்கள் - போராட்டப்பங்களிப்புகள் இடம் பெற்றுள்ளன. அன்ரனியின் தாக்குதல்களைபபற்றிக் கூறுவதானால் அதற்குத் தனி நூலே வெளியிடவேண்டும்.

கெரில்லாப் போராட்டத்திற்குச் சற்றேனும் சாதகமில்லாத புவியியல் அமைவிடத்தைக்கொண்ட அம்பாறை மாவட்டத்தில் தொடர்ச்சியாக நிகழ்ந்த தாக்குதல்கள் அன்ரனியின் ஆற்றலுக்கு உரைகல்லாக அமைகின்றன.

இந்திய இராணுவமும் இவனால் பாரிய இழப்புக்களைச் சந்தித்தது. இவனைப்பிடிக்க பென்னம்பெரிய திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கும் சமயம் இவன் முகாமில் போராளிகளுடன் உடற்பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருப்பான்.

"அன்ரனியின் குறூப்" என்றால் தனித்து இனங்காட்டக் கூடியவர்களாக - திறமைமிக்கவர்களாக -இவனால் உருவாக்கப்பட்ட போராளிகள் - விளங்கினர்.

சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்த காலத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டை மீறி யாழ். கச்சேரியடிவரை வந்த சிறீலங்கா இராணுவத்தினரை எதிர்த்து தனிஆளாக நடுவீதியில் நின்று திருப்பியனுப்பிய சம்பவம்தான் யாழ்ப்பாண மக்களுக்கு இவனை அடையாம் காட்டிய சம்பவமாகும்.

நடுவீதியில் நின்று சிறீலங்காப்படையினரின் வாகனத்தில் கால் வைத்தவாறு துப்பாக்கியால் குறிபார்த்தபடி சிங்களமொழியினால் எச்சரித்து அனுப்பினான் இவன். இவனால் சிங்களத்தில் சரளமாகப்பேசமுடியும். அம்பாறையிலுள்ள தொழிற்சாலையொன்றில் பணிபுரிந்த காலத்தில் பெரும்பாலும் சிங்களவர்களுடனேயே பழக வேண்டியிருந்தது. அதனால் சிங்களவர்களது உச்சரிப்புக்கும் இவனது உச்சரிப்புக்கும் வித்தியாசம் காண முடியாது. இவனது அந்த மேலதிக திறமை இராணுவத்திரை எச்சரிக்கப்பயன்பட்டது.

இச்சம்பவத்தைப் பற்றி குறிப்பிடும் அம்பாறை மாவட்டப் போராளிகள் இவனது தந்தையின் செயற்பாட்டை நினைவுகூர்ந்தனர். அந்தக் காலத்தில் கிராமசேவையாளர் மூலமாக- அவருக்கு அறிவித்த பின்னரே பொலீஸார் யாரையும் தேடிச் செல்லமுடியும். இந்த விதி முறையை மீறி ஏதோ ஒரு விடயமாக இரு சிங்களப்பொலீசார் இவனது தந்தை கனகசூரியத்திடம் வந்தனர். உடனே அவர் அவ்விருவரையும் மடக்கி அவர்களைக் கட்டி நடுவீதியில் போட்டிருந்தார், ஏராளமான மக்கள் இக்காட்சியைப் பார்த்துச் சென்றனர். பின்னர் பொலீஸ் நிலையத்திலிருந்து வந்தவர்கள் திரு கனகசூரியத்திடம் சமரசம் பேசி அவர்களை விடுவித்துச் சென்றனர். அன்று அம்பாறையில் விதிமுறைகளை மீறிய சிறீலங்காப்படையிரை எச்சரித்தார் கனகசூரியம். அந்த வரலாற்றுத் தொடர்ச்சியாக இன்று யாழ்ப்பாணத்தில் அவர்களை எச்சரித்துள்ளான் அன்ரனி.

09-08-1990 அன்று யாழ்-கோட்டைப் பகுதியில் சீனத் தயாரிப்பு விமானம் ஒன்றை சேதமாக்கியவனும் இவனே. இதை சிறீலங்கா அரசும் ஒப்புக்கொண்டது.

யாழ் கோட்டையில் புலிக்கொடி பறக்கும் காட்சியைப் பார்த்ததும் இதுபோல அம்பாறையிலும் புலிக்கொடி பறக்க வேணும் என்று தனது உள்ளக் கிடக்கையை வெளியிட்டான் இவன். அது நிறைவேற முன்னரே வீரச்சாவெய்தி விட்டான்.

இவ்வளவு திறமைமிக்க - எல்லா ஆயுதங்களையும் இயக்கக் கூடிய- மனிதநேயம்மிக்க இப்போராளியை 19-10-1990 அன்று வசாவிளானில் நாம் இழந்தோம்.

தன்னுடைய ஒவ்வொரு போராளியின் சாவுக்கும் இவன் பதிலடி கொடுக்கத் தவறுவதில்லை. ஒவ்வொரு போராளியின் சாவும் தமக்கு வரவிருக்கும் ஆபத்தாகவே சிறிலங்கா - இந்தியப்படைகள் உணர்ந்தன.

அந்தவகையில், இவனது வீரச்சாவு நிகழ்ந்த 45ம் நாள் 02-12-1991 அன்று இவனது நினைவாக அம்பாறை அறுகம் குடாவுக்கும், பாணமைக்குமிடையில் இவனது வாரிசுகள் சிறீலங்காப்படையினர் மீது தாக்குதல் தொடுத்தனர். அத்தாக்குதலில், ஒரு அதிகாரி உட்பட ஏழு அதிரடிப்படையினர் மாண்டனர். அத்தாக்குதல், ''அன்ரனியின் விழுதுகள் இப்போராட்டத்தை தாங்கியுள்ளன'' என்ற செய்தியை சிறீலங்காப்படையினருக்குத் தெரியப்படுத்தியது.

*(15. 10. 1991)*

* ★ *

---

**ஒரே கைக் குண்டை வெடிக்க வைத்து தம்முயிரை ஈந்த மாவீரர்கள்**

## றஞ்சன் (சரவணமுத்து சத்தியசீலன், 2ம் படிவம் வவனிக்குளம்)

## ஜீவா (கந்தையா கெங்காதரன், பெரியதம்பனை, செட்டிகுளம்)

*11. 03 1986 அன்று துணுக்காயில் நிகழ்ந்த இராணுவ முற்றுகையின் போது*

# வீரவேங்கை ஜஸ்மின்



| | |
|---|---|
| தந்தை பெயர்: | கோபாலபிள்ளை |
| இயற்பெயர்: | செல்வமலர் |
| முகவரி: | 6 ம் வாய்க்கால், பன்குளம்<br>திருகோணமலை |
| தோற்றம்: | 30- - 06 - 1973 |
| கல்வி: | ஔவைனார் பன்குளம் அரசினர்<br>தமிழ்க் கலவன் வித்தியாலயம்<br>9 ம் வகுப்பு |
| உடன்பிறந்தோர்: | செல்வரஞ்சினி<br>செல்வேந்திரன் (போராளி)<br>செல்வரஞ்சன் |
| போராளியாய்: | 06 - 1990 |
| மாவீரராக<br>தாயக மண்ணில்: | 27 - 07 - 1991 |

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

பன்குளம்,

அழகான தமிழ்க் கிராமம் முக்காலமும் நீர் நிறைந்து நிற்கும் குளம். குளத்திற்கு கீழாக பரந்து விரியும் வயல் நிலங்கள். வறுமைக்கு அங்கு என்ன வேலை.

தமிழர் பகுதியான பன்குளத்திலும் சிங்களக் குடிகள் பரவத்தொடங்கின. காணி இல்லாத சிங்களவர்களுக்கு நிலம் வழங்க தமிழர் கிராமமான பன்குளத்திற்குள் சிங்கள அரசு இடங்கண்டுபிடித்தது.

தமிழர்களுக்கு நடுவில் சிங்களவர்களும் அங்கு குடியிருத்தப்பட்டார்கள்.

பன்குளத்தில் நடுத்தர வசதி வாய்ப்புக்களைக் கொண்ட குடும்பமொன்றைச் சேர்ந்தவள் தான் ஜஸ்மின். அப்பா, அம்மா, அக்கா, அண்ணா, தம்பி என்ற சிறியவட்டத்தினுள் அவளும் ஒரு சிறுமி.

வீடு, அழகான கிராமத்தின் வீதிகள், வயல்கள், எங்கள் சொந்த ஊரில் நாங்கள் வாழ்கின்றோம், இந்த வாழ்வு நிரந்தரமானது என்றுதான் அங்கு எல்லோரும் நினைத்தார்கள்.

ஆயிரத்து தொழாயிரத்து எழுபத்தி ஏழு இலங்கை முழுமைக்குமான தேர்தல் முடிவுற்று ஜெயவர்த்தனாவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசகட்டில் ஏறி இருந்தது. தமிழர்கள் தங்கள் தேசம் சிறீலங்காவிலிருந்து விலகிச் செல்வதற்காக வாக்களித்திருந்தார்கள்.

தமிழர்களின் ஒன்றிணைவைக் கண்ட சிங்கள ஆட்சியாளர்கள் சினம் கொண்டார்கள்

நள்ளிரவு பன்குளம் கிராமம் தீப்பற்றி எரிந்தது. நெருப்பினூடே சிங்களக் காடையர்கள் தமிழர்கள் மீது பாய்ந்தனர். அப்போதெல்லாம் ஜஸ்மினுக்கு நான்குவயது தான் நிறைந்திருந்தது.

கிராமம் தீப்பற்றி எரிந்ததும் அவளை அணைத்தபடி வயல்களிலும், காடுகளிலும் அம்மா ஓடியதும் அவளுக்கு சில காலம் நினைவலைகளில் நின்றன. பின்பு மறந்து போனாள், எண்பத்தி மூன்று, அப்போது ஜஸ்மினுக்கு பத்து வயது. தந்தை

யை இழந்த பின் அவர்கள் நால்வரையும் வளர்க்க அம்மா போராடிக் கொண்டிருந்த காலம்.

அன்றும் அப்படித்தான் இரவு வானொலிச் செய்தியைத் தொடர்ந்து பன்குளம் சந்தியின் மத்தியில் தமிழர் கடைகளில் தீ எழுந்தது.

சிங்களக் காடையர்களின் வெறிக்கூச்சல்கள் தமிழ்மக்களின் அவலக் குரல்கள் —— பன்குளம் கிராமத்தில் படர்ந்தது. இளைஞர்களில் சிலர் எதிர்த்தனர்.

ஆனால் காடையரின் துணைக்கு அரசகாவலர்களும், தமிழர்களின் இரத்தம் எங்கும் சிந்தியது.

அம்மா ஜஸ்மினையும் இழுத்துக் கொண்டு காட்டிற்குள் ஓடினாள். பசியும் பட்டினியும் நாட்கள் கடந்தன. மீண்டும் கிராமத்திற்கு வந்த போது எங்கும் சாம்பல் மேடுகள். பலரை அந்த மண் பறிகொடுத்திருந்தது.

ஜஸ்மின் சிறுமி. அவளுக்கு எதுவும் விளங்கவில்லை. ஆனால் சிங்களவர்கள்; சிங்கள அரசின் காவலர்கள் என்றால் வெறுப்பும், கோபமும் அந்தச் சின்னவயதிலேயே மனதிற்குள் குடிகொண்டு விட்டது.

எண்பத்தி ஆறு- இப்போது ஜஸ்மினுக்கு பதின் மூன்று வயது. பன்குளத்தில் சிங்களவரின் தொகை பெருகி இருந்தது. தமிழரின் நிலங்களும், வயல்களும் அடாத்தாக பறிக்கப்பட்டிருந்தன. அவை இப்போது சிங்களவருக்குச் சொந்தமாக இருந்தன.

இம்முறை தமிழர்கள் மீது சிங்களவர் பாய்ந்து ஓய்ந்த பொழுது ஜஸ்மின் நிலைமைகளை ஓரளவு புரிந்து கொண்டாள்.

சிந்தப்படும் இரத்தத்தினதும் கண்ணீரினதும் பெறுமதி அவளுக்கு நன்றாகவே விளங்கியது. அந்த மண்ணில் தமிழர்களின் வாழ்வு நிச்சயமற்றதொன்றாகிப் போனது. சிங்களவர் சினங்கொள்ளும் போதெல்லாம் தமிழர்கள் அழிந்தனர்.

இதற்கு இடையில் ஜஸ்மினின் அண்ணன் புலிகளுடன் இணைந்து கொண்டான். அண்ணனை சில நிமிடங்கள் காணாது

விட்டாலும் தவிக்கும் அம்மா அந்தச் செய்தியை கேட்ட பின்பும் அமைதியாக இருந்தாள். சொல்லப்போனால் அவன் சென்றதை அவளும் விரும்பினாள்.

அவர்கள், வாழ்வதாக - இருந்தால் போராட வேண்டும் அல்லது அழிந்து போகவேண்டிவரும் என்பதை அம்மா அனுபவத்தில் தெரிந்திருந்தாள்.

அழிவுகள், அடாவடித்தனங்கள் - இறுதியாக பன்குளத்திலிருந்து தமிழ் மக்கள் ஒரேயடியாக விரட்டப்பட்டனர்.

ஜஸ்மின் குடும்பத்தினருடன் ஆலங்கேணி கிராமத்தில் தங்கி இருந்தாள்.

1990 இந்தியப்படை வெளியேறி சில நாட்கள் கடந்திருந்தன.

சிங்கள அரசு பேச்சுவார்த்தை என்று நாடகமாடிக் கொண்டிருந்தது. தமிழர்களின் சுதந்திர வாழ்வுக்கு தாயகத்தின் விடுதலை அவசியமானது என்பதை ஜஸ்மின் உணர்ந்து கொண்டாள். அவளும், அவளின் தோழிகளில் சிலரும் கிராமத்திலிருந்து புறப்பட்டார்கள்.

ஜஸ்மின்- அவளின் கைகளில் தேசத்தை மீட்பதற்கான ஆயுதம். அவளும், அவளது கிராமத்தவர்களும் கண்டுவிட்டு ஓடிய 'அரச காவலர்களின் கைகளில் இருந்த ஆயுதம்' இன்று அவளின் கைகளிலும் இருந்தது.

களங்களில் அவள் வீரமுடன் போரிட்டாள். சண்டை நடைபெறும் ஒவ்வொரு களத்திற்கும் போக வேண்டும் என்று அவாவி நின்றாள். சிறு வயது தொடக்கம் சிங்களவர்களின் அட்டூழியங்களையும் அடாவடித்தனங்களையும் காலத்திற்குக் காலம் அனுபவித்த அவளுக்குள்-கடினமான போராட்டவாழ்க்கையை இலகுவாக எடுக்கும் மனவுறுதி குடிகொண்டு விட்டது. அதனால்தான் முகாமிலும் சண்டைகளின் போதும் அவளால் சிரித்துக் கொண்டு உலாவமுடிந்தது.

ஆகாய கடல்வெளி இராணுவ நடவடிக்கையை புலிகள் தொடங்கியபோது அதில் ஜஸ்மினும் ஒருத்தியாகக் கலந்து கொண்டாள்.

வெவ்வேறு முனைகளால் ஆனையிறவு தளம் மீதான தாக்குதல்கள் ஆரம்பமாகின.

தேவைப்படும் போதெல்லாம் ஜஸ்மினின் துப்பாக்கியும் எதிரிகளை அகற்றப்போராடியது.

அதே நேரம் திருக்கோணமலை காட்டுப்பகுதிக்குள் நடந்து கொண்டிருந்த புலிகளின் ஒரு அணி மீது இராணுவத்தினர் பதுங்கி இருந்து தாக்கினார்கள்.

ஜஸ்மினின் அண்ணன் சபேசன் அதில் காயமடைந்திருந்தான். சில நாட்களின் பின்பு யாழ். மாவட்டத்தில் ஒரு வைத்திய சாலையில் அவன் சேர்க்கப்பட்டிருந்தான். அவனைப்பார்ப்பதற்காக வன்னிப்பகுதியில் ஏதோ ஓர் அகதிமுகாமில் தங்கி இருந்த அம்மா வந்திருந்தாள்.

மகனைப் பார்த்தபின் மகளைப் பார்க்க அவள் விரும்பினாள். சண்டை கடுமையாக நடந்து கொண்டிருந்தது. தாய் நிலத்தைக் காக்கும் போரிலிருந்து சிறு பொழுதென்றாலும் விலகி வர ஜஸ்மினால் முடியவில்லை.

உணவற்ற, உறக்கமற்ற நிலையில் ரவை மழைக்குள் நின்று அவர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். ஜஸ்மின் வழமைபோல் சிரித்தாள்; மகிழ்ச்சியாக இருந்தாள். எதிரிகளைக் கண்ட போது மட்டும் ஆவேசத்துடன் போரிட்டாள்.

மகனைப் பார்த்து விட்டு திரும்பிய தாய் அகதி முகாம் வாசலில் கால்வைத்த பொழுது அவளுக்கு துயரம் நிறைந்த அந்தச் செய்தி கிடைத்தது.

ஜஸ்மின் வீரச்சாவடைந்து விட்டாள். மகளின் இழப்பு அம்மாவின் இதயத்தை சோகமாக அழுத்தினாலும் ஜஸ்மினின் உன்னதமான வாழ்வை நினைத்து அவளால் அழ முடியவில்லை. ஆனையிறவின் உப்புக் காற்று அவளின் வீரம் நிறைந்த வரலாற்றை என்றும் சொல்லிக் கொண்டிருக்கும் என்பது அம்மாவுக்கு நன்றாகவே தெரியும்.

(25-09-1992)

# லெப். கேணல்
# டடி-நவம்



| | |
|---|---|
| பெற்றோர்: | நடேசன் செல்லப்பெருமாள் (போராளி) |
| | நாகம்மா செல்லப்பெருமாள் |
| இயற்பெயர்: | அருமைராசா |
| முகவரி: | கொக்குத்தொடுவாய், மணலாறு |
| தோற்றம்: | 02-02-1962 |
| கல்வி: | மாத்தளை பலாபதீபனை பாடசாலை 8-ம் வகுப்பு |
| உடன் பிறந்தோர் | காளியம்மா |
| | பரமேஸ்வரி |
| | இந்திராணி |
| | யோகராணி |

போராளியாய்: 1984

மாவீரனாக
தாயக மண்ணில் 15-08-1989

குறிப்பிடத்தக்க தாக்குதல்கள்:

★ முல்லைத்தீவில் சிறீலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதல்

★ முந்திரிகைக்குளத்தில் சிறீலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதல் (1987)

★ நீராவிப்பிட்டியில் சிறீலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதல் (1987)

★ கோப்பாயில் இந்திய இராணுவத்தினர் மீதான தாக்குதல் ( 10-10-1987 தொடக்கம்)

★ நெடுங்கேணியில் இந்திய இராணுவத்தின் மீதான தாக்குதல்

விசேட திறமை: சிங்கள மொழியில் ஆற்றல் மிக்கவர். உதைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டத்தில் வல்லவர்.

விசேடதகமை: முல்லைத்தீவு மாவட்டத்தளபதியாக விளங்கினார்.

★ ★ ★

இராணுவப் பரிசோதனை யொன்றின்போது கையொன்றை இழந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறான் ஒரு போராளி. வருவோர் போவோரெல்லாம் அவனுக்கு ஆறுதலும் அனுதாபமும் தெரிவிக்கின்றனர். அது அவனுக்குச் சினத்தை மூட்டுகின்றது. இறுதியாக அவனது தாய் வருகின்றாள். ''நீ போராடினது போதும். இனி உனக்கு ஒரு கை இல்லை. வீட்டிலயே இரு'' பாசத்தின் மேலீட்டால் இப்படியொரு கோரிக்கை விடுகின்றாள் தாய். அது அவனது மனக்கொதிப்பை அதிகரிக்கின்றது. தனக்கு அனுதாபம் கூறவந்தவர்களுக்கு சொல்ல வேண்டியதைச் சொல்ல இதுதான் தருணம் எனத் தீர்மானிக்கிறான்.

''எனக்கு இன்னொரு கை இருக்கு'' உறுதியுடன் தெளிவாக ஒலிக்கிறது அவன் வார்த்தைகள். அவனுக்கு ஆறுதல் கூற முனைந்தவர்களும் தமது நிலையை எண்ணி நாணுகின்றனர். கால் இழந்த போராளிகளுக்கு கிட்டு எப்படி நம்பிக்கை நட்சத்திரமாக வழிகாட்டியாக இருந்தாரோ, அதேபோலத்தான் போராட்டத்தில் தமது கரங்களை இழந்த போராளிகளுக்கு வழிகாட்டியாக விளங்குகிறான் அவன். அவன்தான் டடி.

டடி-நவம்! வன்னிக்காடுகளின் மூலைமுடுக்குகளெல்லாம் இவனுக்கு அத்துப்படி. இக்காடுகள் பற்றியபடம் இவன் நெஞ்சில் நிறைந்திருக்கும். இவன் பிறந்தது மலைப்பிரதேசத்தில். விடுதலைக்காக உழைத்தது; போராடியது வன்னிக்களங்களில். வன்னியை நேசித்த... வன்னிக்களத்திலே காயமுற்ற இவனது உயிர் பிரிந்தது தமிழகத்தில்.

''பசிலனையும் லோறன்சையும் சேர்த்தா அதுதான் நவம்'' இவனுடன் நெருங்கிப் பழகிய ஒரு போராளி கூறியவார்த்தைகள் இவை. ஒவ்வொரு போராளிக்கும் தனித்துவமான சில ஆற்றல்கள் இருக்கும். துணிச்சலுக்குப் பெயர் போனவன் பசிலன். சிறந்த மதிநுட்பத்துக்குப் பெயர்போனவன் லோறன்ஸ். இருவரது தன்மைகளையும் ஒருவனிடத்தில் கண்டதால்தான் நவத்தைப் பற்றி அப்போராளி இவ்வாறு குறிப்பிட்டான்.

அதிதியாக வந்தோரால் அகதியாக ஆக்கப்பட்டதுதான் மணலாறு மக்களின் வரலாறு. இன்றோ தமது சொந்த நிலத்தை

தாமே பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வுடன் கையில் ஆயுதத்துடன் போராட்ட உணர்வுடன் நிற்கிறார்கள் மணலாறு மக்கள். வரலாற்றில் இந்நிலையை ஏற்படுத்தியதில் கணிசமான பங்காளிகள் நவமும் அவனது தந்தையுமே. எப்போதும் துப்பாக்கியுடன் காணப்படுபவரும் ''ஓமர் முக்தார்'' என்று போராளிகளால் அழைக்கப்படுபவருமான இவனது தந்தையும் இவனும் இந்த மண்ணினைவிட்டு நாம் எங்கும் போவதற்கில்லை என்ற செய்தியை சிறிலங்கா அரசுக்கு அடிக்கடி உணர்த்தினார்கள்.

''அரசன் ஒருவன் தான் கைப்பற்றும் பிரதேசங்களைத் தன் ஆட்சியின் கீழ்வைத்திருப்பதற்கு அவனுக்கு உதவுவது அங்கு அவன் விட்டுச் செல்லும் அவனது இராணுவமுகாம்களல்ல, இதைவிட அவன் தனது பிரதேசத்து மக்களை அங்கு குடியேற்றுவதன் மூலம் சிறப்பாகச் செய்யலாம். காரணம் அங்கு குடியேறும் மக்கள் அங்கு நிரந்தரமாக வசிக்கப் போகிறவர்களாதலால் அவர்கள் எவ்வித இடர்வையும் எதிர்கொள்ளும் அவ்விடங்களைத் தமதாக்கிப் போராடுவதற்குத் தயாராக இருப்பர்'' இது ''இளவரசன்'' என்னும் நூலில் காணப்படும் மாக்கியவல்லியின் கூற்று. இதை அப்படியே நடைமுறைப்படுத்தியதால் தான் இன்று அம்பாறை என்றொரு தொகுதியே முழுச்சிங்களத் தொகுதி என்றாகிவிட்டது. இதையே படிப்படியாக திருமலை மணலாறு என விஸ்தரித்தது சிறிலங்கா அரசு. ஆனால் இது தமிழீழமண் என்று எல்லை போட்டுக்காட்டியது நவத்தின் துப்பாக்கி. குடியேற்றக்காரர்கள் என்பது ஆக்கிரமிப்பு ராணுவத்தின் ஒரு வடிவமே என்பதை இவன் உணர்ந்து அதற்கேற்ற நடவடிக்கைகள் மேற்கொண்டபடியால் இன்னொரு ஒதியமலை வரலாறு மீண்டும் நிகழாது தடுக்கப்பட்டது.

நெருக்கடிமிகுந்த கால கட்டங்களான எங்கும் இந்திய இராணுவ மணம்வீசிய அந்த நாட்களில் இயக்கத்தையும் இயக்கத்தலைமையையும் பாதுகாக்க இவன் மேற்கொண்ட ஒவ்வொரு நடவடிக்கையையும் பற்றி இவனுடன் பழகிய ஒவ்வொரு போராளிகளும் கண்கள் பனிக்க கதைகதையாகக் கூறுகின்றனர்.

சூழலுக்கேற்ற மாதிரியும் மக்களுக்கேற்றமாதிரியும் அமைந்த இவனது ஒவ்வொரு செயலும் போராட்டம் பற்றிய தெளிவை, புதிதாகப்போராட்டத்தில் இணைந்து கொள்ளும் இளைஞர்களுக்கு, சிறுவர்களுக்கு ஊட்டியது. நெருக்கடியான காலகட்டத்தில் பதற்றப்படாமல் செயற்படும் துணிவை சக போராளிகளுக்கு ஊட்டியது. காட்டில் நவம் நிற்கும் பகுதி ஒரு பாதுகாப்புவலயம் என்றே கூறலாம். அந்தளவிற்கு சிறந்த முறையில் ஒரு ஒழுங்கமைப்பை உருவாக்கியவன் இவன்.

ஒற்றைக்கையால் இவன் செய்யும் வேலைகளைப் பார்த்த ஒவ்வொருவருக்கும் இவனால் இது முடியுமானால், என்னால் ஏன்முடியாது என்ற தன்னம்பிக்கையை ஊட்டியது. அவ்வாறு உருவான போராளிகள் தான் இன்று வன்னிமண்ணைக் காத்துநிற்கின்றனர்.

கணக்கற்ற களங்களைக் கண்ட இவனை நாம் இழந்தது உண்மைதான். ஆனால் இவனால் ஊட்டப்பட்ட ஒழுங்கமைப்பு போராட்ட உணர்வு எதையும் மணலாறுமண் இழந்து விடவில்லை. அவ்வப்போது மணலாறு பிரதேசத்தில் எதிரியிடமிருந்து இவனால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களுடன் திரியும் போராளிகளும், ஊர்காவற்படையும் சொல்லும் செய்தி இது தான்!

(15. 05. 1991)

''மண்ணின் மைந்தனாக மணலாற்றில் நவம்'' என்ற தலைப்பில் வெளியாகியது

# கப்டன்
# பரஞ்சோதி



| | |
|---|---|
| பெற்றோர்: | வல்லிபுரம் சிவபாதசுந்தரம்<br>தவமணி சிவபாதசுந்தரம் |
| இயற்பெயர்: | அனுசீலன் |
| முகவரி: | திரியாய் |
| தோற்றம்: | 27-04-1975 |
| கல்வி: | திரியாய் மகா வித்தியாலயம்<br>7 ஆம் வகுப்பு |
| உடன் பிறந்தோர்: | அனுசியா<br>ஜெயசீலன்<br>தர்சினி |
| போராளியாய்: | 04—04—1988 |
| மாவீரனாக<br>தாயகமண்ணில்: | 22-03-1992 |
| விசேட திறமை: | எழுத்தாற்றல் மிக்கவர். |

அன்று பரஞ்சோதி வீடு வழமைக்கு மாறான பரபரப்பில் இருந்தது. காலையில் ரியூசனுக்கு என்று சென்ற பரஞ்சோதியைக் காணவில்லை. எனினும் காணவில்லை என்பதற்காக அவனைத்தேட வேண்டிய அவசியம் அவனது வீட்டாரிற்கோ அல்லது அயலவர்களிற்கோ இருக்கவில்லை. ஏனெனில் அந்தச் சின்னஞ் சிறிய கிராமத்தில் ஒரு இளைஞனைக் காணவில்லை என்றால் அவன் எங்கே சென்றிருப்பான் என்பது அந்த ஊராருக்கு நன்கு தெரியும்.

ஆமாம் "பரஞ்சோதி இயக்கத்திற்கு போய் விட்டான்".' அந்த ஊர்முழுவதும் ஒரு சில நாட்கள் அடிபட்ட வார்த்தை அது இயக்கத்திற்கு போவது என்பது அந்த ஊரைப் பொறுத்த வரையில் ஒரு ஆச்சரியமான விடயமாக இருக்கவில்லை. ஆனால் பரஞ்சோதியை நன்கு அறிந்தவர்களுக்கு!! ... ஆம் அவன் இயக்கத்திற்குப் போவான் என்று அவனது வீட்டாரோ, நண்பர்களோ அல்லது அந்தஊரில் அவனை அறிந்த எவருமோ எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

அவன் மிகவும் மென்மையானவன். 8 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் பருவத்தில் கூட தாயின் மடியில் தவழும் அளவிற்கு குழந்தைத்தனம் மிக்கவன். பாடசாலை விட்டால் வீடு என்று கணநேரமும் வீட்டை விட்டே பிரிந்து இருக்காதவன். அப்படியான குழந்தைத்தனம் மிக்கவன்; பந்த பாசங்களைத் துறந்து, தாய் தந்தையைப் பிரிந்து இளவயதின் இன்பங்களையெல்லாம் மறந்து எப்படித்தான் இயக்கத்தில் இணைந்துகொண்டானோ!! அது இயற்கையின் நியதியாகவோ அன்றி காலத்தின் கட்டாயமாகவோ இருந்திருக்கலாம்.

ஆனால் யதார்த்தம் என்னவென்றால், மென்மையுள்ளம் கொண்டவர்கள் தான் போராளிகளாக மாறுகின்றார்கள். ஏனென்றால் அவர்களால் தான் அடக்கு முறைகளையும் அடிமைத்தனங்களையும் பொறுக்க முடிவதில்லைப் போலும். தனது போராளியின் பிரிவினைத் தாங்க முடியாமல் ஒரு போராளி அழுவதனைப் பார்த்து நான் ஆச்சரியம் அடைந்திருக்கின்றேன். அது சாத்தியமா என்று சிந்தித்திருக்கின்றேன். அதற்கு நான் கண்ட பதில் ஒரு போராளியின் மனம் மென்மையானது என்பது தான்.

ஒரு சாதாரண மனிதன் போராளியாகின்ற பொழுது அவன் எவ்வாறு மாற்றமடைகின்றான் அல்லது மாற்றப்படு

கின்றான் என்பதற்கு உதாரணமான பல போராளிகளில் பரஞ் சோதியும் ஒருவன். வீட்டில் இருந்த பொழுது அவனிடம் காணப் பட்ட குழந்தைத்தனங்களையும் விளையாட்டுப் புத்தியினையும் அவன் இயக்கத்திற்கு வந்து பயிற்சி எடுத்ததில் இருந்து அவன் வீரமரணம் அடையும் வரை அவனிடம் காணவே முடிய வில்லை. அவனது இயக்க வாழ்க்கைவரலாறு மிகவும் குறுகிய தாக அமைந்து விட்டபோதிலும் அந்த குறுகிய காலத்திற்குள் ளேயே அவன் இயக்கத்தில் ஒரு நற்பெயரையும், நன்மதிப்பை யும் பெற்றிருந்தான் என்றால் அதற்கு காரணம் அவனது திற மையும், விசுவாசமும், ஒழுக்கமும்தான்.

தனது போராட்ட வரலாற்றின் ஆரம்ப நாட்களை திருக் கோணமலையில் ஆரம்பித்த பரஞ்சோதி பின்னர் யாழ்ப்பாணம் வந்து சாள்ஸ்அன்ரனி சிறப்புப் படைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்ட பொழுது அதில் இணைக்கப்பட்டான். அதன் பின்னர் தனக்கு கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தனது திறமையினை முழுமையாகக் காட்டினான். சாள்ஸ்அன்ரனி படைப்பிரிவினால் ஓமந்தைப் பகுதியில் நடத்தப்பட்ட முதலாவது தாக்குதலில் பங்குபற்றியவர்கள் என்ற பெருமை பரஞ்சோதியையும் சாரும். அதனைத் தொடர்ந்து பூவரசங்குளப் பகுதியில் இருந்து மன் னார் நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினரோடு நடந்த பாரிய தாக்குதலிலும் அத்தாக்குதலில் ஒரு உலங்குவானூர்தி சுட்டுவீழ்த்தப்பட்ட வெற்றிச் சம்பவத்திலும் பரஞ்சோதிக்கு முக்கிய பங்குண்டு.

அவனது அதீத திறமையினாலும், ஆற்றலினாலும் மிக வும் குறுகிய காலத்திலேயே அவனுக்கு 50 கலிபர் விமான எதிர்ப்பு ஆயுதமும், அதனுடனான குழுவின் பொறுப்பும் ஒப் படைக்கப்பட்டது. தனக்கு வழங்கப்பட்ட அந்த ஆயுதத்தினை ஒழுங்காகப் பாதுகாக்கவும், தனக்கு வழங்கப்பட்ட அந்த பொறுப்பினைச் செவ்வனே நிறைவேற்றவும் அவன் என்றும் தவறியதில்லை. பரஞ்சோதி பங்குபற்றிய ஒவ்வொரு தாக்குத லிலும் தனது உன்னத திறமையை வெளிக்காட்டிய வண்ணமே இருந்தான். அதிலொன்று நமது நெஞ்சங்களை விட்டு அகல முடியாத ஆனையிறவு இராணுவ முகாம் தாக்குதல். அத்தாக் குதலில் தனது ஆயுதக் குழுவுடன் பங்குபற்றிய பரஞ்சோதி, தனது பொறுப்பில் இருந்த இரண்டு போராளிகள் வீரமரணம் அடைந்த வேளையிலும் சற்றும் மனந்தளராது தீரத்துடன்



PUBLIC LIBRARY

போராடி தனது 50கலிபர் ஆயுதத்தினையும், போராளிகளை யும் பாதுகாத்தான்.

இயக்கத்தின் மீதும் போராட்டத்தின் மீதும் பரஞ்சோதி கொண்டிருந்த விசுவாசத்தின் தன்மையை எடுத்துக்காட்டுவதற்கு அவனது வாழ்க்கையில் நடந்த பல சம்பவங்களில் ஒன்றை உதாரணமாகக் கூறலாம். ஆனையிறவு தாக்குதலின் பின்னர் பரஞ்சோதி விடுமுறையில் யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவிற்கு சென்றிருந்தான். அவனுக்கு வழங்கப்பட்ட ஒரு வார விடுமுறை முடிந்த பின்னரும் கூட அவன் முகாம் திரும்பவில்லை. நாட்கள் நகர்ந்த வண்ணம் இருந்தன. பரஞ்சோதி அவ்வாறு நடந்து கொள்பவன் அல்லன். அதனால் அவனது பொறுப்பாளர்களுக்கு தர்மசங்கட நிலைமையாகி விட்டது. விடுமுறையில் சென்றவனைக் காணவில்லை. என்ன நடந்ததோ தெரியவில்லை என்று அவர்கள் கவலையடையத் தொடங்கிவிட்டனர். அந்நாட்களில் மணலாற்றுப்பகுதியில் பாரிய இராணுவத் தாக்குதல்களுக்கு போராளிகள் முகம் கொடுத்துக் கொண்டிருந்த நேரம். அத்தாக்குதல்களில் காயமடைந்த போராளிகள் யாழ் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட வண்ணம் இருந்தனர். இந்நேரத்தில் அங்கு காயமடைந்துவந்திருந்த தமது பிரிவுப் போராளிகளைப் பார்ப்பதற்காக வைத்தியசாலைக்குச் சென்றிருந்த சிறப்புப் படையணியின் பொறுப்பாளர்கள் சிலர் அங்கு பரஞ்சோதி கையில் காயமடைந்து வந்திருப்பதனைக் கண்டு அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தனர். விடுமுறையில் சென்றவன் எவ்வாறு காயமடைந்தான் என்பது பரஞ்சோதியோடு கதைத்த பின்னரே அவர்களுக்கு விளங்கியது.

"அண்ண! நான் லீவில போய் ரெண்டு மூண்டு நாளிலேயே அங்கு சண்டை தொடங்கிற்று. அங்க சண்டை நடக்கேக்குள்ள லீவில நிக்க எனக்கு பிடிக்கேல்ல. அதுதான் உடனேயே அங்கு போயிற்றன். அதிலதான் இந்தக் காயம்'' என்று தனது காயத்தின் வேதனையிலும் புன்சிரிப்போடு கூறி முடித்தான் பரஞ்சோதி. மணலாற்றுச் சமரின் பின்னர் பரஞ்சோதி ஆசிரியனாக மாறினான். ஆமாம் 50கலிபர் துப்பாக்கி பற்றி ஏனைய போராளிகளுக்கு கற்பிக்கும் பொறுப்பு பரஞ்சோதிக்கு வழங்கப்பட்டது. முதலில் கடற் புலியைச் சேர்ந்த போராளிகளுக்கு பயிற்சி கொடுத்து வந்த அவன் பின்னர் தனது சகபிரிவு போராளிகளுக்கு பயிற்சி கொடுத்து வந்தான். அவனது பழகும் தன்மையினாலும் ஒழுக்கத்தினாலும் திறமையினாலும் ஒவ்வொரு

போராளிகளும் அவன் மேல் நல்ல அன்பும் மரியாதையும் செலுத்தினர். அவர்கள் ஒவ்வொருவரும் அவனை பரஞ்சோதி மாஸ்ரர் என அன்பாக அழைத்தனர் இவ்வளவிற்கும் அவன் பாடசாலை நாட்களில் பெரிய கெட்டிக்காரனும் அல்ல. அவன் படித்தது 8 ஆம்தரம் மாத்திரமே.

இவ்வாறு அவன் பயிற்சி ஆசிரியனாக இருந்து வந்த காலப்பகுதியில்தான் மணலாற்றில் மற்றுமோர் பாரிய இராணுவத் தாக்குதல் ஆரம்பமாகியது. எமது தாக்குதல் வரலாறுகளில் இந்த மணலாற்றுச் சமர் தனக்கென ஓர் சிறப்பு முத்திரை பதித்த ஒன்று. அன்றில் இருந்து இன்றுவரை எமது எந்த ஒரு தாக்குதலை எடுத்துக் கொண்டாலும் அது எமது போராளிகளின் உறுதியான மனோபலத்தை எதிரிக்கு வெளிக்காட்டுபவையாகவே அமைந்து வருகின்றன. அந்த வகையில் எமது போராளிகளின் மனோபலத்தை தெளிவாக வலியுறுத்திய தாக்குதல்களில் ஒன்று இந்த மணலாற்றுச் சமர் ஆகும். இராணுவத்தினர் புதிதாகக் கொள்வனவு செய்த டாங்கிகளையும், பீரங்கிகளையும் கொண்டு முன்னேறத் தொடங்கினர். இவற்றையெல்லாம் கண்டு நாம் பயப்படுபவர்களா என்ன? எமது போராளிகள் தமது மனோபலத்தையே கவசமாகக் கொண்டு எதிர்த்தாக்குதல் தொடுத்தனர். இறுதியில் இராணுவத்தினர் தமது டாங்கிகளை இழந்த நிலையில், பீரங்கிகளை எம்மிடம் பறிகொடுத்த நிலையில் பின்வாங்கினர்.

இந்தக் தாக்குதல் வெற்றியில் பரஞ்சோதியின் பங்கு அளப்பரியது எனலாம். இத்தாக்குதலில் முன் அணியில் நின்ற அவன் தனது முழுத்திறமைகளையும் காட்டிப் போராடினான். தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு கட்டத்தில் இராணுவத்தினால் கைவிடப்பட்ட நிலையில் இருந்த வாகனம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த 50கலிபர் துப்பாக்கியைக் கழற்ற வேண்டியிருந்தது. அப்பகுதியில் நின்ற போராளிகளில் அதனைக் கழற்றத் தெரிந்தவன் பரஞ்சோதி ஒருவனே. அவன் கணநேரமேனும் தாமதிக்காது விரைவாச் செயற்பட்டான். வாகனத்தில் பாய்ந்தேறி மிகவிரைவாக அதனைக் கழற்றி சக போராளிகளிடம் ஒப்படைத்தான். இவ்வாறு மிகத் திறமையுடன் போராடிய பரஞ்சோதி இறுதியில் தலையில் காயமடைந்து யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். அவ்வளவு நாட்களும் தனது மண்ணில் விடுதலைக்காகப்போராடிய அவன் கடைசி இரண்டு நாட்களும் தனது உயிருக் சாகப்

போராடி வீரமரணம் அடைந்தான். ஆம் அவன் இறுதிவரை போராடிக் கொண்டேயிருந்தான்.

பரஞ்சோதியின் மறைவு அவனையறிந்த ஒவ்வொரு போராளிக்கும் மிகத்துயரைக் கொடுத்திருக்கும். ஒவ்வொரு போராளியுடனும் அவன் பழகும் விதம்; கடமை நேரங்களில் அவனது கண்டிப்பு; அவனது திறமை; விசுவாசம்; பொறுப்புணர்ச்சி ஆமாம் அந்தநினைவுதான் எமக்கு மீதி.

நீ மீண்டும் திரும்பி வருவாய் -என்ற
நம்பிக்கை எமக்கு இல்லை -ஆனாலும்
நீ நடந்து சென்ற பாதச் சுவடுகளை -நாம்
உறுதியுடன் பற்றித் தொடர்கின்றோம்.

(05- 06- 1992)

★ "எங்கள் காப்புக்கு பிறரை நம்ப முடியாது; நம்மை நாமே காப்பது முழுமையான காப்பாகும். உரிமையுடைய வீட்டிலே தானே நாம் விரும்பியபடி உலாவரலாம்? பிறர் வீட்டிலே எம் விருப்பப்படி நடக்க முடியுமா? அது போலத்தான் தனிநாடாகிய தமிழீழத்திற்றான் தமிழினத்துக்கு முழுமையான உரிமையும் காப்பும், விடுதலையும் உண்டு.

90228

- தலைவர் வே. பிரபாகரன்

# கப்டன் பாண்டியன்



| | |
|---|---|
| பெற்றோர்: | செல்லத்துரை துரைசிங்கம்<br>அருந்தவமலர் துரைசிங்கம் |
| இயற்பெயர்: | கிருஷ்ணகுமார் |
| முகவரி:- | சங்கானை மேற்கு<br>வடலியடைப்பு<br>பண்டத்தரிப்பு |
| கல்வி: | பண்டத்தரிப்பு மகாவித்தியாலயம்<br>5ம் தரம் |
| தோற்றம்: | 09-07-1972 |
| உடன்பிறப்பினர்: | வசந்தராணி<br>விஜயராணி<br>நந்தகுமார் |
| போராளியாய்: | 1985 |
| மாவீரனாக தாயகமண்ணில் | 23-07-1991 |
| விசேடதிறமை: | ஓட்டத்தில் வல்லவர் |

அந்தச் சிறுவன் தானும் ஓட வேண்டுமென்று அடம் பிடித்தான். அது நீண்டதூரம் ஓடும் மரதன் ஓட்டப்போட்டி. பிரபல ஓட்டவீரர்கள் பலர் கலந்துகொள்ளும் அந்நிகழ்ச்சியில் எப்படி இந்த எட்டு வயது சிறுவனை ஓட விடுவது...? என்று அந்தப் போட்டியினை ஒழுங்கு செய்த சனசமூக நிலைய நிர்வாகிகள் தயங்கி நின்றார்கள். ஆனால் சிறுவனோ ஓட வேண்டுமென்று பிடிவாதமாக நின்றான். இறுதியில் ''உனது அப்பா, அல்லது அம்மாவை அழைத்துவா, அவர்கள் சம்மதித்தால் உன்னை ஓடவிடலாம்'' என்று சொல்லி சிறுவனை அனுப்பினார்கள். அவனோ தனதுதாயை அழைத்து வந்து அனுமதி பெற்று மரதன் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டான். மரதன் ஓட்டம் என்றால் நீண்ட தூரஓட்டம். சாதாரணமாக நிறையப்பேர் ஓட ஆரம்பிப்பார்கள். களைத்து இடையில் நிற்பவர்தான் அதிகம். முழுத்தூரத்தையும் ஓடி முடிப்பது என்பதே பெரிய விடயம். பிரபல ஓட்டவீரர்கள் பலருக்கு முன்பாக ஊரே வியக்கும் வண்ணம் அந்தச்சிறுவன் நான்காவதாக ஓடி முடித்தான். ஊரிலுள்ள கடைக்காரர்கள் எல்லோரும் சேர்ந்து அந்தச் சிறுவனுக்கு சிறப்புப் பரிசு வழங்கி கௌரவித்தார்கள். இந்தச் சிறுவன் பின்னாளில் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்த மாவீரனாக வருவான் என்பதை எவரும் சிந்திக்கவில்லை. அவன் வேறு யாருமல்ல... அவன்தான் மாவீரன் கப்டன் பாண்டியன்.

பண்டத்தரிப்பு பெற்றெடுத்த அருந்தவப்புதல்வன் பாண்டியன். இவன் துரைசிங்கம் தம்பதிகளிற்கு மகனாகப் பிறந்தான். சிறுவயதிலேயே தன்னை இயக்கத்தோடு இணைத்துக்கொண்டவன். இயல்பாகவே விளையாட்டுத்துறையில் சிறந்து விளங்கினான். குறிப்பாக ஒட்டப்போட்டிகளில் இவன் பெற்ற பரிசுகள் ஏராளம் ஏராளம். இயக்க பயிற்சிகளில் கூட நீண்ட தூரம் ஓட்டத்தில் இவன்தான் முதலாவதாக வருவான். இயக்கத்திற்கு போவதற்காக கராட்டி கற்றுக் கொண்டான். இதனால் தலைமயிரை கட்டையாக வெட்டி, புரூஸ்லி மாதிரியான அசைவுகளை பாவனைகளை செய்து காட்டுவான். இதனால் இப்பகுதி மக்கள் இவனது நண்பர்கள் எல்லோரும் ''புரூஸ்லீ'' என்றே அழைத்தார்கள்.

சாவகச்சேரியில் தனது பயிற்சியைமுடித்த பாண்டியன், அந்தக் காலசட்டத்தில் பண்டத்தரிப்பு, சித்தங்கேணி, சுழிபுரம்

பகுதிப்பொறுப்பாளராக விளங்கிய மேஜர் பிரசாத்தின் கீழ் அர சியல் வேலைகளை செய்து வரலானான். எந்த நேரமும் கல கலப்பாக சிரித்தபடியே வேலைகளைச் செய்வது இவனது பழக் கம். எந்த ஒரு சூழ்நிலையிலும் தனது பகிடிக்கதைகளால் கல கலப்பை ஏற்படுத்தக் கூடியவன். இதனால் அப்பகுதி மக்கள் இவனில் அன்பைப் பொழிந்ததில் ஆச்சரியமேதுமில்லை.

இந்திய இராணுவ காலகட்டத்தின் போது இவன் பண் டத்தரிப்பு, சித்தங்கேணி பகுதிகளில் அரசியல் வேலைகளில் ஈடுபட்டான். இவனைப் பிடிப்பதற்கு இந்திய இராணுவம் நாயாய் அலைந்தது. வாகனங்கள் சகிதம் தேடித்திரிந்தனர். பொதுமக்களிடத்திலெல்லாம் 'பாண்டியன் எங்கு நிற்கிறான் என்றெல்லாம் விசாரித்தார்கள். இவர்கள் ஏன் இப்படி அலைந் தார்கள்...? எல்லாம் தங்களது பதவிகளையும், ஊதியங்களை யும், உயர்த்துவதற்காகவே. ஒரு முறை பாண்டியனுக்கு நல்ல பசி. தனது வீட்டிற்குச்சென்று சாப்பிட அமர்கிறான். களைத்து விழுந்து வந்தமகனுக்கு உணவுபரிமாற என தாயார் ஆவலுட னும் பரிவுடனும் வந்த போது ஏதோவொரு இரைச்சல் சத்தம் கேட்டது. பாண்டியன் உணர்ந்துகொண்டான். கூர்மையாக என்ன சத்தம் என்று அவதானிக்கலானான். வீட்டில் வானொலிப்பெட்டி பாடிக்கொண்டிருந்ததால் மற்றவருக்குச்சத்தம் கேட்கவில்லை. பாண்டியன் மெதுவாக எழுந்து பின் பக்கவாசல் கதவை அணு கினான். எட்டிப்பார்த்தான். காக்கியுடுப்பில் பல பேய்கள் வாகனத்தில் வந்து குதித்தனர். அந்த நேரத்தில் இவன் ஏதா வது செய்திருந்தால் அந்தப் பேய்கள் நிறையபொது மக்களைக் கொன்றிருப்பார்கள். எனவே மரதன் அனுபவம் இவனுக்கு கை கொடுத்தது. இராணுவம் இவனது வீட்டை சுற்றி வளைக்கும் முன்பு இவன் பாதுகாப்பான இடத்திலிருந்து பார்த்துக் கொண் டிருந்தான்.

இதற்குப்பின்னர் ஒரு முறை இயக்க சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டுவந்து கொண்டிருந்தான் - இன்னும் சில இடங் களில் ஒட்டுவதற்கு என சில சுவரொட்டிகள் சைக்கிளின் பின் பக்க கரியலில் கிடந்தன. பசைவாளி முன் காண்டிலில் தொங்கி யது. பண்டத்தரிப்பிலுள்ள திருப்பம் ஒன்றால் திரும்பினான். எதி ரில் இந்திய இராணுவம் துப்பாக்கி சகிதம் நின்றிருந்தது. சைக் கிளை வளைத்துக் கொண்டு வந்தவழியே திரும்பி விரையலா னான். இந்திய இராணுவம் கலைத்துக் கலைத்துச் சுட்டது- இவனது எல்லாப்பக்கத்தாலும் ரவுண்ஸ் உரசிக்கொண்டு போனது. ஆனால் எதுவும் இவனுக்குப்படவில்லை. பத்திரமான

இடத்திற்குப்போய் நின்று தனதுசைக்கிளைப் பார்த்தான் - சுவ ரொட்டிகள் ரவைகள் பட்டு பிய்ந்து போய்க்கிடந்தன. சயிக்கில் பாரிலும், பின்பக்க கரியலிலும் ரவைகள் கோலம் போட்டிருந் ததை அவதானித்தான். இந்தமுறை மயிரிழையில் உயிர் தப்பி யதை உணர்ந்தான்.

இதற்கு ஒரு வாரத்திற்கு பின்பு மீண்டும் வடலிய டைப்புப் பகுதியில் பாண்டியன் சுவரொட்டி ஒட்டிக்கொண்டிந்த போது எதிரும் புதிருமாக இந்திய இராணுவம் வந்துவிட்டது. இந்த முறை அவனால் தப்பமுடியவில்லை. வயிற்றில் சிலவெடி களுடன் கீழேசரிந்தான். மயக்கமானான் - இவனைப் பிடிப்பதற்கு இந்திய இராணுவம் எவ்வளவோ முயற்சி செய்தும் முடியாமல் கடைசியில் சுட்டு கைது செய்தது - கண் திறந்து பார்த்தால் இந்திய இராணுவமுகாம் அதன் பின்பு காங்கேசன்துறை தடுப்பு முகாம் என இவன் சிறையில் வாடினான். சுதந்திரத்தை நாடி நின்றவனை சிறைச்சாலை என்ன செய்யும்? இங்கு கைது செய்த எல்லோரையுமே இந்திய இராணுவத்தினர் மனிதர்களைப் போல் நடத்தவில்லை. விலங்குகளைப்போலவே நடாத்தினார்கள்; துன்பு றுத்தினார்கள்; சித்திரவதை செய்தார்கள், எவ்வாறெல்லாமோ செய்து இந்திய இராணுவத்தினர் தமது மனவக்கிரகங்களைத் தீர்த்துக் கொண்டனர். உளவியல் ரீதியாக கைதிகளை பாதிப் படையச் செய்தார்கள். இதனால் தமது விடுதலை உணர்வை இவர்கள் இழப்பார்கள் என நம்பினார்கள். ஆனால் இந்திய இராணுவம் எதிர்பார்த்ததிற்கு மாறாக உருக்கு போல் உறுதி யும், போராட வேண்டுமென்ற ஆவேசமும் அங்கு வளர்ந்தது. இப்படித்தான் பாண்டியனையும் சிறைச்சாலை ஒரு முழுமை யான போராளியாக்கியது. அவனது உறுதியும், ஆவேசமும், தாய் நாட்டின் மீதான பற்றும் அவனுக்கு மேலும் மேலும் வளர்ந்தது.

மண்டைதீவு சண்டையில் இவன் தப்பி வந்ததே பெரிய பாடாக இருந்தது. மண்டை தீவினை எல்லாப் பக்கமும் இரா ணுவத்தினர் சுற்றி வளைத்து விட்டார்கள். கடற்கரைப் பக்கத் தால் பீரங்கிப் படகுகள் சரமாரியாக வேட்டுக்களை தீர்த்துக் கொண்டிருந்தன. இரண்டு கெலிகளும், பொம்பர்களும் தமது இரையைத் தேடும் பருந்துகள் போல வானிலே வட்டமிட்டு தேடின. பின்னுதைப்பற்ற பீரங்கியின் மூலம் செல்களை கண் மூடித்தனமாக அடித்தவண்ணம் இராணுவம் நெருங்கியது. இவனுக்கு காலில் காயம். தனது தோழர்களுடன் மண்டைதீவு

புறக்கடலுக்கு போய் அங்கிருந்து சிறுத்தீவிற்கு வந்து அங்கிருந்து ஒருவாறு குருநகரையடைந்தான்.

வெற்றிலைக்கேணியில் தரையிறங்கிய இராணுவத்தினர், ஆனையிறவினை நோக்கி முன்னேறலாயினர். இவர்களை இடைமறிப்பதற்காக மேஜர் பவா தலைமையில் படைப்பிரிவொன்று பலாலியிலிருந்து புறப்பட்டது. இப் படைப்பிரிவை அனுப்பும் ஒழுங்கை நான் நின்று செய்து கொண்டிருக்கும் பொழுது என்னிடம் பாண்டியன் வந்தான். "எல்லாரும் ஆனையிறவுக்கு போகினம் நாங்கள் போறதில்லையோ" என்று கேட்டான். "யாழ்ப்பாணத்திற்குள் இறங்கினால் யார் பார்க்கிறது? நாங்கள் தானே. அதனால் கொஞ்சம் பொறு" என்று அவனை சமாதானப்படுத்தினேன் "எப்படியும் நாங்கள் ஆனையிறவுக்குப் போக வேணும்" என்று அடம்பிடித்தான். "கோட்டை, மாங்குளம், பலாலி, தச்சன்காடு, தீவு என்று எல்லாச் சண்டைக்கும் போனனான். இதுக்கும் கட்டாயம் போகவேணும்" என்றான். "எங்களுக்கு அறிவித்தல் வரும்போது வெளிக்கிடுவம்" என்று கூறி ஒருமாதிரி அவனை சமாளித்தேன். ஏற்கனவே கோட்டை, மாங்குளம், தச்சன்காடு, மண்டைதீவு ஆகிய இடங்களில் சண்டையிட்டு வீரவடுக்களைபாண்டியன் பெற்றிருந்தான்.

அதன் பின் யுத்தத்திற்கு எல்லோரும் ஆயத்தமாகிக் கொண்டிருந்தோம். பாண்டியனும் தனது படைப்பிரிவை சரி பார்த்துக் கொண்டான். ஒவ்வொருவராக ஒவ்வொரு குழுவாக எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்திவிட்டு என்னிடம் வந்தான். "எல்லாம் சரியண்ணை இனி வெளிக்கிடுறது தான் பாக்கி" என்றான் "சரி எல்லோரும் வெளிக்கிடுங்கோ" என்று கூறிவிட்டு புறப்பட்டேன். பாண்டியன் கையில் ஒரு வோக்மனை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். சில நாட்களாகவே வோக்மன் ஒன்றை வைத்து இயக்கப் பாடல்களை பாண்டியன் கேட்டுக் கொண்டிருந்ததை அவதானித்திருந்தோம். ஆனால் சண்டைக்குப் போகும் பொழுது ஏன் வோக்மன்? என் மனதில் வினா எழுந்தது "நாங்கள் என்ன அடிபட போறமோ அல்லது பாட்டுக் கேட்கப் போறமோ" என்றொரு போராளி பாண்டியனை மறித்து கேட்டான். இவன் என்ன பதில் சொல்லப் போகிறான் என்று நான்ஆவலுடன் காத்திருந்தேன். "மச்சான்.. அடிபடேக்க சந்தோசமாக அடிபடவேணும்... சும்மா டென்சனாக இருக்கக் கூடாது. அப்பத்தான் ஆமி ஓடுவான்... "என்

றான் பாண்டியன். ''இங்கே கொண்டு வா அதைப் பார்ப்பம்'' என்று கேட்டு அந்த வோக்மனை வாங்கினேன். அதன் பாடும் (Play) பட்டினை அழுத்திய போது ''எதிரிகளின் பாசறையைத் தேடிப் போகிறோம்'' என்று அது பாடத் தொடங்கியது. சிலாபத்துறை சண்டையின் போது இதே பாடலைப் பாடிய படியே மேஜர் ரஞ்சன் இராணுவ முகாமிற்குள் புகுந்தது எனக்கு நினைவுக்கு வந்தது.

எங்கும் ஒரே நிசப்தம். அங்கு இருந்த பற்றைகளோ மிகக் குறைவு. இருந்தவைகளும் செல்லுகளாலும், பீப்பாக்குண்டு களாலும் அரைவாசி கருகியும் சில அரைகுறைப் பச்சையாகவும் காட்சியளித்தன. அப்பிரதேசத்தில் இருந்தவையோ சில பனைம ரங்கள். அவற்றிலும் 50 கலிபர் தொடக்கம் எல்லா வகையான ரவைகளினாலும் கோலம் போடப்பட்டிருந்தன. நாங்கள் வந்த பாதை நெடுகவும் செல்களால் விதைக்கப்பட்டு அதன் எஞ்சிய புறப்பலர்கள் மட்டும் ஏராளமாகக் கிடந்தன. அங்கு பறவை களோ, விலங்குகளோ எதுவுமே இருக்கவில்லை. எப்படி அவை இருக்கும் ? இராணுவப் பேய்களும் நாங்களும் மட்டுமே நின் றோம். எமது காவலரண்களிற்கு போகும் பாதையினைப் பார்த்தேன். கானல் நீர் தெரிந்தது... அனல் பறக்கும் வெய் யில் வியர்வை வெள்ளமாக வடிய, தாகம் தொண்டையினை வறட்டியது. ஆம்! நாம் பாலைவனச் சண்டையொன்றில் நிற்கின் றோம்.

சற்று முன்னர் தான் இரண்டு பொம்பர்கள் குண்டுகளை வீசி களைத்துப்போய் சென்றிருந்தன. மேலே மீண்டும் இரைச் சல! நிமிர்ந்து பார்த்தால் 'சீ பிளேன்' டேய் எல்லாரும் மறைவாக நில்லுங்கோ இடத்தை காட்டிக் கொடுக்காதேங் கடா'' என்று யாரோ ஒருவன் கத்தினான். வேவு பார்ப்பதற் காக மிகமிக உயரத்தால் பறந்து எமது இடத்தை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தது. இதனைத் தொடர்ந்து இரண்டு கெலி கள் விரைந்து வந்து கொண்டிருந்தன. எமது விமான எதிர்ப்பு துப்பாக்கிகளுக்கு பயந்து மிக உயரத்திலேயே பறந்து தாக்கு தலை நடாத்தின. இவற்றிற்கு மத்தியில் பால்ராஜ் அண்ணை அன்று பின்னேரம் நடத்த வேண்டிய தாக்குதலைப் பற்றி எல் லோருக்கும் விபரிக்கிறார். புல்லாவெளி காவலரண்களின் முன் புறமாகவும் இரண்டு பக்கவாட்டு பக்கமாகவும் புகுந்து அடிப் பதற்கு திட்டமிடப்பட்டது. பாண்டியன் தலைமையிலான குழுவே புல்லாவெளி காவலரண்களின் முன்பக்கமாக புகுந்தடிப்பது

எனத் திட்டமிடப்பட்டது. தாக்குதலிற்கான ஏற்பாடுகளை முன்னின்ற சில தளபதிகள் ஏற்பாடு செய்கின்றனர்.

மாலைக் கதிரவன் மெல்ல படுக்கைக்கு போனான். ஆனால் கொதிமணல் இன்னும் தனது சூட்டை குறைக்க வில்லை. மாலை நேரங்களில் கேட்கும் பறவைகளின் சப்தம் எதுவுமே அங்கு இல்லை. வானம் இரத்த மயமாக சிவந்திருந் தது. வரவிருக்கும் சண்டைக்கு அறிகுறியோ? தாக்குதல் நடாத் தும் இடத்தில் எமது போராளிகள் உத்தரவை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தார்கள். இறுக்கமான மௌனம் ஒன்று அங்கு நிலவியது. உத்தரவு கிடைத்தது. தாக்குதல் ஆரம்ப மானது. எதிரியின் காவலரண்களை நோக்கி எமது வீரர்கள் பாய்ந்தார்கள். சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்கள் இலக்கு களை நோக்கி சீறிப்பாய்ந்தன. கைக்குண்டுகள் இருதரப்பி னராலும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. டொங்கான் செல்க ளும், இருதரப்பு மோட்டார் செல்லுகளும் முழங்கத் தொடங் கின. சண்டை உக்கிரமடைய புல்லாவெளிப் பிராந்தியமே கிடு கிடுவென அதிர்ந்து கொண்டிருந்தது.

பாண்டியன் தனது இலக்கினை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தான். தனது குழுவினர்களையும் உற்சாகப் படுத்தி அவர்களையும் தத்தமது இலக்குகளை நோக்கி முன்னேறச் செய்தான். அவனுக்கு முன்பாக இருந்த எதிரியின் ஜீ. பி. எம் ஜீ. ஒன்று இடைவிடாது சடசடத்து எமது போராளிகளின் முன் னேற்றத்தை தடுத்துக் கொண்டிருந்தது இதனை அவதானித்த பாண்டியன் தனது துப்பாக்கியை அருகிலிருந்த தோழனிடம் கொடுத்து பக்கத்தே வரும்படி பணித்தான் அந்த ஜீ-பீ-எம். ஜீயினை மடக்குவதற்காக அதன் பக்கவாட்டால் முன்னேறி னான். எதிரியின் துப்பாக்கி சற்று ஓய்ந்தது. அவ்விடைவெளியைப் பயன்டுத்தி பாண்டியன் பாய்ந்தான். ஆனால் அந்தோ எதிரியின் துப்பாக்கி இவனை நோக்கி மீண்டும் சடசடத்தது. வயிற்றிலும் மார்பிலும் சிலரவைகள் இவனைத்துளைத்தன. இவன் செங்குருதி தாய் மண்ணினை நனைத்தது. மனந்தளராது மீண்டும் முன் னேற முனைய மேலும் சிலவெடிகள்... தாக்குதல் முடிவடைந்து எமது தோழர்கள் திரும்பிக்கொண்டிருந்தார்கள். ''நல்ல அடி இராணுவத்தில் 22 பேருக்கு மேல் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்றார் பால்ராஜ் அண்ணை. காயமடைந்த வீரர்களை மருத் துவசிகிச்சைக்காக பின் தளத்திற்கு அனுப்பிக் கொண்டிருந்தேன். களைத்துப்போய் எமது குழுவினர் என்னை நோக்கி வந்தனர். நான் அவர்களை ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்கும் போதே

PUBLIC LIBRARY JAFFNA.

பாண்டியனை காணாததை அவதானித்தேன். ''பாண்டியன் எங்கே?'' என்று கேட்டேன். அதுவரைக்கும் சளசளவென கதைத்த அனைவரும் மௌனமாகிப் போனார்கள். அவர்கள் முகத்தில் சோகம் அப்பியிருந்தது. எல்லோரும் தலையை குனிந்து கொண்டார்கள். பாண்டியன் காயமடைந்த செய்தி எனக்கு முதலே வந்திருந்தது ''பாண்டியனுக்கு என்ன சீரியசோ? காயப்பட்டவர்களில் நான் அவனைக் காணவில்லை... என்ன எல்லாரும் பேசாமல் நிற்கிறியள்...? என்று கோபமாகக் கேட்டேன். மௌனமாகி நின்ற போராளிகளில் ஒருவன் மெதுவாக முன்னுக்கு வந்து பாண்டியனது துப்பாக்கியை என்னிடம் தந்தான். முன்னோக்கி திரும்பி பார்த்தேன். மாவீரன் ஒருவனது புகழுடலை தாங்கிய வண்ணம் எமது வீரர்கள் வந்து கொண்டிருந்தார்கள் எனக்கு விளங்கி விட்டது ''எதிரிகளின் பாசறையை தேடிப்போகிறோம்'' என்று மெதுவாக பாடியபடியே பாண்டியனின் தோழன் ஒருவன் என்னைத் தாண்டிச்சென்றான்.

21. 08. 1992

★ ★ ★

---

''ஒரு கெரில்லாப் போராளியின் வாழ்க்கையானது துன்பமும் மகிழ்ச்சியும் வெறுப்பும் கலந்த பல்வேறு பட்டறிவுகளின் (அனுபவங்களின்) கலவையாகும். இவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவகையில் உயர்வானது.''

-தலைவர் வே. பிரபாகரன்

# மேஜர் வேணு



| | |
|---|---|
| பெற்றோர்: | வாரித்தம்பி பொன்னுத்துரை<br>(காலமாகி விட்டார்)<br>ஈஸ்வரவடிவு பொன்னுத்துரை |
| இயற்பெயர்: | வேணுதாஸ் |
| முகவரி: | 76, திருமலைவீதி, மட்டக்களப்பு |
| தோற்றம்: | 05-11-1952 |
| கல்வி: | கோட்டைமுனை கனிஷ்ட<br>வித்தியாலயம்<br>(5 ஆம் வகுப்புவரை)<br>கோட்டைமுனை மகாவித்தியாலயம்<br>(12 ஆம் வகுப்புவரை)<br>கொழும்பு சட்டக்கல்லூரி<br>சட்டத்தரணி |
| உடன்பிறந்தோர்: | இராஜேஸ்வரி<br>சரோஜினிதேவி<br>ரமணமலர்<br>கோதை நாயகி<br>கிருஷ்ணமூர்த்தி<br>தேவேந்திரா |

மனைவி: ஜமுனாதேவி
(23-12-1990 இல் செங்கலடியில் சிறீலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்)

பிள்ளைகள்: அபராஜிதா
பிரவீணா

மாவீரனாக
தாயக மண்ணில்: 11-12-1991

விசேட திறமைகள்: சிறந்த துடுப்பெடுத்தாட்டக்காரர்' சிறந்த பேச்சாளர்.

விசேடதகமை: மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ் மாணவர் பேரவை மற்றும் தமிழ் இளைஞர் பேரவையின் ஆரம்பகால உறுப்பினர். மட்டக்களப்பு மாவட்ட தொழிற்சங்க சம்மேளன செயலாளராக விளங்கியவர்.

''உயர்ந்த குறிக்கோளுக்காகப் போராடுவதும், உழைப்பதும், வாழ்வதும் எமக்கெல்லாம் முழுமையான உயிர் நிறைவை, ஆத்ம திருப்தியை தருகின்றன.''

- தலைவர் வே. பிரபாகரன்

1991 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் திகதி. மட்டக்களப்பி லுள்ள மைலவட்டவான் —பாலாமடு பகுதிகளை சுற்றிவளைத் தனர் சிறிலங்கா இராணுவத்தினர். அன்று இடைவிடாத மழை. வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி ஆற்றுடன் கலந்து கொண்டி ருந்தது. இத்தனை நிகழ்வுகளுக்கு மத்தியிலும் போராளிகளை உருமறைப்புச் செய்து கொண்டிருந்தன ஆற்றங் கரையோரமா கவுள்ள கன்னாப்பற்றைகள் - முற்றுகை முடிய எவ்வளவு நேர மாகுமோ தெரியாது. இப்போதைக்கு சாப்பாடு இல்லை. இந் நிலையில் வேணு அண்ணையிடம் ஒருவன் கிசுகிசுத்தான்

''தண்ணி விடாய்க்குது''

வேணு அண்ணருக்கோ சூழ்நிலையை மறந்து சிரிப்பு வந்து விட் டது ' இஞ்சை பாரடா நம்மச் சுத்தவரத் தண்ணியிருக்கு. ஆனா தவிச்ச வாய்க்குத் தண்ணி குடிக்க முடியாத நிலையில வச்சிட்டான் இந்தச் சிங்களவன்'' என்றார். தண்ணீருக்குள் விறைத்துக் கொண்டிருந்த அனைவரும் அவருடன் சேர்ந்து சிரி த்து விட்டனர். அவர்களின் சத்தம் இராணுவத்தினருக்கு கேட் காத வகையில் மழையின் இரைச்சல் அவர்களுக்கு உதவியது.

இந்த மாதிரியெல்லாம் வாழ - பழக விடுதலைப் புலிக ளால் மட்டுமே முடியும். அதுவும் ''சிரித்துக் கொண்டே செருக் களம் வாடா'' என்று பாடிய காசி ஆனந்தன் பிறந்த மண்ணல் லவா அது. அதைவிட இதைச்சொல்லிய வேணு அண்ணையின் வரலாறு எத்தகைய பெருமை மிக்கது? அரைக்காற்சட்டை போட்டுக் கொண்டு கையில் குண்டாந்தடியையும் வீசிக்கொண்டு பொலிஸ்காரர் உலாவிய காலத்திலிருந்து நீட்டுக் காற்சட்டை போட்ட பொலிஸ் இராணுவம்—விசேட அதிரடிப்படை—இந் திய இராணுவமும் அதன் ஏவற்குழுக்களும்—இவ்வாறாக ஒரு தொடர்ச்சியான முறையில் ஒடுக்கு முறைப் படைகளை எதிர் கொண்டு வந்த வேணு அண்ணர் இவ்வாறான முற்றுகைக்கெல் லாம் கதி கலங்கிப் போகக் கூடியவரல்லர், மிக இயல்பாகவே இருந்தார். மனைவி இருபிள்ளைகள் இவர்களைப் பற்றிய நினைவு வராமலில்லை ஆனால் இது அவர் தீர்மானித்துக் கொண்ட பாதை. பெரும்பாலான கறுப்புக் கோர்ட் காரர்களைப் போல தனது சொந்த நலனுக்காக இந்தத் தேசிய விடுதலைப் போராட் டத்தை ஆதரித்த சட்டத் தரணியல்ல அவர்—எந்த விளைவு களையும் ஏற்றுக் கொள்ளக் கூடியமனநிலை கொண்டவர்.

தென்தமிழீழத்தைப் பொறுத்த வரை தமிழ்த் தேசிய உணர்வை ஊட்டி வளர்த்தவர்கள் என்று குறிப்பிடப்படும் காசி ஆனந்தன். சிவஜெயம், இரா. பரமதேவா, க. ரஞ்சன், பா. சின்னத்துரை, பன்னீர்ச்செல்வம் ஆகியோர் வரிசையில் இவரது பெயரும் குறிப்பிடப்படுகிறது. இவர்கள் அனைவருமே ஒரு காலத்தில் தந்தை செல்வாவின் சமாதியில் ''தமிழீழ இலட்சியத்தை கைவிடமாட்டோம்'' என்று சத்தியம் செய்த தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் வாய்ச் சொல்லில் நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் தான். ஆனால் கூட்டணியினரின் துரோகத் தனங்களைக் கண்டு அதிலிருந்து படிப்படியாக விலகி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தம்மை முற்றாக இணைத்துக் கொண்டவர்கள். இவர்களில் வேணு அண்ணாதான் மிக நீண்ட காலம் கூட்டணியினர் திருந்துவார்கள் என எதிர்பார்த்தவர்—அவரைப் பொறுத்த வரை அவர் விடுதலைப் புலிகளின் உணர்வுகளோடு ஒட்டியிருந்தவர். விடுதலைப் புலிகளை ஆதரிப்பதில்லை என்ற எழுத்தில் இல்லாத நடைமுறையைக் கொண்டிருந்த கூட்டணியினரின் போக்குக்கு மாறானவர். ஆனாலும் எப்படியும் கூட்டணியினர் திருந்துவார்கள் என்று எதிர்பார்த்தார்.

இவரது வீடு மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திலிருந்து 400 யாருக்குள் தான். பிரதான வீதியில் அமைந்திருந்த இவரது வீட்டிற்கு முன்னால் அடிக்கடி படையினரின் வாகனங்கள் சென்ற வண்ணம் இருக்கும். உள்ளே போராளிகளோடு சாவகாசமாக பேசிக்கொண்டிருப்பார் வேணு அண்ணா. அடுத்து மேற்கொள்ளப்பட வேண்டிய அரசியல் வேலைத்திட்டங்களைப் பற்றி அவர்கள் ஆராய்ந்து கொண்டிருப்பார். 84-85 ஆம் ஆண்டு காலத்தில் நகருக்குள் சிறீலங்காப் படையினரிடமிருந்து தப்பி வரும் போராளிகள் நம்பிக்கையுடன் செல்வது இவரது வீட்டிற்குள் தான். சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியே செல்லும் இவர், அவர்கள் வெளியேறுவதற்கான பொருத்தமான நேரம் வரும்வரை கண்ணில் எண்ணெயை விட்டுக்கொண்டு படையினரின் நடமாட்டம் பற்றி அவதானிப்பார்.

ஆரம்பகாலத்தில் விடுதலை உணர்வுள்ள இளைஞர்களை போராட்டத்துடன் இணைத்து விடுவதில் இவருக்கு பெரும் பங்கு இருந்தது. இளைஞர் பேரவை தலைவராக இருந்தவர் - எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்தில் பணியாற்றியவர் என்ற காரணங்களினால் அமிர்தலிங்கத்தின் மகனால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்த் தேசிய இராணுவத்திற்கு இளைஞர்களைத் திரட்டித்

தருமாறு இவரிடம் வேண்டினர் கூட்டணியினர். இவரோ அந்த விடயத்தில் புலிகளின் பாதையையே உறுதியாக நம்பினார்.

எத்தனையோ தடவை முற்றுகைகள், விசாரணைகள் என்றெல்லாம் சந்திக்க வேண்டியிருந்தது. அப்போதெல்லாம் இவர் போட்டிருந்த சட்டத்தரணி அங்கிதான் இவரைக் காப்பாற்றியிருக்கிறது. இவரைப் பொறுத்தவரை அந்த வகையில்தான் உதவியிருக்கிறது இவரது சட்டத்தரணி அங்கி.

1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினருடனான போர் ஆரம்பித்ததைத் தொடர்ந்து அவர்களால் இவர் கைது செய்யப்பட்டார். கடுமையான முறையில் சித்திரவதைக்குள்ளான இவர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் போது தேசத்துரோகக் கும்பலொன்று இவருக்கு நச்சு ஊசி பாய்ச்ச முனைந்தது. அங்கு வேலை செய்யும் தாதியொருவர் போட்ட கூச்சலே இவரைக்காப்பாற்ற உதவியிருக்கிறது. அந்தக் கூச்சலில் அவர்கள் தமது முயற்சியைக் கைவிட்டு ஓடி விட்டனர். அதனால் மீண்டும் சிறைச்சாலை வாசம் - மட்டக்களப்பு மாவட்ட தொழிற் சங்கங்களின் சம்மேளனத் தலைவராக இருந்த இவர் தொடர்ச்சியாக இரு மேதினங்களை சிறையில் கழித்தார். இந்தியப்படை தனது கசப்பான அனுபவங்களுடன் இந்த மண்ணை விட்டு வெளியேறும் போது அவர்களால் விடுவிக்கப்பட்ட கடைசித் தொகுதியினரில் ஒருவராக இருந்தார் இவர்.

சிறைவாசம் இருந்ததை அரசியல் முதலீடாகப் பயன்படுத்தும் வகையைச் சேர்ந்த பழைய காலசட்டத்தரணியல்ல இவர். சிறைவாசம் முடிந்து வெளியே வந்ததும் மீண்டும் தீவிரமாகச் செயற்பட்டார். 1990 ஆம் ஆண்டில் சிறிலங்காப் படையினருடன் மீண்டும் போர் வெடித்ததைத் தொடர்ந்து இவர் தலைமறைவாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

பன்குடா வெளிப் பகுதியில் தங்கியிருந்த இவரை இவரது மனைவி அடிக்கடி சந்திக்கவருவது வழக்கம். எத்தனையோ சோதனைகளுக்கு மத்தியிலேயே இச்சந்திப்புக்கு வாய்ப்புக் கிடைக்கும். தேசத்துரோகிகள், முஸ்லிம் காடையர்கள், சிறீலங்கா இராணுவத்தினர் எல்லோரையும் தாண்டி வருவதென்றால் இலேசான காரியமல்ல. இவ்வாறு ஒருநாள் இவர் வேணு அண்ணாவைச் சந்தித்து விட்டுச் செல்லும் போது துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் கேட்டன. மிகுந்த சிரமத்தின் மத்தியில்

அவரது சடலம் ஒரு கிணற்றிலிருந்து மீட்கப்பட்டது. அவரது நகைகளைப் பறித்த போது ஏற்பட்ட காயங்கள் கொலைக் கான காரணங்களை வெளிப்படுத்தியது.

மனைவியின் இழப்பு அவரால் தாங்கமுடியாததுதான். குழந்தைகளின் எதிர்காலம் அவரைப் பயமுறுத்தியதுதான். இதற்காக அவர் துவண்டு விடவில்லை. அவரது பாதை தெளிவாக இருந்தது. போராளிகளுக்கு அரசியல் அறிவை ஊட்டினார். இயக்கத்தின் மொழி பெயர்ப்பாளர்களில் ஒருவராகவும் கடமையாற்றினார். அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு இடம் பெயர்ந்த மக்களின் நலனைக் கவனித்தார். அதில்தான் திருப்தி கண்டார். அதுவே அவரது வாழ்வாயிற்று. பிள்ளைகளைச் சந்திப்பதும் நின்றுவிட்டது. அங்கிருந்த சூழ்நிலை சந்திப்புக்கு ஏற்றதாக இருக்கவில்லை.

போராட்டத்துடன் நீண்டகாலத் தொடர்புள்ளவர்கள் என்றவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான காந்தனுக்கும் இவருக்கும் இடையில் மிகுந்த நெருக்கம் இருந்தது. இருவரும் மனம் விட்டுப் பழகுவர். காந்தன் இருக்குமிடங்களிலேயே இவரையும் பெரும்பாலும் காணலாம். இருவருக்கும் இடையில் அப்படிபொரு நட்பு இருந்தது.

11. 12. 1991 அன்று காலை காந்தன் நேற்றிரவு தான் கண்டகனவை தனது நண்பர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தான். "ரெண்டு பிள்ளைகளை ஒருத்தர் கொண்டந்து இனி இதுகளை நீங்கள்தான் காப்பாத்த வேணும் எண்டு சொல்லுறார். இதுக்கு என்ன அர்த்தமிருக்கும்?" - அவனது கேள்விக்கு சில மணித்தியாலங்களில் பதில் கிடைத்தது.

அழுதபடியே வந்த ஒருவர் அந்தகவலைச் சொன்னார்: "அகதிகளுக்கு குடிசை கட்டுறதுக்கு ஐ. சி. ஆர். சியைக் கூட்டிக் கொண்டு வாறவழியிலை ஆமி படுத்திருந்து சுட்டானுகள். சத்துருக்கன், கண்ணன் டிராஜன், பிரசாந்த் ஆக்களோட வேணு அண்ணையும் செத்துப்போனார்"

அதிர்ச்சியிலிருந்து விடுபட நீண்ட நேரமாயிற்று காந்தனுக்கு. 1974 ஆம் ஆண்டிலிருந்து எங்கள் இனத்திற்காக அவர் எந்தெந்த வகையிலெல்லாம் பணியாற்றினார் என்றெல்லாம் நினைத்த போதுதான் அந்த இழப்பின் தாக்கம் மிகக் கொடூரமானதாக இருந்தது அவனுக்கு.

(17-04-1992)



# கப்டன் தேனுஜா

| | |
|---|---|
| பெற்றோர்: | சிவலிங்கம்<br>ஜெயலக்ஷ்மிதேவி |
| இயற்பெயர்: | மதனிகா |
| முகவரி: | 1ஆம் கட்டை, வல்லை வீதி, தொண்டமனாறு |
| தோற்றம்: | 12 - 3- 1971 |
| கல்வி: | உடுப்பிட்டி மகளிர் கல்லூரி<br>க. பொ. த (உயர்தரம்) வர்த்தகம் |
| உடன்பிறந்தோர்: | தர்சினி<br>சிவநேசன்<br>வசந்தகுமாரி<br>அமுதினி |
| போராளியாய்: | - 12 - 1989 |
| மாவீரராக தாயகமண்ணில்: | 14- 7- 1992 |
| குறிப்பிடக்கூடிய தாக்குதல்கள்: | சிலாவத்துறை இராணுவ முகாம் தாக்குதல்(19 - 03 - 1991)<br>ஆ. க. வெ. நடவடிக்கை (1991)<br>மணலாற்றில் சிறீலங்கா இராணுவத்துடன் மோதல் (1991) |

“நேரம் நடுநிசியையும் தாண்டிக்கொண்டிருக்கிறது. எங்கள் தேனுஜாவை இன்னும் காணோமே......

அப்ப ஏதாவது நடந்திருக்குமோ......

இதயம் நம்ப மறுத்தது. மீண்டும்......

சருகுகள் மிதிபடும் ஓசை. எல்லோர் இதயங்களிலும் நம்பிக்கையின் துளிர்ப்பு

“தேனுஜா......தேனுஜா......”வோக்கியில் எங்கள் நம்பிக்கைகளையெல்லாம் ஒன்றாக்கிக் கூப்பிடுகின்றோம். “தேனுஜா... நாங்கள் கிட்டத்தான் நிற்கிறம். வாங்கோ.”

சருகுகளின் ஓசையில் ஒரு கணம் துளிர்த்த நம்பிக்கை மீண்டும் தவிடு பொடியாய்.....

எங்கள் தேனுஜாவை நாங்கள் இழந்து விட்டோம். கசப்பான உண்மையை ஏற்றுக்கொள்ள முடியாமல் எல்லோருடைய முகங்களும் ஒரு கணம் மண் நோக்கிக் கவிழ்ந்தன.

ஆம்! இவளின் இழப்பை யாரும் இன்னும் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை.

“எப்பொழுதும் அன்பு குழைந்த முகத்துடன் எல்லோருடனும் எந்த விதப் பேதமும் இன்றிப் பழகுகின்ற மதனி சாகவில்லை” என்று அவளை நேசித்த அவளின் கிராமத்து மக்கள் இன்னும் உறுதியாகக் கூறிக்கொள்கிறார்கள்.

இதுதான் எங்களுடைய விடுதலைப் போராட்டம். ஒவ்வொரு போராளியும் வாழ்விலும் சாவிலும் இந்தத் தேசத்தின் வாழ்வுடன் இரண்டறக் கலந்து போயிருக்கிறார்கள்.

அழ மறந்துபோய் மதனியின் போராட்ட வாழ்வை நினைவு கூருகின்றனர் அவளின் பெற்றோர், சகோதரிகள்......

இவளுக்கு யாரையும் கோபிக்கத் தெரியாது. அதே நேரம் பிரச்சினைகளைக் கண்டு ஒதுங்கிப் போகின்ற சுபாவமும் இவளுக்கில்லை.

இந்திய இராணுவம் எம் மண்ணில் நிலைகொண்டிருந்த காலத்திலே மாணவியாக இருந்துகொண்டே துணிந்து தன்னுடைய பங்களிப்பைச் செய்தவள். அக்காலத்தில் இந்திய இராணுவ வெறித்தனத்துக்கெதிராக நடைபெற்ற ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள், மறியற் போராட்டங்கள் எதிலும் தேனுஜாவைக் காணலாம். வடமராட்சி மாணவர் ஒன்றியத்துடன் இணைந்து செயற்பட்ட இவள், மாணவர்கள் இந்திய இராணுவத்தால் வெறித்தனமாகத் தாக்கப்பட்ட நேரங்களில் எல்லாம் எதிரியின் பாசறை தேடிச் சென்று நியாயம் கேட்டவள். எந்த நேரத்திலும் தன் உயிருக்கு இதனால் அழிவு ஏற்பட்டு விடுமோ என இவள் அஞ்சியது கிடையாது.

வீட்டில் இருக்கும் பொழுதே தேனுஜா தெளிவான. முற்போக்கான கருத்துக்களைக் கொண்டிருந்தாள். பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்ற ஆழமான நம்பிக்கை கொண்டவள். அவள் தனது பாடசாலைப் பிராயத்திலே தனது வாழ்க்கைத் துணைவனாக நேசித்தவன் — இவளின் இத்தகைய புரட்சி மனப்பாங்கை ஏற்றுக் கொள்ள முடியாது தோற்றுப்போனான். தேனுஜாவோ ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வாழ்க்கையில் வரும் சவால்களை எதிர்கொண்டு புதிதாய்ப் பிறந்தாள்.

உண்மையில் 'அன்பு' என்பதன் உன்னத அகராதியாக இவள் திகழ்ந்தாள். துள்ளித்திரிகின்ற நடையும் எதையும் கலகலப்பாக மட்டுமே பேசத் தெரிந்த இவளின் தன்மையும் அறுக்க முடியாத பெரும் பாசப் பிணைப்பையல்லவா ஏற்படுத்தி நிற்கிறது.

இவள் காயப்பட்டிருந்த நேரம் ஏன் மதனி'' இனியாவது வீட்டில் நிற்கலாம்தானே'' என்று இவளுடன் பழகியவர்கள் கேட்ட நேரம் மட்டும் தான் இவளது முகத்திலே கோபத்தைக் கண்டதாகக் கூறுகிறார்கள்.

உண்மைதான். இதை இவளுடன் கூட இருந்த ஒவ்வொரு போராளியும் மறக்க மாட்டார்கள்.

தேனுஜா!

இவள் மகளிர் படையணியின் வரலாற்றில் ஓர் புதிய திருப்புமுனை. 1989ம் ஆண்டு 6 வது பயிற்சி முகாமிலே தனது பயிற்சியை முடித்துக் கொண்ட இவள் தனது ஒவ்வொரு செயற்

பாட்டிலும் புதிய முத்திரை பொறித்து நிற்பாள். அருள் 89 எனப்படும் துப்பாக்கி எறிகணையைச் செலுத்துவதில் இவள் ஒரு போதும் தோல்வி கண்டது கிடையாது.

தேனுஜா தனது பயிற்சியை முடித்துக் கொண்ட காலத்தில் இருந்து அவள் இல்லாமல் எந்தச் சண்டையும் நடந்தது இல்லை. அவளைச் சண்டைக்குச் செல்லவிடாது யாராலும் தடுக்கவும் முடியாதிருந்தது.

தேனுஜாவின் கள அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதே ஒரு தனி வரலாறு. எந்தக் களத்திலும் இவள் தனது தனியான முத்திரையைப் பதிக்காது வரவில்லை.

பலாலி இராணுவ முகாமைச் சுற்றி மகளிர் படை எல்லையிட்டு நின்றபோது தேனுஜாவின் கால்கள் எப்போதும் எதிரியின் முகாமைச் சுற்றிச் சுற்றி நடந்தன. இராணுவ நடமாட்டம் அனைத்தையும் ஒன்றும்விடாது அவள் விழிகள் அவதானித்தன. அப்பொழுது இராணுவப் பகுதியில் இருந்து கிரனைட், டொங்கான் ஷெல் போன்றவற்றை எடுத்து வந்தாள். இதைத் தொடர்ந்து கட்டுவனில் ஏற்பட்ட மோதலில் தேனுஜா காயமடைந்தாள். ஆனால் எந்தக் காயமும் இந்த வேங்கையினது வேகத்தை முடக்கி விடவில்லை. வீறுகொண்டெழவே வைத்தன.

சிலாபத்துறை முகாம் தாக்குதலில் இவளது போர்த் திறனைப்பற்றி எப்பொழுதும் எமது தோழிகள் பெருமையுடன் நினைவு கூருவார்கள். மன்னார் மாவட்டத்தைப் பொறுத்த வரை அங்குள்ள போராளிகளுக்கு மகளிர்படை என்றவுடன் நினைவுக்கு வருவது தேனுஜாதான். அந்தளவு தூரத்துக்குச் சிலாபத்துறை முகாம் தாக்குதலில் அவள் வீரத்துடன் போரிட்டாள்.

சிலாபத்துறை முகாம் தாக்குதலின் முதல்கட்டமாக சிலாபத்துறை மினிமுகாம் பயங்கரமான மோதலின் பின் எம்மால் வெற்றி கொள்ளப்பட்டது. அடுத்த கட்டமாகப் பிரதான முகாமைக் கைப்பற்றும் முயற்சி நடைபெற்றது. தேனுஜாவின் குழுவினர் வானிலிருந்து வரும் குண்டு மழையையோ, ஷெல் வீச்சையோ பொருட்படுத்தாது, பாய்ந்தோடி, முகாமின் ஒரு பகுதிக்குள் நுழைந்து விட்டனர். எவரின் உதவியையுமே பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் நீண்ட நேரமாகத் தேனுஜாவும் அவள் குழுவினரும் அந்த இடத்தில் நின்றவாறு, இராணு

வத்தினருக்குத் தரை மார்க்கமாகவோ, கடல் மார்க்கமாகவோ உதவி கிடைக்காதவாறு தடைசெய்து கொண்டிருந்தனர். தேனுஜா தனது அருள் 89 எறிகணைகளை ஒவ்வொன்றாக முகாமினுள் செலுத்தி எதிரியின் வேகத்தை அடக்கிக்கொண்டிருந்தாள்.

இந்நேரம் இராணுவத்தினருக்கு உதவி வழங்கும் நோக்கில் வானிலிருந்து விமான மூலம் ரவைப் பொதிகள் போடப்பட்டுக் கொண்டிருந்தன. இராணுவ நிலைக்கு அண்மையில் விழுந்த ரவைப் பொதிகளில் இரண்டைத் தனியனாக ஊர்ந்து சென்று இழுத்து வந்தாள் தேனுஜா. குழந்தையாய்க் குதூகலித்து நிற்கும் தேனுஜாவைக் களத்திலே கண்டால், தேனுஜாதான் என்று யாரும் நம்பமாட்டார்கள். அந்தளவு தூரத்துக்குச் சினங்கொண்ட வேங்கையாய்க் கிளர்ந்தெழுந்து நிற்பாள். 'சிலாபத்துறை முகாமைத் தகர்க்காது பின் வாங்க மாட்டேன்' என்ற அவளது வேகம் வீரச்சாவைத் தழுவும்வரை சிறிதும் தணியவில்லை. 'எப்படியேனும் எதிரியை இம்மண்ணிலிருந்து விரட்டிவிட வேண்டும். எம்மண்ணில் புலிக்கொடியை உயரப் பறக்கவிட வேண்டும்' என்ற மாறாத இலட்சியக் கனவுடன்தான் தனது ஒவ்வொரு நடவடிக்கைகளையும் மேற்கொண்டாள்.

சிலாபத்துறைத் தாக்குதல் தேனுஜாவை ஒரு சிறந்த போராளியாக, சிறந்த வீராங்கனையாக இந்த உலகுக்கு வெளிப்படுத்தியது. இந்தத் தாக்குதலில் இவள் தன்கையிலே காயமடைந்தாள்.

ஆனையிறவுச் சமரின்போதும் இவள் தன்னுடைய முழுத் திறமைகளையும் வெளிக்காட்டியிருந்தாள். எதிரியுடன் நேருக்கு நேர் நின்று மோதுவதிலிருந்து, களத்தில் காயப்பட்ட வீரர்களை விரைவாக இடம் மாற்றுவது, களத்தில் நின்று போராடிக்கொண்டிருக்கும் போராளிகளுக்குத் தேவையான வெடிபொருட்கள், உணவு, நீர் போன்றவற்றை வழங்குவது என்று எல்லாமுனைகளிலும் பாய்ந்தோடி நின்றாள்.

தொடர்ந்து மணலாற்றில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது தேனுஜாவின் பங்களிப்பு மறக்க முடியாதது. அடர்ந்த காட்டுக்குள் தளம்பாத உறுதியுடனும் வீரத்துடனும் நின்று போராடினாள். இந்தச் சண்டையின்போது அவளது வயிற்றில் பெரிய காயமேற்பட்டது.

இவளது ஆற்றலும், அருமையும், வீரமும், துணிவும் மகளிர் படையணிக்கென்றொரு தனித்த விசேட வேவுப் பிரிவை

உருவாக்குகின்ற அளவுக்கு வளர்த்துச் சென்றன. விசேட வேவுப் பிரிவின் பொறுப்பை ஏற்ற தேனுஜா இரவு, பகல் பாராது உழைத்தாள்.

எப்படியேனும் மகளிர் படையணி தானே முழுமையான போர்த்திட்டங்களையும் வகுத்து இராணுவ முகாமொன்றைத் தாக்கி அழிக்க வேண்டும் என்ற இலட்சியக் கனவை இதயத்துட் தேக்கி வைத்தவள், அதனைச் செயலுருவில் கொண்டு வர வேண்டும் என்று துடித்தாள்.

இயக்கச்சியைக் கைப்பற்றும் நோக்குடன் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பரேசன் பலவேகய - 2 நடவடிக்கையின் போது தேனுஜாவின் வேகத்தைக் கண்ட தளபதிகள் அனைவருமே இவளின் திறமையை வியந்து நின்றனர்.

''நாங்கள் எந்த இடத்துக்குப் போனாலும் அங்கே தேனுஜா நிக்கிறா. எப்படி இவவால இப்படி நடக்க முடிகிறது? இதுவரை இங்கேயே நிண்ட எங்களுக்குக்கூடத் தெரியாத இடமெல்லாம் இந்தப் பிள்ளைக்குத் தெரிந்திருக்குது'' என்று கூறி ஆச்சரியப்பட்டனர்.

ஆம். இயற்கையின் ஒவ்வொரு அசைவையும் கூர்ந்து அவதானித்துச் செயற்படுவதில் வல்லவளாகிய இவள் இந்தச் சண்டையின்போது எல்லோருக்கும் வழிகாட்டியாக நின்றாள்.

சிட்டுப்போல பறந்து திரிந்து எதிரியின் அசைவை அவதானித்து நின்றாள். நாம் எல்லோரும் 'எதிரி எங்கே ...எங்கே' என்று அவன் வரவைத்தேடி நிற்க, இவளோ எதிரியின் பக்கத்தில் நின்றுகொண்டே தன்னுடைய நடவடிக்கைகளை மேற்கொண்டாள். விடுதலைக்காக அவள் எதையும் செய்யத் தயாராய் இருந்தாள்.

ஒரு முறை வேவு பார்க்கப் போனவள் திடீரென்று வோக்கியில் அறிவிக்கிறாள் ''ஆர். பி. ஜீயோடை உடனை வாங்கோ'' என்று. மறுகணம் ''வேண்டாம், நானே நேரில் வருகிறேன்'' என்று அறிவித்தாள்.

எங்களுக்கு விளங்கவில்லை.

நேரில் வந்தபோது தேனுஜா சொன்னாள்: ''அக்கா எங்கடை இடத்திலை எதிரி வந்து குசாலாகத் திரியிறதைப் பார்த்தவுடன் எனக்குக் கண்மண் தெரியாமல் கோபம் வந்திட்டுது'

கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுவிட்டன். பிறகு தான் போன வேலையை யோசிச்சன். எனது தவறு விளங்கிச்சு. அதுதான் அப்படி அறிவிச்சனான்'' என்றாள்.

எதிரியைக் கண்ணால் கண்டும், அவன் குசாலாகத் திரிவதைக் கண்டும் இவள் ஏன் தன்னை அடக்கிக்கொண்டாள்.

எங்கள் மண்ணில் எதிரியின் பாதப் பதிவு கூட இருக்கக் கூடாது என்பதற்காக நிதானத்துடன் திட்டங்களை வரைந்து கொண்டிருந்தவள் இந்த வேங்கை. அதனால்தான் அவள் தனது ஆத்திரத்தை அடக்கிக்கொண்டாள்.

இன்னொருநாள் வேவு பார்க்கப் போனவள் வந்து சொன்னாள்: ''அக்கா, அந்தப் பொயின்ரிலை இரண்டு டொங்கான் இருக்கு. எப்படியும் நான்தான் அதை அடித்து எடுப்பன். இரண்டு டொங்கானையும் எடுத்து அண்ணாட்டைக் கொடுத்து எங்களுக்கு M 203 (எம் 203) ஒன்று வாங்குவன்'' என்றாள்.

எத்தனையோ ஆயிரம் கற்பனைகளைத் தனது இதயத்திற்தேக்கி எங்கள் தேனுஜா செயற்பட்டாள். சண்டை தொடங்கிய நாளில் இருந்து தன்னைப் பற்றி அவள் பொருட்படுத்தியது கிடையாது. பதினைந்து நாளாகக் குளிக்கக்கூடவில்லை. சாப்பாட்டில் கவனம் செலுத்தவில்லை. அவளது முழுக் கவனமும் எதிரியின் நிலைகளைத் தாக்கி அழிப்பதிலேயே செலுத்தப்பட்டது. ''எப்படியும் இவங்களை அடிச்சுத் துரத்திப் போட்டுத்தான் நான் குளிப்பன்.'' என்று கூறிக்கொண்டே வேகங்கொண்டெழுந்தாள்.

தமிழீழத் தாகத்தை மட்டுமே தன் நெஞ்சில் தேக்கி வளர்த்த எங்கள் தேனுஜா தன் இலக்கை நோக்கிய பயணத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டாள். எல்லோர் இதயங்களிலும் இலட்சியக் கனவை வளர்த்துவிட்டு இவள் எமக்கு வழி காட்டிச் சென்றுவிட்டாள்.

ஈழக்கனவினைச் சுமந்தவள் நினைவுகள் இன்று எங்கள் இதயங்களை ஆக்கிரமித்துள்ளது. அவள் பாதச்சுவடுகளில் எங்கள் பாதச்சுவடுகளை இன்னும் ஆழமாக பதிக்கிறோம்.

விடியலைக் காணும்வரை இந்த வேங்கைகளின் பயணம் ஓயாது.

*(09- 10- 1992)*

*1992 புரட்டாதி மாத 'சுதந்திரப்பறவைகள்' இதழிலும் வெளியானது.*



# கப்டன் எல்லாளன்

## (ஒட்டேகா)

| | |
|---|---|
| பெற்றோர்: | பாலசுந்தரம் பொன்னுச்சாமி<br>சண்முகாதேவி பொன்னுச்சாமி |
| இயற்பெயர்: | ஹரிகரன் |
| முகவரி: | அம்மன் கோவிலடி, வல்வெட்டித் துறை |
| தோற்றம்: | 01. 11. 1972 |
| கல்வி: | வல்வெட்டித்துறை சிவகுரு வித்தி யாலயம்<br>10ம் வகுப்பு |
| உடன்பிறப்பினர்: | கவிதா<br>அருணா |
| போராளியாய்: | 22-08-1988 |
| மாவீரனாக தாயக மண்ணில்: | 28-06-1992 |

வல்வை! ஆம் பல மாவீரர்களும் போராளிகளும் சிறு வயதில் அள்ளி உடம்பெல்லாம் அப்பி விளையாடிய மண். கடலின் உப்புக் காற்றை நெடுங்காலமாக சுவாசித்துக் கொண்டு இவ்வூரிற்கு இன்னும் பெருமை சேர்த்துக்கொண்டிருக்கும் அம்மன் கோவில். இக்கோவில் வீதியிலும் மதவடி கடற்கரையிலும் ஓடி, ஆடி தவழ்ந்தவன்தான் ஒட்டேகா. இரு பெண் சகோதரிகளிற்கு ஓர் ஆண் பிள்ளை என்பதனால் வீட்டில் செல்லம் அதிகம். அதனாலோ என்னவோ அவனது குழப்படிகளும் அதிகம்.

இன்றும் அந்த மண்ணைக் கேட்டாலும் அவனது குழப்படிகளையும், குறும்புத் தனத்தையும் பக்கம், பக்கமாகச் சொல்லும். அவனது பாடசாலை நாட்களில் ஒருநாள் அவன் வகுப்பறைக்கு வரவில்லை. அவன் வராவிட்டால் அன்று வகுப்பறையில் பம்பல்கள் (பகிடி) குறைவுதான். ஏன் என்று விசாரித்ததில் அம்மன் கோவில் தேர் கொட்டகையில் புறா பிடிக்க ஏறி விழுந்து கால் முறிந்து விட்டதாம். இன்னொருநாள் சிவன் கோவில்குளத்தில் குளிக்கும் போது மண்டை உடைந்ததாம். இப்படியாகப் பாடசாலை நாட்களில் பல காயங்களையும், முறிவுகளையும் சந்தித்தவன்தான் ஒட்டேகா. இதனால் மூன்று மாதங்களாகப் பாடசாலைக்கு வரவில்லை என்றாலும் அந்த வருட பரீட்சையில் திறமையாகச் சித்தி எய்தினான்.

இப்படியான வாழ்க்கை ஓட்டத்தில்தான் இந்திய ஆக்கிரமிப்பாளர் காலடி எடுத்து வைத்தார்கள். சிறுவயது முதலே போராட வேண்டும், தமிழரிற்கு விடிவு ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணங்களைக் கொண்டிருந்த ஒட்டேகாவும் அவனது நண்பர்களும் இயக்கத்தில் சேர்வதற்காக வண்டி ஏறினர். அந் நேரம் அங்கு வந்த லெப். ஜோக்கின் அவர்கள் 'டேய் நீ வீட்டில் ஓர் ஆண்பிள்ளை எனவே நீ வீட்டை போ' எனக் கூறினார். அதற்கு ஒட்டேகா 'நான் போகமாட்டேன் என்று கூறினான். ஆனாலும் அவர்கள் விடுவதாயில்லை. 'வண்டியை விட்டு இறங்கு' எனக் கூறினார்கள். 'நான் இறங்க மாட்டேன்' என்று அழுதான் ஒட்டேகா. ஒன்றும் செய்ய முடியாமல் அவனை அவர்களும் வழியனுப்பி வைத்தார்கள். அவன் தவழ்ந்து விளையாடிய மதவடிக் கடற்கரையும் வழியனுப்பி வைத்தது.

நெடிதுயர்ந்த மரங்களின் இடைகளினூடேயே பார்த்தால் ஆகக்கூடியது 50 மீற்றர் தூரம்தான் கண்களிற்குப் புலப்படும். இரவு நேரங்களில் கொடிய மிருகங்களின் கூச்சல், யானையின்

பிளிறல் ஒலி, பாம்புகள் முதலியன ஊர்ந்து செல்லும்போது ஏற்படும் சருகுகளின் ஒலி, இரவு பகல் பாராது குரங்குகள் செய்யும் அட்டகாசம். இப்படியான அடர்ந்த காடு எங்களிற் கெல்லாம் புதிது. அதை விட அங்கு நின்றவர்களின் பயமுறுத்தும் சொற்கள், ஆம்! ,இதிலிருந்து ஒரு மைல் அருகில் ஆமி நின்றான். எனவே சத்தம் போடக்கூடாது' என்ற வெருட்டல்கள். இதுதான் வவுனியா சேமமடுவில் நடந்த பயிற்சி முகாம்.

இங்குதான் ஒட்டேகாவும் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் ஒட்டேகா தனிமையில் இருந்து ஏதோ சிந்தித்துக் கொண்டிருந்தான். நான் கிட்டப்போய் நின்றதையும் கவனிக்கவில்லை. என்ன மச்சான் யோசிக்கிறாய்' என்று கேட்டேன். ஒன்று மில்லை' என்ற ஒற்றை வார்த்தை பதிலாக வந்தது. ஒன்றுமில்லை என்று சொன்னதில் ஏதோ ஒன்று இருக்கிறது என்று புரிந்து கொண்டேன். நிச்சயமாக இவன் தனது தாயைப்பற்றித்தான் சிந்தித்திருப்பான். ஏனெனில் தாயின் நம்பிக்கைகளை சிதைத்துவிட்டு வந்து விட்டான். வண்டி ஏறும்போதும் 'அம்மா கவலைப்படுவா, வேறு ஓர் பிரச்சினையும் இல்லை' என்று கூறியது எனது ஞாபகத்திற்கு வருகிறது.

பயிற்சி முகாமின் கஷ்டங்கள் நிறைய. அந்த கஷ்டங்களிற் கிடையே செல்வராஜா மாஸ்டரின் அன்பு வார்த்தைகள் எம்மை ஆறுதல் படுத்தும். இக் கஷ்டங்களிலும் ஒட்டேகா நிரம்பவும் கஷ்டப்பட்டான். ஏனெனில் எமது பயிற்சி முகாமில் உடம்பு கூடியவன் இவனே. ஆனாலும் அவ்வுடம்பைக் கொண்டு ஒழுங்காக பயிற்சிகள் செய்தான். அதனால் செல்வராஜா மாஸ்டர் ரெயினிங் கஷ்டம் என்று கூறுபவர்களிற்கு ஒட்டேகாவை உதாரணமாகக் காட்டுவார்.

பயிற்சி முகாம் அவனை முற்றிலும் மாற்றியிருந்தது. ஆம்! அவனது உடம்பு அளவான உடம்பாக மெலிந்திருந்தது. அவனது உள்ளமோ! பழைய குழப்படிகள் எங்கோ ஓடிவிட்டிருந்தன, எந்தவொரு பொறுப்பாளரைக் கேட்டாலும் ''ஒட்டேகா அவன் அமைதியான நல்லபெடியன்'' என்றே கூறுவார்கள். எல்லா நேரங்களிலும் பகிடி விடுபவன் தன் போக்கை மாற்றியிருந்தான். வேலைநேரங்களில் வேலைகளில் கவனமாயிருந்தான். ஓய்வின்போது மட்டும் அளவோடு பகிடிகள்விடுவான்.

பயிற்சியின் பின் மணலாற்றுக் காட்டில் அவனது பணி தொடர்ந்தது. மணலாறில் இந்திய இராணுவத்திற்கு எதிரான

சண்டைகளில் முன்னின்று சண்டையிட்டான். அதன் பின் இந்திய இராணுவத்தை காட்டினுள் வராமல் தடுக்க வேவு வேலைகள் செய்வதற்கு நியமிக்கப்பட்டான்.

வேவு வேலையின் போது அவன் தனக்கு ஏற்படும் அனுபவங்களை வந்து கூறுவான். அதை இப்போது நினைத்துப் பார்க்கிறேன். கிழமைக்கணக்காக தனக்குத் தேவையான உணவு உடைகளைச் சுமந்ததாலும், தொடர்ச்சியாகக் கோல்சரைக் கழற்றாததால் தோளில் ஏற்பட்டகாயத்தைக் காட்டிச் சிரித்ததை நினைக்கவா? சப்பாத்து வெட்டுகிறது என்று கூறி சப்பாத்தைத் தோளில் போட்டுக் கொண்டு வெறும் காலுடன் நடந்து வந்ததை நினைக்கவா? தூர இடங்களிற்கு போகும்போது உனக்கு என்று தரும் பழரின்னையும், சீஸ் ரின்னையும் சாப்பிடாமல் வைத்திருந்து. முகாமில் சக போராளிகளிற்குக் கொடுத்துச் சாப்பிடுவதை நினைக்கவா? முகாமில் பாய் இருக்கும் போது இரண்டு உரப்பைகளைச் சேர்த்துத் தைத்து அதை விரித்துப் படுத்திருப்பதை நினைக்கவா? ஏன் என்று கேட்டபோது பாயில் படுத்தால் நித்திரை வராது. சருகுகளிற்கு மேல் இதை விரித்து படுத்தால் மெத்தையில் படுப்பது போல் உணர்கிறேன் என்று கூறியதை நினைக்கவா? நெஞ்சம் கனக்கிறது.

இந்திய இராணுவம் பதித்த காலைத் திரும்பி எடுத்து ஓடியபின் யாழ்ப்பாணம் வந்து கொக்காவில் மாங்குளம் முதலிய சண்டைகளில் முன்னின்று திறமையாகப் போரிட்டான்.

அதன்பின் ஆனையிறவுச் சமரின்போது குறூப் பிரிக்கும் போது ஒட்டேகாவை எறிகணைப் பிரிவிற்கு பிரித்த போது, ''நான் முன்னணி சண்டைப் பிரிவிற்குப் போகப்போகிறேன்'' என்று கேட்டான். ஆனால் பொறுப்பாளர் ''எறிகணைப் பிரிவில் நில்'' என்று கூறினார். ஆனாலும் ஒட்டேகா அடம்பிடித்து முன்னணிச் சண்டைப்பிரிவிற்குச் சென்றான். ஆனையிறவு சமரில் திறமையாகச் செயற்பட்டான். அதன்போது வெற்றிலைக் கேணியில் நடந்த சண்டையில் தலையில் காயமடைந்தான்.

காயப்பட்டிருந்த காலப்பகுதியில் தானே, நீ நடந்து திரிந்த மணலாறு மீது போர் தொடுக்கப்பட்டது. இதைக் கேட்டவுடன் மணலாறு சமர்க்களத்திற்குச் செல்வதற்குக் கேட்டாயாமே. ஆனால் உன்னை அச் சமரிற்கு விடவில்லை. அதனால் நீ கவலையடைந்தாய். ஏனெனில் புனிதமான மணலாற்று மண்ணில்

பல மாவீரர்களினதும், போராளிகளினதும் கால்கள் பதிந்த இடத்தில் எதிரியின் கால்பதிந்து அசுத்தமாவதை நீ விரும்ப வில்லை.

அதன்பின் ஒட்டேகாவின் திறமைகளைக் கண்ட பொறுப் பாளர் அவனை எறிகணைப்பிரிவிற்குப் பொறுப்பாக நியமித் தார். எறிகணை செலுத்துவதில் திறமையாகச் செயற்பட்டதால் அவனை எறிகணை பயிற்சி கொடுப்பதற்கு நியமித்தார்கள்.

பயிற்சி கொடுக்கும்போது பயிற்சி எடுக்கும் போராளி களோடு சேர்ந்து அவனும் மண்மூட்டை தூக்கி ஓடுவான். பயிற் சியின்போது அவர்கள் செய்யும் எல்லாப் பயிற்சிகளையும் அவன் சேர்ந்து செய்தான். பயிற்சிக் கஷ்டங்களை எல்லாம் அவர்க ளோடு சேர்ந்து அவனும் பகிர்வதால் சகபோராளிகள் 'ஒட்டேகா அண்ணா, ஒட்டேகா அண்ணா' என்று தங்கள் அன்பை அவனோடு பகிர்ந்தார்கள். ஒவ்வொரு நாள் காலை யிலும் தனிமையில் இருந்து எறிகணைகள் பற்றிய புத்தகத்தைப் படித்து தனது அறிவை வளர்த்துக் கொண்டான். அப்புத்தகம் இப்போது இன்னொரு போராளியின் கையில் இருந்து எம்மோடு சேர்ந்து உன்னைத்தேடுகிறது.

பயிற்சிகள் கொடுப்பதில் முன்னின்றவனிற்கு, பல கால மாக சண்டைக்குப் போகவில்லை என மனம் புழுகியவனிற்கு கட்டைக்காட்டில் இராணுவம் வெளியேறி விட்டதாம். ஒட்டே காவின் பிரிவினரையும் வெளிக்கிடட்டாம் என்றவுடன் மனமகிழ்ந் தான்.

சண்டையும் உக்கிரமாக நடந்தது. ஒட்டேகா ஆமி ஓடு றான் செல்லை அடி! இன்னொன்று அடி! என்ற பொறுப்பாள ரின் சொல்லிற்கு இசைவாக செல்களை அடித்துக்கொண்டிருந் தவனிற்கு, எங்கிருந்தோ வந்த செல் அவனருகில் வீழ்ந்து வெடிக்கிறது. ஒட்டேகா என்ற போராளி மாவீரனாய்...

நாங்கள் உன்னை எங்கெல்லாமோ தேடுகிறோம். எங்க ளோடு சேர்ந்து, என் நிழல்தேடி வந்து களைப்பாறிய மக்களை அழிக்கலாம். ஆனால் என்னை அழிக்கமுடியாது என்று நிமிர்ந்து நிற்கும் மரங்களும், எனது வளங்களை எடுத்து வாழ்ந்த மக் களை அழிக்கலாம் என்னை அழிக்கமுடியாது என்று துணிந்து நிற்கும் தென்னைகளும் என்மேல் தவழ்ந்து விளையாடிய மீனவ ரையும் 'வள்ளங்களையும் அழித்தாய் வெகு விரைவில் உன்னைப் பிடித்து விழுங்கி விடுவேன் என்று ஆர்ப்பரிக்கும் கடலும், எம்மை

நீ அழித்தால் அடிக்கட்டைகளாக இருந்தாவது உனது கால்களில் குத்துவோம் என்று எதிரிக்கு எதிராகச் சவால் விடும் நெல்வயல்களும் சேர்ந்து உன்னைத் தேடுகின்றன.

ஒக்டோவின் திறமைகள் என்றும் அழியப் போவதில்லை. ஏனெனில் மணலாறு மண்ணோ, அன்றி ஆனையிறவு உப்பு வயலோ, இல்லையேல் மதவடி கடற்கரையோ, கோவில் வீதியோ அழியமாட்டாது. அவைகள் அவனது திறமைகளைக் காலம் காலமாக ஓங்கிக் கூவிக்கொண்டிருக்கும்.

எதிரி படைகளை ஓட்டமெடுக்கச் செய்த ஒக்டோவே!
ஏன் எம்மைவிட்டு விரைவாக ஓட்டமெடுத்தாய்.
எம் நெஞ்சை விட்டு உன் நினைவலைகள் ஓட்டமெடுக்கா
உன் கனவுகளை நனவாக்க நாமும்

தொடர்ந்து எதிரிகளைப் புறமுதுகிட்டு ஓட்டமெடுக்கச் செய்வோம்.

(07-08-1992)

நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக்கொண்டு உறுதி கொண்ட மக்களாக ஒன்று திரண்டு நின்றால் எந்தவொரு சக்தியாலும் எம்மை அசைக்கவோ, அழிக்கவோ முடியாது. வீர சுதந்திரம் வேண்டி நிற்கும் மக்களுக்கு உறுதிதான் வலுமிக்க ஆயுதம்.

-தலைவர் வே. பிரபாகரன்.



# மேஜர் டயஸ்

| | |
|---|---|
| பெற்றோர்: | பொன்னையா மயில்வாகனம்<br>நாகரத்தினம் மயில்வாகனம் |
| இயற்பெயர்: | தவராசா |
| முகவரி: | ஈச்சமோட்டைவீதி, யாழ்ப்பாணம் |
| தோற்றம்: | 14-06-1962 |
| கல்வி: | கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்<br>யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி<br>11 ஆம் வகுப்பு |
| உடன் பிறந்தோர்: | மகேந்திரராஜா<br>தனபாலசிங்கம்<br>திலகவதி<br>சிவசுப்பிரமணியம்<br>சுந்தரலிங்கம்<br>யோகேஸ்வரன்<br>பத்மாவதி |
| மணவாழ்வில்: | 28-06-1989 |
| மனைவி: | புனிதவதி |

PUBLIC LIBRARY
JAFFNA.

| | |
|---|---|
| மகன்: | தவக்குமரன் |
| மாவீரனாக தாயகமண்ணில்: | 21-08-1989 |
| விசேட தகமை: | அம்பாறை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளராக விளங்கியவர் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் |

குறிப்பிடத்தக்க தாக்குதல்கள்:

கொக்கிளாய் சிறீலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதல் (14-02-1985)

★ யாழ். பொலீஸ் நிலையத்தாக்குதல் (10-04-1985)
★ குச்சவெளி பொலீஸ் நிலையத்தாக்குதல் (01-06-1985)
★ வாகரையில் சிறீலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதல் (17-08-1985)
★ ஏறாவூர் பொலீஸ் நிலையத்தாக்குதல் (02-09-1985)
★ மாங்கேணி இராணுவ முகாம் தாக்குதல் (05-07-1986)
★ திருக்கோயில் வினாயகபுரத்தில் சிறீலங்கா விசேட அதிரடிப்படையினர் மீதான தாக்குதல்
★ தம்பட்டையில் சிறீலங்காப்படையின் மீதான தாக்குதல்.
★ கஞ்சிகுடிச்சாறில் சிறிலங்காப் படையினருடனான மோதல் (1986)
★ பொத்துவில் பொலிஸ் நிலையத் தாக்குதல் (1987)
காரைதீவில் தேசவிரோதிகளுடனான மோதல் (1987)
★ நிந்தவூரில் தேச விரோதிகளுடனான மோதல்

கோழைத் தனங்களுக்கும் இயலாமைக்கும் சித்தாந்த முலாம்பூசி தமிழீழ விடுதலைப் பே ராட்டத்திலிருந்து ஆயிரக் கணக்கான இளைஞர்களை அந்நியப்படுத்தியவர்கள் என்ற வரலாறு புளொட் குழுவினருக்கே உண்டு. இவர்கள் ஒரு சமயம் திருநெல்வேலியில் தமது இயக்கப்போராளிகள் சிலரைக் கைது செய்துகொண்டுபோய் தடுத்துவைத்திருந்தனர். கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யும்படி உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. கைது செய்யப்பட்ட போராளிகளினது பெற்றோரும், உறவினரும் நண்பர்களும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். உண்ணாவிரதம் நடக்கும் இடத்துக்குக் கொஞ்சம் தள்ளி புளொட் இயக்கத்தவர் நின்றனர். அந்த இடத்துக்குப் போய்ச்சேர்ந்தான் டயஸ். புளொட் இயக்கத்தவருக்குக் கேட்கக் கூடியதாக ''அவங்கள் எல்லாரையும் மண்டையில போட்டிட்டாங்கள். நீங்கள் ஏன் வீணாப் போராட்டம் நடத்துறீங்கள்? எழும்பி வீட்டுக்குப் போங்கோ.'' என்றான். வீட்டுக்காரர் தயங்கி நின்றனர். பின்பு வேம்பாகக்கசந்த இச்செய்தி கேட்டு அழுதனர். ''ஏன் நிக்கிறீங்கள் ஒண்டும் பிரயோசனமில்ல. வீட்டபோங்கோ'' மீண்டும் சொன்னான் டயஸ், இதைக்கேட்ட புளொட் இயக்கத்தவர் டயசிடம் வந்தனர். நீர் ''எப்படிச் சொல்லுவீர் மண்டையில போட்டிட்டம் எண்டு?'' என்று கேட்டனர். ''நான் திரும்பவும் சொல்லுறன் - நீங்கள் அவங்களை மண்டையில போட்டிட்டீங்கள்.'' என்றான் டயஸ். ''நீர் அதை நிரூபிப்பீரோ?'' என்று கேட்டனர் புளொட் இயக்கத்தவர் ''நான் ஏன் நிரூபிக்க வேணும்? நீங்கள் மண்டையில போட்டிட்டீங்கள் எண்டு நான் சொல்லுறன். அப்பிடிப் போடயில்லையெண்டா நீர் எல்லோ அதை நிரூபிக்கோணும்'' என்றான் டயஸ். அவ்வளவுதான் வேகமாகச் சென்றனர் புளொட் இயக்கத்தவர். சில நிமிடநேரங்களில் வேர்த்து விறுவிறுக்க வந்து சேர்ந்தனர். அவர்களுடன் கைது செய்யப்பட்ட போராளிகளும் வந்திருந்தனர். அவர்களை உண்ணாவிரதப் போராட்டம் நடத்திக்கொண்டு நிற்கும் பெற்றோருக்கு முன்னால் விட்டு விட்டு ''இப்ப என்ன சொல்லுறீர்?'' என்று கேட்டனர் புளொட் இயக்கத்தவர். அதற்கு புன்சிரிப்புடன் சொன்னான் டயஸ் ''இதுக்குத்தான் நான் அப்பிடிச்சொன்னனான். இல்லாட்டி நீங்கள் இவங்கள விட்டிருப்பீங்களோ? என்ரை அலுவல் முடிஞ்சுது. நான் வாறன்.'' போராளிகளிடமும், பெற்றோரிடமும், புளொட் இயக்கத்தவரிடமும் கூறிவிட்டுப் பயணமானான் டயஸ். போராளிகளைக் கண்ட பெற்

றோர் மகிழ்ச்சிக் களிப்பில் நிற்க அசடு வழிந்த நிலையில் நின்றனர் புளொட் இயக்கத்தவர். இதுதான் டயஸ் பாணி. டயசின் சாமர்த்தியத்திற்கு வேறு உதாரணங்கள் சொல்லி விளங்கப் படுத்தத் தேவையில்லை.

இவனது துப்பாக்கி யாழ்-பொலிஸ் நிலையத்திலிருந்து, பொத்துவில்பொலிஸ் நிலையம்வரை விடுதலைப் பண்பாடியது. வடதமிழீழத்திலிருந்து தென்தமிழீழத்துக்குச் செல்லும் போராளிகளது பயணம் வேட்டு யாத்திரையாகவே அமைவதுண்டு. இவனதுபயணமும் அதற்கு விதிவிலக்கல்ல. போகப்போகத் தாக்குதல் நடத்திக்கொண்டே சென்றது இவன் சென்ற குழு. யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைத் தாக்கிக் கைப்பற்றியவுடன் திருமலைக்குச் சென்று அங்கு குச்சவெளிப் பொலிஸ் நிலையத்தைத் தாக்கிக் கைப்பற்றி அப்படியே மட்டக்களப்புக்குச் சென்று அங்கு ஏறாவூர் பொலிஸ் நிலையத்தைத் தாக்கிக் கைப்பற்றி அப்படியே அம்பாறை மாவட்டத்தினுள் காலடி எடுத்து வைத்தான் டயஸ். வேட்டு யாத்திரையில் இடைப்பட்ட காலத்தை சூறாவளிப் பிரச்சாரத்தை மேற்கொள்ளவும் பயன்படுத்தினான் இவன்.

படுவான்கரை வயல்வெளிகளில் இவனது குரல் விடுதலையின் தேவையை எதிரொலித்தது. கொக்கட்டிச் சோலையிலும், அம்பிளாந்துறையிலும், பழுகாமத்திலும் பகிரங்கக் கூட்டங்கள் நடாத்தினான். டயசின் காலடிபடும்வரை மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் புலிகள் பெரும்பாலும் பகிரங்கக் கூட்டங்கள் நடத்தியதில்லை.

கிராமங்களில் இவனது உரையைக் கேட்கக் கூடினர் மக்கள். எல்லாம் எமது விதி என்று எண்ணியிருந்த மக்கள் மத்தியில் இனியொரு விதிசெய்வோம் என்பதை எடுத்துரைத்தான். அதைத் தொடர்ந்து போராளிகள் போலவே மக்களும் கெரில்லாக்களாக மாறினர். தோணிக்காரர் போராளிகளை ஆற்றுக்கு அப்பால் கொண்டுபோய் விட்டு திரும்பிவரும் நேரம்வரை காத்திருந்தனர். பிறகு வெட்டப்போவோர் எங்கே எஸ். ரீ. எவ் நிற்கிறான் என்பதைப் பார்த்துச் சொன்னனர். மீன்பிடிப்போர் பிடிக்கப்படும் மீன்களில் ''நம்மட பெடியனுகளுக்கு'' என்றொரு பங்கு ஒதுக்கினர். உலையில் போடப்படும் அரிசியில் வீட்டில் இல்லாதவர்களுக்கும் சேர்த்து ஒருபங்கு போட்டனர் பெண்கள். மொத்தத்தில், போராட்டத்தை, போராளிகளை நேசித்தனர்

அந்த மக்கள். இதே வேளை நாளாந்தம் இயக்கத்தில் இணைந்து கொண்டிருந்தது இளைஞர் கூட்டம்.

''படுவான்கரையில் உனது கடமை முடிந்தது. நீ இனி அம்பாறைக்குப் போ'' என்ற கட்டளை கிடைத்ததும் தமிழீழத்தின் அடி எல்லைக்கிராமங்களுக்குப் பயணமானான் டயஸ். கல்முனை, காரைதிவு, அட்டப்பள்ளம், அக்கரைப்பற்று, கோளாவில், தம்பிலுவில், திருக்கோவில், கோமாரி, வினாயகபுரம் பொத்துவில் என எல்லாக்கிராமத்தவருமே இவன் பேசுவதைக் கேட்க ஆசைப்பட்டனர். இத்தனை மக்களுக்குள்ளும் இவனுடன் பேச ஆசைப்பட்டது ஒரு உயிர். அந்தப் புனிதவதியே பின்னாளில் இவனுக்கு மனைவியானாள்.

அம்பாறை மாவட்டத்தின் வினாயகபுரம் பகுதியில் அரசபடையினருக்கு கண்ணி வெடியின் சக்தியினை முதன் முதலில் தெரியப்படுத்தியவர்களில் டயசும் ஒருவன். அத்தாக்குதலில் ஆறு அரசபடையினர் மாண்டனர். தம்பட்டை, கல்முனை என பல்வேறு இடங்களிலும் இவனது தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமேயிருந்தன. இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டதும் சில நாட்கள் மட்டுமே இவனது துப்பாக்கி ஓய்ந்திருந்தது. அந்நாளில் திருக்கோயில் முகாம் இராணுவ அதிகாரி பண்டார இவனைக்கண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தைப் பற்றிக் கேட்ட போது ''இதால உனக்கும் லாபமில்ல; எனக்கும் லாபமில்ல இதப்பற்றிச் சொல்ல ஒண்டுமே இல்ல'' என்று கூறி விட்டு இந்திய அரசின் நோக்கங்கள் பற்றி அவர்களுக்கு எடுத்துரைத்தான். போராளிகள் பொதுமக்கள் மட்டுமல்ல சிறீலங்கா இராணுவத்தினரும்'' இவனிடம் இவ்வளவு அரசியல் திறமையுள்ளதா?'' என அதிசயித்தனர். அது போலவே யாழ்ப்பாணத்தில் புலிகளுடன் இந்தியப்படையினர் போரை ஆரம்பித்த செய்தி அம்பாறை மாவட்டப் போராளிகளுக்குத் தெரிவதற்கிடையில் ''ஒரு அவசர விசயம் கதைக்க வேண்டும்'' என்று அப்போதைய அம்பாறை மாவட்டப்பொறுப்பாளர் டேவிட்டைக் கூப்பிட்டு முகாமில் வைத்துக் கொண்டு இவனையும் அழைத்து வர ஆளனுப்பியது இந்தியப்படை. இவனோ ''முதல் டேவிட் வரட்டும்; பிறகு தலைமைப் பீடத்துடன் கதைச்சுப் போட்டு பிறகு உங்க வாறதப் பற்றி யோசிக்கிறன்'' என்று கூறி இந்தியப்படையினரின் வலையில் விழாது தப்பிவிட்டான். இந்தியப் படை முழத்துக்கு முழம் முகாம் போட்டுத் தேடியும் கடைசி வரை அவர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை. கிட்டத்தட்ட

ஒரு வருடம் அம்பாறையில் இருந்த இந்திய இராணுவத்தினரை அலைய வைத்து விட்டு, தலைமையின் கட்டளையை ஏற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தான் டயஸ். அதுவரை காலமும் தான் வகித்து வந்த அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப் பாளர் பதவியைத் தன்னால் உருவாக்கப்பட்ட போராளி கஸ் ரோவிடம் ஒப்படைத்துவிட்டு வந்தான் இவன்.

யாழ்ப்பாணம் வந்ததும் யாழ் மாவட்டத்தின் அரசியல் பொறுப்பாளராக விளங்கினான். அக்காலத்தில் இறுதிவரை டயஸ் என்றால் யார் என்பதை இந்திய இராணுவத்தினரால் கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்டது.

நாலுபுறமும் இந்தியப்படை வாகனங்கள் திரிகையில் இவன் சாவகாசமாக இந்தியப் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி கொடுத்துக்கொண்டிருந்தான். அரசியல் வேலைகளை திறம்பட மேற்கொண்டு வந்தான். டயஸ் செய்த பிரச்சாரங்கள் உலகின் கண்ணைத்திறக்க வைத்தன. இங்கு ஒரு இனப்படுகொலை நடக்கின்றது என்பதை வெட்ட வெளிச்சமாக்கியது.

இவ்வளவு வேலைகளுக்கு மத்தியிலும் அந்நியருக்கெதி ரான தாக்குதல் நடத்துவதை மட்டும் இவன் பின் போடட் டில்லை. 21-08-89 தான் இவனை நேசித்தவர்களுக்கு பேரிடி யாக அமைந்தநாள். இவ்வளவு காலமும் தென்தமிழீழத்தின் கன்னாக்காடுகள் இவனுக்குக் கவசமாயிருந்தன.

அந்தக்கன்னாக்காடுகளின் சக்தி பருத்தித்துறை கட்டிடங் களுக்கு இருக்கவில்லை. இவனுக்கெனவே தயாரிக்கப்பட்ட அந்த'ரவை' இவனைச்சந்தித்துத் தொலைத்தது.

''அவரோட எல்லாரும் நல்லநேசம்'' இது டயசைப்பற்றி அவனது மனைவி கூறியது. அதை தென் தமிழீழ மக்கள் நிரு பித்தார்கள். டயஸ் மரணித்தான் என்ற செய்தி கேட்ட தம் பிலுவில், திருக்கோயில், கோமாரி மற்றும் பல இடங்களைச் சேர்ந்த மக்கள் எத்தனையோ பஸ் பிடித்து, எவ்வளவோ சோத னைகளுக்கு உட்பட்டு ஈச்சமோட்டைக்கு வந்தனர். உண்மை யாக மக்களை நேசித்தவன் இவன் என்பதற்கு நெருக்கடியான அந்தக்கால கட்டத்தில் அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த மக்கள் கூட்டமே சாட்சி.

இவனது மரணம் நிகழ்ந்தபோது இவனது மனைவி 3 மாதக்கருவாக குட்டி 'டயசை' வயிற்றில் சுமந்திருந்தாள். இவன் தனது பிள்ளையின் முகத்தைப் பார்க்கவில்லைத்தான். இவனைப் போலவேதான் புலேந்திரன் முதலான போராளிகளின் நிலையும். இவர்களெல்லாம் சந்ததிக்காக மரித்தவர்கள். அந்தத்திருப்தி. இவர்களுக்கு உண்டு.

இவன் குட்டிடயஸ் - தவக்குமரன் புலிஎங்க? என்று கேட்டால் தனது படத்தைக் காட்டுகின்றான் உரித்துப்படைத்து அதே முழியும், அதேகறுப்பும்! ''புலியாக மாறுவேன்'' என்று அந்தப்பிஞ்சு சொல்வதைக் கேட்டு இழப்பின் கொடுமையை உணர்ந்த அவள் கண் கலங்கவில்லை. சிரிக்கிறாள்.

''அப்பன்ட குணம் அப்பிடியே'' என்று பூரிக்கின்றாள்.

அப்பன் முகமறியா இந்தப்பிஞ்சின் தலையில் போராட்டச்சுமை இறங்காமலிருக்க தமிழீழம் பெறும் நாளை நாமே விரைவுபடுத்துவோம்.

(28-06-1991)

★ ★ ★

சாவையும், அழிவையும், துன்பத்தையும் பரிசாகக் கொடுத்துத் தான் நாம் சுதந்திரம் எனும் சுவர்க்கத்தைக் காண முடியும். கரடு முரடான பாதைகள் நிறைந்த இந்த இலட்சியப் பயணத்தில் எமக்கு ஒரேயொரு ஊன்று கோலாகஇருப்பது எமது உறுதிதான்.

-தலைவர் வே. பிரபாகரன்.



# லெப். சோமேஸ்

| | |
|---|---|
| பெற்றோர்: | நாகலிங்கம் நடராசா<br>பரமேஸ்வரி நடராசா |
| இயற்பெயர்: | நந்தகுமார் |
| முகவரி: | பலாலிவீதி, வசாவிளான் |
| தோற்றம்: | 16-03-1965 |
| கல்வி: | காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி.<br>வட்டு. தொழில் நுட்பக்கல்லூரி.<br>க. பொ. த. (சாதாரணம்) |
| உடன் பிறந்தோர்: | ந. நந்தினி<br>ந. நளாயினி<br>ந. நளினி<br>ந. நந்தகுமாரி<br>ந. நவமணி<br>ந. நவகுமாரி<br>ந. நவக்குமார்<br>ந. நந்தரூபி<br>ந. நந்தரூபன் |
| போராளியாக: | 11-05-1984 |
| மாவீரனாக தாயக மண்ணில்: | 05-08-1988 |
| விசேடதிறமைகள்: | உதைபந்தாட்டம், அம்பு எய்தல் போன்றவற்றில் வல்லவர். |

தமிழீழ விடுதலைப் புலிகளின் 10வது பயிற்சி முகாமின் (தமிழகத்தில்) பயிற்சியாளர்களிடையே சோமேஸ்தான் கதாநாயகன். அவனைச் சுற்றி எப்போதும் ஒரு கூட்டம் காணப்படும். பயிற்சி முகாமுக்கு புதிதாக வரும் உறுப்பினர்களென்றாலும் சரி, பயிற்சி பெற்ற மூத்த உறுப்பினர்களென்றாலும் சரி, அல்லது பயிற்சி முகாமைப் பார்வையிடவந்த வெளியார்கள் என்றாலும்சரி, ஒவ்வொருவருக்குமேற்றமாதிரிக் கதைத்து இவன் முழுத் தகவல்களையும் திரட்டி விடுவான். அதேவேளை அங்குள்ள நடைமுறைகள் பற்றியும் அவர்களுக்கு விளக்கமளித்து விடுவான். அங்கு வருபவர்களுக்கும் மற்றவர்களுக்குமிடையில் இவன்தான் தொடர்புப் பாலமாக விளங்குவான். ஏனெனில் பயிற்சி எடுக்கும் போது பயிற்சியாளர்கள் தேவையற்ற விதத்தில் எவருடனும் கதைக்க இயலாது, இதைவிட ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்திலிருந்து வந்திருப்பவர்கள். ஒருவரையொருவர் அறிமுகமில்லாதிருப்பவர்கள், ஆதலால் கதைக்கத் தயங்குவார்கள். ஆனால் சோமேசைப் பொறுத்தவரை அதெல்லாம் கிடையாது. பழகும் விதத்தினால் அவன் எல்லோருக்கும் பிடித்தவனாகி விடுவான். அதனால் அவன் கேட்கும் கேள்விகளுக்கு அவர்களால் பதில் சொல்லாமலிருக்க முடியாது.

சாப்பாட்டு நேரத்தில் இவனிடம் தான் மற்றைய பயிற்சியாளர்கள் விளக்கம் கேட்பார்கள். அவர்களுக்கு விளங்காதவற்றையும் மேலதிக விபரத்தையும் இவன்தான் விபரமாகப் புரியவைப்பான். அனைவரும் கூட்டமாக அமர்ந்திருக்க நடுநாயகமாக சோமேஸ் உட்கார்ந்திருப்பான். பகிடிவிட்டபடி சுற்றிவர எல்லோரையும் அவதானித்துக் கொண்டே சாப்பாட்டைக் குழைப்பான். பின் கதைத்துக் கதைத்து குழைத்த சாப்பாட்டைக் கொடுப்பான். அதே முகாமில் சமைத்த சாப்பாடுதான். தனியாக இருந்து இதைச் சாப்பிடும்போது இது பயிற்சிக்காலச் சாப்பாடு என்ற உணர்விருக்கும். ஆனால் சோமேஸ் கொடுக்கும் போதுமட்டும் அது அமிர்தமாக இருக்கும். வீட்டில் சகோதரர்களுடன் கூட இருந்து அம்மா குழைத்துக் கொடுக்கச் சாப்பிடுவது போல இருக்கும். புதிதாக வருபவர்கள் கூச்சத்தினால் சாப்பிட மறுத்தால் இவன் ''நீ சாப்பிடாட்டி நானும் சாப்பிட மாட்டேன்'' என்று அடம் பிடித்து சாப்பிட வைப்பான். அடுத்தநாள் அவர்கள் தாங்களாகவே சோமேஸ் முன் ஆஜராகி விடுவார்கள்.

பயிற்சியின் போது களைத்துப்போய் மைதானத்தை விட்டு வருபவர்களுக் கெல்லாம் சோமேசைக் கண்டவுடன் அக்களைப்பு பறந்து போய்விடும், இவனது பகிடிகளையும், கதைகளையும் கேட்க புது உற்சாகம் பிறந்துவிடும். பயிற்சி முடிந்ததும் அந்த முகாமின் முதல் பொறுப்பாளர் முதல் அனைவரிடமும் ஒரே கேள்வியைத்தான்கேட்டார்கள் பயிற்சியாளர்கள்-''சோமேஸ் எங்கை போறான்?'' எல்லோருக்கும் தாங்கள் போகுமிடத்துக்கே சோமேசும் வரவேண்டும் என்று ஒருஆசை. அவனிருந்தால்தான் எப்போதும் தாங்கள் உற்சாகமாக இருக்க முடியும் என்று நம்பினார்கள்.

ஒவ்வொரு பணிகள் கருதி முகாமிலிருந்து வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பப்படும் போராளிகளை கைகளால் கட்டிப் பிடித்து கண்கள் கலங்க அனுப்பிய இவன் தானும் அவ்வாறு பிரிந்து சென்றான். அந்தக் காட்சிகள் அவனுடன் பழகிய எவராலும் மறக்க முடியாதவை.

எல்லோரிடம் பழகும் விதம், விளக்கமளிக்கும் ஆற்றல் இவற்றைக் கருத்தில் கொண்டு இவன் கோயம்புத்தூர் பகுதியில் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கப் பணிகளை மேற்கொள்வதற்கென தெரிவு செய்யப்பட்டான்.

மாணவர் இயக்கப் பணிகளை இவன் சிறப்பாக மேற்கொண்டான். அக்காலத்தில் இவனுடன் பழகிய கோயம்புத்தூர் மக்கள் என்றும் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவாளர்களாகவே விளங்குவர். எந்தத் தடைகளும் அவர்களின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. ஏனெனில் ஒரு போராளி எத்தகைய உயர்ந்தகுணத்தைக் கொண்டிருப்பான் - இந்தப் போராட்டம் எத்தனை உயரிய தியாகங்களினால் கட்டியெழுப்பப்பட்டுள்ளது என்பதையெல்லாம் சோமேசுடன் பழகியும் அவன் சொல்லக் கேட்டும் உணர்ந்திருக்கிறார்கள் அவர்கள்.

எதைத்தான் செய்தாலும் இவனுக்கு தன் சொந்தமண்ணில் இருந்து போராட வேண்டும் என்பதுதான் ஆசை. தாயகத்தைப் பற்றி வரும் செய்திகள் தொடர்ந்து அங்கேயிருக்க முடியாத மனநிலையைத் தோற்றுவித்தன. அதனால்'' நாட்டுக்குப் போக வேணும்'' என்று வற்புறுத்திக் கொண்டேயிருந்தான். மாணவர் இயக்கப் பணிகளை செய்வதற்கு இவன் தான்

பொருத்தமான ஆள், ஆனாலும் இவனது நச்சரிப்புத் தாங்காமல் தமிழீழத்துக்கு அனுப்பும் பொருட்டு தமிழகக் கரையில் இருந்த முகாமுக்கு அனுப்பப்பட்டான். அங்கு சிலகாலம் பணியாற்றிய பின்னரே இவனுக்கு தாயக மண்ணை மிதிக்கும் பாக்கியம் கிடைத்தது.

அந்தக் காலத்தில் சிறிலங்காப்படை இவனது சொந்தக் கிராமமான பலாலிப் பகுதி முழுவதையும் ஆக்கிரமித்திருந்தது. கள்ளக் குடியேற்றக்காரர்களை தடுக்கவென்று அமைக்கப்பட்ட இராணுவ முகாமினால் அந்தமண்ணின் பூர்வீகக் குடிமக்கள் அகதிகளாக்கப்பட்டனர்

இவன் இப்பகுதியைச் சேர்ந்தவனென்பதாலும், இப்பகுதியை நன்கறிந்தவன் என்பதாலும் இப்பகுதியை வேவு பார்க்கும் குழுவில் இணைக்கப் பட்டான். தான் மழலையாய் நடைபயின்ற மண்ணில், உருண்டு புரண்டு விளையாடிய மண்ணில் இன்று ஒளிந்து ஒளிந்துப் போய் வேவு பார்க்கும் நிலை வந்து விட்டதே என்று வருந்தினான். ஆனாலும் வரலாறு தனக்கு இட்டபணிகளைச் செய்யும் மனத்திருப்தி இவனுக்கு இருந்தது.

கட்டுவன் காவலரணில் இவன் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில், 21-5-87 அன்று சிறிலங்காப் படையினருடனான மோதலில் காயமடைந்தான். காலில் காயமடைந்து யாழ் வைத்திய சாலையில் இருக்கும் போது இவனுடைய அன்னை இவனைப் பார்க்க வந்தார். தான் முத்தமிட்டு வளர்த்த அந்தக்கால்கள் கட்டிலில் காயத்துடன் ஓய்வெடுப்பதைக் கண்டதும் துக்கம் தாழவில்லை. அதனால் ''தம்பி நீ இவ்வளவு காலமும் இயக்கத்துக்கு வேலை செய்தது போதும்; இனி வீட்டை வா. உனக்கு ஏழு பொம்பிளைச் சகோதரங்கள் இருக்கெல்லே. அதுகளுக்கெல்லாம் உழைக்க வேணும்தானை வீட்டவா என்று கேட்டார் அவ்வளவுதான்! இவன் சீறியெழுந்தான். தான் இருக்குமிடம் வைத்தியசாலை என்பதையும் மறந்தான், ''எல்லாத் தாய்மாரும் சண்டைக்குப்போ எண்டு பிள்ளையளை அனுப்புற நேரத்தில நீ வீட்டவரச் சொல்லியோ கேக்கிறாய்? நீயும் ஒரு தாயோ? எங்கட இடமெல்லாம் ஆமிக்காறன் பிடிச்சு வைச்சிருக்கிறான். இந்தநேரத்தில வீட்டை வரச் சொல்லிக் கேக்கிறாய். இஞ்சையிருந்துபோ. இனிமேல் இதைப் பற்றிக்கதைச்சா நான் வீட்டையே வரமாட்டன்'' என்று கத்தினான். வேதனையுடன் தாய் அங்கிருந்து நகர்ந்தார்.

பெற்றதாயை இப்படி அவன் ஏசியதற்கு சில காரணங்கள் இருந்தன. முதலாவது இவன் காயப்படுவதற்கு முதல்நாள் தான் யாழ்மாவட்டத் தளபதியாக இருந்த ராதா சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திருந்தார் - அதுவும் இவன் காயப்பட்ட அதே சுட்டுவன் பகுதியில் - ஒருதாயைப் போன்ற கவனிப்புடன் அவனை நேசித்த ராதாவை இழந்த ஆத்திரம் அவனுள் குமுறிக் கொண்டிருந்தது. ராதாவை இழந்த சோகத்தில் இருக்கையில் தனது தாயார் வந்து இப்படிக் கேட்டதை அவனால் பொறுக்க முடியவில்லை. அடுத்தது அவனுடைய காயத்தின் வேதனை. இவையிரண்டும் இல்லாவிட்டால் இவன் தனது வழமையான பாணியிலே சிரித்துக் கதைத்து தனது மறுப்பைத் தெரிவித்திருப்பான். ஏழ்மையான குடும்பச் சூழ்நிலை - ஏழு சகோதரிகள் - குடும்பத்தின்மீது அவனுக்குப் பாசமிருந்ததுதான். ஆனாலும் அதைவிட தேசத்தின் மீதிருந்த பாசம் கூடுதலாக இருந்தது.

இந்திய இராணுவத்துடனான போர் ஆரம்பித்ததும் இவனுக்கு ஜீ- பி- எம்- ஜீயுடன் நின்று போரிடும் சந்தர்ப்பம் கிடைத்தது; குளப்பிட்டி, வட்டுக்கோட்டை, ஏழாலை போன்ற இடங்களில் இந்தியப் படையினர் இவனது அணியிடம் பேரிழப்பைச் சந்தித்தனர்.

இறுதியாக 04-08-1988 இல் நித்திகைக் குளத்தில் இந்திய இராணுவத்தினருடனான மோதலில் இவன் வீரச்சாவெய்தினான்-நித்திகைக்குளத்தில் இருந்த எமது முகாமொன்றைக் கைப்பற்றிய இந்திய இராணுவம் அங்கிருந்து தாம் புறப்பட்ட முகாமுக்கு திரும்பிச் சென்றது. இவ்வாறு திரும்பிச் செல்லும் வழியில் அவர்களுக்கு விழுந்த அடி மீண்டும் அதே முகாமுக்குத்தான் வழி காட்டியது. அதனால் திரும்ப அங்கேபோய் நின்று கொண்டு தமது அடுத்தகட்ட நடவடிக்கை பற்றித் தீர்மானித்தனர். இந்நிலையில் ''நீ போனாலும் அடிப்போம்; வந்தாலும் அடிப்போம்'' என்று இந்திய இராணுவத்தினருக்கு படிப்பிப்பதற்காக அந்த முகாம் மீது தாக்குதல் நடத்தத்தீர்மானித்தான் சோமேஸ். மிகவும் கிட்டிய தூரத்தில் தான் நின்றுநடத்தப்போகும் அந்தத் தாக்குதல் எப்படி நடக்கப்போகின்றது என்பது அவனது மனத்திரையில் தெரிந்தது- அதனால் 10 கைக்குண்டுகளுடனே சென்றான் - அங்கிருந்த தனது அயற்கிராமத்தவனாகிய நெடுமாறனிடம் ''இந்தச் சண்டையில நான் செத்தா வீட்டுக்காறருக்கு அறிவிச்சிடடாப்பா; அவை இப்ப இடம்பெயர்ந்து விசுவமடுவில

தான் இருக்கினம்; அது உனக்குத் தெரியும் தானே?'' என்று கேட்டான் - அவன் திட்டமிட்டபடியே சண்டைமிக மூர்க்கமாக நடைபெற்றது. 10 கைக்குண்டுகளும் முடிந்தநிலையில் திரும்பி வந்து மீண்டும்பல கைக்குண்டுகளை எடுத்துக் கொண்டு போய்ப் போரிட்டான் சோமேஸ். அந்தத் தாக்குதலில் எஸ்-எல்-ஆர். பிறன் எல்-எம்-ஜி சுடுகுழல், ரவைகள் இப்படியாக பல ஆயுதங்கள் எமக்கு கிடைத்தன. ஆனால் நாம் சோமேசை இழந்து போனோம்.

பொது அறிவு சம்பந்தமான விடயங்களில் சந்தேகம் ஏற்படும்போது எமக்கு விளக்கமளிக்கும் சோமேஸ்- எவர் தவறு விட்டாலும் நக்கீரன் பாணியில் அதே சமயம் அவர்களது மனம் கோணாமல் நகைச்சுவையாகவே அத்தவறைச் சுட்டிக்காட்டும் சோமேஸ்- போராளிகளின் எந்தப் பிரச்சினையானாலும் தனக்கு அப்பால் போகாத நிலையில் தீர்த்து வைக்கும் சோமேஸ்-அந்த 10 ஆவது முகாமின் கதாநாயகன் சோமேஸ் - கோயம்புத்தூர் மக்களின் மனதில் என்றும் நிறைந்திருக்கும் சோமேஸ் இன்று இல்லை என்னும் போது எம்மால் நம்பமுடியாமல் இருக்கிறது.

இவனை நினைக்கும் போது மிக முக்கிய சம்பவமொன்று நினைவுக்கு வருகிறது .இந்தியப்படையுடன் போர் தொடங்கிய பின்னர் ஒவ்வொரு இடமாக இந்தியப்படை பிடித்து வந்தது. நாம் யாழ் மாவட்டத்தை விட்டு வன்னிக்காடுகளுக்கு போயிருந்தோம் - தொடர்ச்சியான போர் களைப்பையும் ஏற்படுத்தியிருந்த வேளை அது; அடுத்து என்னென்ன நடக்குமோ என்ற நிலை- இதைப் பற்றி பலரும் பலவிதமாகக் கதைத்துக் கொண்டிருந்தனர் . அப்போது சோமேஸ் சொன்னான். ''இனித் தான் இந்தியன் ஆமி வாங்கப் போறான்; எப்படிக் காடு இருக்குதெண்டு படிக்கப் போறான் - நாங்கள் இவனுக்குப்படிப்பிச்சுக் காட்டுவம்''. சோமேஸ் சொன்னபாணி அனைவருக்கும் புது உற்சாகத்தை ஊட்டியது. உறுதியுடன் தோள்களில் ஆயுதங்களை மாட்டிக் கொண்டனர்.

சோமேஸ் சொன்னது போலவே இந்திய இராணுவம் தமிழீழக் காடு எப்படி இருக்கின்றது என்பதை படித்தது. அதற்காக நிறையவிலை கொடுத்தது.

இந்திய இராணுவம் எமது மண்ணை விட்டகன்றதும் காட்டுக்குள்ளிருந்து மீண்டும் யாழ் குடாவை நோக்கி வந்தோம்.

வரும் வழியில் இவன் ''இந்தியன் ஆமி இனித்தான் வாங்கப் போறான்'' என்று கூறி எமக்கு உற்சாகமூட்டிய இடத்தைக் கண்டோம். அன்றைய காட்சியை நினைக்கும் போது நெஞ்சு கனத்தது- அந்த இனிமை இனி இல்லைத்தான்- ஆனால் நாம் சோர்வாக இருப்பது அவனுக்குப் பிடிக்காது. அதனால் மீண்டும் எமது துப்பாக்கியைச் சரிபார்த்தபடி வண்டியில் ஏறினோம். அவன் பிறந்த இடமான பலாலியைப் பார்க்க வேண்டும் என்ற அவசரத்துடன். இப்போது அவன் தனது தாய்க்கு கூறிய வாசகம் நினைவுக்குவருகிறது- ''இது எல்லாத் தாய்மாரும் சண்டைக்குப்போ எண்டு பிள்ளைகளை அனுப்புறநேரம்.''

*(28-08-1992)*

---

நாம் ஓர் இலட்சிய விதையை விதைத்திருக்கிறோம். அதற்கு எமது வீரர்களின் இரத்தத்தால் நீர் பாய்ச்சி வளர்க்கிறோம். அந்த விதை வளர்ந்து விருட்சமாகி எமது மாவீரர்களின் கனவை ஒருநாள் நனவாக்கும்.

★ ★ ★

உங்களது குழந்தைகள் தமது உயிருக்கும் மேலாக தமது தாய்நாட்டின் விடுதலையை நேசித்தார்கள். இந்த உத்தமமான வர்களை ஒரு புனித இலட்சியத்திற்கு உவந்தளித்த பெற்றோராகிய நீங்கள் நிச்சயம் பெருமை கொள்ள வேண்டும். உங்களது குழந்தைகள் சாகவில்லை. சரித்திரமாகி விட்டார்கள்.

-தலைவர் வே. பிரபாகரன்



# மேஜர் கார்வண்ணன்

| | |
|---|---|
| பெற்றோர்: | சிவஞானசுந்தரம்<br>ராஜேஸ்வரி |
| இயற்பெயர்: | சிவஜோதி |
| முகவரி: | மிருசுவில் வடக்கு, கொடிகாமம் |
| தோற்றம்: | 04-06-1969 |
| கல்வி: | உசன் இராமநாதன்<br>மகா வித்தியாலயம்<br>க. பொ. த. (உயர்தரம்) |
| உடன்பிறப்பினர்: | சிவரஞ்சன் (இந்திய இராணுவத்தால்<br>சுட்டுக் கொல்லப்பட்டார்)<br>சிவசேரன் (போராளி)<br>சிவகாந்தன்<br>சிவகாந்தினி<br>சிவசந்திரன் |
| போராளியாய்: | 01-01-1990 |
| மாவீரனாக<br>தாயக மண்ணில்: | 06-10-1992 |

விசேட திறமை: வேவு பார்த்தலில் வல்லவர், திறமை யான சாரதி

விசேட தகமை: அராலிச் சந்திக்கு அண்மையில் இடம் பெற்ற கண்ணி வெடித்தாக்கு தலில் (சிறீலங்கா இராணுவத்தின் வடபிராந்திய தளபதி டென்சில் கொப்பேகடுவ, யாழ் மாவட்ட தளபதி விஜய விமலரட்ண, வட பிராந்திய கடற்படை தளபதி கொமடோர் சி. ஒ. றொகான் ஜெயமான, லெப். கேணல் ஜி. எச், ஆரியரட்ணா, லெப். கேணல் ஒ. பலிப்பான, லெப் கேணல் எஸ். ஆர். ஸ்ரீபன், மேஜர் என். எஸ். டி. அல்விஸ், கடற்படை லெப்டினன்ட் லங்கா திலக, கடற் படை லெப்டினன்ட் டபிள்யூ. டி. சி. டபிள்யூ விஜயபுர, இராணுவ சிப்பாய் ஒ. விக்கிரமரட்ணா ஆகியோர் மீதான தாக்குதலில்) திறம்பட செயற் பட்டமைக்காக 12-09-1992 அன்று தலைவர் வே. பிரபாகரனால் சிறப் புப் பரிசு வழங்கிக் கௌரவிக்கப் பட்டவர்.

★ ★ ★

எமது தாய்நாடு விடுதலை பெறவேண்டும். எம்மைப் பிணைத்திருக்கும் அடிமை விலங்குகள் உடைத்தெறியப் பட வேண்டும். எமது மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும். இந்த இலட்சியம் ஈடேற வேண்டுமாயின் நாம் போராடித்தான் ஆக வேண்டும். இரத்தம், சிந்தித்தான் ஆகவேண்டும்.

-தலைவர் வே. பிரபாகரன்

யாழ். குடா நாட்டின் செம்மண் தோட்டவெளிகளையும் மணற்பரப்புக்களையும் ஆக்கிரமித்து அழிக்க காத்திருந்த யுத்த டாங்கிகளின் இரும்புச்சங்கிலிகளிடையே 1992 ஆம் ஆண்டுபிரசவித்தது. ஈழமண்ணின் வானப்பரப்பெங்கும் போர் மேகங்கள் கருத்தரித்திருந்தன. எந்நேரமும் பெரும் அனர்த்தங்களுடன் கூடிய போர் வெடிக்கும் சூழ்நிலை உருவாகியிருந்தது. யாழ். குடா நாட்டினை ஆக்கிரமித்து அழிவுகளை செய்வதற்காய் சிங்கள வெறியர்கள் அணிவகுத்து போர் வெறிமுற்றிய தளபதிகளின் பின்னால் தயாராய் நின்றனர். குடாநாட்டின் தரைவழித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு நாலாபுறமும் அன்னியரால் முற்றுகையிடப்பட்டது. பலாலிப் பெருந்தளமும், ஆனையிறவு வெற்றிலைக்கேணி இராணுவ வேலியும், சகல தீவக பிரதேசத்து இராணுவ குடியிருப்புக்களும், குடாநாட்டின் மையத்தை குறி பார்க்க ஆரம்பித்தன. புனிதமான எம் தாயக பூமியை இரும்பு டாங்கிகளும், பீரங்கி வாகனங்களும் அழுக்குப் பாதங்களும் நசிக்க துடியாய்த்துடித்தன. சிங்களத்தளபதிகள் போர்ப் பிரகடனத்தையும், போர்ச்சவாலையும் விடுத்தபடியிருந்தனர்.

இன்னும் ஓர் மூலையில், ஈழத்தை காப்பதற்காய் புலி வீரர்கள் உயிரையேதுசாக்கி, புழுதி மணற் பரப்பிடையே இராணுவ வேலியை ஊடறுத்து, இராணுவ முள்ளென்புகளை முறிப்பதற்காக பகீரதப்பிரயத்தனத்தில் ஈடுபடுகின்றனர். எதிரியின்பிரதேசத்தை அடையும் புலிவீரர்களோ துரதிர்ஷ்டவசமாக எதிரியால் இனங்காணப்பட்டு, உருவாகும் சண்டையில் உயிர்களை அர்ப்பணிக்கும் சமயம் அவர்களது உடலைக் கூட நாம் மீட்க முடியாது போய்விடும். இந்த வேளையிலும் புலிவீரர்கள் தம் இலக்குகளை விடாது தேடி வேவு வேலைகளை தீவிரப்படுத்துவர். அத்தகைய விசேட வேவுப் பிரிவின் ஒரு போராளிதான் பீற்றர். குடாநாட்டை கைப்பற்றுவோம் எனச்சூளுரைத்த இனவெறியர்களை, முக்கிய சிங்கள தளபதிகளை, இராணுவ இயந்திரத்தை உயிரூட்டும் சக்திகளை ஒட்டு மொத்தமாக அழித்து ஆயிரக்கணக்கான தமிழரது உயிர்களையும், லட்சக்கணக்கான பெறுமதி கொண்ட ஈழ வளங்களையும் காப்பாற்றிய பெரும்பணியில் ஈடுபட்டவன் இவன்.

எமது தலைவர் கூறுகின்ற ''தோல்விகளைக்கண்டு பின்வாங்காதே; தோல்விகளில் வரும் தவறுகளைத்திருத்த முற்படுங்கள் வெற்றிகிட்டும், விடாமுயற்சியும், நம்பிக்கையும், ஆர்வமும் எமக்கு வெற்றியை ஈட்டித்தரும்'' என்பதையே பீற்றர் செயல்

வடிவில் மேற்கொண்டு தேசத்தலைவரிடமே பாராட்டையும், பரிசிலையும் பெற்றுக்கொண்டான்.

ஆம், பீற்றர், இவன் முன்னெடுத்துச் செல்லும் தாக்குதல்கள் யாவும் வெற்றியாக அமைவதுடன் எதிர்பார்க்கின்ற மிகப்பெரிய இலக்கையும், அடையச் செய்பவை. ஏனெனில் பீற்றர் எதையுமே செய்ய முடியும் என்ற நம்பிக்கையும், இடைவிடாத முயற்சியும், மிகுந்த திறமையும் உடையவன். இவனது இழப்பு எம்மிதயங்களை ஒரு கணம் உலுப்பி உள்ளத்தின் ஒவ்வொரு மூலையிலும் வலியைப் பரப்பியதொன்று. வரலாறு காணாத வெற்றியின் பின்னணியில் எம்மைத் தேம்பவைப்பதாய் இவன் மரணம் அமைந்தது. இவன் இன்னமும் வாழ்ந்திருந்தால் இன்னமும் பலமான இலக்குகளை தகர்க்க வழிவகுத்திருப்பான் என எண்ணுகையில் இதயம் கனக்கின்றது.

அபார துணிச்சலோடு ஓய்வின்றி உழைக்கும் இவனது வரலாறு மிக நீண்டது. எம்மியக்கத்தில் முழுமையான போராளியாக இணைவதற்கு முன்னமே பல துணிச்சலான சாதனைகளைப் படைத்துள்ளான். இந்திய ஆக்கிரமிப்பு புயலிலும் போர்மழையிலும் எம்தேசம் தவிக்கையில் எமது போராட்டவடிவத்தை மாற்றி தலைமறைவு கெரில்லாப் போர் படையாக செயற்படுகையில் இவனது கிராமத்துக்கு சென்ற அன்றே இவனை சந்திக்க முடிந்தது. எதிரியின் தேடுதல் வலையில் இருந்து இவனது கிராமத்து மரங்களும், பசுமையான கழனிகளும், பாசமான மக்களும் எம்மைக் காத்து அரவணைத்ததை மறக்க முடியாது. எமது வெற்றிக்கான தளங்களை அமைத்துத்தந்த தேசாபிமானிகளுள் இவர்களும் அடங்குவர். இவர்களும் எம்மை அரவணைப்பதோடுமட்டுமல்லாது எதிரியை அழிக்கும் வழிவகைகளை நாம் மேற்கொள்ள பீற்றர் பெருமளவு உதவினான். நாம் தலைமறைவாக இருந்த வேளை, வெளியில் சென்று சகல வேலைகளையும் மிகப்பொறுப்புடன் செய்து தருவதில் இவன் கண்ணாக இருந்தான். எவரையுமே சந்தேகமாக நோக்கும் அந்நியனின் கூடாரத்திற்கே சென்று அவனைப்பற்றிய பூரண தகவல்களை திரட்டுவதில் இருந்து, மக்களிடம் உணவைப் பெற்று எமக்குத்தருவது வரை, சகல பணிகளையும் முன்னின்று செய்பவன் இவன்தான்.

இச்சமயத்தில் எங்கே இவன் கைது செய்யப்பட்டு தாக்கொணா சித்திரவதையினால் எம்மை இனங்காட்டி விடுவானோ எனும் அச்சம் உள்ளூர எமக்கு எழுவதுண்டு. எத்தகைய மறைவிடங்களில் நாம் மறைந்திருந்தாலும் காலையில் பீற்றரில் தான்

அனேகமாக விழிப்போம். அத்துணை ஆர்வமும் விவேகமும் உடையவன். அககாலகட்டத்தில் நாம் அப்பகுதியில் ஆக்கிரமிப்பாளர்கள் மீதும் அடிவருடிகள் மீதும், நடாத்திய பல தாக்குதல்களில் அதிகமானவை பீற்றரினால் வேவு பார்க்கப்பட்டு ஒழுங்கு செய்யப்பட்டவையாகும் ஆக்கிரமிப்பாளர்களை திகில் கொள்ளவைத்த இத்தாக்குதல்களில் முக்கிய பங்காளன் இவன் சயனைட் வில்லை அணியாது எதிரியோடு நட்பாகப் பழகி வீதிகளில் திரியும் பீற்றர்தான் என்பதை இறுதிவரை அந்நியர் அறியவில்லை.

இந்திய ஆக்கிரமிப்புக் காலம். ஒரு அதிகாலைப் பொழுது இருளை மெதுவாக விரட்டிய வண்ணம் ஒளியேற்றிக் கொண்டிருந்த வேளை ஒரு பரந்த மரத்தின் அடிவாரத்தில் என்னைத் துயில் கலைத்து எழுப்பினான் பீற்றர் முந்திய தினம் படையினரால் அதிக தூரம் துரத்தப்பட்ட களைப்பு உடலை இன்னமும் விட்டகலாமல சோம்பல் முறித்தவாறு, ''என்னடாப்பா?'' இலேசான எரிச்சலோடு வினவினேன். ''அண்ணை முதலில ரீயைக் குடியுங்கோ, முக்கியமான ஒரு விசயமிருக்கு'' இனிய சிரிப்பொன்று தவழ்ந்தது. ''என்ன என்ன விசயம் கெதியில சொல்லு'' அவசரபபடுத்தினேன்.

அண்டைக்குச் சொன்ன மாதிரி நேற்றுப் போய்ப்பார்த்திட்டன். அதோட அவனோட அரை மணித்தியாலம் இருந்து கதைச்சிட்டு 'பிறணையும்' தூக்கிப் பார்த்திட்டு வந்திட்டன் நம்ப முடியாதவாறு 'என்னண்டடா போனனீ' என்றுவினவ, 'என்னமோ அவனுக்குக் கெட்ட காலமாக்குப்; சினேகிதம் பிடிச்சாச்சு. அண்டைக்குப் பார்த்த வேம்புக்குக் கீழ பத்துப் பேர் தான் இருக்கிறான்கள் இஞ்சால மாமர மூலையில் 'பிறண்' கிடக்கு' கொஞ்சம் எட்டத்தில 'கால் கஸ்ரோ' இருக்கு, ஏமலாந்திக் கொண்டு இருக்கிறான். வடிவாய் போய்க் குடுத்தா இனி உங்களைத் தேடமாட்டான். உறுதியாக அவன் வார்த்தைகளைச் சிதற நான் சிந்தனையில் ஆழ்ந்தேன். 'இனியும் நீங்கள் அடிக்காட்டி நான் பிறணைக் கொண்டு ஓடித்தான் வருவன்' அவனது உறுதியான பேச்சும் சிறந்த வேவும் எம்மை புது வேகத்துடன் ஒரு சண்டையை நடாத்த வைத்தன, ஒவ்வொரு பிரதேசத்திலும் சிதறியிருந்த எங்கள் வீரர்களை ஒன்று திரட்டி தாக்குதல் திட்டம் தீட்டப்பட்டது.

அக்காலகட்டத்தில் எம்மில் ஒருசிலர் தென்படினும் மக்கள் வீடுகளை விட்டு ஓடுவதாலும், அதனை எதிரி அறிந்து அப்பிரதேசத்தை சல்லடையிடுவதனாலும் எமது மக்களின் முன்னால் கூட மறைந்து செல்லவேண்டியிருந்தது இவ்வாறு இருக்கையில் ஒரு துணிகரத்தாக்குதலை எங்ஙனம் நடாத்துவது? அதுவே எம் சிந்தனையை நிறைத்திருந்தது.

'அண்ணை உதுக்கு வழி ஒரு லொறி பிடிச்சு பொது சனம் மாதிரி நைசாப் போய் அடிக்கிறதுதான். நான் லொறிக்கு முன்னால ஒரு நூற்றைம்பது யாரில் போய் நிலைமையைப் பாக்கிறேன். சரியெண்டா அடியுங்கோ. இல்லாட்டி நைசா இறங்கி மாறுங்கோ, நான் எப்பிடியும் வந்திடுவன்' அவனது ஆலோசனைகள் ஏற்றதாக அமையவே அணிகளைத் தயார்படுத்திய பின் லொறி தேட ஆரம்பித்தோம். இறுதியில் ஒரு பிறேக் அற்ற (நகைச்சுவையாக பேர்த்துக்கேபாது என்போம்) லொறியே கிடைத்தது. மேஜர் ஸ்ரீ சாரதி ஆசனத்தில் வெற்று மேனியும் தலைப்பாகையுமாக அமர்ந்திருக்க, நானும் அதே கோலத்தில் அருகில் அமர்ந்து கொள்ள பின்புறம் யாவரும் பதுங்கியிருந்தனர்.

'அண்ணை இவன் சொல்வழி கேளாமல் முன்னுக்குப் போறான். அவன் கூப்பிட்டுக் கதைச்சானெண்டால் இவனும் வீணா மாட்டுப்படப்போறான்'- ஸ்ரீ கூற நான் சிந்திக்கும்போது பீற்றர், உற்சாகமாக ஏதோ பாடலை முணுமுணுத்தபடி சைக்கிளை மிதிக்க ஆரம்பித்தான். 'கிட்ட வந்திட்டோம் பிறேக்கை மெதுவாப் பிடி' கூறினேன். ஸ்ரீ லங்கொண்ட மட்டும் அமத்தி இயலாது விட கட தட சத்தத்துடன் லொறி கட்டுப்பாடு இல்லாது மெதுவாக நெருங்கியது சமீபத்தில் சென்று எதிரியைக் கடந்தவன் கையை உயர்த்தி கலைவைச் செறிந்தபடி செல்ல நம் உசாரானோம். திடீரென எம்மிதயங்கள் நின்று இயங்கின. எமக்கும் பீற்றருக்கும் இடையயான வீதியின் விளிப்பில் திடீரென சுமார் 10 இந்தியப்படையினர் ஒழுங்கையால் வந்து ஏறினர். அவர்களில் ஒருவன் அப்பகுதி படைப் பொறுப்பாளன். நிலைமை கட்டு மீறி விடவே சுமார் 3 யார் தொலைவில் நின்ற சில எதிரிகள் மீது கைக்குண்டை வீசி சண்டையை ஆரம்பித்தோம். எதிர்பாராத தாக்குதலினால் எதிரிகள் கணப்பொழுது திகைத்த வேளை லொறியின் பின் பக்கத்தின் ஊடாக அம்பு போலப் பாய்ந்து எமது போராளிகள் தாக்கத் தொடங்கினர். நாம் எதிர்பார்த்ததை விட அதிக எதிரி

PUBLIC
JAFFNA

கள் நம் குண்டு மழையில் குளிக்க வேண்டி ஏற்பட்டது. எஃகு உறுதிபடைத்த எம்வீரர்கள் சடுதியாகப் பாய்ந்து தாக்க எதிரிகள் ஓட ஆரம்பித்தனர். சொற்ப நேரத்தில் அப்பகுதியை கட்டுப்பாட்டினுள் கொணர்ந்து 14 இந்திய இராணுவத்தை கொன்று 9 ஆயுதங்களையும், ஏராளமான இராணுவத் தளபாடங்களையும் கைப்பற்றினோம்.

இச்சண்டையில் ஓர் உறுதி மிக்க இளம் வேங்கை கப்டன் இல்மன் வீரச்சாவெய்தி எமை மீளாச்சோகத்தில் ஆழ்த்தினான். நண்பனை இழந்த வேதனைச் சுமையோடும் வெற்றிப் பெருமிதத்தோடும் துரிதமாக பின் வாங்கினோம்.

தற்செயலாகத் திரும்பிப்பார்த்த வேளை எனக்கு அதிர்ச்சியும் கடும் கோபமுமே ஏற்பட்டது. ஏனெனில் சந்தியிலே சைக்கிளில் சாய்ந்தவாறு சிறிதும் அச்சமின்றி பீற்றர் எமைப்பார்த்து சிரித்தவாறு நின்றான். வெடிச்சத்தங்களின் விளைவாக சூனியமாகி விட்டபகுதியில் அவன் நிற்பதை என்னால் சகிக்க முடியவில்லை. இன்னும் சிறிது நேரம் அவ்வாறு நிற்பின் நிச்சயம் சுற்றி வளைக்கும் எதிரிகள் அவனை குதறுவது உண்மை, உடனே துப்பாக்கியால் சுடுவேன் என்பது போல பாவனை காட்டி அவனை விரட்டினேன். பிற்காலத்தில் அதனைக் கூறி நாம் சிரிப்பது வழக்கம்.

இதனைப்போலவே இன்னும் பல சமயங்களில் நாம் எதிரியை அழிப்பதற்கு பெரிதும் உதவினான். மிருசுவில் பகுதியில் தேசத் துரோகிகள் மீது மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான தாக்குதலிலும் பீற்றரது அயராது முயற்சியும், சிறப்பானவேவுமே பெரும் வெற்றியை ஈட்டித்தந்தது.

அக்கால கட்டத்தில் புகையிரத பாதையை இந்தியப்படையினர் சங்கிலித் தொடராக நின்று பாதுகாக்கும்போது தேசத்துரோகளான ENDLF குழுவினர் கட்டாய பயிற்சிக்காக பிடிக்கும் இளைஞர்களை கிளிநொச்சிக்குக்கொண்டு சென்று ஒப்படைத்த பின் பெரும் அட்டகாசங்கள் புரிந்த வண்ணம் இருபுறமும் அன்னிய படை கைகோர்த்து நிற்க எமது மக்களின் மீது சேஷ்டைகள் புரிந்த வண்ணம் செல்வது வழக்கம். நெடுநாளாக இதனை அவதானித்த பீற்றர் ஒரு தினம் எம்மிடம் மூச்சிரைக்க ஓடிவந்தான். அன்று வழமையைவிட அரைமணிக்கு முன்னமே இராணுவத்தினர் முகாமிற்கு சென்று விட்டமையால் நிச்சயமாக கிளிநொச்சி சென்றுள்ள தேசவிரோதிகள் இதை அறியாது வருவ

ரென்றும் அச்சமயம் அவர்களது கதையை முடிக்கலாம் என்றும் திட்டவட்டமாக கூறியதோடு இன்று நிச்சயம் தாக்கவேண்டும் என்றும் விடாப்பிடியாக நின்றான்.

சந்தர்ப்பத்தை நழுவவிடாது நாம் எம் தாக்குதல் அணியை திரட்டி மிகச்சிறப்பாக தாக்குதலை தொடுத்தோம். இதன் போது இரு மினிபஸ்களில் அட்டகாசமாக வந்த துரோகிகளில் பதின்நான்கு கொடியவர்கள் கொல்லப்பட்டு பெருமளவு நவீன ஆயுதங்களையும் ஏராளமான ரவைகளையும் கைப்பற்றி பெரு வெற்றிபெற்றோம்.

இந்த வெற்றிகரமான தாக்குதலின் பின்னணி எங்கள் அன்புக்குரிய பீற்றர்தான். இந்தச் சம்பவங்களால் எம்மிடையே ஆழமாக பதிந்து விட்டான் இவன். இந்தியப்படைகள் இங்கிருந்து வெளியேறவும் இவன் எம் படையணியில் இணைந்து பயிற்சி பெற்று நடைபெற்ற பல சண்டைகளில் முன்னணி வீரனாக திகழ்ந்தான். இவ்வேளைகளில் இருமுறை விழுப்புண் பட்டான். இவனது வியத்தகு செயற்திறன்களால் யாழ் மாவட்ட விசேட வேவுப்பிரிவினது பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான். அக் காலத்தில் தனது தீரமிகு செயற்பாடுகளினால் எதிரியை திகில டையச்செய்தான்.

1-10-92 அன்று கட்டைக் காட்டுப்பகுதியில் எதிரியினது காவலரண்களை ஊடறுத்துத்தாக்கி பெரும் வெற்றியை ஈட்டி எதிரியின் ஆயுதக்கிடங்கினை கைப்பற்றி, ஏராளமான ஆயுதங் களை மீட்டெடுத்த சரித்திர நிகழ்வில் எங்களது பீற்றர் தீர மாகப் போராடி விழுப்புண் ஏற்று களப்படுக்கையில் சாய்ந்தான். களப்படுக்கை மரணப்படுக்கையாக இருக்கும் என்பதை எங்களால் அன்று ஊகிக்க முடியவில்லை. ஓர் தூய்மையான- உறுதிமிக்க' கொண்ட இலட்சியம் விட்டிடா எங்கள் மைந்தன் நிரந்தர ஓய்வெடுத்துக்கொண்டான்.

அவனை நான் இறுதியாக சந்தித்த வேளை களப்படுக்கை அமர்வில் இருந்த வண்ணம் அவன் கூறிய உறுதிமிக்க தெளி வான வார்த்தைகள் இன்னமும் என் காதுகளில் ரீங்காரமிடு கின்றன ''எனக்கு பிரச்சினையொண்டுமில்லை நீங்கள் யோசிக்கா மல் அடுத்த தாக்குதலைப் பாருங்கோ கெதியில வருவன்'' 'ஓ! இளம் வீரனே, எனக்கு தெரியும் நீ நிச்சயம் எம் வீரர் மனதேறி மீண்டும் மீண்டும் பகை மாய்க்க வருவாய். உன் நினைவுச் சுமையோடு ஆயிரம் ஆயிரம் இளம் வீரர்கள் அணிவகுத்து களமாடச்செல்வர்!

(16-10-1992)

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# வீரவேங்கை சின்ன நஸீர்



பெற்றோர்: காசிப்பிள்ளை கார்த்திகேசு (இரகுநாதன்)
இராசம்மா கார்த்திகேசு

இயற்பெயர்: சிவபரன்

முகவரி: 18, சிவரஞ்சனி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்

தோற்றம்: 07-06-1969

கல்வி: யாழ்/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை
யாழ்/ மயிலிட்டி கலைமகள் வித்தியாசாலை

உடன்பிறப்பினர்: சிவனேஸ்வரி
மகாதேவன் (காலமாகி விட்டார்)
கேதீஸ்வரநாதன்
பரமேஸ்வரி
பரமேஸ்வரன்
தமிழ்ச்செல்வி
மங்களேஸ்வரி

போராளியாக: 1987

மாவீரனாக தாயகமண்ணில்: 15-07-1989

விசேடதிறமைகள்: கலைத்துறையில் மிகுந்த ஈடுபாடுடையவர்.

"அண்ணை, இண்டைக்கு பேச்சி ஆத்தைதான் என்னைக் காப்பாத்தினா"- தினசரி இந்திய இராணுவத்தின் ரவைகளின் இடைவெளியினூடே தப்பி வரும்போது இதைத்தான் கூறுவான் சின்ன நஸீர். அதைக்கேட்டு மற்றவர்கள் சிரிப்பார்கள். ஏனென்றால் அவர்களும் இவனைப்போலத்தான் வேறொரு இடத்தில் இந்திய இராணுவத்தால் துரத்தப்பட்டு வந்திருப்பார்கள். இவன் கூறுவது போல பேச்சிஆத்தைதான் காப்பாற்றினா என்றால் தங்களை யார் காப்பாற்றினார் என எண்ணுவார்கள். ஆனாலும் ஒவ்வொன்றும் ஒவ்வொருவருடைய நம்பிக்கை என்றெண்ணி அதை ஏற்பதா நிராகரிப்பதா என்ற சர்ச்சையில் ஈடுபடுவதில்லை. ஆனாலும் இவன் அதைச்சொல்லும் அழகைப் பார்த்து ரசித்துச்சிரிப்பார்கள்.

இவன் மிகச்சிறியவன்தான். இவனது தோற்றத்தை பார்த்து இவன் இயக்கத்தில் இருக்கக்கூடியவன் என்று எவருமே சொல்லமாட்டார்கள் அதுவே இவனுக்கு மிகப்பெரியபலமாகவும் இருந்தது. தினசரி ஒவ்வொரு இந்திய இராணுவத்தின் முகாம்களை நோட்டமிடுவது, எந்த இலக்கு தாக்குதலுக்கு சுலபமானது? எந்த முகாமில் இன்று கூடுதலாக இராணுவத்தினர் மற்றும் வாகனங்கள் காணப்படுகின்றன? எந்தப்பகுதியை இவர்கள் முற்றுகையிடுவதற்கு வாய்ப்பு உண்டு என்ற விபரங்களைத் திரட்டுவதுதான் இவனது பிரதான பணி. ஆனாலும் யாழ்ப்பாணத்தை விட்டுப் புலிகள் போகவில்லை என்பதை உணர்த்தக் கூடிய வகையில் நிகழ்ந்தப்படும் தாக்குதல்களில் இவனும் பங்குபற்றிக் கொண்டிருந்தான். தினசரி குண்டடிப்பு - தாக்குதல் முற்றுகைதான்.

அது உச்சக்கட்டமான நெருக்கடிகள் மிகுந்த காலம். இதைவிட ஒரு நெருக்கடி இனிபெரும்பாலும் தோன்றுவதற்கில்லை. ஆயினும் தமக்கு ஏற்படும் இம்மாதிரியான நிகழ்வுகளை மிகச் சாதாரணமாகவே நோக்கினர் புலிகள். இந்த நிலைமை வந்து விட்டதே என்று யாரும் விரக்தி அடையவில்லை. கவலையடையவில்லை. எமக்கென்று செய்யப்பட்ட ரவை என்றோ ஒருநாள் எம்மைச்சந்தித்தே தீரும். அதற்காக இன்றைய மகிழ்ச்சியை இழந்துவிடநாம் தயாரில்லை என்பதுபோல இருக்கும் அவர்களது நடவடிக்கை.

அத்துடன் புலிகளையும் இந்திய இராணுவத்தையும் பொறுத்தவரை "முந்துபவன் வாழ்வான்" என்ற நிலையே நிலவி

26196.6

யது. இந்திய இராணுவமோ நாமோ எதிரெதிரே சந்திக்க நேருமாயின் யார் முன்னுக்கு துப்பாக்கியை இயக்குகிறார்களோ அவர்களே உயிர் பிழைத்தவர்கள் ஆவார்கள். இல்லாவிடில் தப்புவது அவர்கள் அதிர்ஷ்டம்.

சின்னநஸீர் தப்புவது தினசரி நிகழ்வாக இருந்தாலும் அவற்றில் சில இவனது நண்பர்களால் என்றும் மறக்கப்படமுடியாதவை. ஒரு சமயம் திருநெல்வேலி சிவன்கோயிலுக்கும் அம்மன் கோயிலுக்கும் இடையில் உள்ள வீதியில் வந்து கொண்டிருந்தனர் சின்ன நஸீரும் இவனது நண்பர்களும். இவனது கையில் திருத்த வேலைகளுக்காக கொண்டு செல்லப்பட்ட G3 றைபிள், இடுப்பில் மூன்று கைக்குண்டுகள். சடுதியாய் இந்திய இராணுவம் எதிர்ப்படவே இவனது நண்பன் ஒருவன் திடீரெனத்துப்பாக்பாக்கியை முழக்கினான்- தொடர்ந்து ஓட்டம். ஒருவர் மற்றவருக்காகக்காத்திருக்க முடியாது. அப்படிக்காத்திருந்தால் தகவல் சொல்லவே ஆள்மிஞ்சாது. எனவே அவன் சுட்டபடியே ஓடினான். அவன் பின்னால் மற்றவர்களும் ஓடினார்கள். இந்திய இராணுவத்தினர் சுட்டுக்கொண்டிருந்தனர். இதற்கிடையில் ஏனைய முகாம்களிலிருந்து இந்திய இராணுவத்தினர் விரைந்து வந்து அந்த இடத்தை முற்றுகையிட்டனர். இந்த முற்றுகைக்குள் இவனால் தப்ப முடியவில்லை. G3 திருத்தப்படாததால் அதனாலும் சுட முடியாது. எனவே இந்திய இராணுவத்தின் கண்களில் மண்ணைத்தூவி விட்டு அந்தக்கோயில் தேர்முட்டியில் ஏறி G3 ஐ அதற்குள் மறைவாக வைத்து விட்டு இரண்டு கைகளிலும் கைக்குண்டுகளை எடுத்து அதன் கிளிப்புகளை வாயினால் கழற்றிவிட்டுக் காத்திருந்தான்.

இவன் அடிக்கடி கூறுவான் ''எனக்கு துப்பியில நம்பிக்கையில்ல. அது எந்தநேரம் காலை வாருமோ தெரியாது. குண்டில தான் நம்பிக்கை எனக்கு. ரெண்டு குண்டு ஆமிக்கு- ஒண்டு எனக்கு''... என்று.

இப்போது அந்த நிலையை தோற்றுவிக்க இருகைக்குண்டுகளுடன் அவன் தயார். காலடிச்சத்தங்கள் ஓய்ந்தன. பிற்பகல் 4-30 மணியளவில் தான் முற்றுகையை முடித்து இராணுவத்தினர் சென்றனர். அதுவரை அவன் அந்த நிலையிலேயே இருந்தான்.

கையில் இருந்த குண்டின் கிளிப்புகளையும் கழற்றி எறிந்தாயிற்று. அதை எடுக்க முடியாது. எடுத்தாலும் இருகைகளி

90228

லும் குண்டுகள் இருப்பதால் திருப்பி கிளிப்பைப்போடவும் முடியாது. எனவே கைகளில் குண்டை ஏந்தியபடியே தனது நண்பர்களிடம் சென்றான். வழியில் சந்தித்த ஒரு பொது மகனிடம் "அண்ணை ஒரு சணல் எடுத்து இதைக் கட்டுங்கோ" என்று வேண்டிக்கொண்டான். கொஞ்சம் தவறி விழுந்தால் தானும் தப்பமுடியாது எனத் தெரிந்தாலும் அதற்காக இவனை இழந்து விடத்தயாரில்லாத அந்த பொது மகன் அவ்வாறே செய்தார். ஆனாலும் இவனுக்கு நம்பிக்கையில்லை, அப்படியே கைகளில் ஏந்தியபடி சென்றான். நண்பர்களைச் சந்தித்து அவர்களுடன்கூட வரும் போதுஒரு பெண்ணிடம் "அக்கா ஹெயர்ப்பின் தாங்கோ" என்று வாங்கி அவற்றை இரு கைக்குண்டுகளிலும் மாட்டிக் கொண்டு சென்றான். தேர் முட்டியில் வைத்த G3 ஐயும் பின்னர் எடுத்துக் கொண்டு சென்றான்.

இவன் நம்பிக்கை வைத்திருந்த அந்தப்பேச்சியாத்தையின் கோயிலடியில்தான் பெரும்பாலும் இவனது நடமாட்டம் இருக்கும். ஒருமுறை அந்த இடத்திற்கு வந்த இந்தியப்படை பின்னர் குறைந்த எண்ணிக்கையுடனேயே முகாம் திரும்பியது. அதற்கு அண்மையிலுள்ள ஓரிடத்தில் இவன் இரவில் தங்குவதுண்டு. அந்த இடத்திலும் ஒரு எட்டப்பனின் வாரிசு இருந்தான். அவனது தகவலை அடுத்து அந்தப்பகுதி முற்றுகையிடப்பட்டது. முற்றுகையை உடைத்துக்கொண்டு இவன் தப்பியோடினான். தப்பியோடிய இடம் செம்மணி வயல் வெளிப்பகுதி. இந்திய இராணுவத்தினர் ஜீப்பொன்றில் துரத்தினர். இவன் கைக்குண்டை வீசினான். கைக்குண்டு ஏற்படுத்திய புகை- அதனைத்தொடர்ந்து தமது உயிரைப்பற்றி இந்திய இராணுவத்தினர் கொண்ட அச்சம்- இரண்டின் வெளிப்பாட்டினால் ஜீப்புரண்டு விட்டது. இவன் தப்பிச்சென்று விட்டான். அம்முற்றுகையில் இவனது நண்பனொருவன் உயிருடன்பிடிபட்டான். எனவே இனித்தாமதிக்க முடியாது. அவனுக்குத்தெரிந்த ஓரிடத்தில் புதைக்கப்பட்ட ஆயுதத்தை எடுக்கவேண்டும். எனவே இந்த இடத்திற்கு விரைந்து சென்று ஆயுதத்தைப்பாதுகாப்பாக கொண்டு வந்தான். சித்திரவதையின் காரணமாக இவனது நண்பன் அந்த இடத்திற்கு இந்திய இராணுவத்தினரை அழைத்து வந்தான். நிலைமையைப் பார்த்த இந்திய இராணுவத்தினர் தமது ஏமாற்றத்தை அங்கிருந்த மூதாட்டியை தாக்கியதன் மூலம் தீர்த்துக்கொண்டனர். இதைப்போலவே ஒவ்வொரு முற்றுகையிலும் இவன் எப்படி ஆயுதங்களைக் காப்பாற்றினான் என்பதை இவனுடன் குண்டடித்து

இளமோர் தாக்குதல் நிகழ்த்திய இவனது நண்பர்கள் கதை கதையாகக் கூறுகின்றனர். அவை ஒரு நாவலுக்குப் போது மானவை.

எண்ணற்ற தாக்குதல்களில் இவன் கலந்து கொண்டாலும் சிறீலங்கா அரசு நிர்வாகத்தை தமிழீழமண்ணில் திணிப்பதற் காக நடைபெற்ற தேர்தல் காலங்களில் நிகழ்ந்த தாக்குதல் களே முக்கியமானவையாகும். அவை மிக வேகமாக ஒவ்வொரு இடமாக மாறி மாறி நடத்தப்பட்ட தாக்குதல்களாகும்.

இந்திய இராணுவத்தினரின் மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் இருந்தபோதும் தான வாழ்ந்த நாயன்மார்கட்டு கிராமத்தில் திலீபனின் நினைவுதினத்தன்று உண்ணாவிரதம் பொதுக் கூட் டம் போன்றவற்றிற்கு ஒழுங்குசெய்து மக்களை எழுச்சிபெறச் செய்தான்.

15. 07. 1989 அன்று காலை கல்வியங்காட்டுப் பகுதியில் இவன் தனது இரு நண்பர்களுடன் வந்து கொண்டிருக்கையில் அடிக்கடி நிகழும் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது. இந்திய இராணு வத்தினர் எதிர்ப்பட்டனர்; மோதல் நடந்தது. மூன்று இந்திய இராணுவத்தினர் உயிரிழந்தனர். சுட்டபடியே ஓடிய அந்த இரு நண்பர்களும் பொதுமக்கள் உதவியுடன் தப்பிச்சென்று நஸீர் வரு வான் என்று காத்திருந்தனர். ஆனால் இவன் வரவில்லை. கைக் குண்டுச் சத்தம் தான் கேட்டது. அவன் அடிக்கடி கூறும் "எனக்கு குப்பியில நம்பிக்கையில்ல; ரெண்டு குண்டு ஆமிக்கு; ஒண்டு எனக்கு" வாக்கியம் உடனே அவர்களுக்கு நினைவுக்கு வந்தது.

ஆனாலும் காத்திருந்தனர். எப்போது வீட்டுக்குச் சென் றாலும் தாயின் மடியில் புரண்டு படுப்பது இவனது வழக்கம். அவர் இவனைத் தேடி வந்தாலும் அவ்வாறே இவன் நடந்து கொள்வான். அது யாருடைய வீடு என்றும் பார்க்கமாட்டான். அப்படிப்பட்ட அந்தக் குட்டி நண்பனை விட்டுப்போக மன மில்லை அவர்களுக்கு. அவனது சாவு உறுதிப்படுத்தப்பட்டதும் "பேச்சியாத்தைதான் என்னைக் காப்பாத்தினா" என்ற அவ னது குரலை மீண்டும் ஒலிக்கச் செய்யாததுக்காக அந்தப் பேச்சியாத்தை மேல் ஆத்திரமாக வந்தது அவர்களுக்கு.

07-02-1992

26190 90228



வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனை
புரிந்தமைக்காக வேவுப்புலி மேஜர் கார்வண்ணனுக்கு
தலைவர் வே.பிரபாகரன் பரிசு வழங்குகிறார்